[illegible]
[illegible]
63066

Issued 2—8—75]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY 11th APRIL 1975

Volume CXXXIII—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1975

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

631661

## உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. | I–V |
| தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. | VII |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பட்டியல் .. | IX–XI |
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 1–18 |
| 2. அறிவிப்புகள்— | |
| (1) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. .. | 18 |
| (2) பேரவையிலிருந்து செய்தி .. .. .. | 18 |
| (3) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. .. | 36–37 |
| (4) அவைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. .. | 37–38 |
| 3. மாண்புமிகு மேலவைத் தலைவருக்கு 70-வது பிறந்த தின வாழ்த்துக்கள் | 19–36 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (1) திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டர் மூடப்பட்டது குறித்து .. .. .. .. .. | 38–40 |
| (2) இலங்கையைச் சேர்ந்த 'மௌரி' என்ற இயந்திரப்படகு எண் ஜே. 821 பாம்பன் பகுதிக் கடலில், நைலான் மீன்பிடி வலைகளையும், பாய்மரக் கருவிகளையும் அபகரித்துச் சென்றுள்ளது குறித்து .. | 41–43 |
| 5. அரசின் சட்ட முன்வடிவு— | |
| தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1975) .. | 43–44 |
| 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 44–47 |

# Tamil Nadu Legislative Council Debates

FIFTIETH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTRUCTION OF INDIA.

(11th, 17th to 19th and 21st April and 2nd May 1975.)

VOLUME CXXXIII (Numbers 1—6).

TABLE OF CONTENTS.

*Friday, 11th April 1975.*


| | *Pages* |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix—xi |
| 1. Questions and Answers ... ... ... ... | 1—18 |
| 2. Announcements— | |
| (1) Message from the Governor ... ... | 18 |
| (2) Message from the Assembly ... ... | 18 |
| (3) Election of Members to the Privileges, Committee ... ... ... ... ... | 36—37 |
| (4) Election of Members to the House Committee ... ... ... ... ... | 37—38 |
| Felicitations to Hon. Chairman on his 70th Birthday ... ... ... ... ... | 19—36 |

| | Pages |
|---|---|
| *Friday, 11th April 1975*—cont. | |
| 4. Call Attention Notices— | |
| (1) Closure of operation theatre in Government Headquarters Hospital, Tiruchirappalli. | 38—40 |
| (2) Seizure of Nylon Fishing Nets and fishing equipments by "Mowri", Mechanised Boat No. J-821, from Sri Lanka in Pamban area in midsea ... ... ... | 41—43 |
| 5. Government Bill— | |
| The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1975 (L.A. Bill No. 15 of 1975) ... ... | 43—44 |
| 6. Papers laid on the table of the House ... ... | 44—47 |
| *Thursday, 17th April 1975.* | |
| 1. Condolence Resolution *re* death of Dr. Sarvepalli Radhakrishnan, former President of India ... ... ... ... ... | 53—56 |
| 2. Papers laid on the table of the House ... ... | 56—58 |
| *Friday, 18th April 1975.* | |
| 1. Questions and Answers ... ... ... | 59—82 |
| 2. Adjournment motion *re* closure of temple and orphanage in Nachiarkoil and temples under Vetri Velayudha Swami Devasthanam and in Manjakollai and Nagapattinam due to paddy levy ... ... ... ... ... | 83—88 |
| 3. Privilege issue *re* certain provisions in the Tamil Nadu Societies Registration Bill, 1975, being contrary to the decisions of the Joint Select Committee ... ... ... ... ... | 88—92 |
| 4. Announcements— | |
| (1) Message from the Governor ... ... | 93 |
| (2) Message from the Assembly ... ... | 93 |
| 5 Calling attention to enhancement of property tax in the adjacent areas taken over by the Thanjavur Municipality ... ... ... | 94—97 |





| | Pages |
|---|---|
| *Friday, 13th April 1975*—cont. | |
| 6. Amendments to the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Rules, 1974 ... | 98—147 |
| 7. Government Bills— | |
| (1) The Tamil Nadu Gaming (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 8 of 1975) ... ... | 148—151 |
| (2) The Tamil Nadu Societies Registration Bill, 1975 (L.A. Bill No. 53 of 1972) ... ... | 152—159 |
| (3) The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 51 of 1974) ... | 159—161 |
| (4) The Tamil Nadu Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1975 (L.A. Bill No. 61 of 1974) ... ... ... | 161—163 |
| (5) The Tamil Nadu Land Encroachment (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 6 of 1974) ... ... ... ... ... | 163—165 |
| 8. Papers laid on the table of the House ... ... | 165—166 |
| *Saturday, 19th April 1975.* | |
| 1. Questions and Answers ... ... ... ... | 207—224 |
| 2. Announcement *re* message from the Assembly. | 224—225 |
| 3. Call Attention Notices— | |
| (1) Confusion caused to the candidates in answering the P.U.C. Examination, Physics paper ... ... ... | 225—227 |
| (2) Hardship in publishing annual examination results consequent on permission granted to non-teaching staff of aided High Schools to enjoy the summer vacation. | 228—230 |
| 4. Presentation of the Twenty-fifth Report of the Committee on Government Assurances ... | 230 |
| 5. Government Motion— | |
| Transaction of Government business on a Private Members' day ... ... ... ... | 230 |

Pages

*Saturday, 18th April 1975*—cont.

6. Government Bills—

(1) The Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 (L.A. Bill No. 5 of 1975) ... 231—236

(2) The Tamil Nadu Prevention of Begging (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 48 of 1975) ... ... ... ... ... 236—242

(3) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 (L.A. Bill No. 13 of 1975) ... 243—247

(4) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 (L.A. Bill No. 14 of 1975) ... 247—250

(5) The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 47 of 1975) ... ... ... ... 251—252

(6) The Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 16 of 1975) ... ... ... ... ... 252—258

(7) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 18 of 1975) ... ... ... ... ... 258—271

7. Papers laid on the table of the House ... 271—272

*Monday, 21st April 1975.*

1. Questions and Answers ... ... 283—306

2. Statement under rule 82 *re* correction of answer to a supplementary question ... 306

3. Adjournment Motions—

(1) Hardship to factory workers due to stoppage of work in factories on account of 100 per cent power cut ... ... ... 306—312

(2) Difficulty experienced by the residents of Madras City in getting drinking water. 313—318

4. Announcements—

(1) Message from the Assembly ... ... 319

(2) Business transacted during the session ... 373—374



Pages

*Monday, 21st April 1975*—cont.

5. Call Attention Notices—

(1) Progress of drought relief work and quantum and nature of Central assistance therefor ... ... ... ... ... 319—325

(2) Non-regularisation of temporary services and non-fixation of pay and dearness allowance for the non-teaching staff of the Government 'B' Wing Schools ... 325—327

(3) Dismissal of Tamil Pandits in February 1975 in 'B' Wing High Schools in Coimbatore district by the Chief Educational Officer ... ... ... ... 327—329

(4) Missing of cash kept in a box in Cashier's room by Cashier Thiru Natesan in Tindivanam Municipality ... ... ... 329—332

6. Government Motions—

(1) Nomination of five Members of the Council to serve on the Public Accounts Committee ... ... ... ... ... 332—333

(2) Nomination of five Members of the Council to serve on the Estimates Committee ... 333

(3) Nomination of five Members of the Council to serve on the Committee on Delegated Legislation ... ... ... 334

(4) Nomination of five Members of the Council to serve on the Committee on Public Undertakings ... ... ... ... ... 334—336

(5) Change in the order of business of the House ... ... ... ... ... 337

7. Government Bills—

(1) The Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 20 of 1975) ... ... ... ... 337—342

(2) The Madras City Police (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 17 of 1975) ... 343—350

Pages

*Monday, 21st April* 1975—cont.

7. Government Bills—*cont.*

(3) The Tamil Nadu Catering Establishments (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 12 of 1975) ... ... ... ... 350—363

(4) The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1975 (L.A. Bill No. 21 of 1975) ... ... ... ... 363—365

(5) The Tamil Nadu Chit Funds (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 19 of 1975) ... 365—374

8. Papers laid on the table of the House ... 374—376

*Friday, 2nd May* 1975.

1. Questions and Answers ... ... ... 421—429

2. Government Resolution *re*—

Ratification of the Constitution (Thirty-eighth) Amendment Bill, 1975 ... ... ... 430—441

3. Papers laid on the table of the House ... 442

Index ... ... ... ... ... ... 443—486

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Waqfs.

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and apex levels including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayat and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money-lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE. HON. THIRU. S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE. HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries. Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE. HON. THIRU. N. RAJANGAM, Minister in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

---

### தமிழ்நாடு ஆளுநர்

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா**

---

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** (முதலமைச்சர்) : கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல்துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (கல்வி அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டமன்றம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (நல்வாழ்வுத்துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகரமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** (பொதுப் பணித்துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறப்புச் சிறுபாசனம் உள்ளிட்ட சிறுபாசனத் திட்ட வேலைகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி, ஆலை[illegible]ளிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிற்சாலைகள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகம்மதிய அறக்கட்டளைகள்.

8. **மாண்புமிகு திரு. ஸி. பா. ஆதித்தனர்** (வேளாண்மைத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, கூட்டமைப்புகள், உள்ளிட்ட மாநில மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** (வருவாய்த் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வருவாய், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், இளைஞர் அணி, சீரணி.

10. **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. **மாண்புமிகு திரு. க. இராசாராம்** (தொழிலாளர் நல அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர் நலன், வீட்டுவசதி, இடவசதிக் கட்டுப்பாடு, எடைகள்–அளவுகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. **மாண்புமிகு திரு. ஸி. வி. எம். அண்ணாமலை** (சமூக நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர்–சிறுவர் நலன் உள்ளிட்ட சமூக நலத்துறை, மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** (வணிக வரிகள் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வணிக வரிகள், காடுகள் மற்றும் சின்கோனா, கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் (கிராம வாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத்துறை, மற்றும் அரசினர் அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அறக்கட்டளைகள், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், செய்தி–விளம்பரம் திரைப்பட நுட்பவியல்.

16. **மாண்புமிகு திரு. என் இராஜாங்கம்** (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலன், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், மற்றும் திரைப்படச் சட்டம்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்:

---

**மேலவைத் தலைவர்.**

*மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.*

**மேலவைத் துணைத் தலைவர்.**

*திரு. ம. பொ. சிவஞானம்.*

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. *திரு. எஸ். டி. ஆதித்தன்.*
2. *திரு. ஏ. பாலசுப்பிரமணியம்.*
3. *திரு. கே. எஸ். கணபதி.*
4. *திரு. எம். எம். பக்கர்.*

**மேலவைச் செயலாளர்.**

*திரு. சி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,*

**உதவிச் செயலாளர்.**

*திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி.,*

**விவாதப் பதிப்பாளர்.**

*திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.*

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின்
(தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்,

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும், (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம், அ... .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 அறிவழகன், க., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் இ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இளம்பரிதி .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராஜு, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 13 இராமகிருஷ்ணத் தேவர், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 14 இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமனம். |
| 16 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 17 எல்லமந்தா, பி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 18 கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி. |
| 19 குன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |
| 20 கோலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 21 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 சங்கரலிங்கம், எம். .. | திருநெல்வேலி- கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| 23 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 24 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 27 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 28 சுந்தரேசத் தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 30 தங்கப்பாண்டியன், வி., பி.ஏ.பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 தங்கவேல், ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 32 தமிழரசி, சி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 தாமஸ், பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர் தொகுதி. |
| 34 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 35 தாமோதரன், ஜி. ஆர். .. | சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 திராவிடமணி, ஆ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 டிமான்டி டென்சில் வின்சென்ட் .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 39 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 41 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, மன்னை ப. (உள்ளாட்சித்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 43 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 44 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 45 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 பாலசுப்பிரமணியம், அ. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பாலசுப்பிரமணியம், கு. மா. .. | நியமனம். |
| 48 பெரியண்ணன், வி. ஆர். .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 49 மணி, கோ. ச. .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 மாசிலாமணி, மு. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, செ. .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர், நீலகிரி ஆசிரியர் தொகுதி. |
| 54 முருகேசன், எச். எஸ். .. | நியமனம். |
| 55 ரஸ்ஸல் ராஜ், சி. .. .. .. | நியமனம். |
| 56 வசந்த பாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். தொகுதி |
| 57 வில்வம், ஏ. கே .. | நியமனம். |
| 58 வில்சன் அப்போஸ்தோலஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஓய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 வெற்றிடம் .. .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் ஐம்பதாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1975, ஏப்ரல் 11.

**சென்னை,** செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### *Demotion of permanent teachers in the newly started High Schools in Madurai Corporation.*

*232 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state —

(a) whether it is a fact that the permanent teachers employed in the Madurai Corporation, promoted and posted in the newly-started High Schools were demoted; and

(b) if so, whether the Government will order their restoration?

#### மதுரை மாநகராட்சியில் புதிதாகத் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் பணிக்கமர்த்தப்பட்ட நிரந்தர ஆசிரியர்கள் பதவியிறக்கம்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) மதுரை மாநகராட்சியில் பணியாற்றி, பதவி உயர்வு பெற்று, புதிதாகத் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் பணிக்கமர்த்தப் பட்ட நிரந்தர ஆசிரியர்கள் பதவியிறக்கம் செய்யப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், மீண்டும் அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) and (இ): 1973 அக்டோபரை ஒட்டி மதுரை மாநகராட்சிக்கு பள்ளிக் கல்வித் துறை "ஐந்து இலட்சம் பேருக்கு வேலை" திட்டத்தின் கீழ் சில ஆசிரியர் பதவிகளை ஒதுக்கியது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட பதவிகளை நிரப்புகையில் அதற்கு முன் அந்தத் திட்டப் பதவிகளைவிடக் கீழான தரத்தைச் சார்ந்த ஆறுதல் முறையான பதவிகளில் பணி செய்து வந்தவர்கள் சிலருக்கும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு அவர்களும் "ஐந்து இலட்ச வேலை" திட்டப்பதவி களில் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு 1974ஆம் ஆண்டு கோடை விடுமுறைச் சம்பளம் கொடுக்கும் பொழுது, 1973

அக்டோபருக்கு முன் என்ன முறையான பதவிகள் வகித்து வந்தனரோ அந்தப் பதவிகளுக்குரிய கோடை விடுமுறைச் சம்பளத்தையே கொடுக்க வேண்டும் என்ற பொதுவான அரசாணையைப் பின்பற்றி மதுரை மாநகராட்சியும் நடவடிக்கை எடுத்தது. 1974ஆம் ஆண்டு கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறந்ததும் அவர்களுக்கு கோடை விடுமுறைக்கு முன் என்ன தர "ஐந்து இலட்சம் பேருக்கு வேலை" பதவியிலிருந்தனரோ அதே தரத்தில் முறையான பதவி அளிக்கப்பட்டுவிட்டது.

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவர் அவர்களே, 1973-ல் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, தலைமையாசிரியர்களாகவும், இடைநிலை ஆசிரியர்களாகவும், முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களாகவும் மற்றும் சிறப்பாசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் விடுமுறையிலே அவர்களுக்கு பண இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு பண இழப்பு ஏற்பட்டதற்குக் காரணம் அவர்கள் "ஐந்து இலட்சம் ஊழியர் வேலை வாய்ப்பிலே" மாற்றப்பட்டது. அடுத்தாண்டு துவக்கத்திலும் கொடுக்கப் படவேண்டிய ஊதிய உயர்வு அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்தத் தலைமை ஆசிரியர்கள் அனைவரும் 5 இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் புகுத்தப்பட்டது நியாயமா? அப்படி இருக்குமானால், இந்த இரண்டு வகையிலும் இழப்பு ஏற்படாத முறையில் அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஊதிய உயர்வு பெறுவதுபற்றி நாம் தனியாக ஆராய்ந்து கணக்கு எடுக்க வேண்டியிருக்கிறது. மூன்று மாதக் கோடைகாலச் சம்பளம் என்கின்றபோது, அதுவும் "டெம்பரரி" என்று வருகின்ற போது, அந்த மூன்று மாதத்திற்கும் ஏற்கனவே இருந்த சம்பளத்தை வழங்கிக் கொண்டிருந்தார்கள். இல்லாவிட்டால் அவர்கள் வீட்டுக்குத்தான் போயிருக்க வேண்டும். இன்கிரிமெண்ட் கொடுப்பதற்கு அந்த மூன்று மாதத்தையும் சேர்த்துக்கொள்ளலாமா என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

## *Grant to the Madras University.*

*233 Q.—Thiru K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government of Tamil Nadu have sanctioned a grant of Rs. 10 lakhs to the University of Madras to enable it to conduct the centres of advanced studies in three subjects including Physics; and

(b) if so, whether it is a fact that the University Grants Commission offered substantial financial help to the University for establishing an Institute of Advanced Studies in Physics and later withdrew the financial help as it was not implemented by the University?



## சென்னை பல்கலைக்கழகத்திற்கு மானியம்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பௌதீகம் உட்பட மூன்று பாடங்களில் மேற்படிப்பு கல்வி நிலையங்களை நடத்துவதற்கு இயலும் வகையில் சென்னை பல்கலைக்கழகத்திற்கு தமிழ்நாடு அரசு ரூ. 10 இலட்சம் மானியம் வழங்க அனுமதி அளித்துள்ளதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், பௌதிக மேற்படிப்பு கல்வி நிறுவனம் ஒன்றை அமைப்பதற்காக பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு கணிசமான நிதியுதவி அளித்தது உண்மையா? அதனை பல்கலைக் கழகம் செயற்படுத்தாததால் ஆணைக் குழு பின்னர் நிதியுதவியை நிறுத்தி விட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, 1973 மார்ச்சு மாதத்திலே வந்த பல்கலைக்கழக மானியக் குழு, சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய பௌதிகப் பிரிவு பத்தாண்டுகளுக்குப் பிறகு தற்போது சரியாக வேலை செய்யவில்லை என்றும், 17 ஆசிரியர்கள் இருந்த இடத்தில் 5 ஆசிரியர்கள் தான் இருக்கிறார்கள் என்றும் குறை கண்டு, அவர்களால் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்த மானியம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படியல்ல. பல்கலைக்கழக மானியக் குழு (யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன்) 1963-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்துக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கும் இரண்டு "Advanced Studies" ஆரம்பிக்க மானியம் வழங்கியது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'பிசிக்ஸ்' 'பாட்டனி' மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "Marine Biology" தொடங்க மானியம் தந்தார்கள். முதலில் ஒரு சில ஆண்டுகளுக்குத்தான் அவர்கள் மானியம் தருவார்கள். அதற்குப் பின் நாம்தான் எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் அவர்கள் மானியம் தந்தார்கள். கடைசியில் 31—3—1974-ஆம் நாளன்று எங்களுடைய மானியம் நிறுத்தப்படும் என்று சொன்னார்கள். அவ்வப்போது நிறுத்தவேண்டும் என்று அவர்கள் சொன்னபோது கூட நாங்கள் சில ஆண்டுகள் நீடியுங்கள், நீடியுங்கள் என்று சொல்லித்தான் 31—3—1974 வரையிலும் நீடித்துக் கொண்டுவந்தோம். 31—3—1974-க்குப் பிறகு நீடிப்பதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, 1—4—1974-ல் இருந்து அந்த முழுப் பொறுப்பையும் மாநில அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டி வருகிறது. அதன் காரணமாகத்தான் நாம் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இந்த பல்கலைக்கழக மானியக் குழுவானது, சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய இந்த சிறப்புப் பௌதிகப் பிரிவு சரியான முறையில் செயல்படவில்லை, அது திருப்திகரமாக இல்லை என்று காரணம் காட்டியிருப்பது உண்மையா ? மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாக 17 ஆசிரியர்களுக்குப் பதிலாக 5 ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு விவரக் குறிப்புகள் இல்லை. அது எந்த நிலையில் இருக்கிறது, எவ்வளவு பேர் இருக்க வேண்டும், எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற விவரங்கள், தனிக் கேள்வி போட்டால், சொல்லலாம். கிராண்ட் தருவதைப்பற்றித்தான் நான் இப்போது குறிப்பிட்டேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, is it not a fact that after Thiru G. N. Ramachandran left, the Physics Department of the Madras University has suffered a set-back ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய முழு விவரமும் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், அந்த டிபார்ட்மெண்ட் எப்படி வேலை செய்கிறது, எப்படி இருந்தது என்பதைப் பற்றியெல்லாம் சொல்லலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சென்னைப் பல்கலைக்கழகத்திலே பல பேராசிரியர்களுடைய பதவிகள் மற்றும் துணைப் பேராசிரியர்களுடைய பதவிகள் எல்லாம் கடந்த நான்கு-ஐந்து ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அது உண்மையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்னைப் பல்கலைக் கழகத்தில் சிலபல பதவிகள் காலியாக நிரப்பப்படாமல் இருந்தன. செய்தித் தாள்களிலும் அந்தச் செய்தி வந்தது. அது ஆளுநர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டு, பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால் போதுமான அளவுக்குத் தகுதி படைத்தவர்கள் இல்லை என்ற காரணத்தினால்தான் அவை நிரப்பப்படாமல் இருந்தன என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அண்மையில் பல பதவிகள் நிரப்பப்பட்டு, இன்னும் சில பதவிகளை நிரப்பப்பட இருப்பதாக, துணை வேந்தர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றிய முழு விவரமும், தனிக் கேள்வி போட்டால், சொல்லலாம்.

திரு. கே. எஸ். கணபதி: இந்த 10 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்போது, இந்தப் பிரிவு சரியாக வேலைசெய்கிறதா என்று பரிசீலனை செய்து பார்த்துத்தான் வழங்கப்பட்டதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய குறிப்புகள் இல்லை. பல்கலைக்கழகத்திற்கு மானியம் வழங்கப்படுகின்றபோது ஒட்டு மொத்தமான மானியத்தைத்தான் நாம் தருகிறோம். அதனுடைய பணிகள் எப்படி இருக்கின்றன என்று ஆராயும் பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. இதுபற்றிய முழு விவரத்திற்கும் தனிக் கேள்வி போடவும்.

திரு. எ. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, சென்னை சட்டக் கல்லூரியில் ஓராண்டுகாலமாக ப்ரொஃபஸர்கள் போஸ்ட் வேகண்ட்—ஆக இருந்தும் அவை நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

*Teachers working in schools run by the Pudukkottai Municipality.*

*234 Q.—THIRU K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 51, on the floor of the Council on 18th December 1974 —

(*a*) the number of Higher Grade Teachers working in the schools run by the Pudukkottai Municipality who have completed 10 years of regular qualified service under different managements ;

(*b*) whether it is a fact that the said category of teachers have not been granted Selection Grade Scale of Pay : and

(*c*) if so, the action proposed to be taken thereon ?

புதுக்கோட்டை நகராட்சியால் நடத்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்.

திரு. கே. எஸ். கணபதி: 18—12—1974-ல் சட்ட மன்ற மேலவையில் வினா எண் 51-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெவ்வேறு நிர்வாகங்களின் கீழ் முறையாக 10 ஆண்டுப் பணியை முடித்துள்ளவர்களும் புதுக்கோட்டை நகராட்சி நடத்தும் பள்ளிகளில் பணி புரிபவருமான தொடக்க நிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது?

(ஆ) மேற்படி பதவித்தர ஆசிரியர்களுக்கு தேர்வுத்தர சம்பள விதம் வழங்கப்படாதது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து என்ன நடவடிக்கை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 48.

(இ) 48 இளநிலை ஆசிரியர்களில் 42 ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டது. 6 ஆசிரியர்களுக்கு மட்டும் இன்னமும் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்படவில்லை.

(உ) ஒரே நிலையில் பல்வேறு நிர்வாகங்களின் கீழ் செய்த பணியினைக் கணக்கில் கொண்டு 10 ஆண்டு காலம் பணிசெய்து முடித்துள்ள ஆசிரியர்களுக்கு கல்வித்துறையின் 20—6—1974 நாளிட்ட அரசு ஆணை எண் 1009-ன் படி தேர்வு நிலை வழங்கும்படி புதுக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு திருச்சிராப்பள்ளி முதன்மைக்கல்வி அலுவலர் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

*Teachers working in Schools run by the Pudukkottai Municipality.*

*235 Q.—THIRU K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 51, on the floor of the Council on 18th December 1974—

(*a*) the number of Secondary Grade Teachers, working in the schools run by the Pudukkottai Municipality who had completed 10 years of regular qualified service as Secondary Grade Teachers, prior to 1st April 1974, who had worked in the Higher Grade Vacancies and who are later absorbed in the upgraded Secondary Grade posts ;

(*b*) whether it is a fact that the said category of teachers who are eligible for promotion to Selection Grade cadre as per G.O. Ms. No. 1009, Education, dated 20th June 1974, have not been granted Selection Grade Scale of Pay ; and

(*c*) if so, the action proposed to be taken thereon?

திரு. கே. எஸ். கணபதி: 18—12—1974-ல் சட்ட மன்ற மேலவையில் வினா எண் 51-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1974-க்கு முன்னர், தொடக்க நிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி, முறையாக இடைநிலை ஆசிரியர்களாக 10 ஆண்டுப் பணியை முடித்துள்ளவர்களும், பின்னர் பதவித்தரம் உயர்த்தப்பட்ட இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் புதுக்கோட்டை நகராட்சியினால் நடத்தப்படும் பள்ளிகளில் பணிபுரிவர்களுமான இடைநிலை ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) கல்வித் துறையின் 20—6—1974 நாளிட்ட 1009 ஆம் எண் அரசாணையின்படி தேர்வுத்தர ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறத் தகுதியுள்ள மேற்படி ஆசிரியர்களுக்குத் தேர்வுத்தர சம்பளவீதம் அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஆமெனில், அதையொட்டி என்ன நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 28.

(இ) 28 இடைநிலை ஆசிரியர்களில் 26 ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டது. 2 ஆசிரியர்களுக்கு மட்டும் இன்னமும் தேர்வுநிலை ஊதியம் வழங்கப்படவில்லை.

(உ) ஒரே நிலை பல்வேறு நிர்வாகங்களின் கீழ் செய்த பணியினைக் கணக்கில் கொண்டு 10 ஆண்டு காலம் பணி செய்து முடித்துள்ள ஆசிரியர்களுக்குக் கல்வித் துறையின் 20—6—1974 நாளிட்ட அரசு ஆணை 1009-ம் படி தேர்வு நிலை வழங்கும்படி புதுக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலர் அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இந்த வினாவை எழுப்பிய பிறகுதான் இந்த 26 ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. ஆகவே, இதுபோன்ற காலத்தாழ்வு ஏற்படாது இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான வினா எழுப்புவதும், விடை பகர்வதும் இம்மாதிரிக் காலத்தாழ்வு ஏற்படாது இருப்பதற்குரிய கூறுபாடுகளாக அமைந்திருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி : ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி, பிறகு அந்த வாய்ப்பு இல்லாமல் தொடக்க நிலை ஆசிரியர்களாகவும், இளநிலை ஆசிரியர்களாகவும், சில நேரங்களிலே 'ரிவர்ஷன்' ஆகி மீண்டும் இடைநிலை ஆசிரியர்களாகவும் வந்து பணியாற்றுகிறார்கள். இப்படி இருக்கும்போது இடைநிலை ஆசிரியர்கள் ரிவர்ஷனுக்கு முன்னால் பணியாற்றிய ஊழியக் காலமும் இந்த பத்தாண்டு சர்வீஸுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா? இதுபோல் தமிழாசிரியர்களாக இருக்கின்றவர்கள் முதல்நிலை தமிழாசிரியர்களாக நீண்டகாலம் பணியாற்றுகிறார்கள். மீண்டும் ஒரு நிர்வாக மாற்றம் வரும் பொழுது, இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக முதலில் நியமிக்கப்பட்டு, பின்னர் சீனியாரிட்டிபடி முதல் நிலைக்கு வருகிறார்கள். அவர்கள் முதலில் பணியாற்றிய காலமும், பின்னர் பணியாற்றிய காலமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரம் இல்லை. நிலையாகவேதான் முதலிலே பணியாற்றினார்களா என்றும், பின்னரும் நிலையாகத்தான் பணியாற்றினார்களா என்றும் பார்த்து, அதை வைத்துத்தான் நாம் கணக்கிட வேண்டும். அப்படியிருந்து பின்னர் கீழே இறக்குவதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் காண வேண்டும். இது பற்றி தனித்தனியாக ஆராய வேண்டும். தற்காலிகமாக இருந்தால், தற்காலிகம் என்று தான் கணக்கெடுக்க வேண்டும். நிரந்தரமாக முதலிலே இருந்து, இடையிலே விடுபட்டு, மறுபடியும் நிரந்தரமாக இருக்குமேயானால், அதைத் தனியாக ஆராயலாம்.

## Surplus Funds of the Aided High Schools.

*236 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the names of Aided High Schools established prior to 1948 in the Educational District of Tiruchirappalli which have applied for the release of the surplus funds for the construction of their buildings ; and

(b) the number of them which have been given such permission ?

## மானியம் பெறும் பள்ளிகளுக்கு உபரி நிதி.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்தில் 1948-க்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட மானியம் பெறும் பள்ளிகளில், எந்தெந்தப் பள்ளிகள் தங்களுக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொள்வதற்காக உபரி நிதி வழங்கு மாறு விண்ணப்பம் செய்து கொண்டுள்ளன?

(இ) அவற்றில், எத்தனை பள்ளிகளுக்கு அத்தகைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (இ) உபரியாக கையிருப்பிலுள்ள தொகையை பள்ளிக்குத் தேவையான கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு உபயோகப்படுத்த அனுமதிகோரி திருச்சிராப்பள்ளி இ. ஆர். உயர்நிலைப்பள்ளி மட்டுமே பள்ளிக்கல்வி இயக்குநருக்கு விண்ணப்பித்தது. பள்ளிக்கல்வி இயக்குநர் உபரி தொகையிலிருந்து ரூ. 75,000-ஐ கூடுதல் வகுப்பு அறைகள் கட்டுவதற்கு உபயோகப்படுத்த மேற்படி பள்ளிக்கு அனுமதி அளித்து 21-2-1975-ல் ஆணை பிறப்பித்துள்ளார்.

(பிற்பகல் 4-10).

திரு. கே. எஸ். கணபதி : இந்தப் பள்ளியானது இந்த விண்ணப்பத்தை அனுப்பி, கிட்டத்தட்ட ஒரு ஆண்டு காலத்திற்கு இந்த இலாகா செயல்படுத்தவே இல்லை. இன்றைக்கு இந்த வினவை எழுப்பி, தடை செய்வதற்கு சட்டப்படி அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்த பின்னர் தான் கொடுக்கிறார்கள். எனவே ஒரு நிலையான உத்தரவினைத் தெளிவாக இடவேண்டும். தனியார் பள்ளிகளிலே அவர்களுடைய உபரியான தொகையைப் பயன்படுத்த அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம், அதிக விலை மதிப்புபெற்ற ஒரு கட்டிடத்தைக் கொடையளித்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று இருந்ததால், பள்ளியின் செயற்குறிப்பு மீது தனியாக பள்ளியுடனும், அரசு



வழக்கறிஞருடனும் அரசு தொடர்பு கொண்டு, பொருள் ஆய்வில் இருந்தது. எனவே பள்ளியின் விண்ணப்பத்தின் மீது முடிவு எடுக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அதற்குப் பின்னர்தான் பள்ளிக் கல்வி இயக்குநர் ரூ. 75 ஆயிரம் வழங்கலாம் என்று முடிவு எடுத்திருக்கின்றார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : அந்தப் பள்ளிக் கட்டிடம் கொடையாக வாடகையில்லாமல் பள்ளி நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்த பிறகும், மாவட்டக் கல்வி அலுவலர் சான்றுகள் அளித்த பிறகும்கூட, இந்தத் தொகையானது வழங்கப்படவில்லை. பிறகு தான் இந்த வினாவே எழுப்பப்பட்டது. அதன் மீதுதான் நடவடிக்கை எடுக்கின்றார்கள். எனவே அந்த அடிப்படையில் தனியார் பள்ளிக்கு நேரடியாக, உபரியாகத் தொகை இருந்தால், பள்ளி உபயோகத்திற்கு அதைப் பயன்படுத்தலாம் என்று தெளிவாக உத்தரவு ஒன்றை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது இருக்கின்ற விதிப்படி அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்று இருக்கின்றது. அனுமதிக்கு விடையளிப்பதை எவ்வளவுக்கு எவ்வளவு விரைவு படுத்தலாமோ அந்த அளவுக்கு விரைவு படுத்துவதற்கு முயற்சி எடுக்கலாம். அவரவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப அனுமதி தருவதற்கு இயலாது.

திரு. செ. முத்துசாமி : இப்படிப்பட்ட உபரி தொகையைக் கட்டிடம் கட்டுவதற்கு உபயோகிக்க அனுமதி வழங்கப்படுகிறது. அதில் பள்ளியிலிருந்து சம்பாதிக்கப்பட்ட பணம் என்று ஒன்று இருக்கிறது. மற்றொன்று அரசாங்கம் மானியமாகத் தருகிறது. இப்படிப்பட்ட கட்டிடங்கள் அரசாங்கத்துக்கே சொந்தமாக இருக்கின்றனவா அல்லது தனியார்களே அவற்றை ஆதிக்கப்படுத்திக்கொண்டு, தங்களுடைய சொந்தச் சொத்தாக அனுபவித்து வருகின்றார்களா? இது குறித்து கல்வி இலாக்காவிலே எந்த விதமான நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட சொத்துக்கள் தனியார் எவருக்கும் சொந்தமான சொத்தாக ஆகிவிடாது. இந்த நிலையத்தைச் சேர்ந்த சொத்தாக இருக்க வேண்டும் அல்லது பள்ளியினைச் சேர்ந்த சொத்தாக இருக்க வேண்டும். தனிப்பட்டவர்கள் யாரும் அதை தங்களுக்குரிய சொத்தாக ஆக்கிக் கொள்ள முடியாது.

திரு. செ. முத்துசாமி : நிலையமே தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது, நிலையத்தின் பெயரில் தான் சொத்துரிமை கொண்டாடுகிறார்கள். கல்வித் துறையில் இருந்து நிதி அதன் பெயரில் வைக்கும்போது, அது அரசாங்கத்துக்குச் சொந்தமாக வைக்கப்படுகிறதா, அல்லது, தனிப்பட்டவர்களுடைய சொத்துரிமை என்ற அடிப்படையிலே அந்த நிலையத்திற்குச் சொந்தமாகும்போது தனிப்பட்டவர்கள் சொத்தாக அது ஆகின்றதா என்று அறிய விரும்புகிறேன். அப்படி இல்லாமல், அரசாங்கக் கட்டுப்பாட்டிலே வைக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு கல்வி நிலையத்திற்கு நன்கொடையாக அளித்து விடுவார்களானால், அது கல்வி நிலையத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும் அல்லது கல்வி நிலையத்திற்கு உரியதாக எழுதி வைத்து விடுவார்களானால், அதை மறுபடியும் எடுக்க முடியாது. இப்படி ரூ. 75 ஆயிரம் கொடுப்பது அந்தக் கல்வி நிலையத்திற்கு உரிய சொத்தே தவிர, தனிப்பட்டவர்களுக்கு உரிய சொத்து அல்ல. அப்படிப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் இந்த நிலையத்திற்கு உரியதாக இருக்கும். என்றைக்காவது விட்டுவிடவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கு வழி இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட கட்டிடத்தை நன்கொடையாக அளிக்காமல், சிறிது காலத்திற்கு இனமாக அதில் வகுப்புகளை நடத்திக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அப்படிப்பட்ட கட்டிடத்தை நாம்கூட கேட்க முடியாது. ஆனால் கொடுத்துவிட்ட, எழுதி வைத்துவிட்ட கட்டிடத்தை எடுக்க வழியில்லை.

## *Automobile Services and Repair Shops in Residential Areas in Madras City.*

*237 Q.—THIRU D. V. D'MONTE : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware that automobile service and repairs shops are springing up rapidly in residential areas in various parts in Madras City ; and

(b) if so, whether there are any proposals to put an end to this health hazard by providing suitable places for these shops away from residential areas ?

## சென்னை மாநகரின் குடியிருப்புப் பகுதிகளின் மோட்டார் வண்டி பட்டறைகள்.

திரு. டி. வி. டி. மாண்டி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் மோட்டார் வண்டி பட்டறைகள் வேகமாகத் தோன்றி வருவதை அரசு அறியுமா ?

(இ) குடியிருப்புப் பகுதிகளுக்குத் தொலைவான இடத்தில் இப்பட்டறைகளுக்குத் தகுந்த இட வசதிகள் செய்து கொடுப்பதன் மூலம் இச் சுகாதாரக்கேட்டிற்கு முடிவு கட்டும் செயற்குறிப்புகள் ஏவையேனும் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.



திரு. டி. சந்தோஷம் : தலைவரவர்களே, இது சென்னை மாநகரத்திற்கு மாத்திரம் தனியாக ஏற்படும் தொல்லை என்று எண்ணக்கூடாது. இது மதுரை, கோவை, திருச்சி போன்ற எல்லா நகரங்களிலேயும் உள்ள ஒரு பொதுவான தொல்லை என்று கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படும்போது எல்லா நகரங்களுக்கும் சேர்ந்தாற்போல் செயல்படக் கூடிய முறையில், விரிவான முறையில் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தற்போது சென்னை மாநகராட்சிக்கான சட்டம் திருத்தப்பட முடியுமா, எந்தெந்த வகையிலே திருத்தப்பட வேண்டும் என்று பரிசீலிக்கப்படுகிறது. அப்படிப் பரிசீலிக்கப்பட்டு அதிலே ஏற்றுக்கொள்ளப்படுகிற சீர்திருத்தங்கள் அல்லது மற்ற திருத்தங்கள் மற்ற மாநகராட்சிப் பகுதிகளிலும் இடம் பெற வேண்டுமென்ற அளவில் கருத்து வருமானால், அதற்குப் பிறகு யோசிக்கலாம்.

திரு. எல். பலராமன் : சென்னை நகரத்தில் மட்டுமல்லாமல் வேறு சிறுசிறு நகரங்களில், முனிசிபல் நகரங்களில் எல்லாம் இது போன்ற நிலை ஏற்படுவதை அரசு பரிசீலித்திருக்கின்றதா ? அதையெல்லாம் தவிர்ப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுத்து, அதை ஒழுங்கு படுத்துவதற்கான ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முன்னாலேயே திரு. டி. சந்தோஷம் அவர்கள் அதைத்தான் கேட்டார்கள். தமிழ்தான் வேறு வேறாக இருந்ததே தவிர, கேள்வி ஒன்றுதான். இதற்கு விடையும் அதுவே தான்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மக்களுடைய வாழ்க்கைத்தரம் வெகுவாகவும் வேகமாகவும் உயர்ந்து வருகின்ற காரணத்தினாலே, எல்லோரும் வாகனங்களிலே போக ஆசைப்படுகிறார்கள். மோட்டாரில் பிளசராகப் போக ஆசைப்படுகிறார்கள். நாளுக்கு நாள், வருடத்திற்கு வருடம் இந்த மாதிரி ஸ்பெஷல் கார்கள் போவது ஜாஸ்தியாகிக் கொண்டிருப்பதனாலே, இந்த மாதிரியான பட்டறைகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. அப்படித் தேவைப்படுகின்ற நிலைமையில் சட்டதிட்டங்களைப்போட்டு அந்த லொக்காலிடியிலிருந்து ஒதுக்கிக் கொண்டு போய்விட்டால்—இப்போதே பெட்ரோல் விலை ஒன்றுக்கு மூன்று பங்காகப் போய்க்கொண்டிருக்கின்றது, அடுத்து என்ன வரி போடப்போகின்றார்களோ அதுவும் தெரியாது—ஒரு தடவை ரிப்பேருக்காக பட்டறையில் கொண்டு போய்விட்டு ரிப்பேர் முடிந்து மறுபடியும் கொண்டு வருவது என்ற நிலைவரும்போது, தூரம் காரணமாக அதிகமான செலவு ஏற்படும். இந்த நிலைமையை மனதில் கொண்டு அனுபவசாலிகள் இருக்கும்படியான அளவுக்கு பட்டறைகள் வைக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குடியிருப்புப் பகுதிகளிலே இப்படிப்பட்ட பட்டறைகள் இருப்பதன் காரணமாக, அவைகளிலேயிருந்து ஏற்படுகின்ற புகை, தூசி, அழுக்கு இவைகள் எல்லாம் அந்தக் குடியிருப்புப்

பகுதிகளிலே இடையூருக இருக்கின்றன என்பது ஒரு பொதுவான கருத்து. குடியிருப்புப் பகுதி அல்லாத பகுதிகளிலே, எந்த இடத்தை யார் விரும்புகிருர்களோ அங்கு வைத்துக்கொள்வதற்கு அனுமதி கேட்டு, அந்த அனுமதி அளிப்பது நியாயமாக இருந்தால், அதை வழங்குவதற்கு மாநகராட்சிக்கு ஒரு அதிகாரம் வருகிறது. இதற்கு முன்ருல், அனுமதி இல்லாமலே அப்படி ஒரு சில தொழிற்சாலைகள் ஏற்பட்டன. மோட்டார் இல்லாத, எலக்ட்ரிசிடி இல்லாத இயந்திரங்கள் இருக்கின்றன என்ருல், எந்த இடத்தில் வேண்டுமென்ருலும் வைத்து விடுகின்ருர்கள். ஆகவே அவைகளை முறைப்படுத்துவது அல்லது கட்டுப்படுத்துவது என்பது காலத்தினுடைய தேவையாக இருக்கின்றது.

### *"Yoga" Exercises to the Prisoners.*

*238 Q.—THIRU D.V. DMONTE: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal with the Government to teach "Yoga" exercises to the prisoners?

### கைதிகளுக்கு "யோகாசனப் பயிற்சி."

திரு. டி. வி. டி' மாண்டி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவலில் இருக்கும் கைதிகளுக்கு "யோகாசனப் பயிற்சி" அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

### *Youth Service Corps.*

*239 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal with the Government to revise the service scheme of the Youth Service Corps in the State; and

(b) if so, the details thereof?

### இளைஞர் அணி.

திரு. வே. தங்கப்பாண்டியன்: (அ) மாநிலத்தில் இளைஞர் அணியின் பணித்திட்டத்தை மாற்றியமைக்க அரசிடம் எதும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.



திரு. வே. தங்கப்பாண்டியன்: இப்போது இளைஞர்கள் அணியில் அமர்த்தப்பட்டிருப்பவர்களுக்கு சரியான முறையிலே வேலை கொடுக்கப்படவில்லை என்றும், அப்படிக் கொடுக்கப்பட்ட வேலைகளைக்கூட அவர்கள் சரியாகச் செய்யவில்லை என்றும் அரசுக்குப் புகார் வந்திருக்கின்றதா? அப்படி வந்திருந்தால், அரசு அதைப்பற்றி ஆய்வு செய்து இப்போது தாலுகா அலுவலகங்கள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைமை அலுவலகங்கள் இங்கெல்லாம் அவர்களை கிளார்க்குகளாக பணியில் அமர்த்த அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. 435 பேர்கள் என்று கருதுகிறேன். சுமார் 435 பேர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ருர்கள். மேலும் அவர்கள் கிராம சேவக்குகளாகப் போகிருர்கள் என்று அவர்கள் எண்ணத்தை அறிவதற்கு சிலாது ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்டவர்களில் ஒரு சிலர் அங்கே சேர இஷ்டம் இல்லை என்று சொல்லியிருக்கின்ருர்கள். அப்படி அவர்கள் அங்கே போய்ச் சேரவில்லையென்ருல்,"உங்கள் பணி டெர்மினேஷன் செய்யப்படும்" என்று அரசு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கின்றது. யார் யார் அந்த வேலைகளுக்குப் போக விரும்புகிருர்கள் என்று கேட்டு, வேலை கொடுக்க இயலாது. நாங்கள் பார்த்து அவர்களுக்குத் தகுதியான இடங்கள் இருக்கின்றன என்று தெரிந்து, அந்த வேலைகளுக்குப் போவதற்கு அவர்கள் இஷ்டம் தெரிவித்தால், அதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இப்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள் அனுப்பப்பட்டிருக்கின்ருர்கள். என்னுடைய வேண்டுகோள் எல்லாம், ஊராட்சி அலுவலகங்களில் ஏராளமான வேலைகள் இருக்கின்றன. இவர்களை இந்த அலுவலகங்களில் துணையாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற வேண்டுகோளை முன் வைத்திருக்கின்ருேம். அரசு அதை ஆய்வு செய்து முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். இதில் இளைஞர்களுடைய விருப்பத்தைக் கேட்க வேண்டும் அல்லது அவர்கள் நோக்கம் அறிந்து செய்ய வேண்டும் என்று சொல்கிருர்கள். சமீபத்திலே நமது விருப்பத்திற்கு அவர்கள் ஒத்து வரமாட்டார்கள் என்று தெரிகிறது. ஆகவே அரசு இந்த வேண்டுகோளை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், அவர்கள் அங்கே ஒப்படைக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் அலுவலகத்திலோ மன்ற அலுவலகத்திலோ வேலை கொடுப்பதற்கில்லை. அதற்குப் பதிலாக அவர்களுக்கு பல்வேறு பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளை அவர்கள் செய்ய ஒப்புக்கொண்டிருக்கின்ருர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியின் நோக்கம் என்ன?

(பிற்பகல் 4–20).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : படித்துவிட்டு வேலையில்லா
மலிருக்கின்ற இளைஞர்களுக்கு தற்காலிகமான வேலைகள் கொடுக்க வேண்டு
மென்ற நோக்கத்தோடுதான் இந்த இளைஞரணி அமைக்கப்பட்டிருக்கிறது.
அவர்கள் ஆங்காங்கே கிராமங்களுக்குச் சென்று கிராமங்களிலே இருக்கக்
கூடிய தீண்டாமையை ஒழிப்பதற்கும், கிராமங்களிலே வாழும் மக்களுக்கு
மருத்துவ வசதி போன்ற வசதிகளுக்கு உதவியளிக்கவும் வேண்டுமென்ற
வகையிலே பலவிதமான திட்டங்கள் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டு,
அவர்கள் பணியாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கே அமர்த்தப்
பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் என்ற வகையிலே இல்லா
மல், மதிப்பூதியம் என்ற வகையில் 'ஆனரேரியம்' ஆக மாதம் ஒன்றுக்கு
ரூபாய் 175 இப்போது வழங்கப்படுகிறது.

திரு. செ. முத்துசாமி : தற்காலிகமாக அவர்களுக்கு ஒரு வேலையைத்
தந்தோம். திடீரென்று ஒரே நேரத்திலே 435 பேர்கள் தற்காலிக வேலை
நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ அவர்கள்
நீண்டகாலமாக சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை
மையிலே பணியாற்றி வந்து விட்டார்கள். திடீரென்று ஒரு முறை
விசி: செல்லும்பொழுது அவர்கள் இல்லாததால், 435 பேரை அரசாங்
கம் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்திருக்கிறது. முதல் முறையாக
அவர்கள் இப்படிச் செய்திருப்பதால், நான் அவர்களுக்காக ஒரு கருணை
மனுவாக, ஒரு விண்ணப்பமாக இந்த நேரத்தில் வேண்டுகிறேன். முதல்
முறையாக அவர்கள் செய்திருப்பதால், அரசாங்கம் தற்காலிகமாக வேலை
நீக்கம் செய்யப்பட்டுள்ளவர்களை மீண்டும் எடுத்துக் கொள்வதற்கு கருணை
யோடு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த இளைஞரணியிலே
இரண்டாண்டு காலம் பணி செய்த பிறகும் அவர்களுக்கு வேலை கிடைக்கா
விட்டாலும் அவர்களை நிறுத்திவிடுவது என்ற ஒரு திட்டமிருந்தது. ஆனால்
நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் கருணை காட்டி, அவர்
களுக்கு வேலை கிடைக்கின்ற வரையிலும் மேலும் இரண்டாண்டு காலத்
துக்கு அவர்களுடைய பணியை நீட்டித்திருக்கிறார்கள். மேலும் அவர்
களே "நாங்கள் தவறு செய்துவிட்டோம்" என்று ஒத்துக்கொண்ட
காரணத்தாலே, தவறு செய்தவர்களை மீண்டும் தேர்ந்தெடுப்பதற்கு
என்ன வழியிருக்கிறது என்பதைத்தான் ஆராய வேண்டியிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த இளைஞரணியிலே இருப்பவர்கள்
வேலை செய்யாமலிருந்தாலும் அவர்களுக்குக்கூட இந்த 150 ரூபாய்
மதிப்பூதியம் தொடர்ந்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கேள்வியைத்தான்
முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள்
கேட்டார்கள். ஏறத்தாழ 4,000 பேர் இளைஞரணியில் சேர்க்கப்பட்டு,
அவர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியமாக தலைக்கு 175 ரூபாய்



வீதம் கொடுத்து வருகின்றோம். அதிலே 400 பேர் விலக்கப்பட்டிருப்பதற்குக்
காரணமே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் குறைப்பட்டுக்
கொண்டாரே அந்தக் காரணம்தான். அந்த 400 பேர்கள் மீதுகூட
கருணை வைத்து அவர்கள் தங்களுடைய தவறுகளுக்கு வருத்தம்
தெரிவிப்பார்களானால், அந்தத் தவறுகளுடைய அடிப்படையிலே, என்
னென்ன கேஸ் என்பதையும், அவர்களுடைய "மெரிட்" என்ன
என்பதையும் பார்த்து அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே அவர்களை
மீண்டும் எடுத்துக்கொள்வது பற்றி யோசனை கூறப்பட்டிருக்கிறது.

THIRU K. S. Ganapathi rose ....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்குமேல் என்ன ?

When once the Hon. the Chief Minister has given the reply in the matter, I think there may not be any need to ask a question on the subject once again. The hon. Member may please be seated.
கோபப்படவில்லை.

THIRU C. V. RAJAGOPAL : Sir, I want to give a clarification....

MR. CHAIRMAN : The hon. Member is not being asked to give any clarification. The hon. Member cannot give any clarification in the House.

THIRU C.V. RAJAGOPAL : Sir, after the reply given in the matter, I had some suggestion to make. On the basis of that suggestion, I wanted to raise a question.

THIRU G. SWAMINATHAN : Sir, the hon. Member said that he wanted to raise a question but he has sat down without raising the question.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, நான் கேட்க விரும்புவ
தெல்லாம், இந்த இளைஞரணியிலே பல இளைஞர்கள் சேர்க்கப்பட்டிருக்கி
றார்கள். இவர்களுடைய பணிக் காலம் முடிந்த பிறகு ஏதாவது பணி
அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா, யார் யாருக்கு, எந்தெந்தப்
பணி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது 157 பேர்
உயர்நிலைப் பள்ளியிலே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.
இந்த 157 பேரும் ஆங்காங்கே பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்
பட்ட மாணவர்களுக்கு மாலை நேரத்திலே கல்வி கற்றுத் தரவும்
மற்றும் பள்ளிகளிலே இருக்கின்ற மாணவர்களோடு தொடர்பு கொண்டு
அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதி மற்றும் பிரச்சினைகளுக்கு
உதவி செய்வதற்காகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே

அரசாங்கத்துக்குச் சொந்தமான வாரியங்களில்—பல்லவன் போக்குவரத்துக் கழகம் இப்படிப்பட்டவைகளில் எல்லாம் அவர்களுக்கு முதலிடம் அளித்து அவர்களை பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோலவே மருத்துவ மனைகளிலே பணி கொடுக்கப்பட்டு அவர்கள் பணி செய்து வருகிறார்கள். அதுபோலவே இப்பொழுது அவர்களை கிராம சேவிக்குகளாக நியமிக்கலாமென்ற அடிப்படையில், "உங்களுக்கு கிராம சேவிக்குகளாகப் பணியாற்றுவதற்கு விருப்பமாயிருக்கிறதா" என்று கேட்டு, பலருக்குத் தகவல் அனுப்பப் பட்டது. சிலர் விருப்பமில்லை என்று தெரிவித்த காரணத்தாலே, விடுவிக் கப்பட்டு விட்டார்கள். விருப்பமுள்ள சிலருக்கு அங்கே பணியாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் மற்ற எல்லா அரசாங்க வாரியங்களிலும் அவர்களுக்கு முதல் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், அவர்களுக்கு வயது வரம்பிலே கூட சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. 30 வயதுக்குள் வயது இருக்க வேண்டுமென்று வரம்பிருந்தால்; இளைஞரணியிலே பணியாற்றியிருந்தால், இரண்டு ஆண்டு காலம் சேர்த்து 32 ஆண்டு வரையிலே அந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. சர்வீஸ் கமிஷனில் கூட அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே இன்றைக்கு "எம்ப்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச்"களில், வேலை தேடித்தரும் நிறுவனங்களில் கூட இவர்கள் இன்னின்ன பணியாற்றுகிறார்கள், இவர்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று உத்தரவு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு எழுதிக் கொடுத்தால், அவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று அறிவிப்பு வழங்கியமைக்காக இந்த அவையிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Accident during the Car Festival in Srivilliputhur.*

*240 Q.—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of persons who lost their lives in the accident during the Car Festival in Srivilliputhur, Ramanathapuram District; and

(b) whether the Government have granted any financial aid to the families of the deceased?

### திருவில்லிபுத்தூரில் நடைபெற்ற தேரோட்டத்தில் விபத்து.

* திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் நடைபெற்ற தேரோட்டத்தின் போது எத்தனை பேர் விபத்தில் இறந்தனர்?

(இ) அவர்களது குடும்பத்திற்கு அரசாங்கம் ஏதும் பண உதவி செய்ததா?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) நான்கு.

(இ) அரசு நிதியிலிருந்து தொகை எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால் திருக்கோயில் நிதியிலிருந்து ஈட்டுத் தொகையாக ஒருவரின் குடும்பத்திற்கு ரூபாய் 5,000-மும் மற்ற இருவரின் குடும்பத்திற்கு தலா ரூ. 2,500-மும் அளிக்கப்பட்டுள்ளது. இறந்துபோன நான்காவது நபருக்கு வாரிசுகள் இல்லாததால் ஈட்டுத்தொகை எதுவும் கொடுக்கப் படவில்லை.

திரு. டி. சந்தோஷம்: இந்த விபத்து நடந்ததற்குக் காரணம் யாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சுமார் ஐயாயிரம் பேர் இழுக்கக்கூடிய தேரை 25 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் ஒரே நேரத்திலே வேகமாக இழுத்த காரணத்தாலும், தார் ரோடாக இருந்த காரணத்தாலும் அளவுக்கு மீறிய வேகத்தோடு தேர் ஓடிற்று. அங்கேயிருந்த போலீஸ் அதிகாரிகளும், இந்தத் துறையினுடைய அதிகாரிகளும் எவ்வளவோ சொல்லியும் கூட, அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் தேர் மிக உயரமாக இருந்த காரணத்தால், தடுப்புக் கட்டைகளைக் தாண்டி ஓடிவிட்டது. அதற்குப் பிறகு தான் உயரமான இடத்திலே முறிவு ஏற்பட்டு, கலசத்தோடு கீழே விழுந்து இந்த விபத்து ஏற்பட்டது. மேற்கூறப்பட்டவைகள்தான் விபத்து ஏற்பட்டதற்குக் காரணங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தேர்கள் ஓரளவு வேகத்தோடு மேலாக ஓடக்கூடாது என்பதாக ஏதாவது நிர்ணயம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, வேகக் கட்டுப்பாடு என்பதை விட குடும்பக் கட்டுப்பாடு என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும்.

திரு. ஏ. வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, தேர் ஓடும் போது, அதனுடைய வேகத்தைக் கட்டுப்படுத்த இரண்டு பக்கமும் தடுப்புக் கட்டைகள் இருக்கின்றன. பெரிய கட்டைகளைப் போட்டு அதனுடைய வேகத்தைக் குறைப்பதற்கு பலவிதமான வழிகள் இருக்கின்றன. அந்த வழி முறைகள் எல்லாம் பயன்படுத்தப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அவைகள் அத்தனையும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் 5 ஆயிரம் பேர் இழுக்க வேண்டிய தேரை 25 ஆயிரம் பேர் சேர்ந்து வேகமாக இழுத்த காரணத்தால்தான், அந்தத் தடுப்புக் கட்டைகளையும் தாண்டி தேர் ஓடிச் சென்று அந்த விபத்து ஏற்பட்டு விட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : திருவில்லிபுத்தூரிலுள்ள தேர் நீண்ட காலமாக இழுக்கப்படாத ஒன்று. அந்தத் தேர் இழுக்கப்பட வேண்டுமென்று முடிவெடுத்தபோது, சரியாக பழுது பார்க்கப்படாமலேயே இழுத்ததாக ஒரு குறையை அந்தப் பகுதி மக்களும், நேரில் பார்த்தவர்களும் சொல்கிறார்கள். அதனால்தான் இவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து பல்வேறு சம்பவங்கள் ஏற்பட்டதாகவும் அரசுக்குத் தெரிவித்தார்களா ? இனிமேல் தேர் இழுக்கப்படும் முன்பாக அந்தத் தேர் சரியாக பழுது பார்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து, அதற்குப் பின்புதான் அனுமதி அளிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : எந்தத் தேரை ஓட்டுவதாக இருந்தாலும் பொதுப்பணித்துறை எஞ்சினியருடைய சர்டிபிகேட் வாங்கப்பட்டு, அதற்குப் பின்னால்தான் ஓட்டப்படுகிறது. இந்தத் தேரைப் பொறுத்தவரையில், கடந்த 18 ஆண்டுக் காலமாக ஓட்டப்படவில்லை. இந்தத் தடவை ஓட்டும்போது, அங்கேயிருக்கின்ற நிர்வாகப் பொறியாளர், பப்ளிக் ஒர்க்ஸ், அதிகாரிகளிடத்திலிருந்து தேவையான அனுமதிகள் வாங்கப்பட்டு அதற்குப் பிறகுதான் ஓட்டப்பட்டதே தவிர, இதில் வேறு எந்தவிதமான தவறும் நடைபெற்றுவிடவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாரூர் தேர் 20 வருஷமாக ஓடவில்லையே. அப்புறம் ஓடியபிறகு அதற்கு ஒன்றும் விபத்து வரவில்லையே. (சிரிப்பு).

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2 ) சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்தி

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு, பேரவையால் நிறைவேற்றப்பட்டு இது அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன் முடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 3. மாண்புமிகு மேலவைத் தலைவருக்கு 70-வது பிறந்த தின வாழ்த்துக்கள்,

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிக்க தலைவரவர்களே, இந்த அவைக்கு இன்று ஒரு மகிழ்ச்சிகரமான நாள் என்று எண்ணுகிறேன். தங்களுடைய 70-வது பிறந்த தினம் இன்று இந்த அவை கூடி இருக்கும் பொழுது வந்திருப்பது எங்களுக்கெல்லாம் மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. தங்களுடைய வாழ்க்கையே சாதாரண அல்லது நடுத்தர, குடும்பங்களில் பிறந்தவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. அதிகமாகப் படிப்பதற்கோ படிக்க வைப்பதற்கோ குடும்பத்தில் வசதியில்லாமல், சாதாரண ஒரு ஹைஸ்கூல் அளவில் படித்த தாங்கள் 21 புத்தகங்கள் எழுதியிருக்கிறீர்கள்—3 நாடகங்கள் எழுதியிருக்கிறீர்கள்—படிக்காத ஒரு மொழியாகிய தமிழில் இவ்வளவு பாண்டித்தியம் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். தங்களுடைய பெருமையை நான் மெச்சாமல் இருக்க முடியாது. தங்களைத் தலைவராக கடந்த 5 ஆண்டுகளாக நாங்கள் அடைந்து, இந்தச் சபையை தாங்கள் மிக நல்ல முறையில் நடத்திக் காண்பித்தது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது. இந்த 70 ஆண்டுகள் போதாது, இன்னும் நீடித்து பல ஆண்டுக் காலம் தாங்களும் தங்கள் துணைவியாரும் வாழ்ந்து நாட்டுக்கு மேலும் சேவை செய்வதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை நான் வேண்டிக் கொள்கிறேன். தங்களுக்கு இறைவன் பேரில் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இறைவன்பேரில் நம்பிக்கையுள்ளவர்களாகிய நாங்கள் இறைவன் பெயரால் கேட்பது எவ்வளவு தூரம் நாங்கள் உணர்கிறோம்—தங்களை எவ்வளவு முக்கியமாகக் கருதுகிறோம் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். ஆகவே தாங்கள் நெடுநாள் வாழ வேண்டுமென்று பிரார்த்தித்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 4-30)

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்ட மாதிரி, தங்களது 70-வது பிறந்த நாளின் போது இந்த மேலவை கூடியிருப்பதால், இந்தச் சமயத்திலே நாங்கள் பேசுவதற்குரிய ஒரு வாய்ப்பாக இதை எடுத்துக் கொள்கிறோமென்றால் மிகையாகாது. தங்களுடைய பிறந்த நாளானது, சாதாரணமாக மேலவைக் கூட்டம் இல்லாதபோதுதான் கடந்த பல ஆண்டுகளாக வருவது வழக்கம். எனவே, அந்தச் சந்தர்ப்பங்களிலே சிலர் வருவதும், சிலர் வரமுடியாத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. நான், என்னுடைய முதல் கோரிக்கையாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தங்கள் பிறந்த நாள் விழா வரும்போது, இந்த மேலவை கூட்டப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சென்ற ஆண்டு மேலவை கூடியிருக்கும்போதுதான் பிறந்த நாள் வந்தது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அப்போது தேர்தல் இருந்ததால் என்னால் வர முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தலைவர் பதவியை தாங்கள் சிறந்த முறையில் நிர்வகித்து வருகிறீர்கள் என்பதையும் நான் என்னுடைய கட்சியின் சார்பில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தலைவர் பதவி என்பது மிகவும் சங்கடமான பதவி. மேலவைத் தலைவர் பதவியானாலும், பேரவைத் தலைவர் பதவியானாலும், சாதாரணமாக அது சங்கடமானதென்று நான் கருதுகிறேன். இந்தத் தலைவர் பதவிக்கு வருகிறவர்கள், ஒரு கட்சியிலே பல ஆண்டுகள் தொண்டு புரிந்து, அந்தக் கட்சியினுடைய சிறந்த பேச்சாளராக இருப்பவர்களாவார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் அமைச்சர்களாகவும், பேரவை, மேலவைத் தலைவர்களாகவும் வருவது வழக்கம். தாங்களும், தாங்கள் சார்ந்திருந்த கட்சியின் பெருந் தலைவராகவும், சிறந்த பேச்சாளராகவும் இருந்தீர்கள். அதன் பிறகுதான், இந்த அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். சிறந்த பேச்சாளராக இருப்பவர்கள், இந்தத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, தாங்கள் பேசாமல், இங்கிருக்கும் அவ்வளவு உறுப்பினர்கள் பேசுவதையும் கேட்டுக்கொண்டிருக்கும் நிலைமைக்கு உள்ளாவார்கள். உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்புண்டு. ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, அவையிலிருந்து கிளம்பி வேறு இடத்திற்குச் செல்லும் வாய்ப்பு உறுப்பினர்களுக்கு உண்டு. தலைவர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைப்பது கஷ்டம். அப்படிச் செல்ல வேண்டுமென்றால், துணைத் தலைவரை அமர்த்திவிட்டுச் சொல்ல வேண்டும். துணைத் தலைவரும் சிறந்த பேச்சாளராக இருப்பதால், அவரும் கஷ்டப்படுகிறார். உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், மற்றவர்கள் பேசும்போது கொஞ்சம் கவனிக்காமல், வேறு காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கலாம். தலைவர் அதையும் செய்ய முடியாது. திடீரென்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்று கிளப்பப்பட்டால், என்னவென்று கேட்க வேண்டிய அவசியம் தலைவருக்கு இருக்கிறது. எனவே தலைவர் பதவியென்பது மிகவும் கஷ்டமான பதவியாகும்.

ஒரு கட்சியிலேயே பல்லாண்டுக் காலம் இருந்து விட்டு, இந்தப் பதவிக்கு வந்து அமர்ந்தவுடன் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி இரண்டையும் ஒருநோக்கோடு பார்க்க வேண்டிய நிலைமை தலைவருக்கு ஏற்படுகிறது. சில சமயங்களில் ஆளுங் கட்சிக்குப் பிடிக்காத கருத்துக்களை எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிறபோது, அதில் நியாயம் இருந்தால், அதற்கு உடன்பட்டுச் சொல்ல வேண்டிய நிலைமையும் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதையும் நாங்கள் பார்த்திருக்கிறோம். பல சந்தர்ப்பங்களிலே, அமைச்சர் பெருமக்கள் சில கேள்விகளுக்கு சரியாக பதில் சொல்லாமல் இருக்கிறார்களென்று நாங்கள் கருதுகிற நேரங்களிலே, சரியான பதில் சொல்ல வேண்டுமென்று நீங்கள் கட்டாயப்படுத்தினீர்கள் என்பதையும் நினைவு கூர்ந்து, தங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அது, எந்தச் சந்தர்ப்பமென்று சொல்லத் தேவையில்லை என்று நான் கருது



கிறேன். அதே போன்று, இந்த அவையிலே பல சந்தர்ப்பங்களிலே விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது, அவைகளை இழந்து இருக்கும் போது, தங்களுடைய நல்ல பேச்சாற்றலால், நல்ல வேடிக்கையான சொற்களைக் கூறி, அவையைக் கலகலப்பாக்கியிருக்கிறீர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஓரிரு சம்பவங்களையும் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. தீக்ஷிதர் அவர்கள் தவறாக நினைக்க மாட்டார்களென்று நினைக்கிறேன். ஒருமுறை அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு குறிப்பைச் சொன்னார்கள். "நம்முடைய மாநிலம் பஞ்சத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது; ஒருவருக்கும் உணவு கிடைக்காத நிலைமையில், மக்கள் பட்டினியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, சென்னையில் இருக்கக்கூடிய பெரிய வீடுகளில் 'நாய்கள் ஜாக்கிரதை' என்று போர்ட் போட்டிருக்கிறார்கள். நாய்கள் இருக்கின்றன, ஜாக்கிரதை என்பதற்காக நாய்கள் ஜாக்கிரதை' போர்டா அல்லது இருக்கிறவர்களே நாய்களா என்று தெரியாத முறையில் போகிறவர்கள் கஷ்டப்படுகிறார்கள்" என்று திரு. தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள். இன்னொன்றையும் அவர்கள் சொன்னார்கள் "நாங்களெல்லாம் நாட்டு நாய்களைப் பார்த்தவர்கள். ஆனால், இங்கே எவ்வளவு பெரிய நாய்களை வளர்க்கிறார்கள்", என்று கூறினார்கள். உடனே நீங்கள் இடைமறித்துக் கேட்டீர்கள். "நீங்கள் நாட்டு நாய்களைத்தானே பார்த்திருக்கிறீர்கள்; இந்த நாய்கள் இவ்வளவு பெரியவை என்று எப்படித் தெரியும்?" என்று கேட்டபோது எல்லோரையும் அச்சொற்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்தின.

இன்னொரு சமயத்தில் அவர்கள் பேசும்போது—அண்மையில், ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "நம்முடைய மாநிலத்தில் எல்லோரும் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்; பல பேருக்கு வேலை கிடைக்கவில்லை. காலை நேரத்தில் பேப்பர் வாங்கப் போனால் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைகள் கிடைக்கவில்லை. அதற்கு முக்கியமான காரணம், எல்லோரும் "வேலைகள் காலி" பகுதியைப் பார்ப்பதற்காக பேப்பர்களை வாங்கிச் சென்று விடுகிறார்கள்; அதனால் கிடைக்கவில்லை" என்று திரு. தீக்ஷிதர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தாங்கள் அப்போது இடைமறித்து, "வேலையில்லாமல் இருக்கிறவர்கள்தான் பேப்பர் வாங்குகிறார்கள்; வேலை உள்ளவர்கள் ஏன் பேப்பர் வாங்குகிறார்கள்" என்று கேட்டபோது, இந்த அவையே மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

தங்களை நேரடியாக சந்தித்துப் பேசும் வாய்ப்பு மேலவை உறுப்பினராக ஆன பின்புதான் எனக்குக் கிடைத்தது. ஆனால், 25 ஆண்டுகளுக்கு முன்னால், நான் கல்லூரி மாணவனாக இருந்தபோது, நீங்கள் சீர்காழிக்கு வந்து சிறந்த முறையில் சொற்பொழிவாற்றினீர்கள். அந்த நேரத்தில், ஒரு கல்லூரி மாணவனாக இருந்து கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்போது நீங்கள் மிகவும் தளர்ந்து விட்டீர்கள். அப்போது தாங்கள் மிகவும் சிவந்தவராய்,

ஆஜானுபாகுவான உருவம் கொண்டவராய், அழகான உடை உடுத்தியவராய் இருந்துகொண்டு, சிறந்த முறையில் பேசியது, இளைஞராகிய எங்களுடைய உள்ளங்களை மிகவும் கவர்ந்தது.

மேலவை உறுப்பினர்களாக வந்த பிறகும், அவர்கள் தலைவர்களைப் பார்க்க அஞ்சுவது வழக்கம். ஆனால் உங்களைப் பொறுத்த வரையில், எல்லா உறுப்பினர்களும், எந்த வேளையிலும் பார்க்கும் அளவுக்கு மிகவும் சாதாரணமாக, எளிமையாக இருக்கிறீர்கள். சிறந்த முறையில் இந்த அவையை நீங்கள் நடத்தி வருகிறீர்கள். இப்படிப்பட்ட தலைவர் இந்த அவைக்குக் கிடைத்ததற்காக என்னுடைய பெருமையினையும், மகிழ்ச்சியினையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தச் சமயத்திலே பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததற்காக என்னுடைய சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து, இந்தச் சமுதாயத்திற்கு நல்ல முறையிலே நீங்கள் சேவை செய்ய வேண்டுமென்றும், இன்னும் பல்லாண்டுகள் இந்த மேலவைத் தலைவராக இருந்து, இந்த அவையைச் சிறந்த முறையில் நடத்த வேண்டுமென்று நானும் இறைவனைத் தொழுது, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சந்தோஷம் : தலைவரவர்களே, என்னுடைய ஐக்கியக் கட்சியின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கு இருந்திருப்பாரானால், அவருக்கே உரித்தான பாணியில் சிறந்த ஆங்கிலத்தில் இந்தப் பாராட்டுதலை வழங்கியிருப்பார். அவர் வர மாட்டாரென்று எனக்குத் தெரியாது. ஆகவே, நான் பேசுவதற்கு முன்கூட்டியே தயார் செய்துகொண்டு வரவில்லை. எனினும், ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மேலவையிலே உறுப்பினராக வருவதற்கு முன்பாகவே உங்களுடைய பொதுமேடைப் பிரசங்கங்களை நான் கேட்டிருக்கிறேன். மிகவும் ஆழ்ந்த கருத்துக்களை, நகைச்சுவையுடன், சிறந்த முறையில் தாங்கள் பேசுவதை கேட்டவர்களில் நானும் ஒருவன். திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டபடி, மூட நம்பிக்கை வளர்ந்து வந்த நம்முடைய சமுதாயத்திலே, இருட்டைப் போக்கும் வகையிலே உங்களுடைய சொற்பொழிவுகள் சிறந்த தூண்டுகோலாக இருந்தன. பல இளைஞர்கள் மூட நம்பிக்கைகளை விட்டு, பகுத்தறிவுப் பாதையிலே வர, உங்களுடைய பேச்சுக்கள் நல்லதொரு தூண்டுகோலாக இருந்தன என்பது குறித்து நான் பெருமைப்படுகிறேன். இந்த மன்றத்திலே தாங்கள் தலைவராக வந்த பிறகும், அந்த நகைச்சுவையை இழக்கவில்லை. தங்கள் நகைச்சுவைமூலம் சபை நடவடிக்கைகளை மிக விறுவிறுப்பாகவும், கலகலப்பாகவும் செய்திருக்கிறீர்கள் என்பதற்குப் பல சான்றுகளை திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். தாங்கள் பாரபட்சமற்ற முறையில் நல்லவிதமாக இந்த மன்றத்தில் நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நன்றியைத்



தெரிவித்துக் கொள்கிறேன். நான் கடவுள் பக்தி உள்ளவன் என்ற முறையில், தாங்கள் நீடூழிக் காலம் வாழ்ந்து, இன்னும் சிறப்பான முறையில் சேவை செய்ய வேண்டுமென்று வாழ்த்தி, விடை பெறுகிறேன்.

[பிற்பகல் 4-40]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று தங்களுக்கு பிறந்த நாள் நல் வாழ்த்துக்களை சபையிலே நண்பர்கள் எல்லோரும் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில் இஸ்லாமிய சமுதாயத்தினுடைய சார்பில் இஸ்லாமிய சமுதாயத்தினுடைய நல்வாழ்த்துக்களை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தச் சபை நீண்ட காலமாக அமைதியாகவும், அடக்கமாகவும் ஒரு சச்சரவும், ஒரு அக்கப்போரும் இல்லாமல் நடக்கின்றது. தங்களுடைய சீரிய தலைமை தான் அதற்குக் காரணம் என்பதை நான் பெருமிதத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய ஒரு உத்தமமான தலைவர் நமக்குக் கிடைத்தது உண்மையிலேயே நாம் பெற்ற ஒரு பெரும் பேறு என்று தான் நான் சொல்வேன்.

சென்ற ஆண்டும் தங்களுடைய பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அப்போது மத்தியானம் நமக்கெல்லாம் விருந்து கொடுக்கப்பட்டது. இன்றைக்கும் நான் எதிர்பார்த்திருந்தேன். ஆனால் என்ன காரணமோ அது நடத்தப்படவில்லை. அது தொடர்ந்து நடந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்றைக்கு இரவு 8 மணிக்கு "உட்லண்ட்ஸ்"-லே விருந்து நடக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நான் நாளைக்குத்தான் நடக்கிறது என்று நினைத்துக்கொண்டிருந்தேன். இன்றைக்கு என்று கேள்விப்பட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது அருமை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, தாங்கள் எஸ். எஸ். எல். சி. வரைக்கும் படித்தவர்கள் என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே இந்த விளக்கம் எனக்கு இதுவரைக்கும் தெரியாததாக இருந்தது. தாங்கள் ஆங்கிலம் சரளமாகப் பேசுகிறீர்கள், தமிழிலும் சரளமாகப் பேசுகிறீர்கள், எழுதுகிறீர்கள். இதையெல்லாம் பார்த்தபோது தாங்கள் ஒரு பி.ஏ., அல்லது எம்.ஏ., என்று நினைத்திருந்தேன். இன்றைக்குத்தான் இவ்வளவு குறைவாகப் படித்திருந்தும், இவ்வளவு திறம்பட பேசக்கூடிய வன்மை படைத்தவர்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். தங்களுடைய எழுத்துக்கள், பேச்சுக்கள் அலாதி.; அது ஒரு தனி அம்சம், அது தங்களுக்கே பொருந்தக்கூடிய அம்சமாக மற்றவர்களெல்லாம் ஆச்சரியப்படக்கூடிய ஒரு அமைப்பாக இருக்கின்றதை நான் காண்கிறேன். தங்களுடைய பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் வீரம், விவேகம் ஆகிய இரண்டு அம்சங்களையும் ஒன்றாக அமைத்து நீங்கள் வெளியிடுவதைப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன்.

இன்னொரு விஷயத்தை நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் தற்போது ஒரு மரபைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கின்றது. அதாவது, ஒருவருடைய எம். எல். சி. பதவிக் காலம் முடிந்தால் அடுத்த தடவை அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டாம் என்ற ஒரு கொள்கையை மேற்கொண்டிருப்பதாக அறிகிறேன். தலைவர் அவர்களுடைய எம். எல். சி. காலம் அடுத்த ஆண்டு முடிய இருக்கின்றது. ஆகவே, இந்த மரபை வைத்து அவர்களுக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைக்காமல் மீண்டும் எம்.எல்.சி. பதவி கொடுத்து அவர்கள் மீண்டும் இந்தச் சபையில் தலைவராக நீடிக்க வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டு, எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து அவர் சிறப்புடன் விளங்க வேண்டும் என்று கூறி அமைகின்றேன்.

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நண்பர்கள், எனது மேலவை சகாக்கள் இதுகாறும் உங்களுடைய பிறந்த நாள் குறித்து வாழ்த்துக்களைக் கூறினார்கள். அநேகமாக அத்தனை பேர்களும் உண்மையையே சொன்னார்கள். ஒரு கருத்து கூட மிகைபடக் கூறியதாக நான் கருதவில்லை. நீங்கள் இந்த அவையிலே தலைவராகப் பொறுப்பேற்றபோது, பல நண்பர்கள் எண்ணியது போல, இங்கே கூறியது போல நானும் கொஞ்சம் அச்சப்பட்டேன். காரணம் பொது மேடைகளிலே உணர்ச்சியோடும், ஆவேசத்தோடும் பேசுகின்ற பல தலைவர்கள் இந்தச் சட்ட சபைக்கு உள்ளே அந்த ஆவேசத்தையும், உணர்ச்சியையும் காட்ட இயலாமல் இங்கே பல வரம்புகளுக்கு உட்பட்டுப் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம். அதோடு கூட அறிவு முதிர்ந்த பல உறுப்பினர்களை நாம் எதிரேயும், பக்கத்திலேயும் கொண்டிருக்கிறோம். எனவே, நம்முடைய பேச்சின் வாயிலாக, நம்முடைய உணர்ச்சியையும், ஆவேசத்தையும் வெளியிடுவதன் வாயிலாக அவர்களுக்கு உணர்ச்சியை உண்டாக்குவது என்பது அவ்வளவு எளிய விஷயமல்ல. இப்படிப்பட்ட ஒரு சபையிலே, சாதாரணமாக மிகுந்த அடக்கத்தோடு பொருள் மீது மட்டுமே பேசிப் பழகியவர்கள் அதிகமாக இருந்த பாரம்பரியம் உண்டு. தாங்கள் உறுப்பினராக இருந்தும் இங்கே பணியாற்றியிருக்கிறீர்கள். தலைவராகவும் இருக்கிறீர்கள். எனவே, நான் அச்சப்பட்டதெல்லாம் எப்படி அடக்கத்தோடு அந்த இடத்திலே நீங்கள் இருப்பீர்கள் என்பதுதான். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக என்னுடைய அனுபவம் என்னவென்றால் ரொம்பவும் அதிக ஆவேச உணர்ச்சி கொண்டவர்களே இந்தச் சபைக்கு உறுப்பினராக வந்தால் சரியாக இருக்கும் என்பதுதான். அதிலேயும் இந்தச் சபைக்குத் தலைவராகப் போட்டு விட்டால், ஏறத்தாழ அந்த ஆவேச உணர்ச்சிகளை எடுத்து விடலாம், அவைகளை அவர்களிடமிருந்து போக்கி விடலாம் என்று கூட நான் கருதுகிறேன். இதை நான் குறை கூறுவதாக யாரும் கருதக் கூடாது. மெச்சூரிட்டி என்கின்ற பொருளில் தான் நான் இந்த வாசகத்தை உபயோகப்படுத்துகிறேன். எனவே, அந்த அளவு பக்குவத்தோடு நீங்கள் இருந்து—இங்கே சில வேளைகளில் அமைச்சர்கள் பதிலிறுப்பதற்குத் தவறிய காலத்திலெல்லாம் நீங்கள் கோபமாகக் கடிந்து கொண்டதை நான் பார்த்தேன். அதுபோல சில நேரங்களில் உறுப்பினர்கள் கொஞ்சம் ஆத்திரப்பட்டபோதோ, அவசரப்பட்டபோதோ, பொறுமை இன்றி பேசிக்கொண்டிருந்தபோதோ, நீங்கள்





சில நேரங்களில் கோபத்தைக் காட்டியதையும் நான் பார்த்தேன். நீங்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தொடக்க நாளில் முதலமைச்சர் அவர்களுக்குக் கோபம் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் காட்டினார்கள். அது பாயபு உதாரணம். அந்த உதாரணத்தை, நீங்களும் உங்களுடைய பொறுப்பிலிருந்து, அமர்ந்து நடவடிக்கைகளை நடத்திய போது சில நேரங்களில் பயன்படுத்தினீர்கள் என்பதை நான் பார்த்தேன். கோபம் அதிகமாக யாரிடம் இருக்கிறதோ அவர்களிடத்திலே அன்பும் அதிகமாக இருக்கும். ஏனென்றால், யாருக்கு அதிகமாக ஆத்திரம் வருகிறதோ அவர்களிடத்திலே அதிகமான கருணையும் இருக்கிறது. அது இயற்கை. அதனாலே நீங்கள் பல நேரங்களில் கருணையோடு அணைத்தும் இருக்கிறீர்கள். இருபொருள்படும்படியாக சில நகைச்சுவை சொற்களைக் கூறியிருக்கிறார்கள். அப்படிச் சபையிலே சொல்வது வேறு வகையான அர்த்தத்திற்கல்ல, நகைப்பதற்காகமட்டுமே. நான் நேரடியாக இந்த சபைக்கு வந்து விட்டவன். இன்னும் என்னைப் போல் பல நண்பர்கள் வேறு மன்றங்களிலே இருந்து பயிற்சி பெறாது இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மன்ற அனுபவங்கள் தெரியாத ஒரு நிலையில் இங்கே மிக முதிர்ச்சியடைந்த ஒரு சபையில் வந்து அமர்ந்து செயலாற்றுவதற்கு நீங்கள் ஊக்கமும் உதவியும் அளித்திருக்கிறீர்கள் என்பதைக் காண மெய்யாகவே எனக்கு மெய் சிலிர்க்கிறது. இந்த அருமையான நாளில் பல பெரியவர்களும், நண்பர்களும் ஆற்றிய உரையை அப்படியே நான் ஏற்றுக் கொண்டு என்னுடைய உளமார்ந்த வாழ்த்துக்களைக் கூறி தாங்கள் நீடூழி வாழ இறைவனை வேண்டுகின்றேன். வணக்கம்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று தங்களுக்கு 70-வது ஆண்டு நிறைவு பெற்றதையொட்டி தங்களைப் பாராட்டிப் பேசிய நண்பர்கள் எல்லாம் எதிர் வரிசையிலே வீற்றிருக்கின்றவர்கள். எதிர் வரிசையிலே வீற்றிருக்கின்றவர்கள் என்றால், அவர்கள் அநேகமாக எதிர்ப்பாக இருக்க வேண்டும், அதிருப்தியோடு இருக்க வேண்டும். இன்னின்ன காரியங்களில், இன்னின்ன வாதங்களில் தலைவர் அவர்கள் நம்மைப் பேச விடவில்லை, மறுத்து விட்டார், கோபமாகச் சொல்லி உட்கார வைத்து விட்டார் என்று சொல்லுகின்ற ஒரு அதிருப்தியான நிலைமை இருந்திருக்க வேண்டும். ஆனால் பேசிய தலைவர்களுக்கு, உறுப்பினர்கள் அனைவருக்கும் தாங்கள் என்னென்ன வகையில் மரியாதை தர முடியுமோ அதையெல்லாம் தந்து, அவர்கள் விரும்புகின்ற வாதங்களையெல்லாம் எடுத்துச் சொல்ல அனுமதி தந்து அத்தனை தலைவர்களுடைய அன்பையும், நட்பையும் பெற்றிருக்கிறீர்கள் என்றால், அது என்றுமே தாங்கள் இந்த மன்றத்தை நடத்தி வருகின்ற ஒரு பெரிய சேவைச் செயலால்தான். அந்தச் சேவையினாலும், செயலாலும்தான் இன்றைக்கு நீங்கள் அத்தனை பாராட்டுக்களுக்கும் உரியவர்களாக இருக்கிறீர்கள். எந்தப் பாரபட்சமும் இல்லாமல் நடுநிலையிலே இருந்து கொண்டு எந்தவித குழப்பத்திற்கும், வாதத்திற்கும், விவாதத்திற்கும் இடமளிக்காமல் சரியான முறையிலே இந்த அவையை நடத்தி வந்திருக்கிறீர்கள். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் நடத்தி வந்திருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்களுக்கு அதிக ஆதரவும், சலுகையும், நீங்கள் தந்திருக்கிறீர்கள் என்று கூட நான் சொல்ல விரும்புகிறேன். அந்த அளவுக்கு இந்த மன்றத்தை நீங்கள் நல்ல முறையில் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

[பிற்பகல் 4-50]

இதனால்தான் இன்றைக்கு இங்கு இருக்கின்ற அங்கத்தினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சியிலே இருக்கின்ற அத்தனை நண்பர்களும் உங்களைப் பாராட்டி நல்வாழ்த்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். அதையொட்டி நானும் தங்களுடைய சிறந்த சேவையைப் பாராட்டி, என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்து இந்தத் தமிழகத்திலே சிறந்த முறையிலே சேவைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைக்கு தங்களுடைய 70-வது பிறந்த நாள் விழாவிற்கு என்னுடைய வாழ்த்துக்களை தங்களுக்கு முன்னாலேயே அளிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதற்காக நான் மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். தங்களைப் பற்றி சற்று முன் பேசிய உறுப்பினர்கள் பெருமையாகவும் சிறப்போடும் பேசினார்கள். நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னதில் ஒரு எழுத்துக் கூட மிகைப்படுத்திக் கூறியதாக இல்லை. இன்னும் தாங்கள் இந்த அவையில் இல்லாமல் இருந்து வேறு ஒருவர் தலைவராக இருந்து, எங்களை இங்கே பேசவிட்டிருந்தால், இன்னும் கொஞ்சம் அதிகமாகக்கூட பேசியிருப்போம்.

தங்களை வைத்துக்கொண்டே சிறப்பித்துப் பேசுவது கொஞ்சம் கூச்சமாக இருக்கும் என்ற காரணத்தினால், கொஞ்சம் குறைவாகவே நேரம் எடுத்துக்கொண்டு பேசியிருக்கின்றார்கள். குறிப்பாக மூன்று வருடங்களாக நான் இந்த அவையின் உறுப்பினனாக இருக்கிறேன். ஒரு அவையின் தலைவராக இருப்பவர்களுக்கு 10, 15 புத்தர்களுக்கு இருக்கின்ற பொறுமையாவது இருக்க வேண்டும். அந்தப் பொறுமையை தாங்கள் வேண்டிய அளவுக்குக் கொண்டிருக்கின்றீர்கள் என்று எனக்குத் தெரியும். அதே சமயத்தில் இந்த மேலவையிலே ஒரு புத்தராகவும் தாங்கள் இருக்கின்றீர்கள். சில சமயங்களில் விஸ்வாமித்திரராகவும் மாறியிருக்கின்றீர்கள். ஆனால் அவையிலே யாரையும் புண்படுத்தாத வகையில் காரணகாரியத்தோடு ஒவ்வொரு உறுப்பினரும் நல்ல முறையிலே பேசுவதற்கான வாய்ப்பை அளித்து இந்த அவையின் பெருமையையும் காப்பாற்றி வருகின்றீர்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தாங்கள் குறைந்த அளவில் படித்திருந்தும் 21 புத்தகங்களையும், ஏறக்குறைய பல கருத்துரைகளையும் எடுத்துக் கூறியிருக்கின்றீர்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் கூறுகிறேன், அதிகமாகப் படித்து, பட்டங்கள் பல பெற்றிருந்தால், தாங்கள் இவ்வளவு பெருமை மிக்க அளவிலே சேவை செய்ய முடிந்திருக்காது. கொஞ்சமாகப் படித்தவர்கள்தான் நாட்டிற்கு மிகப் பெரிய அறிவுரைகளையும், கலையையும் களஞ்சியமாகக் கொடுத்திருக்கின்றார்கள். பட்டதாரிகளிடமிருந்து நாட்டிற்கு பெரிய பல சேவைகள், கலைத்துறையிலே இலக்கியத்திலே கிடைத்தது கிடையாது. குறைவாகப் படித்தவர்கள்தான் அதிகமான அளவுக்கு தங்களுடைய பயிற்சியை விடா முயற்சி, அக்கறை மூலம் மேம்படுத்தி நாட்டிற்கும், சமுதாயத்திற்கும்



நல்ல பல சேவைகளைச் செய்திருக்கின்றார்கள். நாங்கள் எல்லாம் அரிஸ்ட்டாடிலைப் பார்த்தது இல்லை. சாக்ரட்டீஸ் அவர்களைப் பார்த்தது இல்லை. அவர்களுடைய கருத்துக்களை மட்டும் படித்திருக்கின்றோம். ஆனால் இன்றைக்கு தாங்கள் நடமாடும் அரிஸ்ட்டாட்டில் ஆகவும், சாக்ரடீஸ் ஆகவும் இருந்து நல்ல பல அருமையான கருத்துக்களை அவ்வப்போது, விட்டியாக, உறியூமர் வால்யு இருக்கும்படியாக, ஹாஸ்யமான முறையிலே கூறி வருகின்றீர்கள்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் நிறைய புத்தகங்கள் எழுதவில்லை, அவர்கள் அறிவியல் கருத்துக்களை எல்லாம் சொல்லவில்லை என்று சொல்கின்றார்கள். படிக்காதவர்கள்தான் ரொம்ப கருத்துக்களைச் சொல்கின்றார்கள் என்ற ஒரு வாதம் சரியென்று சொல்ல முடியாது..

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அவர்கள் உங்களைத்தான் ஐயா, குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்.

திரு. ஆர். சக்தி மோகன்: நீங்கள் பல்லாண்டுகாலம் சுபிட்சமாக வாழ்ந்து நல்ல பல புகழ் பெற வேண்டும். நாங்கள் அனைவரும் உங்களுக்கு இளையவர்களாக இருப்பவர்கள். இந்த அவையிலே நாங்கள் வாழ்த்துகிறோம், தாங்கள் எங்கள் அனைவருக்கும் நல் ஆசிகள் கூற வேண்டும் என்று வேண்டி விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவரவர்களே, தங்களுடைய 70-வது ஆண்டு விழா நேரத்திலே தங்கள் எதிரிலேயே பாராட்டுகின்ற வாய்ப்பை எங்களுக்கெல்லாம் வழங்கிய இறைவனுக்கு முதலிலே நான் நன்றி செலுத்துகிறேன். முன்னாலே பேசியவர்களெல்லாம் சொன்னார்கள், தங்களுடைய இலக்கிய சேவை, தமிழ் அறிவு பற்றியெல்லாம் சொன்னார்கள். "படிக்காமலேயே, படிக்காமலேயே" என்று எதிர்க்கட்சித் தலைவரவர்களும் தொடங்கி வைத்தார்கள். மற்ற சிலரும் பேசினார்கள். படிப்பு என்றால் பள்ளிக்கூடத்திலே சென்று படிப்பதுதான் படிப்பா? அல்லது கல்லூரிக்குச் சென்று படிப்பதுதான் படிப்பா? அதைவிட பரந்து கிடக்கின்ற உலகத்திலே கற்கின்ற கல்வியிலே நீங்கள் மிகவும் தேறியிருக்கின்றீர்கள். நீங்கள் மட்டும் அல்ல, உங்களுக்குத் துணைவராக வந்து சேர்ந்திருக்கின்ற துணைத் தலைவரவர்களும் கூட இன்னும் முதலமைச்சர் அவர்கள்கூட அப்படித்தான் கல்லூரியில் பட்டம் பெறாதவர்கள் என்று நான் சொல்வேன். ஆகவே "படிக்காமல்" என்ற வார்த்தையை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. எதையெதை எப்படியெப்படி கற்கவேண்டுமோ அப்படிக் கற்றுச் சிறந்திருக்கின்றீர்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இன்னும் மேலவையின் சரித்திரத்திலே நிலைத்து நிற்கக்கூடிய பல சாதனைகள் உங்களுடைய தலைமைக்காலத்திலேதான் நிறைவேறி இருக்கின்றன என்று நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். இதற்கும் முன்னாலே ஒன்று சொல்வேன்,

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்று வள்ளுவர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். எல்லாரையுமே அவர்களுடைய காலத்திலே அவர்கள் என்ன சொல்லிவிட்டுப் போய் இருக்கின்றார்கள், என்ன செய்துவிட்டுப் போயிருக்கின்றார்கள் என்பதை வைத்துத்தான் வருங்காலத்திலே மதிப்பிடுவார்கள். அப்படித் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டப்பெற்று இருக்கின்ற பெருமை தங்களுடைய தலைமைக் காலத்திலேதான். இன்னும் "ஆனரபிள் சேர்மன்" என்று ஆங்கிலத்திலேயே கட்டியம் கூறிக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி தமிழிலேயே, "தலைவர், மாண்புமிகு தலைவர்" என்று தமிழிலேயே கட்டியம் கூறி அழைக்கின்ற நிலை தங்களுடைய பதவிக் காலத்திலேயேதான் வந்திருக்கின்றது. இவையெல்லாம் மேலவையினுடைய பதிவுப் புத்தகத்திலே வரலாற்றிலே ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் எடுத்துப்படிக்கின்றபோது, வருங்காலத் தமிழர்கள் எல்லாம் தெரிந்துக்கொள்ளக்கூடிய பெருமை பெற்றிருக்கின்றன. மேலவையிலே தமிழ் ஆட்சிமொழியாகும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தச் சிறப்புகள் எல்லாம் தங்கள் காலத்திலே நடந்திருக்கின்றன. தங்களுடைய பதவிக் காலத்திலே நடந்திருக்கின்றன. இன்னும் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலை வரும் வரையில், இந்த மேலவையின் தலைவராகவும், நீண்ட ஆயுளோடும் தாங்கள் இருந்து வாழ வேண்டும். அதுமட்டுமல்லாமல் அதிகாரம் உள்ள ஆட்சியாக, தங்கள் காலத்திலேயே மாநில சுயாட்சி இந்தத் தமிழகம் முழுவதும் அமையும் காலம் வரையிலும் கூட, இந்த ஆட்சியைச் சரியான முறையிலே நடத்திச் செல்வதற்கு வழிகாட்டும் அளவிற்கு நீங்கள் தலைவராக நீடூழி வாழ வேண்டும், அதற்கு வேண்டிய சகல சிறப்புகளும், நல்ல தேக நலத்தையும் பெற வேண்டும். முன்னர் பேசிய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள், தாங்கள் இளைஞராகவும் கட்டுடலோடும் இருந்தீர்கள் என்று. இப்போது உடல் தளர்ந்தாலும், உள்ளம் தளராத நிலையிலே என்றும் உறுதியோடு இருந்து வாழ உங்களுக்கு அருள் புரிய வேண்டும் என்று நான் வேண்டுகின்ற முருகப் பெருமானை விரும்பி வேண்டிக் கொள்கிறேன். வணக்கம்.

*Thiru G. VASANTHA PAI: Hon. Chairman, I join in the encomiums that have been paid to you on this occasion and I wish you, Sir, many, many happy returns of the day. Sir, it may be that on many occasions we may not agree with the rulings you have given. But, nonetheless, we feel that they have been made without any feeling of illwill or malice against any Member. No Member can hold out against you that you had any illwill towards him, though we may feel one way or the other on your decisions. That is the difficulty of the job you have to perform and the circumstances in which you are placed. You have to hold evenly the scales of justice between the Opposition and the Government. I do feel that on this occasion, I must add my tributes to the profuse tributes of others. I feel that you have, to the best of





your ability, discharged the heavy and onerous duties that lay upon you. May I join with the several Members in wishing you the best of happiness, health and prosperity in the many years to come ?

Thank you.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவரவர்களே, தங்களுடைய 70-வது பிறந்த நாளிலே வாழ்த்துக் கூறுகின்ற வயது எனக்கு இல்லை என்றாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, தங்களுக்கு இதுபோன்ற பிறந்த நாட்கள் மேலும் மேலும் வர வேண்டும் என்ற எங்களுடைய எண்ணங்களை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கும் நண்பர்கள் சொல்லியது போன்று, ஒரு சாதாரண தெலுங்கு பேசுகின்ற குடும்பத்திலே பிறந்து, இன்றைய தினம் இந்த அவையினுடைய தலைவர் என்ற பொறுப்புக்கு உயர்ந்திருக்கின்றீர்கள் என்று சொன்னால், அது தங்களுடைய உழைப்பின் பிரதிபலன் தானே தவிர வேறு அல்ல என்று நான் கருதுகிறேன். தாங்கள் ஈரோட்டுப் பாதையைத் தேர்ந்தெடுத்து, அதற்குப் பிறகு காஞ்சிப் பாதையிலே தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து, தங்களுடைய பாதம் படாத கிராமம் இல்லை என்ற அளவுக்கு நீங்கள் பணியாற்றியிருக்கின்றீர்கள் என்பதை நான் உணர்கிறேன். உங்களைப் போன்று கொள்கையிலே அழுத்தமான, பிடிப்புள்ள தலைவர்கள் எங்களைப் போன்று கிராமவாசிகள் நிறைந்திருக்கின்ற பகுதிகளுக்கு வந்து கொள்கை வெறியூட்டியதன் காரணமாக, கிராமங்களிலே உங்களுடைய பேச்சு ஆற்றலினால் ஈர்க்கப்பட்டு, அந்தச் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளை நாங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு உங்களுடைய உழைப்பு இருந்தது என்று நாங்கள் கருதுகிறோம். கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் உங்கள் பேச்சாற்றலை, வீரம் மிக்க அந்தச் சொல் திறனை மெச்சியிருக்கின்றார்கள். மூடப் பழக்கங்களைப் பற்றி தாங்கள் சாடிய முறை நேர்த்தியானது. அந்த மூடப் பழக்கங்களுக்கு ஆட்சியிலே அன்று இருந்தவர்கள் ஆக்கமாக இருந்த காரணத்தை எடுத்துச்சொல்லி, அதை எப்படி எப்படி எல்லாம் போக்கவேண்டும் என்று சொன்னீர்கள். அதையெல்லாம் தாங்கள் பொறுப்புக்கு வந்தால் எப்படியெப்படி நிறைவேற்றுவீர்கள் என்று கிராமங்களிலே இருக்கின்ற என் போன்றவர்கள் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதுமாதிரி செயலாற்றக் கூடிய வாய்ப்பு தங்களுக்கு ஏற்படவில்லை என்றாலும் கூட, அதை விட இந்த அவையினுடைய தலைவராக வீற்றிருக்கக்கூடிய பெரிய பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். உங்களுடைய சீரிய தலைமையின் கீழ் இந்த அவையில் அதிக அனுபவமில்லாத நான் எல்லாம் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு, நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருந்து இங்கே மொழி மாச்சர்யத்திற்கு ஆட்படாமல், தமிழன் என்ற உணர்வோடு, தான் ஒரு சுயமரியாதை கருத்துடையவன் என்ற உணர்வோடு இதுவரையிலே நீங்கள் செயல்பட்டு வந்தீர்கள். இன்னும் அப்படிச் செயல்பட்டு வருவீர்கள் என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே, உங்களைப் போன்ற அழுத்தமான கொள்கைப் பிடிப்பு எங்களுக்கும் இருக்க வேண்டுமென்ற அந்த நல்ல எண்ணம் எங்களுக்கும் ஏற்படுகின்றது. அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே, நீங்கள் இதுவரையிலும் உங்கள் வாழ்நாளிலே எந்த அளவுக்கு சமுதாயப்

பணி ஆற்றியிருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு சமுதாயப் பணி ஆற்ற வேண்டுமென்ற அந்த நல்ல உணர்வு எங்களுக்கும் ஏற்படுகிறது என்பதை எடுத்துச் சொல்லி, உங்களைப் போன்ற பிடிப்புள்ளவர்கள் இன்னும் பல பெரிய பொறுப்புகளுக்கு வரவேண்டும், இதே நிலையிலே மேலும் பல ஆண்டுகள் நீடித்து வாழ வேண்டும், இது போன்ற பிறந்த நாட்கள் மேலும் மேலும் பல வருஷங்களுக்கு வர வேண்டுமென்ற எங்களுடைய நல்லெண்ணங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 5-00)

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, உங்களிடத்தி லிருந்து எப்பொழுதும் முன் அனுமதியை வாங்கி பல்வேறு பிரச்சினை களைத் தீர்த்து வைக்க பழக்கப்பட்ட நான், உங்களுடைய அனுமதியோடு, உங்களைப் பாராட்டுவதற்கு இங்கே நிற்கிறேன். வயதிலே மிகக் குறைந் திருந்தாலும், ஆரம்ப காலத்திலே பொது மேடைகளிலே உங்களுடைய பேச்சால் ஈர்க்கப்பட்டவன் என்ற முறையிலே, என்றைக்கும் இந்த அவை யிலே பேசக் கூடிய நேரத்திலே உங்களை ஒரு தந்தையைப் போல நான் ஏற்று உரிமையோடு பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருப்பதிலே நான் மிக பெருமையடைகின்றேன். உங்கள் காலத்திலே நான் உறுப்பினராக வந்திருக்கின்றேன் என்று என்னுடைய தொடக்க உரையிலே கூட நான் பெருமைப்பட சொல்லியிருக்கின்றேன். நம்முடைய தலைவர் அவர்களுக்கு வயதாகிவிட்டது என்று கூட்டங்களிலே சொல்லக்கூடிய நேரத்திலே, அவர்கள் சிங்கம் போல் கர்ஜிப்பார்கள். "என்னைப் போல் தலை நரைத் திருந்தாலும், உணர்ச்சி குன்றாமல் இருக்கக்கூடிய, வேகமுள்ளவர்கள் யார் இருக்கிறார்கள், இளைஞர்களாக இருப்பவர்கள் உணர்ச்சியற்றவர்களாக இருக்கிறார்கள்" என்பதைச் சுட்டிக்காட்டி பல நேரங்களிலே இளைஞர்களோடு போட்டி போட்டு சொல்லக் கூடிய ஒரு வேகத்தையும் நான் சில நேரங் களிலே பார்த்திருக்கின்றேன். நீங்கள் தந்தை பெரியார் அவர்களுடைய கல்லூரியிலே பாடத்தைப் பயின்றவர்கள். யார் என்ன பயின்றார்கள் என்பதைப் பற்றி இப்பொழுது ஆராய்ச்சி தேவையில்லை. இந்த நாட்டிலே தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுப் பாசறையிலே பயின்றவர்கள் நாட்டில் எல்லோருக்கும் எல்லாவிதமான அறிவையும் கொடுப்பதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கக்கூடிய மாண்பு மிகு அமைச்சர்களுடைய வரிசையும் இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு தலைவர் அவர்களுடைய திறமையும் எடுத்துக்காட்டுகின்றன. ஆகவே இதிலே நமக்கு எந்தவிதமான ஆராய்ச்சியும் தேவையில்லை. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தன்மான இயக்கத்தை தமிழ் நாட்டிலே தோற்றுவித்த காலத்திலேயிருந்து அதையெல்லாம் நாடு பூராவும் எடுத்து முழக்கிய சிறப்புக்குரியவர்களாக நீங்கள் திகழ்ந்தீர்கள். பிறகு அதே கட்சி ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய நேரத்திலே, அமைதியாக இந்த அவை யை நடத்தக்கூடிய ஒரு பொறுப்பையும் பெற்றிருக்கின்றீர்கள். நீங்கள் நீண்டகாலம் வாழ வேண்டும். வாழ்ந்து பல சேவைகளைச் செய்ய வேண் டும். இன்னும் சுயமரியாதைக் கருத்தில், தந்தை பெரியார் அவர்களு டைய கொள்கையில், ஈடுபாடு உள்ளவராக இன்றைக்கு "நான் கடவுளை வேண்டுகிறேன்" என்று சொல்கிற நேரத்திலே கூட நீங்கள் ஒப்புக்கொள்வீர் களோ மாட்டீர்களோ என்று அஞ்சிப் பேசக் கூடிய அளவுக்கு. பிடிப்பு



வைத்துக்கொண்டிருக்கக்கூடியவராக, 'கடைசி வரை சுயமரியாதைக்காரராக, பகுத்தறிவு வாதியாக, ஒரு நாத்திகன் என்று சொல்லக்கூடிய அளவிலே பெருமையுடையவராக நீங்கள் திகழ்கிறீர்கள். அன்று ஈரோட்டுக் கல்லூரி யிலே பயின்ற அந்தப் பயிற்சியைப் பூராவும் நீங்கள் நிலை நாட்டக்கூடியவ ராக இருப்பதைக் கண்டு, தந்தை பெரியார் அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, உங்களுடைய உருவகத்திலே நான் அவரைப் பார்க்கிறேன். உங் களைப் போல் நாங்கள் எல்லாம் இருக்க வேண்டுமென்று கருதுகின்றோம். எங்களைப் போல் இருக்கக்கூடியவர்கள் இந்த வயது வரை கொள்கைகளைத் தாங்கி நிமிர்ந்து நிற்க வேண்டுமென்று, உங்களை நான் முன் உதாரணமாக வைத்து, என்னுடைய நெஞ்சிலே அதனை ஏற்று, இந்தக் கொள்கைகளை என்றைக்கும் நிலை நிறுத்தக்கூடிய தலைவராக நீங்கள் இருக்கின்றீர்கள். நீங்கள் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று நான் வாழ்த்துக் கூறு வதற்கு வயது இல்லாவிட்டாலும், உள்ளக் கிடக்கையை எடுத்துச் சொல்லி வாழ்த்துகின்றேன். வணக்கம்.

திரு ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவரவர்களே, தங்க ளுடைய 70-வது பிறந்த நாளில் இந்த அவையிலே எனக்கு முன்பாகப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும் குறிப்பிட்ட வார்த்தைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, நானும் ஒருசில வார்த்தைகள் கூறுகின்றேன். இங்கு இருப்பவர்களிலே வயதிலே அதிக மானவர் தாங்கள். தங்களுக்கு அடுத்தபடியாக இருப்பவன் நான்தான். எனக்குத் தங்களைவிட $2\frac{1}{2}$ மாதம்தான் வயது குறைவு. இன்னும் $2\frac{1}{2}$ மாதங்களில் நானும் 70 வயதை எய்தி விடுவேன். இந்த மன்றத்திலே நான் ஒரு கருத்தைக் குறிப்பிட ஆசைப்படுகின்றேன். மாண்புமிகு முதல் வர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் அதன் நிர்வாகிகளும் நான் எதிர்பாராத நேரத்திலே இந்தத் துணைத் தலைவர் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தகவல் அனுப்பியபோது, நான் சிறிது யோசித்தது உண்டு. எதிர்மாறான இரு வேறு கோணங்களிலிருந்துகொண்டு அரசியல் நடத்தி வந்த நான் துணைத் தலைவராக இந்த மன்றத்தில் ஒத்துழைத்து நடத்த முடியுமா என்ற ஒரு கவலை எனக்கு ஏற்பட்டதுண்டு. அதுமட்டுமல்ல. இங்கே துணைத் தலைவராக நான் வருவதற்கு முன்பு தங்களோடு நான் அதிகம் பழகி அறியாதவன். பழகுவதற்கு வாய்ப்பு இல்லாத எதிர் வட்டாரத்திலே வாழ்ந்து வந்தவன். ஆகவே துணைத் தலைவர் பொறுப்பை ஏற்று, தங்களோடு ஒத்துழைப்பதில் எனக்கு மிகுந்த சங்கடம் ஏற்படுமோ என்று நான் எண்ணினேன். ஆனால் மிகுந்த பண்பாளராகிய தாங்கள் மற்றவர் களோடு இங்கிதமாக நடக்கத் தெரிந்தவர்கள் என்ற முறையிலே இந்த 3 ஆண்டு காலத்திலே ஒரு நாள்கூட ஒரு விநாடிகூட தங்களைப்பற்றி நான் முணுமுணுக்கக்கூடிய வகையிலே தாங்கள் என்னை நடத்தியது இல்லை, என்னிடம் நடந்து கொண்டதில்லை என்று நான் பார்த்தபோது, தமிழ்நாட்டுக்கும் தமிழ் இனத்துக்கும் உரிய உயர்ந்த பண்பாட்டைத் தாங்கள் பயின்றும் வாழ்க்கையிலே பழகியும் இருக்கிறீர்கள் என்பதை அறிந்தேன். இந்த மன்றத்திலே இருந்து அதை நடத்துவது எவ்வளவு கஷ்டம், சதா பேசிக்கொண்டேயிருக்கிற திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும் நேரத்திலே நாம் எவ்வளவு அவஸ்தைப்பட்டிருக்கிறோம் என் பதை அவர்கள் சற்று முன்பு இங்கே குறிப்பிட்டார்கள். அதிலும் பேச

சாளர்கள் என்பது வேறு, பிரச்சாரகர்கள் என்பது வேறு. நான்கு கூட்டங்களிலே பேசி பிரச்சாரம் பண்ணுவது வேறு, பட்டிதொட்டியெல்லாம் சுற்றி அலைந்து பிரச்சாரம் செய்வது வேறு. ஆக்கமும் ஆட்சேபமுமான இயக்கங்களிலிருந்து பிரச்சாரம் செய்வது வேறு. எதிர்ப்பு இயக்கங்களிலேயே ஈடுபட்டு பிரச்சாரகர்களாக வளருவது வேறு. தாங்கள் பட்டிதொட்டிகளில் எல்லாம் சென்று பிரச்சாரம் செய்தீர்கள். ஆக வாழ்க்கைக்கு மாறுபட்ட எதிர்ப்பு இயக்கமாகவே இருந்த இயக்கங்களிலே ஈடுபட்டு, முன்னணிப் பிரச்சாரகராகத் திகழ்ந்தீர்கள். மற்றவர்கள் "உண்டு" என்று சொல்லக்கூடிய பலவற்றை இல்லையென்று சொல்வதையே கொள்கையாக ஏற்று நடத்துகின்ற இயக்கத்தை வளர்த்தீர்கள். அப்படிப்பட்ட தாங்கள் அமைதியாக இந்தத் தலைவர் ஸ்தானத்திலே அமர்ந்து கேட்டுக்கொண்டிருப்பது ரொம்ப கஷ்டமானதுதான் என்பதை நான் அமர்ந்திருந்த நேரங்களிலே நான் அறிந்திருக்கிறேன். சில சமயங்களிலே அந்த இடத்திலிருந்து இடம் மாறுகிறபோது, விளையாட்டு உற்சவம் போல் பேசி, ஆறுதல் அடைய எனக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. தங்களுக்கு அந்த வாய்ப்புக்கூட இல்லாத ஒரு நிலையைப் பார்க்கிறபோது, நான்தான் மற்ற எல்லாரையும்விட நன்றாக உணர்கிறேன் தங்களுக்கு இருக்கிற கஷ்டங்கள் எத்தகையவை என்பதை. பல மணி நேரம் அந்த இடத்திலே உட்காரலாம், அதிலே ஒன்றும் கஷ்டமில்லை. முன்னே பேசியவர்கள் சொன்னதுபோன்று பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் கவனிப்பதுதான் கஷ்டம்; அதற்கு இரண்டு கஷ்டம். பிறர் பேசுவதைக் கேட்பதை ஒரு தண்டனை என்று சில நேரங்களிலே நினைக்கும் எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. அதைவிட அதிகமாக ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து, ஏதேனும் ஆட்சேபகரமான வார்த்தைகள் இருந்தால், அதைப்பற்றி நாம் தீர்ப்பளிக்க முடியுமா என்ற கட்டத்திலும் கேட்க வேண்டியிருக்கிறது. அந்தச் சங்கடங்களையெல்லாம் சமாளிப்பது என்பது தங்களுக்கு கை வந்த வித்தை. நகைச் சுவையாக அவ்வப்போது பேசி—அந்த இடத்திலிருந்தே பேசாத நிலையையும் போக்கி—பேசுகின்ற நிலையையும் ஏற்று-பேசுவதிலே வேறு யாருக்கும் சங்கடம் வராத நிலையையும் காத்து நகைச் சுவையையும் கையாள்கிறீர்கள். அதிலும் நீங்கள் நிச்சயமாக திரு. தீக்ஷிதர் அவர்களிடமும், திரு ராஜகோபால் அவர்களிடமும் நகைச் சுவை பேசுகிறபோது, இந்த சபையே தன்னை மறந்து அனுபவிக்கிற ஒரு நிலையை நான் பார்த்திருக்கிறேன். அந்த நகைச் சுவை தங்களுக்கு இல்லையானால், இவ்வளவு எளிதாக, இவ்வளவு நீண்ட காலமாக இந்த அவையைத் தாங்கள் நடத்தி வந்திருக்க முடியாது என்பதை நான் உணர்கிறேன். தாங்கள் சிரிக்கச் சொன்னாலும்கூட, சிந்திக்க வைக்கின்ற வகையிலே அந்த வார்த்தைகளைச் சொல்லுகின்ற பயிற்சியைப் பெற்றிருக்கிறீர்கள். தாங்கள் இன்னும் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்து இந்த மன்றத்தைத் தொடர்ந்து நடத்தி, தங்களை அந்தப் பதவிக்கு அனுப்பிய கட்சிக்கும் தலைவர்களுக்கும் ஏற்கெனவே தேடிய நல்ல பெயரோடு மேலும் தேட வேண்டும்.

தாங்கள் நூல் எழுதியதைப் பற்றிச் சொன்னார்கள். ஒன்றை நான் வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 21 புத்தகங்கள் தாங்கள் எழுதினீர்கள் என்று சொன்னார்கள். படிக்காத மொழியில் எழுதினீர்கள் என்றார்கள். இல்லை, தாய்மொழி நாட்டுமொழி ஆனதால், மிக எளிதில் அதைப் படித்துக்கொள்ள முடிகிறது. வீட்டு மொழி வேறு



என்று சொன்னார்களானாலும்கூட, அந்த வீட்டு மொழி வேறு ஒரு நாட்டு மொழியிலே புலமை பெறுவதற்கு தடையாக இருப்பதில்லை. அந்த நாட்டு உணர்வோடு, ரத்தத்தோடு, மண்ணோடு, மனத்தோடு கலந்து விட்ட யாருக்கும் தமிழ் அன்யோன்யமாகி விடுவதில்லை என்பதைத் தாங்கள் தமிழிலே எழுதிய நூல்கள் காட்டுகின்றன. தமிழ்நாட்டிலே ஒருவராக, தமிழ் இனத்திலே ஒருவராக, தமிழ்த்தாயின் மைந்தர்களிலே ஒருவராக தாங்கள் அரசியல் நடத்தி வளர்ந்து வருகிற போக்கில் நான் மன நிறைவு பெறுபவன். தாங்கள் நிறைந்த ஆயுளும் ஆரோக்கியமும் பெற மீண்டும் ஒரு முறை வாழ்த்துகின்றேன். வணக்கம்.

(பிற்பகல் 5·10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 70 ஆண்டு இளைஞராகிய தங்களை இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரோடும் இணைந்து வாழ்த்துவதில் நான் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் கொள்கின்றேன். தங்களை வாழ்த்துகிற நேரத்தில், எங்களுடைய அண்ணனை வாழ்த்துகிற உணர்வினை நாங்கள் பெறுகிறோம்.

தாங்களும், இன்று ஆளுங்கட்சியிலே வீற்றிருக்கிற அமைச்சர்களும் உறுப்பினர்களும் இப்படிப்பட்ட பொறுப்புக்களெல்லாம் நமக்கு வருமென்று எதிர்பார்க்காத கடுமையான நாட்களில், நம்முடைய பொது வாழ்வை தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தொடங்கியவர்கள். இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற பொறுப்புக்களை அந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமென்ற வகையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். தன்மான இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் தோற்றுவித்த காலத்தில், அந்த இயக்கத்தைப் பரப்புகிற பெரும் படைத் தளபதிகளில் தாங்களும் ஒருவராக இருந்து ஆற்றிய பணிகள் ஏராளம். தங்களுடைய காலடி படாத காடாரம்பங்கள் இல்லை ; பட்டி தொட்டிகள் இல்லை என்ற அளவுக்கு பம்பரம் எனச் சுழன்று பகுத்தறிவு முழக்கத்தை தமிழகம் எங்கும் நீங்கள் பரப்பியிருக்கிறீர்கள். ஏன் ? தமிழகத்தை விட்டு, வெளி மாநிலங்களுக்குச் சென்றும், வெளி நாடுகளுக்குச் சென்றும், பெரியார் அவர்களுடைய சுய மரியாதை இயக்கக் கொள்கைகளைப் பற்றியும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரசியல் விளக்கங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்கிற ஆற்றலையும், துணிவினையும் தாங்கள் பெற்றவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்—எதிர்க் கட்சித் தலைவரிலிருந்து மற்ற உறுப்பினர்கள் வரை, பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும்—அனைவரும் தங்களைப் பாராட்டியபோது நான் அல்ல— இந்தக் கழகம், ஒரு தாய், தன்னுடைய மகனுக்குக் கிடைக்கின்ற பெருமையினைக் குறித்து அடைகிற மகிழ்ச்சிபோல, ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் மகிழ்ச்சியடைகிறது. முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், வயதானவர்கள் ஒதுங்கியிருந்து வாலிபர்களுக்கு வழி விட வேண்டுமென்று உலகத்திலே சொல்லப்படுகிற கொள்கையிலிருந்து மாறுபட்டு—ஓரளவுக்கு அது ஒத்துக் கொள்ளக்கூடியதுதான் என்றாலும்—இந்த அளவுக்கு இந்த இயக்கத்தை உருவாக்கிய பெரியவர்கள், இந்தக் கொள்கைக்கு வெற்றி தேடித் தந்தவர்கள், இந்தக் கொள்கை தீபம் அணையாமல் காப்பாற்று

[ டாக்டர் மு. கருணாநிதி] [1975 எப்ரல் 11

வதற்காகக் கொடுமையான புயல், சூறாவளியில் கஷ்டப்பட்டவர்கள்—அவர்களுக்கெல்லாம் மரியாதை செலுத்துவதும், அவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்துவதும் தன்னுடைய கடமையெனக் கருதிய காரணத்தாலேதான், நாங்கள் இந்தப் பொறுப்பிலே இருக்க வேண்டுமென்று விழைவினைத் தெரிவித்து, அதனைத் தாங்களும் ஏற்றுக் கொண்டீர்கள். அந்த வகையிலே, அந்தப் பொறுப்பினை நீங்கள் எப்படி ஆற்றி வருகிறீர்கள் என்பதை நாங்களெல்லாம் சொல்வதற்குப் பதிலாக, எதிர்க் கட்சியினுடைய தலைவரவர்களும், மற்ற கட்சிகளுடைய உறுப்பினர்களும், மாண்புமிகு துணைத் தலைவரவர்களும் எடுத்துச் சொன்னதிலிருந்து, இந்தக் கழகத்தினர் பொறுப்புக்களை எந்த வகையிலேயெல்லாம் நல்ல முறையிலே, அனைவரும் பாராட்டத்தக்க வகையிலே ஆற்றுவார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறீர்கள்.

தாங்கள் எழுதிய புத்தகங்கள் ஏராளம். அந்தப் புத்தகங்கள் தமிழ்ச் சமுதாயத்தினுடைய—ஏன், ஓர் இளைஞர் பகுதியையே விழிப்புறச் செய்ததென்றால், மிகையாகாது. தங்களுடைய மேடைப் பேச்சில் நகைச் சுவையும் இருக்கும்; வீரச் சுவையும் இருக்கும்; அறைகூவலும் இருக்கும்; எதிரிகளுடைய உள்ளத்திலே பாய்கிற கணைகளும் இருக்கும். இல்லாவிட்டால், பெரியார் அவர்கள் சுய மரியாதை இயக்கம் ஆரம்பித்த காலத்தில், அதை வளர்த்திருக்க முடியாது. இல்லாவிட்டால், பாமர மக்கள் உள்ளத்தில் இந்த இயக்கத்திற்கு இப்படிப்பட்டதொரு பெரிய இடத்தைத் தேடித் தந்திருக்க முடியாது. அவ்வளவு ஆற்றலும், அவ்வளவு அறிவும் பெற்ற தாங்கள் இந்த இயக்கத்தினுடைய முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்து இன்றைக்கு இந்த மேலவையினுடைய தலைவர் பொறுப்பை ஏற்றிருந்தாலும், எங்களையெல்லாம்—ஆளுங்கட்சியிலே உள்ள எங்களையெல்லாம்—உங்களுடைய தம்பிகளாகப் பாவிக்கிறீர்கள் என்றாலும், இந்த அவையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், தலைவருக்குள்ள பொறுப்பினை எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் நடத்திக் காண்பித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பெருமையை இங்கே உள்ளவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

தங்களுடைய பேச்சுக்களில், நாடகங்களில், தாங்கள் எழுதிய நூல்களில் கொள்கைக்கே முதலிடம் அளித்தீர்கள். தாங்கள் வளர்த்த இயக்கத்தில் எத்தனையோ நேரங்களில் சலசலப்புகள் ஏற்பட்டிருக்கலாம், கசப்பு உணர்ச்சிகள் ஏற்பட்டிருக்கலாம். அந்த நேரத்திலேயெல்லாம், அவைகளையெல்லாம் தொலைவிலே வைத்துவிட்டு கொள்கைக்காக தலை தளராத சிங்கமாகத் தாங்கள் பணியாற்றி இருக்கின்றீர்கள். எந்த நேரத்திலும் உங்களுடைய வைரம் பாய்ந்த கொள்கை நெஞ்சத்தை வேறு யாராலும் கொள்ளை கொள்ள முடிய வில்லை. இந்த இயக்கம்தான் உங்களுடைய நெஞ்சத்திலே என்றென்றும் குடி கொண்டிருக்கிறதென்பதை எண்ணும்போது, நீங்கள் எங்களுக்கெல்லாம் வழி காட்டியாக அமைந்திருக்கிறீர்களென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தங்களுடைய பிறந்த நாள் விழா இந்த மாமன்றத்திலே இவ்வளவு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறதென்றால், இங்கே வீற்றிருக்கிற ஒரு 50, 60 உறுப்பினர்கள் மாத்திரம் கொண்டாடுகிறார்கள் என்று



1975 ஏப்ரல் 11] [ டாக்டர் மு. கருணாநிதி]

அர்த்தமல்ல. தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி தமிழர்களும் வாழ்த்துகிறார்கள்; கடல் கடந்து வாழ்கிற தமிழர்கள் வாழ்த்துகிறார்கள்; அறிவுலகம் தங்களை வாழ்த்துகிறது; அண்ணாவினுடைய தம்பிகள் தங்களை வாழ்த்துகிறார்கள்; பெரியாரினுடைய தொண்டர்கள் வாழ்த்துகிறார்கள்; பொது வாழ்விலே கொள்கையோடு, கொள்கை உறுதியோடு வாழ்கின்ற அத்தனை பேரும் வாழ்த்துகிறார்கள். நானும் தங்களை வாழ்த்துகிறேன். நான், தாங்கள் பல ஆண்டுகள் வாழ வேண்டுமென்று உங்களையே கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்களே, அமைச்சர் பெரு மக்களே, மற்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் நடந்ததுபோக, இனி எப்படி நான் இருக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டி, என்னை நீங்கள் வாழ்த்தியிருக்கிறீர்கள்.

உள்ளபடியே, நான் தலைவனான பிறகு, என்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களை, எனக்கிருந்த சொந்த குணங்களையெல்லாம் ஒரு பக்கத்திலே ஒத்தி வைத்துவிட்டு—அறவே விட்டுவிடவில்லை, ஒரு சமயம் வேண்டுமானால் என்ன செய்வது என்பதற்காக—கடந்த 6 ஆண்டுகளாக இந்தப் பொறுப்பை ஏற்று, நடத்தி வருகிறேன். இதிலே ஒரு கெடுதல் செய்தால், அதனால் ஏற்படும் கெட்ட பெயர் கழகத்திற்குப் போய்ச் சேரும். நன்மை செய்தால், அதற்கான நற்பெயர் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாரும். வெறும் சி. பி. சிற்றரசு என்றில்லாமல், மேலவைத் தலைவர் சிற்றரசு என்று சொல்லும்போது, சிற்றரசுக்குப் பெருமையில்லாமல், அவன் வகிக்கும் பதவிக்குப் பெருமை யென்று சொல்லும்போது, எனக்கு அந்தப் பெருமை தேவையில்லை; என்னை எந்தக் கழகம் வளர்த்ததோ, எந்தக் கழகத்திற்காக நாம் உழைத்தோமோ அந்தக் கழகத்திற்குப் பெருமை சேருகிறது. நம்மால் கழகத்திற்கு நல்ல பெயர் வர வேண்டும்; கெட்ட பெயர் வரக் கூடா தென்பதில் நான் மிக எச்சரிக்கையாக இருந்து வருகிறேன். மேலும், நான் மேலவைத் தலைவராக ஆவதற்கு முன்னாலே யார் யாரை மேடையில் பகிரங்கமாகத் திட்டிக் கொண்டிருந்தேனோ அவர்களில் ஒரு சிலரைக்கூட இங்கே பார்க்கிறேன். அப்படி அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள்

[பிற்பகல் 5-20]

நண்பர்களாகத் தெரிகிறார்கள். 1974-க்கு முன்னால் இருந்த மாதிரி தெரியவில்லை. இங்கே இந்த அவைக்கு இருக்கின்ற மரபுகள் வேறு. நான் ஐவர் ஜென்னிங்ஸ் எழுதிய பார்லிமெண்டரி பிராக்டீஸ் என்ற ஒரு நூலையும், பாராளுமன்றத்தினுடைய மரபுகள் எவை என்கின்ற நூலையும் தெள்ளத்தெளிய படித்த காரணத்தினாலே அந்த மாதிரி நடத்தவேண்டும். அந்தப் பாரம்பரியத்தை வளர்த்த வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது மாதிரி நடத்துகிறோமா இல்லையா என்பதை நான் சொல்வதற்கு முன்னால், நம்மால் நடத்தி வைக்கப்படுகின்ற அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு ஒட்டுமொத்தமாக ஒரு திருப்தி ஏற்படுத்திக் கொண்டால் நல்லது என்று கருதி அவர்களையும் அப்படி நடத்திச் செல்ல

வேண்டும் என்று கருதினேன். உள்ளபடியே நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொல்லுகின்றபோது கூறியதுபோல, கோபம் மனிதனுக்கு இயற்கையாக வரும் என்றாலும், நான் உள்ளபடியே கோபக்காரன்தான். இப்போது என்னுடைய மனைவியிடத்திலேகூட கோபம் காட்ட முடியாத வாறு கூர் மழுங்கிவிட்டது என்று சொல்ல வேண்டிய நிலைமையிலேதான் நான் இருக்கிறேன். இந்த அவையிலே நீங்கள் எல்லாம் என்னோடு ஐந்தாண்டுகள் ஒத்துழைத்திருக்கிறீர்கள். நான் கோபித்துக் கொண்ட போதுகூட என்னுடைய வயதை எண்ணி நம்மிலே வயதுக்கு மூத்தவன், அண்ணன் சொன்னால் கோபித்துக் கொள்வோமா, நம்முடைய தந்தை சொன்னால் கோபித்துக் கொள்வோமா என்ற அளவிலேதான், நான் கோபித்துக் கொள்கின்ற நேரத்திலே எல்லாம் சிரித்துக் கொண்டு, அதற்கு என்னைத் தாக்காமலும், என்னுடைய தாக்குதலிலேயிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று கருதாமலும் இருந்திருக்கிறீர்கள்.

ஒரு மனிதன் உள்ளபடியே இங்கே மூன்று மணிநேரம் உட்கார்ந்து கொண்டிருப்பது என்பது கொஞ்சம் கடுமையான தண்டனைதான். அது இந்த இடத்தைக் காலியாக விட்டுப் போக முடியாத காரணத்தினால்தான். நான் இல்லை என்றால் துணைத் தலைவர், துணைத் தலைவர் இல்லையானால் மற்றும் நான்கு பேர் இருக்கிறார்கள். சில நேரங்களில் இந்த 4 பேர் களில் ஒருவரும் இருப்பதில்லை. துணைத் தலைவரும் இருப்பதில்லை. அம்போ என்று நானே 7 மணி வரையிலும் உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன். இருந்தாலும் நமக்கு ஒரு கடமை இருக்கிறது என்ற காரணத்தினாலே அந்தக் கஷ்டங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இந்த ஐந்தாண்டுகளும் என்னை உங்கள் பெருமைக்குரியவனாக ஏற்று, உங்களில் மூத்தவனாக ஏற்று, நடந்துகொண்டிருக்கிறீர்கள். நான், எந்தக் கட்சியைச் சேர்ந்திருந்தாலும் தலைவன் என்ற முறையில் அந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று கொஞ்சமும் காட்டிக்கொள்ளாமல் இந்த அவையை நடத்தியிருக்கிறேன் என்று என்னைப் பெருமைப்படுத்தி இருப்பதற்கு என் நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (3) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 1975–76ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள் :—

1. திரு. கே. எஸ். அப்துல் வஹாப்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.
3. திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி.
4. திரு. ஜி. சுவாமிநாதன்.



5. திரு. எஸ். பலராமன்.
6. திரு. பி. ஆர். தாமஸ்.
7. திரு. ஏ. ஆர். தாமோதரன்.
8. திரு. ஜார்ஜ் கோமகன்.
9. திரு. சி. ரஸ்ஸல் ராஜ்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக் கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன். மேலவை விதி 156 (1)-ன் படி மாண்புமிகு மேலவை முன்னவர், அவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர், இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற மேலவை விதிகளின் 156 (4) விதியின் கீழ் திரு. கே. ராஜாராம் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி நான் நியமித்துள்ளேன்:

### (4) அவைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 1975–76 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆறு உறுப்பினர் பதவிகளுக்குக் கீழ்க் கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள்.

1. திரு. எஸ். இராமகிருஷ்ண தேவர்.
2. திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி.
3. திரு. கே. எஸ். கணபதி.
4. திரு. எம். கே. டி. நடராசன்.
5. செல்வி தமிழரசி.
6. திரு. எச். எல். முருகேசன்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது, ஆறு நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஆறு உறுப்பினர்களும், அவைக்குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மேலவை விதி 173 (1)-ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்.

1. திரு. எம். எம். பக்கர்.

2. திரு. ஆர். சக்திமோகன்.

மேலவைத் துணைத் தலைவர் அலுவல் முறையில் குழுவின் தலைவராவார்.

## 4. கவன ஈர்ப்பு.

### (1) திருச்சி அரசு தலைமை மருத்துவ மனையில் ஆபரேஷன் தியேட்டர் மூடப்பட்டது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "திருச்சி அரசாங்க தலைமை மருத்துவ மனையில் நேற்றைய தினம் டிடானஸ் தொற்று நோய் காரணமாக, ஆபரேஷன் செய்யும் போது ஒரு நோயாளி இறந்து அதனால் ஆபரேஷன் தியேட்டரும் மூடப் பட்டது. இதே காரணமாக ஆபரேஷன் தியேட்டர் கடந்த ஆறு மாதத்தில் மூன்று முறை மூடப்பட்டது குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திருச்சியிலே உள்ள இந்த மருத்துவமனையில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னாலே டிடானஸ் தொத்து நோய் திடீரென்று ஏற்பட்டதன் விளைவாக அங்கேயுள்ள அந்த மருத்துவமனையினுடைய அறுவையரங்கு ஆறு வார காலத்திற்கு மூடி வைக்கப்பட்டது. ஆனால் அப்படி மூடி வைக்கப் பட்ட காலத்திலே ஒரு நெருக்கடி அறுவையரங்கு அந்த இடைக்காலத்தில் செயல்பட்டு வந்தது. அதற்குப் பிறகு அரசு ஆராய்ச்சி நிலையத்தில் அறிக்கை கிடைக்கப் பெற்ற பிறகு மூடி வைக்கப்பட்டிருந்த அறுவையரங்கு 2—12—1974 முதல் செயல்படத் தொடங்கியது. மறுபடியும் 3-12-1974-ம் நாள் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட ஒரு நபர் 10-12-1974-ல் மருத்துவ மனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு அறுவை சிகிச்சை பின் விளைவாக டெட்டனஸ் பாதிப்பு ஏற்பட்டதால் அந்நோயாளி மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப் பட்டார். அறுவை அரங்கு 11—12—1974-ல் மறுபடியும் மூடப்பட்டு அங்கு உபயோகத்தில் இருந்த பொருள்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டன. இதற்கிடையில் நெருக்கடி கால அறுவை அரங்கு ஒன்று மறுபடியும் அந்த இடைக் காலத்தில் செயல்பட்டு வந்தது.

குடும்பக் கட்டுப்பாடு ஆண் அறுவை சிகிச்சைகள் செய்வதற்காக ஒரு தனி அறுவை அரங்கு ஏற்படுத்தப்பட்டது. வயிறு வழி கருத்தடை அறுவை சிகிச்சைகள் திருவரங்க அரசு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே செய்யப்பட்டன. போக்குவரத்து விபத்துகள் மற்றும்



கீழ் கட்டி—கீரல் போன்றவைகள், வெளியிருப்பு நோயாளிகளுக்கான அறுவை அரங்கில் சிகிச்சை செய்யப்பட்டன. எலும்பு முறிவு சம்பந்தமான சிகிச்சைகள், எலும்பு முறிவு பகுதியில் அளிக்கப்பட்டன. மேற் கூறப்பட்ட ஏற்பாடுகள், தஞ்சை மருத்துவக் கல்லூரி நுண்ணுயிர் இயல் பேராசிரியரிடமிருந்து அறிக்கை கிடைக்கும் வரை தொடரப்பட்டன. அவ்வாறு அறுவை அரங்கிலே டெட்டனஸ் ஏற்பட்டதன் விளைவாக நடைபெற வேண்டிய காரியங்கள் எவையும் தடைப்படவில்லை. நுண்ணுயிர் இயல் பேராசிரியரின் அறிக்கை "Culture Negative for C. L. Tetani" என்ற தகவலை தாங்கி வந்திருந்தமையால் மறுபடியும் 19—1—1975 முதல் அறுவை அரங்கு துவக்கப்பெற்று இயல்பாக செயல்பட்டு வந்தது. நெருக்கடிக் கால அறுவை அரங்கம் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. 1—4—1975-ந் தேதியிட்ட இயக்குனரின் சமீபத்திய அறிக்கைப்படி திரு. தங்கவேலு என்பவர் 21-31-975 அன்று குடலிறக்கத்திற்காக இவ்வூர் மருத்துவமனையின் அறுவை அரங்கில் அறுவை சிகிச்சை செய்யப் பட்டார். அவருக்கு 27—3—1975-லிருந்து டெட்டனஸ் பாதிப்பு ஏற்பட்டு 29—3—1975 அன்று மரணமடைந்தார். இதனால் இவ்வறுவை அரங்கு மறுபடியும் 29—3—1975 முதல் மூடி வைக்கப்பட்டது. அவ்வறுவை அரங்கின் பல பகுதிகளிலிருந்தும் துடைத்தெடுத்த மாதிரிகள் (swabs) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைகள் தொடர்ந்து நெருக்கடி கால அறுவை அரங்கில் செய்யப்பட்டு வருகின்றன. 29—3—1975 அன்று மூன்று அறுவை சிகிச்சைகளும் 31—3—1975 அன்று 10 அறுவை சிகிச்சைகளும் மேற்படி நெருக்கடி கால அரங்கில் செய்யப்பட்டன. பொதுமக்களுக்கு எந்தவகையான இடையூறுமின்றி அறுவை சிகிச்சைகள் நெருக்கடி அரங்கில் தேவைக் கேற்ப நடைபெற்று வருகின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, இந்த திருச்சி மருத்துவ மனையிலே ஆறு மாத காலத்தி இந்த மாதிரிச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஒரு அபாயகரமான தொத்து நோயின் காரணமாக இந்தச் சம்பவம் நடக்கிறது. தஞ்சை மருத்துவ மனையில் ஆராய்ச்சிக்குப் பிறகு, இது அடிக்கடி திறக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மருத்துவ மனையிலிருந்து அது நெகட்டிவ் என்று கொடுத்த பிறகும், திறந்து மறுபடியும் இதே இடத்தில் இந்தச் சம்பவம் நடந்ததனால், அந்த ஆராய்ச்சி தவறாக இருக்குமோ என்ற சந்தேகத்துக்கு இடம் ஏற்பட்டிருப்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த அறுவை அரங்கிலே இந்த வியாதிக்கு அடையாளமாக எதாவது கிடைக்கிறதா என்பதற்காக பல்வேறு விதமான தூசி துரும்புகள் எல்லாம் துடைத்து எடுக்கப்பட்டு, அங்கே பயன்படுத்தப்படுகிற கருவிகள் எல்லாம் சோதனைக்காக அனுப்பப்பட்டன. அப்படிச் சோதனை செய்து பார்த்தபோது டெட்டனஸ் அந்த இடத்திலேயிருந்து ஏற்பட்டது என்பதற்கான எந்தவித ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் அங்கே அறுவை சிகிச்சை செய்த ஒருவருக்கு அந்த டெட்டனஸ் பாதிப்பு ஒரு வாரத்திற்குப் பின்னாலே

ஏற்பட்டிருக்கிறது. அறுவை சிகிச்சையில் தவறு இருப்பினும், டெட்டனஸ் பாதிப்பு ஏற்படக் கூடும். ஆகவே, அறுவை அரங்கைத் தூய்மைப்படுத்தி டெட்டனஸ் பாதிப்பு ஏற்படாமல் கவன நடவடிக்கை எடுத்தாலும்கூட, என்ன காரணத்தினால் இது நிகழ்கிறது என்று பார்க்க வேண்டும். வேறு சிலருக்கு பக்கத்திலே உள்ள அறுவை அரங்கிலே சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. அவர்களுக்கு அந்த ஆபத்து வரவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஒரு மருத்துவருடைய துணைவியாருக்கு, வீட்டில் இருந்த போதே டெட்டனஸ் பாதிப்பு ஏற்பட்டு, அவர்கள் பிழைக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. இந்த டெட்டனஸ் பாதிப்பு என்பது, தூசியினாலேயும் புழுதியினாலேயும், விபத்திலே அடிபட்டு விழுந்தவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதன் மூலமாகவும் எப்படியோ வந்துவிடுகிறது. கதவைத் திறந்து மூடாமல் ஒரு அறுவை சிகிச்சை நடத்த முடியாது. மிகுந்த பாதுகாப்பு தருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் என்ன செய்யலாம் என்பது தொடர்ந்து பரிசீலிக்க வேண்டியதாக இருக்கிறது.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, அது அந்தச் சுற்று வட்டாரத்திலேயே இருக்கின்ற பெரிய மருத்துவமனை. மேஜர் ஆப்பரேஷனுக்கு நிறைய ஜனங்கள் வரக் கூடிய இடம். பக்கத்தில் அமெரிக்கன் ஹாஸ்பிடல் என்று ஒன்று இருக்கிறது. பக்கத்தில் ஸ்ரீரங்கத்திலும் ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால் பக்கத்தில் இருக்கிற எந்த நர்ஸிங் ஹோமிலும் இந்த மாதிரி ஏற்படவில்லை. அந்த இடத்தில் நிறைய, ஏராளமான ஆப்பரேஷன் தியேட்டரும் அதற்கான வசதிகளும் இருப்பினும் இந்த டெட்டனஸ் பாதிப்பு இருப்பதனால், அதை உபயோகப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு ஜனங்களுக்கு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, சீக்கிரமாக சரியான முறையில் டெட்டனஸ் பரவாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 5-30]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, இது தொத்து நோய் என்ற பெயருக்குரியதாக இருக்கின்ற காரணத்தினாலேயே, பரவுகிற நோய் என்று பொருள் அல்ல. இந்தத் தொத்துநோய் விளைகிற நோய், எப்படி விளைகிறது என்று தெரியவில்லை. ஒரு வருடத்திலே இந்த நிலைமை திடீரென்று தோன்றிவிடுகிறது. அப்படி திடீரென்று தோன்றிவிடுகின்ற காரணத்தினாலேயே, அது பரவுகிறது என்று சொல்ல முடியாது. ஆனால் அதிக நாட்களாக இந்த இடத்தை மூடி வைத்து, மறுபடியும் அறுவை சிகிச்சைக்கு வருபவர்களுக்கு அங்கு ஆபத்து ஏற்படக் கூடிய ஒரு வாய்ப்பு இல்லாமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகள் உண்டோ அவைகளை எடுக்க கவனம் செலுத்தி வருகின்றார்கள். நம்முடைய நாட்டினுடைய சூழ்நிலையில், எல்லாவற்றையும் "பெர்பெக்ட் கண்டிஷன்" இல் வைக்கக் கூடிய அமைப்பு முறைகளை உண்டாக்க இப்போது இடமில்லை. அங்கே தற்காலிக அறுவை அரங்கிலே அதற்குப் பின்னர் 13 பேர்களுக்கு சிகிச்சைகள் நடைபெற்றிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் எந்தவிதமான நெருக்கடியும் வரவில்லை. அது ஏற்பட்டிருப்பதாக கருதச் சொல்லப்பட்டிருப்பதால், பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



(2) இலங்கையைச் சேர்ந்த மௌரி என்ற இயந்திரப் படகு என். ஜே. 821 பாம்பன் பகுதி கடலில் நைலான் மீன் பிடி வலைகளையும், பாய்மரக் கருவிகளையும் அபகரித்துச் சென்றுள்ளது குறித்து.

திரு. ஆர். சக்தி மோகன் : துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக்குறித்து மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"இலங்கையைச் சேர்ந்த மௌரி என்ற இயந்திரப்படகு என். ஜே. 821 21—3—1975 அன்று நடுக்கடலில் இந்தியாவைச் சேர்ந்த பாம்பன் பகுதி கடலில் ஜே. அந்தோணிசாமி, எஸ். தாஸ் நிவாஸ் மற்றும் பலரைத் தாக்கி, அவர்களிடமிருந்து 43 நைலான் மீன் பிடி வலைகளையும் மற்றும் ரூ. 40 ஆயிரம் பெறுமானமுள்ள பாய்மரக் கருவிகள், மீன்பிடிக் கருவிகள் முதலியவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து".

மாண்புமிகு திரு. ஓ. வி. எம் அண்ணாமலை : துணைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தலைவரிடமிருந்து 24—3—1975 அன்று ஒரு தந்தி இவ்வலுவலகத்திற்கு வரப் பெற்றது. அதில், பாம்பன் பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். தாஸ் நிவாஸ் மற்றும் ஜே. அந்தோணிசாமி ஆகியோருக்கு உரிமையான நாட்டுப்படகுகளில் இருந்த பத்து மீனவர்களை 21—3—1975 அன்று கடலில் "மௌரி" என்று பெயரெழுதப்பட்ட என். ஜே. 821 என்ற இலங்கை கடலிலிருந்தவர்கள் தாக்கினர் என்றும், நாற்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள 43 நைலான் வலை மற்றும் மீன்பிடி உபகரணங்களைக் கவர்ந்து சென்று விட்டனர் என்றும் புகார் செய்யப்பட்டிருந்தது.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மீனவர் திரு. அந்தோணிசாமி பர்னாந்து மற்றும் சேசையா பர்னாந்து ஆகியோர் இச்சம்பவம் குறித்து இராமேசுவரம் காவல்துறையில் புகார் மனு கொடுத்துள்ளனர். மேலும், இராமநாதபுரம் மாவட்ட காவல்துறை அலுவலர் சென்னையிலுள்ள குறிப்பு புலனாய்வுப் பகுதி மண்டல காவல்துறை அலுவலருக்கு 29—3—1975ல் ஒரு அறிக்கை அனுப்பியுள்ளார். அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்ட சம்பவம் கச்சத்தீவிற்கு அப்பால் நெடுந்தீவிற்கருகில் (இந்தியக் கடல் உரிமை கடற்பரப்புக்கு அப்பால்) சர்வதேச கடற்பரப்பில் நடந்ததால், காவல்துறையினரால் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்வதற்கில்லையெனக் கூறியுள்ளார். மேலும் அவர் இந்த சம்பவம் குறித்து இலங்கை தூதுவருடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்துள்ளார்.

எனவே இதுகுறித்து உடனடியாக இலங்கை தூதுவருடன் தொடர்பு கொண்டு இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வலை மற்றும் மீன்பிடி சாதனங்களை உடனடியாக மீட்டுத்தர ஆவன செய்வதுடன் இது போல் மீண்டும் நிகழாதிருக்கத் தக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளுமாறு

மீன் துறை இயக்குநர் கோரியுள்ளார். மீன் துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் மேற்படி இந்திய மீனவர் இழந்த வலைகளையும் மற்ற பொருள்களையும் இலங்கை மீனவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கவும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நிகழாதிருக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் இலங்கை தூதுவருடன் தொடர்புகொண்டு இதுகுறித்து ஆவன செய்யுமாறு மைய அரசினைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆர். சக்தி மோகன்: துணைத் தலைவரவர்களே, இம்மாதிரி இலங்கை இயந்திரப் படகுகாரர்கள் நமது எல்லை வரம்புக்கு உட்பட்ட நமது கடலிலேயே அத்துமீறி இயந்திரப் படகுகளைக் கொண்டு வந்து நம்மவர்களின் விலையுயர்ந்த உபகரணங்களைப் பறித்துச் சென்று விடுகின்றார்கள். இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. கச்சத்தீவிற்கு அப்பால் நடந்தது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கச்சத் தீவை நாம் தானம் கொடுத்த நிலையிலும்கூட எல்லாப் பகுதியிலும் மீன் பிடிக்கச் செல்லலாம் என்ற ஒப்பந்தம் மத்திய சர்க்கார் மூலம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருந்தும்கூட அவர்கள் அதை மீறி, இயந்திரப் படகுகளைக் கொண்டுவந்து நம்முடைய மீனவர்கள் அரும்பாடுபட்டு திரட்டிய விலையயர்ந்த மீன்களையும் நைலான் வலைகளையும் பறித்துக் கொண்டு செல்வதென்றால், அதுவும் தொடர்ந்து நடைபெறுவது என்றால், அது உண்மையில் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அது நாம் சகித்துக்கொள்ள முடியாத ஒரு கொடுமையாகும். நமது மாநில அரசு மத்திய அரசு மூலமாகவோ, நேரடியாகவோ இலங்கை அரசுக்கு எழுதி இந்த மாதிரிச் சம்பவங்கள் மீண்டும் நிகழா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது நம் மீனவர்களிடமிருந்து பறிக்கப் பட்டிருக்கின்ற ஏறத்தாழ ரூ. 50 ஆயிரம் பெருமதிப்புள்ள நைலான் வலைகள் மற்றும் பொருள்களை உடனடியாக பெற்றுத் திரும்பக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஒருகால் அந்த வலைகள் அவர்களிடமிருந்து திரும்ப வருவதற்கு காலம் தாமதப்படுமேயானால் அந்த நம் பகுதி மீனவர்களுக்கு அந்த ரூ. 50 ஆயிரம் பெருமதிப்புள்ள நைலான் வலைகளை நம்முடைய மாநில அரசு அவர்களுக்கு உடனடியாகக் கொடுத்து உதவுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி.வி.எம். அண்ணாமலை: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கோரிய கருத்து அனுதாபத்தோடு சிந்திக்க வேண்டிய கருத்து என்றாலும் உண்மையாகவே இன்றைய தினம் மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். 12 மைல்களுக்கு அப்பால் நடைபெறுகின்ற சம்பவத்தை, நிகழ்ச்சியை இன்றைய தினம் இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டு நமது மாநில காவல் துறை மூலமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாத என்ற சூழ்நிலை தமிழக அரசுக்கு. அதன் காவல் துறைக்கு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு மேற்கொண்டு நடவடிக்கை மாநில அரசு எடுக்க வேண்டுமென்று சொன்னால், மாநில அரசு எடுப்பதற்குரிய எல்லா வாய்ப்



பையும் மாநில சுயாட்சி மூலமாகத்தான் பெற முடியும் என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலவாற்றாலும், பல முறைகளிலும் எடுத்துக்கூறி வந்ததை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சீரிய கருத்தை நீங்களும் மற்றும் மத்திய அரசும் உள்ளபடியே ஏற்பீர்களானால், இது போன்ற சாதாரண நடைமுறை நடவடிக்கைகளைப் பற்றி மாநில அரசே ஆய்வுசெய்து, இலங்கை சர்க்காரோடு தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான உடைமைகளை பெற்றுத் தருவதற்கும், அந்தக் கொடுமைக்கு ஆளாக்குகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் வேண்டிய காரியங்களை முறையாகச் செய்ய முடியும். அதற்கான வாய்ப்பு இன்றைய தினம் இருக்கின்ற மாநில அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு முறையான தகவல்களை நம்முடைய துறையின் மூலமாக அனுப்பியிருக்கிறது. மத்திய அரசுதான் இது சம்பந்தமாக புலன் ஆய்வு செய்து, மேற்கொண்டு அங்கிருக்கின்ற இந்திய தூதுவர் மூலமாக இலங்கை சர்க்காரிடத்திலே முறையாகப்பேசி அதுபற்றி நியாயமான தீர்ப்புகளைப் பெற்று வழங்க வேண்டிய நிலைமையில் நாம் காத்துக் கொண்டிருக்கின்றோம். இப்போது நாடு பூராவும் வறட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் எங்கு பார்த்தாலும் வறண்டு இருக்கின்ற நேரத்தில், பஞ்சத்தைப் போக்குவதற்கு மிக அருமையாகத் தீவிரமாகத் திட்டங்களைப் போட்டு நமது அரசு நிறைவேற்றி வருகின்ற நேரத்தில், தமிழக ஆட்சி பெரும் அளவிலே ரூ. 50 ஆயிரம் இழப்பினை மீனவர்களின் இழப்பினை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பொருளாதார வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி யோசித்து அதைப் பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## 5. அரசின் சட்ட முன் வடிவு.

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2)' சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

---

@ 48–51 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன் வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

(பிற்பகல் 5-40.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975) திருப்பி அனுப்பப்படவேண்டும்"

என்று கோருகிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்ட மன்றப் பேரவையின் முன்னவர் செய்துள்ள சில அறிவிப்புகளையும், கொங்கு வேளாள சமூகத்தினரை பின்தங்கியவர் வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்காகச் செய்துள்ள அறிவிப்பையும் இந்த மேலவைக்குத் தெரிவித்துக்கொண்டு, இந்த சட்ட முன் வடிவு திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி வியாழக்கிழமை அன்று மாலை நான்கு மணிக்குக்கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-42.)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

**161.*Notifications issued with G. O. Ms. No. 1765, Agriculture, dated the 31st July 1973, in regard to amendments to Notification under section 5 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 relating to inclusion of paddy. (*Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].**



162. Order issued with G. O. R. No. 384, Commercial Taxes and Religious Endowments, dated the 13th December 1974, exempting from liability to entertainments tax, show tax, additional surcharge on entertainments tax and additional surcharge on show tax, one cinematograph film show proposed to be held by the Smile Arts, Royapurm, Madras, at Crown Theatre on 15th December 1974 at 10-30 a.m. to raise funds for the Poor Children Christmas Treat. (*Laid on the table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).

163. Notifications issued with G. O. Ms. No. 71, Commercial Taxes and Religious Endowments, dated the 27th January 1975 in regard to remission of stamp duty and Registration fees in respect of sale deeds to be executed in favour of the Secretary, College Purchase Committee Wallajahpet and gift deed in favour of the Government of Tamil Nadu (*Laid on the table of the House under section* 75-A (2) *of the Indian Stamp Act* ,1899 (*Central Act II of* 1899).

164. Notifications issued with G.O. Ms. No. 2207, Reveune, dated 25th May 1974, in regard to appointment of officers to carry out the functions and duties assigned to the Settlement Officers and Assistant Settlement Officers under the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Tamil Nadu Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1948 (*Tamil Nadu Act XXVI of* 1948].

165. Notification issued with G.O.P. No. 231, Commercial Taxes and Religious Endowments, dated the 1st March 1975 in regard to an amendment to Revenue Department Notification S.R.O. No.A-2522 of 1960, published at page 609 of Part I of the *Tamil Nadu Government* Gazette, dated the 13th April 1960, as subsequently amended. **Laid on the table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).

166. Notification issued with G.O. Ms. No. 35, Prohibition and Excise, dated the 5th February 1975 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [*Laid on the table of the House under section* 54 (3) *of the Tamil Nadu Prohibition Act*, 1937 (*Tamil Nadu Act X of* 1937).

167. Notification issued with G.O. Ms. No. 36, Prohibition and Excise, dated the 5th February 1975 in regard to amendments to the Tamil Nadu Spirituous Essences Rules, 1972. [*Laid on the table of the House under section* 54(3) *of the Tamil Nadu Prohibition Act*, 1937 (*Tamil Nadu Act X of* 1937].

168. Notification issued with G.O. Ms. No. 38, Prohibition and Excise, dated the 5th February 1975 in regard to amendment to sub-rule (8) of rule 21 of the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [*Laid on the table of the House under section* 54 (3) *of the Tamil Nadu Prohibition Act*, 1937 (*Tamil Nadu Act X of* 1937)].

169. Notification issued with G.O. Ms. No. 10, Co-operation, dated the 7th January 1975 in regard to an amendment to the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970. [*Laid on the table of the House under section* 38-*A of the Tamil Nadu Co-operative Land Development Banks Act*, 1934 (*Tamil Nadu Act X of* 1934)].

170. Tamil Nadu Government's Review and the Annual Report and Statement of Accounts of the Banana and Fruit Development Corporation Limited for the year ended 31st March 1971. [*Laid on the table of the House under section* 619-A *of the Indian Companies Act*, 1956 (*Central Act I of* 1956)].

*B. Reports, Notifications and Other Papers.*

*127. Speech of Hon. Thiru K. Rajaram, Minister for Labour on Demand No. 29—Labour including Factories. (English and Tamil)

*128. Review of Labour in Tamil Nadu, 1974—75. [English and Tamil].

*129. Note on Fisheries Demand 1975—76. (English and Tamil).

*130. Note on Social Welfare Demand No. 30, 1975—76. (English and Tamil).

*131. A Review on the Administration and Enforcement of Prohibition and Excise Laws in Tamil Nadu State during 1974—75. (English and Tamil).

*132. A Review of the working of the Stationery and Printing Department during 1974—75. (English and Tamil).

*133. Speech by Hon. Thiru S. Ramachandran, Minister for Transport—Demand No. 44—Stationery and Printing—Demands for Grants for the year 1975—76. (English and Tamil).

*134. [illegible]cy Note on Youth Service Corps, 1975—76 (English and Tamil).



*135. Report of the Committee on Estimates on the action taken by Government on the recommendations contained in the report on Employment and Training, 1974—75.

*136. Report of the Committee on Estimates on the action taken by Government on the recommendations contained in the report on Labour including Factories, 1974—75.

*137. Third Report of the Committee on Public Undertakings (1974—75) on the Audit Reports on the Accounts of the Tamil Nadu State Electricity Board for the years 1969—70 and 1970—71.

*138. Performance Budget on Social Welfare, 1975—76.

*139. Performance Budget on Fisheries, 1975—76.

---

*Circulated to all M.L.Cs. on 10th April 1975.

இணைப்பு

[43-ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L. A. Bill No. 15 of 1975

(As passed by the ssembly.)

*A Bill to provide for the appropriation of moneys out of the Consolidated Fund of the State for the service of the financialyear commencing on the* 1st *April* 1975.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 2) Act, 1975.

2. *Appropriation out of the Consolidated Fund for the financial year commencing on the* 1st *April* 1975.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year commencing on the 1st April 1975, a sum not exceeding eight hundred and forty-five crores, ten lakhs and thirty-five thousand rupees, which shall be inclusive of the sum of two hundred and eleven crores, twenty-seven lakhs and seventy-eight thousand rupees specified in section 2 of Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1975 (Tami Nadu Act 8 of 1975) being moneys required to meet—

(*a*) the grants made by the Tamil Nadu Legislative Assembly for that year, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State, for that year, as set forth in column (4) of the Schedule.



## THE SCHEDULE.

(*See* section 2)

| Demand number. | *Services and purposes.* | *Sums not exceeding* — *Voted by the Legislative Assembly.* | *Charged on the Consolidated Fund of the State.* | *Total.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department. | 3,94,63,000 | .. | 3,94,63,000 |
| 2 | State Excise Department. | 62,77,000 | .. | 62,77,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration. | 77,06,000 | .. | 77,06,000 |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration. | 3,98,10,000 | 1,000 | 3,98,11,000 |
| 5 | Stamps Administration | 59,74,000 | .. | 59,74,000 |
| 6 | Registration .. .. | 1,86,05,000 | 1,000 | 1,86,06,000 |
| | *Debt Charges* .. | .. | 60,01,36,000 | 60,01,36,000 |
| 7 | State Legislature .. | 49,61,000 | 55,000 | 50,16,000 |
| 8 | Elections .. .. | 1,94,86,000 | .. | 1,94,86,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters staff. | 10,32,71,000 | 48,68,000 | 10,81,39,000 |
| 10 | Milk Supply Schemes .. | 97,93,000 | .. | 97,93,000 |
| 11 | District Administration .. | 14,28,24,000 | 43,000 | 14,28,67,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. | 1,13,97,000 | 2,000 | 1,13,99,000 |
| 13 | Administration of Justice. | 3,92,78,000 | 61,68,000 | 4,54,46,000 |
| 14 | Jails .. .. .. | 4,38,95,000 | .. | 4,38,95,000 |
| 15 | Police .. .. | 26,47,68,000 | 1,000 | 26,47,69,000 |
| 16 | Fire Services .. .. | 2,14,90,000 | .. | 2,14,90,000 |
| 17 | Education .. .. | 1,18,21,03,000 | .. | 1,18,21,03,000 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 18 | Medical .. .. .. | 30,93,98,000 | 1,000 | 30,93,99,000 |
| 19 | Public Health .. .. | 16,25,76,000 | .. | 16,25,76,000 |
| 20 | Agriculture .. .. | 32,63,47,000 | 2,000 | 32,63,49,000 |
| 21 | Fisheries .. .. | 1,42,53,000 | .. | 1,42,53,000 |
| 22 | Animal Husbandry .. | 5,65,57,000 | 1,000 | 5,65,58,000 |
| 23 | Co-operation .. .. | 4,58,79,000 | .. | 4,58,79,000 |
| 24 | Industries .... .. | 3,94,46,000 | .. | 3,94,46,000 |
| 25 | Cinchona .. .. | 73,34,000 | .. | 73,34,000 |
| 26 | Handlooms and Textiles.. | 1,94,52,000 | .. | 1,94,52,000 |
| 27 | Khadi .. .. | 57,00,000 | .. | 57,00,000 |
| 28 | Community Development Projects, etc. | 29,00,09,000 | .. | 29,00,09,000 |
| 29 | Labour including factories | 3,35,12,000 | 1,000 | 3,35,13,000 |
| 30 | Social Welfare .. .. | 2,60,73,000 | .. | 2,60,73,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. | 9,48,00,000 | 1,000 | 9,48,01,000 |
| 32 | Welfare of the Backward Classes, etc. | 5,78,27,000 | 1,000 | 5,78,28,000 |
| 33 | Housing .. .. | 1,67,02,000 | .. | 1,67,02,000 |
| 34 | Urban Development .. | 6,17,62,000 | .. | 6,17,62,000 |
| 35 | Civil Supplies .. .. | 2,49,03,000 | .. | 2,49,03,000 |
| 36 | Irrigation .. .. | 19,71,79,000 | .. | 19,71,79,000 |
| 37 | Public Works—Buildings. | 3,51,01,000 | 1,85,000 | 3,52,86,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant. | 4,62,86,000 | .. | 4,62,86,000 |



| Demand number. | Services and purposes. | ums Snot exceeding | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 39 | Roads and Bridges .. | 20,99,35,000 | .. | 20,99,35,000 |
| 40 | Road Transport Services. | 8,08,43,000 | 1,02,000 | 8,09,45,000 |
| 41 | Relief on account of Natural Calamities. | 20,00,00,000 | 1,52,00,000 | 21,52,00,000 |
| 42 | Pensions and Other Retirement Benefits. | 10,23,97,000 | 75,72,000 | 10,99,69,000 |
| 43 | Miscellaneous .. .. | 24,51,32,000 | 15,15,000 | 24,66,47,000 |
| 44 | Stationery and Printing. | 5,93,26,000 | 1,54,000 | 5,94,80,000 |
| 45 | Forest Department .. | 3,28,72,000 | 1,000 | 3,28,73,000 |
| 46 | Compensation and Assignments. | 9,54,74,000 | 22,53,000 | 9,77,27,000 |
| 47 | Compensation to Zamindars | 1,65,94,000 | .. | 1,65,94,000 |
| 48 | Capital Outlay on Public Health, Sanitation and Water Supply. | 94,83,000 | .. | 94,83,000 |
| 49 | Capital Outlay on Agriculture. | 53,92,64,000 | 1,000 | 53,92,65,000 |
| 50 | Capital Outlay on Industrial Development. | 3,64,73,000 | 2,000 | 3,64,75,000 |
| 51 | Capital Outlay on Irrigation. | 17,25,79,000 | .. | 17,25,79,000 |
| 52 | Capital Outlay on Public Works—Buildings. | 9,18,53,000 | .. | 9,18,53000, |
| 53 | Capital Outlay on Roads and Bridges. | 4,21,37,000 | .. | 4,21,37,000 |
| 54 | Capital Outlay on Road Transport Services. | 1,97,92,000 | 1,000 | 1,97,93,000 |
| 55 | Capital Outlay on Forest | 2,48,78,000 | .. | 2,48,78,000 |
| 56 | Miscellaneous Capital Outlay. | 7,61,73,000 | 1,000 | 7,61,74,000 |
| 57 | Loans and Advances by the State Government. | 42,31,15,000 | .. | 42,31,15,000 |
| | **Public Debt—Repayment.** | | 1,50,22,49,000 | 1,50,22,49,000 |
| | Grand Total. | 6,31,05,17,000 | 2,14,05,18,000 | 8,45,10,35,000 |

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Date 11—4—1975.

K. GOVINDAN,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

**வியாழக்கிழமை, 1975 எப்ரல் 17.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வேபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைவு குறித்து.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர்களே, முன்னாள் இந்தியக் குடியரசின் தலைவர் டாக்டர் சர்வேபள்ளி இராதா கிருஷ்ணன் அவர்கள் இன்று, 17-4-1974 நள்ளிரவு இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இரங்கற் தீர்மானத்தை முன்மொழியுமாறு வேண்டுகிறேன். அதனையடுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரங்கற் உரை ஆற்றுவார்கள். பிறகு என்னுடைய உரையோடு இந்த அவையை அவசரமாக ஒத்திவைத்து, இறுதிச்சடங்கிற்கு நாம் செல்ல வேண்டியிருப்பதால் மற்றவர்கள் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே,

"இந்தியக் குடியரசின்முன்னாள் தலைவரும், இணையில்லா உலகப் புகழ்பெற்ற தத்துவப் பேராசிரியருமான டாக்டர் சர்வேபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்தது குறித்து இம் மன்றம் தனது துயரத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் புகழார்ந்த நினைவுக்கு அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது"

என்ற இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்கும், இந்தியத் திருநாட்டு மக்களுக்கும், ஏன் உலக மக்களுக்கும் வேதனை தரத்தக்க நிகழ்ச்சியாக டாக்டர் சர்வேபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்திருக்கின்றார்கள். ஆசிரியராக தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கி துணைப் பேராசிரியராகவும், பின்னர் பேராசிரியராகவும், பல்கலைக் கழகங்களின் துணை வேந்தராகவும் பொறுப்புக்களை ஏற்று, பிறகு இந்திய நாட்டின் தூதுவராக ரஷ்ய நாட்டிற்குச் சென்று இந்தியாவின் புகழைப் பல்வேறு வகைகளிலும் உலகத்திற்குப் பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டு, இந்திய நாட்டுக் குடியரசுத் துணைத் தலைவராக இருமுறை கடமையாற்றி, பின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று—இந்தியாவின் கீர்த்தியை—ஒரு தத்துவமேதை

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 17

முடியரசுத் தலைவராக வீற்றிருக்கிறார் என்கின்ற புகழொளியை பரவச் செய்த பெருமை மறைந்த மாமேதை டாக்டர் சர்வேபள்ளி இராதா கிருஷ்ணன் அவர்களுக்கு உண்டு. கீழை நாடுகளுக்கும், மேலை நாடு களுக்கும் இடையே ஒரு பாலமாக அவர் விளங்கினார். அவருடைய ஆழ்ந்த கருத்துக்களை உலகத்திலே உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் தெரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பை அவருடைய உரையின் மூலமாகப் பெற்றிருக் கின்றன, அவருடைய நூல்களின் மூலமாகப் பெற்றிருக்கின்றன. 'பாரத் ரத்னா' என்கின்ற பட்டம் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களை நாடி வந்தது என்று சொன்னால், அது மிகையாகாது. அவர் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலே இருந்த அண்மைக் காலத்திலேகூட 'டெம்பிள்ட்டன்' என்கின்ற ஓர் உயர்ந்த பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. அந்தப் பரிசினுடைய பெருமானமே 98 ஆயிரம் டாலர் எனச் சொல்லப் படுகிறது. அது உலகின் சார்பாக அவருக்கு வழங்கப்பட்ட பரிசு என்பதை விட, அவருடைய அறிவுக்கும், அடக்கத்திற்கும், அவருடைய மேதா விலாசத்திற்கும் உலகம் அவருக்கு அளித்த காணிக்கை என்று சொன்னால், அது மிகப் பொருத்தமாக இருக்கும். அத்தகைய பெருமைக்குரிய ஒரு பெரியவரை, மாமேதையை நாமெல்லாம் இழந்து தவிக்கிறோம் என்றாலும், அவர் தந்த கருத்துக்கள், அவர் கடைப்பிடித்த வாழ்க்கை நெறிகள், அவர் உருவாக வேண்டுமென்று எதிர்பார்த்த அமைதிச் சூழ்நிலை இவைகளையெல்லாம் ஜனநாயக மேம்பாட்டிற்காக நாம் கடைப் பிடிப்பதுதான் மறைந்தவருக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலி என்கின்ற வகையிலே குறிப்பிட்டு, அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

*திரு கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் இரங்கற் தீர்மானத்தைத் தொடர்ந்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் பாரதம் தனது உத்தமபுத்திரர்களில் ஒருவரை இழந்துவிட்டது. உலகிலேயே தத்துவமேதை என்று அனைவராலும் பாராட்டப்படும் அவர் உலகத்தில் எல்லோரும் அறியும்படியாக வாழ்ந்தார். நமது புகழை உலகெல்லாம் கொடிகட்டி பறக்கும்படியாகச் செய்ததோடு, தமது நூல்களின் மூலமாக —சங்கராச்சாரியார் அவர்கள் செய்ய முடியாத பெரிய காரியத்தை—இந்து மதம் என்றால் என்னவென்று எளிதில் உலகம் எல்லாம் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் பிரபலப்படுத்திய அவர் ஒரு தத்துவ மேதை யாகத் திகழ்ந்தார். அரசியலைப் பொறுத்தவரையில், எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டவராக இருந்து இந்த நாட்டின் உபராஷ்டிரபதி யாகவும், அதன்பின் ராஷ்டிரபதியாகவும் இருந்தார் என்றால், அது உலகம் ஆச்சரியப்படக்கூடிய ஒரு காரியம். எந்த ஒரு அரசியல் கட்சியிலேயும் சேராமல் இந்த நாட்டின் ராஷ்டிரபதியாக இருப்பது என்பது உண்மையிலேயே வியக்கத்தக்க, அரசியல் சரித்திரத்திலேயே நாம் காண முடியாத ஒன்றாகும்.

ஆசிரியர் என்று சொல்லக்கூடிய அந்தப் பதத்திற்கு ஓர் இலக்கணமாக அவர் திகழ்ந்தார். ஒரே நேரத்தில் 'ஆக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகத்திலும், 'காசி-ஹிந்து' பல்கலைக்கழகத்திலும் பணியாற்றினார். அங்குமிங்கும் விமானத்தில் சென்று ஒரே நேரத்தில் இரண்டு பல்கலைக்கழகங்களிலும்



1975 ஏப்ரல் 17] [திரு. கே. ராஜாராம்]

பணியாற்றிய பெருமை உலகத்தில் வேறு யாருக்கும் இருந்திருக்க முடியாது. இவ்வளவு தூரத்தில் அமைந்திருக்கும் இரண்டு பல்கலைக் கழகங்களில் ஒரே நேரத்தில் பணியாற்றியிருக்கிறார். நமது பாரதத் தின் முதல் தூதுவராக ரஷ்யாவுக்குச் சென்று அப்போது ஸ்டாலினோடு பேசும்பொழுது அவருடைய முதுகில் தட்டிக்கொடுத்தார் என்ற செய்தியை நாம் கேட்கும்பொழுது பெருமைப்படுகிறோம். ஏனென்றால் அது சிங்கத்தையே தட்டிக்கொடுத்த மாதிரிதான் அர்த்தம். உலகத் தில் ஸ்டாலின் எப்படிப்பட்டவர் என்று சரித்திரம் படித்தவர்களுக்குத் தெரியும். ஆக, அவருடைய முதுகைத் தட்டிக்கொடுத்து 'நல்லபிள்ளை' என்று சொல்லக்கூடிய அளவுக்கு இவர் உயர்ந்தவராக இருந்தார் என்று சொன்னால், அவருடைய மேதைத் தன்மையையும், புகழை யும் நாம் எப்படி நிரப்பப்போகிறோம் என்று என்னால் சொல்ல முடியவில்லை. அவர் விட்டுச் சென்றிருக்கும் இந்த இடத்தை யாரும் நிரப்ப முடியாது என்று கவலையோடு தெரிவித்து, அவருடைய குடும் பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

[பிற்பகல் 4·10]

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் களே, மறைந்த மாமேதை டாக்டர் சர்வே பள்ளி இராதாகிருஷ்ணன் அவர் கள் 'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்ற பெயருக்கு இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பொலிவு தந்து உறுதிப்படுத்துவதற்கேற்ப தொண்டை நாட்டின் ஒரு பகுதியான தணிகை பகுதியிலே பிறந்தார். அவர் பிறந்த நாளிலே தணிகை வட ஆற்காட்டிலேதான் இருந்தது. அவர் மறைந்த இந்த நாளிலும் அவர் பிறந்த பகுதி தமிழ்நாட் டோடுதான் இருக்கிறது. அவருடைய உடலும் தமிழ் மண்ணிலேதான் இன்று மறைகின்றது. அவர் வீட்டுமொழி தெலுங்கானாலும் தமிழிலே நன்கு படிப்பதற்கும், பேசுவதற்கும் அவர் பயிற்சி பெற்றிருந்தார். அவரோடு நாம் பேசும்பொழுதெல்லாம் வேற்று மொழியார் தமிழ் பேசுகிறார் என்ற ஒரு எண்ணமே நமக்கு ஏற்படாத அளவுக்கு தமிழை நல்லபடியாக பயன்படுத்திப் பேசுகிற திறமை பெற்றிருந் தார். சுவாமி விவேகானந்தர் அவர்கள் கிழக்கையும்-மேற்கையும் இணைப்பதற்கு வேதாந்தத் தத்துவம் பயன்படுகிறது என்று பலவாறு சொல்லி கிழக்கும்-மேற்கும் என்ற நூலையே எழுதியிருந்தார். அவர் விட்டுச் சென்ற அந்தப் பணியை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தமக்குள்ள ஆங்கிலப் புலமையைப் பயன்படுத்தி கிழக்கும்-மேற்கும் என்ற தத்துவத்தினுடைய அடிப்படையில் பிணைப்பதற்கு அரும்பாடு பட்டார். ஆதிசங்கரருக்குப் பிறகு வேதாந்த தத்துவத்தை வியாக்கி யானம் செய்வதற்கு இருபதாம் நூற்றாண்டிலே தோன்றிய பேராசிரி யர்களிலே அவர்தான் தலைமைபெற்றுத்திகழ்ந்தார் என்பது எல்லோ ருக்கும் தெரியும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது போன்று வேதாந்தத் தத்துவ ஞானியான அவர் புரட் சியில் பூத்த பொதுவுடைமை நாட்டுக்கு, சோவியத் நாட்டிற்கு சுதந் திரத்தில் பூத்த இந்தியாவினுடைய முதற் தூதுவராகச் சென்றபோது அவருக்குத்தான் 'முதன்முதலாக ஓர் அயல்நாட்டு தூதுவருக்கு பேட்டி அளிப்பது' என்ற முறையில் ஸ்டாலின் பேட்டியளித்தார்

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1975 எப்ரல் 17

அப்போது இரும்புத்திரை போட்டுக்கொண்டிருந்த காலம். ஸ்டாலின் இவ்வாறு பேட்டி அளித்தது இந்திய தூதுவருக்குத்தான். அதுவும் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்குத்தான், அதுவும் வேதாந்தத்திற்குத்தான் என்பதைப் பெருமையோடு அன்று படித்தவர்கள் பத்திரிகையிலே எழுதக் கேட்டோம். இப்படி பல புகழை உலக அரங்கிலே இந்தியாவுக்குத் தேடி வைத்து, தமிழ் நாட்டிற்குத் தேடிவைத்து நேற்று நள்ளிரவிலே நம்மைவிட்டு மறைந்துவிட்டார்கள். அவருக்கு இந்த அவை செலுத்துகின்ற அஞ்சலியோடு, முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் பிரதிபலிப்பின் அஞ்சலியோடு என்னுடைய அஞ்சலியையும் சேர்த்துக்கொள்கிறேன்.

மறைந்த மாமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மறைந்த பெரியவர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவை இத்துடன் கலைந்து, மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4–15)

## 2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

171. Notification issued with G. O. Ms. No. 331, Rural Development and Local Administration, dated the 26th February 1975 in regard to an amendment to the Rules for Election of Chairman of Standing Committees under the Madras Corporation. (Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).

172. Notification issued with G. O. Ms. No. 1547, Agriculture, dated the 3rd October 1974 relating to establishment of a regulated market at Budalur for the purchase and sale of paddy, groundnut, greengram, blackgram and red gram. (Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)



1975 எப்ரல் 17]

173. Order issued with G. O. R. No. 218, Commercial Taxes and Religious Endowments, dated the 8th October 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharges on benefit film shows in aid of the Chief Minister's Physically Handicapped Rehabilitation Fund. [Laid on the table of the house under sections 16 (4) and 8 (3) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Acts X of 1939) and the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961).]

174. Order issued with G.O.R. No. 320, Commercial Taxes and Religious Endownments, dated the 23rd November 1974, in regard to exemption from liability to entertainments tax and additional surcharge on entertainments tax in respect of exhibition of films for the benefit of children all over Tamil Nadu by the Children's Film Society of India or by their Zonal Distributors, Madras. [*Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainment Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)*]

175. The Tamil Nadu Government's Review and the Fifth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Textile Corporation Limited for the year ended 31st December 1973. [*Laid on the table of the House under section 619 (A) of the Indian Companies Act, 1956 (Central Act) I of 1956.*]

### B. *Reports, Notifications and Other Papers*

*140. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1974 (L. A. Bill No. 15 of 1975), as passed by the Assembly.

£141. The Tamil Nadu Gaming (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 8 of 1975), as passed by the Assembly.

£142. The Tamil Nadu Societies Registration Bill, 1975 (L.A. Bill No. 53 of 1972), as passed by the Assembly.

£143. The Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 (L. A. Bill No. 5 of 1975), as passed by the Assembly.

£144. The Tamil Nadu Prevention of Begging (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 48 of 1974), as passed by the Assembly.

145. Return of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969 :

*Returns as on 31-3-1974*

1. Thiru D. Santosham
2. Thiru M. Sankaralingam

*Returns as on 21-4-1974*

Thiru A. Thangavel

---

*Laid on the table of the House on 11th April 1975

£Circulated to all M.L.Cs. on 16th April 1975

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1975 ஏப்ரல் 18

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*"Kashayam"*

*241. *Q.*—THIRU D.V.D.' MONTE: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(*a*) whether the Government are aware that the consumption of so called "Kashayam" by poor people very often results in death; and

(*b*) if so, the steps proposed to be taken thereon?

"கஷாயம்"

திரு டி. வி. டி.' மாண்டி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "கஷாயம்" என்னும் பானத்தைப் பருகுவதால் ஏழை மக்கள் பெரும்பாலும் இறந்து விடுகின்றனர் என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) இப்பொருள் முழுவதும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU D. V. D.' MONTE : Sir, may I know the number of deaths caused by this illicit drinking since September 1974 ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த அரிஷ்டம், கஷாயம் போன்றவைகளால், அவைகளைச் சாப்பிடுவதன் காரணமாக எத்தனை பேர் இறந்தார்கள் என்கின்ற விவரம் இப்பொழுது அரசிடம் இல்லை.

[1975 ஏப்ரல் 18

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இப்பொழுது பூரண மதுவிலக்கை நாம் அமுல் செய்திருந்தும் கூட, கிராமப்புறங்களில் கஷாயம் என்கின்ற பெயரால் ஏராளமான தவறுகளுக்கு இடமிருக்கிறது. ஆகவே அது பற்றி அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக ஏதாவது விதிகள், சட்டங்கள் பிறப்பித்து அதைத் தடுப்பதற்குரிய வழிவகைகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1955ஆம் ஆண்டு மருந்து, டாய்லட் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் என்கின்ற ஒரு மத்திய சட்டம் இருக்கின்றது. அந்த அடிப்படையில் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, தீர்வை வசூலிக்கும் வேலையை மாத்திரம்தான் மாநில அரசு மேற்கொண்டு சில விதி முறைகளையும் முறைப்படுத்த முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அதற்கு மேல் கட்டுப்படுத்துவது என்பது இப்பொழுதுள்ள மத்திய அரசுச் சட்டத்தைத் திருத்தினாலல்லாமல் நம்மால் இயலாத காரியமாக இருந்து வருகிறது. ஆயினும் சில வரை முறைகள் என்கின்ற அளவுக்கு ஆயுர்வேத காரியங்களுக்காக நடைபெறு கின்ற இந்தக் கஷாயங்கள் மற்றவைகளை நாம் கூடுமானவரை தடுப்பதற்கு முயற்சிகளை எடுத்திருக்கின்றோம். இருந்தாலும் இதைச் சில்லறைக் கடைகளிலே விற்பதன் மூலமாக இந்தப் பழக்கத்திலே ஈடுபட்டவர்களைத் திருப்திப் படுத்துவதற்கு வியாபாரிகளாலும் முடிகிறது. சுலபமாக இந்தக் கட்டுப்பாடுகளை எல்லாம் மீறுகின்ற காரியங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவேதான் 1958 ஆம் ஆண்டிலே இதிலே சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அதையும் ரத்து செய்துவிட்டு தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு சாராயம் கலந்த பொருட்கள் கட்டுப்பாடு விதிகள் எனப்படும் தனி விதிகளை உருவாக்கலாமா என்ற ஒரு கருத்து இப்பொழுது நம்முடைய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தக் கஷாயங்களிலே "குளோரல் ஹைடிரேட்" என்ற ஒரு மருந்தைக் கலக்கிறார்கள். அதைக் கலப்பதன் காரணமாகத்தான் அவர்களுக்குத் தூக்கமும், போதையும் ஏற்படுகிறது. "குளோரல் ஹைடிரேட்" மருந்தை உபயோகிக்கக் கூடாது என்பதாக நாம் ஒரு சட்டம் வைத்திருக்கிறோம். இதைத் தவிர்க்க முடியும் என்று இப்பொழுது கண்டுபிடித்து அதனுடைய அடிப்படையிலே சில நடவடிக்கைகளும் எடுத்தார்கள். எனவே இந்தச் சட்டத்தை அமுல் படுத்தினால் கூட அதைத் தடுக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொண்டு அதுபற்றி அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எல்லாவற்றையும் சேர்த்துத்தான் இப்பொழுது கேரளத்திலே ஒரு சட்டமியற்றியிருக்கின்றார்கள் என்று நம்முடைய அரசுக்குத் தகவல் வந்து அதனுடைய அடிப்படையிலே நாம் மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமலே கூட தயாரிக்க முடியும் என்கின்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த



; ஏப்ரல் 18]

கயிலே தான் எல்லாவற்றையும் இணைத்து இதைக் கட்டுப்படுத்துவதற்
r ஒரு சட்டத்தை விரைவிலே உருவாக்குவதற்கு அரசு பரிசீலித்துக்
'ண்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மது விலக்குச் சட்டத்தை
ல முறையில் அமுல்படுத்துவதற்கு இம்மாதிரிக் காரியங்கள் மிகவும்
டமாக அமைந்திருக்கின்றன. இது மத்திய அரசின் அனுமதி அல்லது
காரத்தின் கீழ் இருப்பதனால் தான் இந்த மாதிரியான கஷ்டங்கள்
படுகின்றன. எத்தனையோ மத்திய அரசினுடைய அதிகாரங்களை நாம்
ரிப் பெறுகிறோம். அதே மாதிரி இதையும் கோரிப்பெற்று அமுல்
த்துவதற்கு நம் மாநில அரசாங்கம் ஏன் முயற்சிக்கக்கூடாது என்று
ரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய
சிடமிருந்து அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டு
ன்று நாம் குறிப்பிடுகின்ற அதிகாரங்களில் இதுவும் ஒன்றாகும்.
த நாம் கோருகின்ற காரணத்தால் கிடைத்து விடும் என்று சொல்ல
யாது. ஏனென்றால் பல பெயர்களில் இந்த அரிஷ்டங்கள் வருகின்
r. சில இடங்களிலே இந்த அரிஷ்டங்களை நாம் கட்டுப்படுத்தினாலும்
று சில பெயர்களில் புதிய அரிஷ்டங்கள் வந்துவிடுகின்றன. இப்
ாழுது கூட நாம் சில அரிஷ்டங்களைக் கட்டுப்படுத்தினோம். கஷாயங்கள்,
ிஷ்டங்கள் என்ற பெயரிலே சிலவற்றைக் கட்டுப்படுத்தினோம். அதற்குப்
கும் சில அரிஷ்டங்கள் வந்தன. அவைகளுடைய பெயர்கள் வாயிலே
- நுழையாத அளவுக்கு "நாரிகேலாசியம், கம்புராரிஷ்டம், கர்ஜூரா
டம், மளிகை அரிஷ்டம், மதுகஷாயம், ரசாயன அரிஷ்டம்" என்கின்ற
படி பல வகை அரிஷ்டங்கள் வெளிவந்தன. அவைகளையும் கட்டுப்படுத்து
ற்கு நாம் சில ஏற்பாடுகளைச் செய்தோம். இருந்தாலும் இந்த ஏற்
டுகள் எல்லாம் போதியனவாக அமையாத காரணத்தால் தான்,
'ண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல் மத்திய
ரசினுடைய ஆலோசனை தேவையில்லை என்கின்ற அளவிலே நாம் ஒரு
டத்தை இயற்றலாமென்றும், கேரள அரசு அப்படி ஒரு சட்டத்தை
றைவேற்றியிருக்கிறது என்றும் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு
ரப்பட்டு அதை நம்முடைய அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்
து.

THIRU D.V. D'MONTE : Sir, Acharya Vinobha Bhave has gone on
cord as suggesting that liquor should be dispensed free of charge in
spitals and dispensaries, similar to medicine, as and when prescribed by
ctors. May I know whether there is any such proposal before the
overnment or is there any other proposal to make beer, a liquor of lesser
coholic content, freely available, as in Bombay?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதில் எழுப்
பட்டிருக்கின்ற கருத்துக்கும் இதற்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக
ருக்கின்ற காரணத்தால், இதை ஆராயத் தேவையில்லை.

### Police Commission.

* 242. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of recommendations of the Police Commission which have been accepted by the Government; and

(*b*) the number of recommendations among them, which have been implemented?

### காவல் துறை ஆணைக்குழு.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காவல் துறை ஆணைக்குழு செய்துள்ள சிபாரிசுகளில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டவை எத்தனை ?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டவை எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) காவல் துறை ஆணைக் குழு செய்துள்ள சிபாரிசுகளில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டவை 116.

(இ) இதுவரை முழுமையாக நிறைவேற்றப்பட்டிருப்பது 41.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, காவல் துறையின ருடைய இப்பொழுதைய உடைக்கு அதிகமான அலவன்ஸ் வேண்டுமென் றும் அல்லது அந்த உடைக்குத் தேவையான மாறுதல் வேண்டுமென்றும் கூட ஒரு புதிய கருத்து சொல்லப்படுகிறது. அது அரசினுடைய கவனத் திற்கு வந்ததா ? பிற மாநிலங்களில் கூட இத்தகைய காக்கி சட்டை பற்றிய ஒரு வெறுப்பு இருக்கிறது. ஆகவே, அந்த நிறத்தை மாற்றி காவலர்களுக்கு முழு நிஜார் உடுப்பதற்கான உடை கொடுப்பதற்கான ஏதாவது பரிந்துரை அரசிடம் இருக்கிறதா ? அப்படி இல்லாவிட்டால் அரசு ஏதாவது வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் கூறுவது போல், உடைகளை மாற்றுவ தாக அரசுக்கு உத்தேசம் கிடையாது. அது போன்ற பரிந்துரைகள் எதுவும் இல்லை.



### Delayed payment of Gratuity.

*243. *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the interest payable on delayed payment of gratuity, is not made applicable to the teachers retiring from Aided High School; and

(*b*) if so, the reasons therefor ?

### காலந்தாழ்த்தி வழங்கப்படும் பணிக்கொடை.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காலந்தாழ்த்தி வழங்கப்படும் பணிக்கொடை வகையில் கொடுக் கப்படத்தக்க வட்டி ஏற்பாடு, மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளி லிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்குப் பொருந்தாதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் ஆய்விலுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்குச் சலு கைகள் வழங்கும் அதே நேரத்திலே அந்த உத்தரவிலேயே உள்ளாட்சித் துறையிலே உள்ள ஆசிரியர்களுக்கும், பஞ்சாயத்து யூனியனிலே பணி யாற்றும் ஆசிரியர்களுக்கும், மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அந்தச் சலுகைகள் பொருந்தும் என்று சேர்த்து உத்தரவிட அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நிலைமையைப் பொறுத்தவரை, பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்திருக்கிறார். அது அரசின் ஆய்வில் உள்ளது. மாண்புமிகு உறுப் பினர் திரு. கணபதி சொல்லும் கருத்து தனியாக ஆராயப்பட வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுமேயானால், இப்படிப்பட்ட வினாக்கள் அடிக்கடி எழும்பாது. ஆகவே அதைத் தனியாக ஆராய்ந்து மூன்றையும் ஒன்றாக இணைப்பதிலே என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி நிதித் துறைதான் கூற வேண்டும். சங்கடங்கள் எதுவும் இல்லாமல் இருக்குமானால், அந்த முறையைக் கையாள்வதையும் நாம் தனியாக ஆராய்ந்து முடிவெடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இத்தகைய நடைமுறைச் சிக்கல்களை, சங்கடங்களையெல்லாம் பலமுறை இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பொதுவாக அரசாங்கம் முடிவெடுக்கும்போது, அமைச்சரவை அறிவிக்கும்பொழுது எல்லா நிர்வாகங்களிலே இருக்கக்கூடிய தனியார் துறை ஆசிரியர்களுக்கும் அந்தச் சலுகைகள் பொருந்தும் என்று முடிவெடுத்து அறிவிக்கின்றார்கள். அந்த அறிவிப்பு அரசுத் துறையிலே இருப்பவர்களுக்கு முதலில் அமுலாகி விடுகிறது. அதற்குப் பிறகு உள்ளாட்சித் துறையிலே இருக்கிறவர்களுக்கும், தனியார் துறையிலே இருக்கிறவர்களுக்கும் "புரப்போசல்" அனுப்பி நிதித் துறை ஏற்க வேண்டும், நிதித் துறை ஏற்க வேண்டும் என்று இப்படியே காலத் தாழ்வு ஆண்டுக் கணக்கில் ஆகிறது. இத்தகைய நடைமுறை கடந்த நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து இங்கே "அனவுன்ஸ்மெண்ட்" ஆகும்போது, இங்கே அரசு ஒப்புதல் அளிக்கும்போது, ஒரே உத்தரவாக அனைவருக்கும் பொருந்தும் வகையில் நிர்வாகத்தைச் சுலபமாக ஆக்குவதற்கு அரசு விரைவான முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது பற்றித்தான் முதலில் குறிப்பிட்டேன். ஒரே நிலைக்கு அவர்களைக் கொண்டுவரும் பணி இன்னும் முற்றுப்பெறவில்லை. ஆனாலும் அரசில் பணிபுரிகின்றவர்களுக்குள்ள சலுகைகள் பல அவர்களுக்குப் பொருந்தினாலும் இப்போதுள்ள வித்தியாசங்களை மெல்ல மெல்லக் குறைத்து, அவற்றை ஒன்று படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட உத்தரவுகள் இரண்டு ஆண்டுகாலம், மூன்றாண்டு காலத்திற்கு முன்னால் பிறப்பிக்கப்பட்டவை. எனவேதான் அவற்றை அமுல் படுத்துவதில் சில பொருந்தாத நிலைமைகள் ஏற்படுகின்றன. இனி வரும் உத்தரவுகள் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய தன்மையில் இருக்க அரசு உத்தரவிடும். இந்த உத்தரவுகள் 1971, 1972 அல்லது முன்னதாக இடப்பட்டதன் காரணமாகத்தான் அவற்றைத் தனித்தனியாகப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அது பற்றி மேலும் ஆராய வேண்டும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராயவேண்டும் என்று சொல்லுகின்றார்கள். ஆராயப்படும் என்று சொல்லுவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏறத்தாழ அதுதான் பொருள். "ஆராயப்படும்" என்றால் அது "அஷ்யூரன்ஸ்" ஆகும். ஆராயவேண்டும் என்றால் கிட்டத்தட்ட அதுதான் பொருள் என்றாலும் அதிலுள்ள நிதி நிலைமைகளைப் பொருத்து, நிதித் துறையையும் கலக்க வேண்டும் என்று ஆகிறது.





*Tamil Nadu Aided Secondary Schools Non-teaching Staff Association.*

*244 Q.—Thiru K.S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:—

(a) whether the Tamil Nadu Aided Secondary Schools Non-teaching Staff Association has submitted a memorial to the Government to remove the disparity in the case of granting advance incentive increments to the Record Clerks and other Attenders of the Laboratory and Library; and

(b) if so, the action taken thereon?

தமிழ்நாடு மானியம் பெறும் இடைநிலைப் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்கள் சங்கம்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஆய்வுக்கூடம், நூலகம் ஆகியவற்றைச் சேர்ந்த பதிவெழுத்தர்களுக்கும் ஏனைய சிற்றெழுத்தர்களுக்கும் முன்னதாகவே ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்குவதில் காணப்படும் வேறுபாட்டை நீக்கக் கோரி தமிழ் நாடு மானியம் பெறும் இடைநிலைப்பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்கள் சங்கம் மனுவொன்றை அரசிடம் கொடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதையொட்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளி இறுதி வகுப்பு முடித்து (completed S.S.L.C.) பதிவு எழுத்தராக நியமனம் பெறுபவருடைய குறைந்த பட்ச ஊதியத்தை ரூ. 140லிருந்து ரூ. 146 ஆக உயர்த்தும் கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் எஸ். எஸ். எல். ஸி. என்கின்றார்கள். "எஸ். எஸ். எல். ஸி"யை வைத்திருக்க வேண்டும் என்றால், எஸ். எஸ். எல். ஸி. தேர்வுக்குப் போகின்றவர்களுக்கெல்லாம் எஸ். எஸ். எல். ஸி. செர்டிபிகேட் கொடுக்கப்படுகின்றது. இந்த நிலையில், இதிலே, குறிப்பிட்ட மதிப்பெண்கள் பெறவேண்டும் என்பது கருத்தா அல்லது பரீட்சைக்கு உட்கார்ந்தால் போதும் என்பது கருத்தா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதிலே "கம்ப்ளீட்ட் எஸ். எஸ். எல். ஸி" என்றுதான் இருக்கின்றது. முடிக்க வேண்டும். "யெலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் எஸ். எஸ். எல். ஸியை அரை குறையாக விட்டுவிடக் கூடாது என்று "கம்ப்ளீட்ட் எஸ். எஸ். எல். ஸி" என்று வைத்திருக்கிறோம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, சர்வீஸ் கமிஷனில் இருந்தபோதுதான் இப்படி "கம்ப்ளீட்ட் எஸ். எஸ். எல். ஸி" என்று பொருள் வந்தது. சாதாரணமாக இரண்டு மூன்று முறைகள் தனித் தனியாகத் தேர்வுகளை எழுதித் தேர்வு பெற்று விட்டாலும், அவர்கள் அதை முடித்து விட்டதாக ஆகிறது. ஆனால் இப்போது சர்வீஸ் கமிஷனில் "கல்லூரித் தகுதி இருந்தால் போதும்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே அது "கம்ப்ளீட்ட் எஸ். எஸ். எல். ஸி." என்று பொருள் படாது. எனவே எஸ். எஸ். எல். ஸி. தேர்விற்குப் போனால் போதும் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது அந்த மாதிரி உத்தேசம் எதுமில்லை.

### *Applications forwarded to the Tamil Nadu Public Service Commission by the B.T. teachers.*

*245 *Q.*—THIRU K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state:—

(*a*) the number of applications forwarded to the Tamil Nadu Public Service Commission by the B.T. teachers who were appointed in the Government "B" Wing Schools between 1st April 1970 and 3rd March 1973 and who now continue in service, for the posts of School Assistants, Grade-II, under the Tamil Nadu Educational Subordinate Service, which were rejected by the Commission, on the ground that they had not studied Tamil under Part I/II in their Degree Courses; and

(*b*) the number of B.T. Teachers who have completed three years of continuous service under Rule 10 (*a*) (i) in the Government "B" Wing Schools of Thanjavur, Tiruchirappalli and Pudukottai Revenue Districts?

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் செய்து கொண்ட பி. டி. ஆசிரியர்கள்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1-4-1970—3-3-1973 கால அளவில் அரசினர் "B" தொகுதி பள்ளிகளில் நியமிக்கப்பட்டு, தற்போது தொடர்ந்து பணியாற்றியும் வரும் பி. டி. ஆசிரியர்கள் தமிழ்நாடு கல்வித்துறை சார்நிலைப் பணியின் கீழ் இரண்டாம் நிலைப் பள்ளியாசிரியர் பதவிக்காக தமிழ்நாடு அரசுப பணியாளர் தேர்வு ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் செய்து கொண்ட வகையில், அவர்கள் பட்டப் படிப்பின் போது I/II பகுதியின் கீழ் தமிழ் படிக்கவில்லை என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?





(இ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்களைச் சேர்ந்த அரசினர் "பி" தொகுதி பள்ளிகளில் 10 (a) (1) விதியின் கீழ் தொடர்ந்து மூன்றாண்டுகள் பணியாற்றி முடித்துள்ள பி. டி. ஆசிரியர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 94.

(இ) 56.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1973ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 3ஆம் நாள் இந்த அவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 3157 பட்டதாரி ஆசிரியர்களுடைய பணிக்காலம் வரன்முறைப் படுத்தப்படும் என்று உறுதிமொழியினை அளித்தார்கள். ஆனால் இது வரையில் இன்னும் 94 ஆசிரியர்களுடைய பணிக்காலம் வரன்முறைப் படுத்தப்படாமல் இருக்கின்றது. அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப் படுவது குறித்து, அரசு தெளிவான உத்தரவினைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெரும் பாலோர் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு இன்னும் 702 ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், அவர்களுக்குப் போதிய கல்வித் தகுதியின்மை, பட்டப்படிப்பில் தமிழ் மொழியினைப் பாடமாக எடுத்துப் படிக்காமை என்ற காரணங்களினால், 702 ஆசிரியர்களுடைய பணிக்காலம் வரன் முறைப் படுத்தப்படாமல் இருக்கின்றது. இதைத் தனியாக கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்ற குறிப்பினை தமிழ் நாடு தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பி, இதற்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்று கோரி இருக்கிறோம். இதற்கு அவர்கள்தான் உத்தரவிட வேண்டும். உத்தரவிட வேண்டும் என்று நாம் கோரியிருக்கிறோம். இதுவரையில் வரவில்லை. அது கிடைக்கும் நேரத்தில் இந்த 94 ஆசிரியர்களுடைய பிரச்சினையும் அத்துடன் இணைத்து ஆவன செய்யப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, 3—3—1973ல் அரசு பிறப்பித்த ஆணையில் அவர்கள் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்று உத்தரவினைப் போட்டார்கள். 1—4—1970க்குப் பிறகும் 3—3—1973க்கு முன்பும் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் விஷயத்திலும் அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இப்படி அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இருப்பதால், அவர்களுக்கு ஊதிய உயர்வு

கொடுக்கப்படாமல், முழுக்க முழுக்க தற்காலிகப் பணி 10-ஏ-1- என்ற அடிப்படையிலேயே அவர்கள் கருதப்பட்டு வருகின்றார்கள். இனியாவது அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்துவதற்கான உத்தரவினை அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலில் அதைத்தான் குறிப்பிட்டேன். இப்போதுள்ள குறைபாடுகள் களையப்பட்டு, மேலே குறிப்பிட்டபடி, அந்த 702 ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டும், அதற்கான உத்தரவினைப் பிறப்பிக்க வேண்டும் என்று தேர்வாணைக் குழு விடம் வற்புறுத்தி வருகிறோம். அவர்களிடமிருந்து உத்தரவு வந்தபிறகு அவர்களுடைய பணிக்காலம் வரன்முறைப்படுத்தப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லாமல் அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படவேண்டும் என்று அரசு உத்தரவிருந்தும், இப்போது மீண்டும் சர்வீஸ் கமிஷனுக்குச் சென்று அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படவேண்டும், அவர்கள் தான் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று இப்போது சொல்லுவது சரி தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லாமல் இது கிடைக்கும் என்று சொல்லவில்லை. சர்வீஸ் கமிஷனுக்குச் சொல்லி, அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். அதற்கான ஒப்புதலை வழங்க வேண்டும் என்றுதான் வற்புறுத்தி வருகின்றோம். அவர்களும் விதி விலக்கு அளித்து, 1—4—1970 முதல் 3—3—1973 வரையில் இருக்கும் அவ்வளவு பேருக்கும் அது கிடைக்க வேண்டும் என்பதுதான் அரசின் கருத்து. அதைத்தான் நாம் வற்புறுத்தி வருகிறோம்.

Thiru A. R. DAMODARAN: Sir, when did the Government send their representation to the Public Service Commission and how long has it been under the consideration of the Public Service Commission?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த உத்தரவினைப் போட்டவுடன் நாம் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அவர்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள தகுதிப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். இந்த 702 ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில்தான் சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. இவர்களைப் பொறுத்து, தனியாக ஆராய்ந்து, விதி விலக்கினை அளியுங்கள் என்று கோரியிருக்கிறோம் விரைவில் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வந்தபிறகு அவர்களுடைய பணி வரன்முறைப் படுத்தப்படும்.





திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இதுபோன்ற சிக்கல் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கும்போது மேலும் மேலும் ஆசிரியர்களை 10-ஏ-1 என்ற அடிப்படையில் தாற்காலிகமாகவே இரண்டாண்டுகாலம், மூன்றாண்டு காலம் என்று நியமிப்பதில் அரசின் நோக்கம் என்ன? இப்படியே போய்க்கொண்டிருந்தால், அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்துவதற்கு எவ்வளவு காலமாகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ் நாடு தேர்வு ஆணைக் குழுவோடு தொடர்புகொண்டு, இதை விரைவு படுத்த வேண்டும் என்று வற்புறுத்திவருகிறோம். கல்லூரிகளுக்கும் சரி, உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கும் சரி, ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் காலத்தாழ்வு ஏற்படுவதால்தான் இத்தகைய சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக இந்த 10-ஏ-1 ஆசிரியர்களுடைய பணிக்காலத்தினை வரன்முறைப்படுத்த முடியுமோ அதைச் செய்து ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று பார்க்கிறோம்.

Thiru A.R. DAMODARAN: Sir, when the Government take in persons under rule 10 (*a*) (i), why is it that some teachers are found by the Public Service Commission to be not qualified from the point of view of knowing the regional language which should be an essential consideration for recruitment of teachers? How is it that Government Officers have recruited such teachers under rule 10 (*a*) (i) who do not have a knowledge of Tamil, when they are expected to teach in Tamil in all our schools ? May I know why this has happened?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இவர்களை பி.டி. வகுப்பில் சேர்க்கும் போதே, அவர்கள் இதைக் கவனித்திருக்க வேண்டும். ஆனால் கவனிக்காமல் சேர்த்திருக்கின்றார்கள். முழுத் தகுதி இல்லாவிட்டாலும்கூட, ஒரு சில நிலையில் 10-ஏ-1ன்படி நியமிக்கிறோம். சில தகுதிகள் குறைவாக இருந்தும்கூட நியமிக்கப்படுகின்றார்கள். இப்போது அவர்களுக்குத் தனியாக விதிவிலக்கு வாங்க வேண்டியிருக்கின்றது. சிலருக்கு வயது வரம்பு அதிகமாகிவிட்ட காரணத்தினால் தனிச் சலுகை வேண்டும். சிலருக்குக் கல்வித் தகுதியிலே, ஆங்கிலத்திலே போதிய மதிப்பெண் இல்லை என்ற அளவிலே விதி விலக்கு அளிக்க வேண்டியிருக்கின்றது. சிலர் எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் தமிழில் படித்திருக்கின்றார்கள். பிறகு பிரெஞ்சு அல்லது ஹிந்தியை பி. ஏ. வகுப்பில் படித்துவிட்டுவரும் காரணத்தினால் சர்வீஸ் கமிஷன் அவர்களை நிறுத்தி விடுகின்றது. இவர்களுக்கெல்லாம் விதிவிலக்கினை அளிக்க வேண்டும் என்பது தான் அரசின் கொள்கை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, பொதுவாக சர்வீஸ் கமிஷனில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அல்லது மூன்று ஆண்டுகளுக்கு இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஆசிரியர்களை

செலக்ஷன் செய்கின்றார்கள். இந்த நிலையில் ஒவ்வொரு ஆண்டும் 10–ஏ–1 அடிப்படையில் பெருமளவிற்கு ஆசிரியர் நியமிக்கப்படும்போது, அவர்கள் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படாமல் தொடர்ந்து 10–ஏ–1 என்றே இருந்துவருகின்றார்கள். அவர்கள் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது. எனவே இருப்பவர்களை சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுப்பதற்கும் 10–ஏ–1 நியமனம் நிறுத்தப்படுவதற்கும் சர்வீஸ் கமிஷன் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு அரசு தக்க வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கருத்தினைத்தான் இப்போது சர்வீஸ் கமிஷனின் தலைவரிடம் வற்புறுத்திவருகிறோம். பல்வேறு துறைகளுக்காக அலுவலர்களையும் மற்றவர்களையும் தேர்ந்தெடுக்கும் பணி அவர்களுக்கு பெருமளவிற்கு இருப்பதால், ஆசிரியர்களுக்காகவே ஒருவரை அக்குழுவில் நியமித்து அவரிடம் இதை ஒப்படைத்துவிட்டால் நல்லது என்று அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். இதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்கள் பல்வேறு துறைகளுக்காக முடிவுகள் எடுக்க வேண்டியிருப்பதால், ஆசிரியர்களுக்கென்றே தனியாக ஒருவரை ஏற்படுத்தி இதற்கான வழி முறைகளைக் காண வேண்டும் என்றுதான் அரசு இருக்கின்றது. ஆசிரியர்கள் இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் தொடர்ந்து 10–ஏ–1 என்று இருப்பது அரசுக்கும் சங்கடமாகத்தான் இருக்கின்றது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, ஒருவர் அஸிஸ்டெண்ட் ப்ரொபஸராக 10–ஏ–1 அடிப்படையில் தொடர்ந்து இரண்டு மூன்று வருஷங்கள் இருந்துவிட்டு பிறகு திடீரென்று வெளியே தள்ளப்பட்டுவிடுகின்றார். பரிதாபத்திற்குரியவர்கள் திடீரென்று வேலையை இழந்துவிடுகின்றார்கள். கேட்டால் இவரைவிட கல்வித் தகுதிபெற்றவர், வேறு ஒரு நிபுணர் கிடைத்துவிட்டார். எனவே இவர் வேண்டியதில்லை என்று கூறுகின்றார்கள்.

திரு. வே. சுங்கப்பாண்டியன் : கேள்வியைக் கேட்காமல்......

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கேள்விக்கு வருகின்றார்.

திரு. சி. வி. ராஜகோபால் : ஆகவே நான் அரசைக் கேட்டுக் கொள்ளுவதெல்லாம், அவர் இரண்டாண்டு காலம் பணியாற்றிய பிறகு, அவர் கொடுத்த பயிற்சியால் மாணவர்கள் 90 சதவிகிதம் வெற்றி பெற்றார்கள் என்று வந்தபிறகு, திடீரென்று அவரைவிட திறமைசாலி கிடைத்துவிட்டார்கள் என்று அவரை வீட்டுக்கு அனுப்பிவிடுகின்றார்களே, அப்படி வைத்துக்கொண்டால் அவர் மூலம் அந்த இரண்டு வருஷ காலத்தில் தேர்வு பெற்றவர்கள் இருக்கின்றார்களே, அவர்கள் தேர்வு கூட செல்லாது என்று சொல்லுவதற்கு அரசு முன்வருமா இரண்டு வருஷம் பாடம் நடத்தியிருக்கின்றார்கள், தகுந்த பயிற்சி பெற்று பாடம் நடத்தியிருக்கின்றார்கள்......



(பிற்பகல் 4–20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விதிமுறைகளும் மற்றவைகளும் தெளிவாகத்தான் இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேதான் குழப்பங்கள் ஏராளமாக இருக்கின்றன. இது பட்டதாரி ஆசிரியர்களைப்பற்றிய கேள்வி. அவர்கள் குறிப்பிட்டது கல்லூரியிலே இருக்கின்ற துணைப் பேராசிரியர்களைப் பற்றியது. துணைப் பேராசிரியர்களைப் பற்றியும் கூட, ஓராண்டு—ஈராண்டு அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். தேர்வாணைக் குழு அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தற்காலிகமாக வேறு யாரும் இல்லாத நிலைமையில் குறைந்த எண்கள் இருந்தாலும் கூட, அவர்களையும் நாம் சேர்த்துக்கொள்ளுகின்ற அளவுக்கு இருக்கிறோம். ஆக, போதுமான அளவுக்கு ஒரு குறிப்பிட்ட துறையிலே துணைப் பேராசிரியர்கள் இல்லாத நிலையில்தான் அவர்களுக்கு விதிவிலக்கு தருகின்ற நிலைமையை நாம் கொண்டிருக்கிறோம். தேர்வாணைக் குழு அவர்களைத் தேர்ந்தெடுக்குமானால் விதிவிலக்கு தருவதற்கும் ஆயத்தமாக இருக்கிறோம். எந்தெந்தத் துறையிலே போதுமான அளவுக்கு துணைப் பேராசிரியர்கள் இல்லையோ அந்தத் துறைகளை மட்டும் எடுத்துக் கொள்கிறோம். எந்தத் துறையிலே போதுமான அளவுக்கு தகுதி பெற்றவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் முதலிடம் மற்றும் முன்னுரிமை இவைகள் தரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

## Standard Libraries.

*246. *Q*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the number of schools under Internal Assessment Scheme which consist of Standard Libraries; and

(*b*) the number of schools among them to which Librarians have been appointed?

## தரமான நூல் நிலையங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உள் மதிப்பீடு திட்டம் (Internal Assessment Scheme) செயல்படும் பள்ளிகளில் தரமான நூல் நிலையங்கள் இருக்கும் பள்ளிகள் எத்தனை?

(இ) அவைகளில் எத்தனை பள்ளிகளில் நூலகர் (Librarian) நியமிக்கப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 250.

(இ) 88.

[1975 ஏப்ரல் 18

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, உள் மதிப்பீட்டுத் திட்டத்தில் செயல்படுகின்ற பள்ளிகளிலே சுமார் 250 பள்ளிகளில் தரமான நூல் நிலையங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் நூலகர் இல்லாமல் இருந்தால் எப்படி அந்த நூல்களை எடுத்து மாணவர்கள் பயன்படுத்துவதற்கு உரிய முறை ஏற்படும்? எனவே நூலகர்களை நியமிப்பதற்கு உரிய விதிமுறைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 உயர்நிலைப் பள்ளிகள் வீதம் தேர்ந்தெடுத்து மாநிலத்தில் மொத்தம் 250 உயர்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களிலிருந்து மாவட்டத்திற்கு 25 பள்ளிகள் வீதம் தேர்ந்தெடுக்கப்படும்போது, அவற்றில் விளையாட்டு வசதிகள், நூலக வசதிகள், மற்ற வசதிகள் எல்லாம் இருக்கின்றனவா என்று பார்த்துத்தான் தேர்ந்தெடுக்கிறோம். ஆக, இப்படி முன்னோடித் திட்டமாக 2,800 சில்லரைப் பள்ளிக்கூடங்களில் 250 பள்ளிகளை நாம் தேர்ந்தெடுக்கும்போது, கூடுமானவரையில் இந்த வசதி வாய்ப்புகள் எல்லாம் இருக்கும்படியாகத்தான் செய்திருக்கிறோம். இவ்வாறு விரிவுபடுத்துகின்ற எல்லாப் பள்ளிகளிலும் இந்த வசதி வாய்ப்புக்கள் அனைத்தும் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இந்த அக மதிப்பீடு முறையில் வேலைப்பளு பள்ளிகளுக்கு மிக அதிகமாக இருப்பதனால், இந்தப் பொறுப்பைப் பார்த்துக்கொள்ள ஒரு தனி ஆசிரியர் நியமிக்கப்படுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இருக்கின்ற ஆசிரியர்களே தான் இதை ஓரளவுக்கு நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் இப்போதே போதுமான அளவுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாத சூழ்நிலை இருக்கும்போது தனி ஆசிரியர்கள் நியமிப்பதற்கில்லை. பல பள்ளிகளிலே ஆர்வத்துடனும், எழுச்சியுடனும் ஒத்துழைப்பு தந்து வருகிறார்கள். இது ஓரளவுக்குப் பலன் தருகிறது என்று அந்தந்தப் பள்ளிகளினுடைய தலைமையாசிரியர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, உள் மதிப்பீட்டுத் திட்டத்திலேயே நூலகத்தை நன்கு மாணவர்கள் பயன்படுத்துகின்ற பயிற்சி அளிப்பது ஒரு முக்கியமான குறிக்கோளாகும். தரமான நூல் நிலையங்கள் இருக்கிற பள்ளிகளைத்தான் தேர்ந்தெடுக்கிறோம். அந்த நூல் நிலையங்களைப் பயன்படுத்துவதற்கு பயிற்சி பெற்ற "சர்ட்டிபிகேட் கோர்ஸ்" என்று குறைந்த அளவு 6 மாதம் அல்லது 3 மாதம் பயிற்சி பெற்ற நூலகர் அல்லது நூலக ஊழியர் இருந்தால்தான் நன்றாக இருக்கும். அதற்குரிய விதிமுறைகளைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த நோக்கம் நிறைவேறவேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை. இப்போது அந்தப் பள்ளியைச் சார்ந்த ஓரிரு ஆசிரியர்கள் அந்தப் பணிகளைப் பார்த்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் நூலகத்துறையிலே பயிற்சி பெற்ற ஒருவர் இப்படிப்பட்ட பள்ளிகளிலே நூலகராக இருப்பது பொருத்தமுடையதுதான். அந்த அளவுக்கு நிதி நிலைமையை அடிப்படையாக வைத்து நாம் பல்வேறு பள்ளிகளிலே அதற்கான அனுமதியை மெல்ல மெல்ல அளித்து வருகிறோம்.

### "*Sun-et-Lumiere*" *at Mahabalipuram.*

*247 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether any final reply has been received from the Central Government with regard tho the provision of "Sun-et-Lumiere" at Mahabalipuram ; and

(b) if so, whether there is any proposal with the State Government to implement the Scheme ?

### மகாபலிபுரத்தில் "ஒலி—ஒளி" காட்சி.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மகாபலிபுரத்தில் "ஒலி—ஒளி" காட்சி அமைப்பது பற்றி மத்திய அரசிடமிருந்து இறுதியான பதில் ஏதும் வந்துள்ளதா ?

(இ) இந்தத் திட்டத்தை மாநில அரசு நிறைவேற்றும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மாமல்லபுரத்தில் "ஒலி—ஒளி" காட்சி அமைப்பது பற்றிய கருத்து இந்திய அரசின் பரிசீலனையில் இருந்தது. அத்திட்டத்தைக் கைவிட்டதாக அண்மையில் இந்திய அரசு அறிவித்துள்ளது. அதற்குப் பதிலாக இந்திய அரசு வண்ணத் திரைப்படம் ஒன்று தயாரிக்க உத்தேசித்துள்ளது. இத்திரைப்படத்தில் பல்லவர்களின் வரலாறு அவர்களது கலை, கட்டிடக்கலை ஆகியவை பற்றி விளக்கப்படலாம்.

(இ) இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இது ஒரு மாநிலத்தினுடைய முக்கியமான சட்டப்பிரச்சினை. மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி இருக்கிற மாநிலங்களில் மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமலேயே அவர்கள் அணைக் கட்டுக்களை கட்டுவதுக் போன்று கலைத் துறையிலே அக்கறையுடன் ஈடுபட்டிருக்கின்ற நம்முடைய மாநில அரசாங்கம் மத்திய அரசினு

டைய இசைவின்றி இந்த ஒலி–ஒளிக் காட்சியை அமைப்பதற்கு முன் வருமா அப்படி அமைப்பதிலே என்ன இடர்ப்பாடு அரசுக்கு இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசின் அனுமதி இல்லாமலேயே மகாபலிபுரத்திலே இந்த ஒலி—ஒளிக் காட்சியை அமைப்பதிலே நம்முடைய அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சிரமம் ஒன்றும் இல்லை. நிதி சிரமம் ஒன்றுதான். இதற்கு அவர்களுடைய அனுமதி பெற வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்காக 25 லட்சம் ரூபாய்க்கு மேல் நாம் நிதி ஒதிக்கீடு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். வேறு சில இடங்களிலே, அதாவது காஷ்மீர், டெல்லி போன்ற இடங்களிலேயெல்லாம் இம்மாதிரி அமைப்புகளை மத்திய அரசே பொறுப்பேற்று நடத்தியிருக்கின்றது. ஆகவே, அந்த வகையில் இங்கேயும் நடத்த வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். ஆக, ஏதேனும் ஓரிடத்தில்—மகாபலிபுரத்திலேயோ அல்லது சென்னையில் இந்தக் கோட்டைப்பகுதியிலேயோ வைக்கலாம். மேலும் மதுரையிலே மீனாட்சியம்மன் கோயிலில் வைக்கலாம் என்ற அளவுக்கு ஒரு கருத்துரு 1970–லே வைக்கப்பட்டது. அப்போது 18 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கூறப்பட்டது. நாளாக ஆக அந்தச் செலவு உயர்ந்துகொண்டிருக்கிறது. அப்போது டாக்டர் கரண்சிங் அவர்கள் மத்திய அரசினுடைய சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்தார்கள். சில பேர் தடை சொன்னார்கள் என்பதற்காக அப்போது அதைக் கைவிட்டுவிட்டதாகச் சொல்லி மகாபுபலிபுரத்திலே வைக்கலாம் என்றார்கள். இபபோது நாம் சொல்லியிருக்கிறோம், மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் வைக்கலாம் என்று. அப்படி வைக்காவிட்டாலும் கூட, அங்கு இருக்கிற திருமலை நாயக்கன் மகால் அதற்குப் பொருத்தமானதாக இருக்கும். வரலாற்றுச் சிறப்புக் கொண்டதாக இருக்கும். மதுரை ஒரு சிறந்த சுற்றுலா இடமாக இருப்பதனால், அங்கோ அல்லது மகாபலிபுரம் அல்லது மதுரையில் திருமலை நாயக்கன் மகால் ஆகிய இந்த மூன்று இடங்களில் ஏதாவது ஓரிடத்தில் வைக்கவேண்டுமென்பதை வற்புறுத்தி மறுபடியும் இன்றைய மத்திய சுற்றுலா அமைச்சர் அவர்களுக்கு நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். அதுபற்றிய பதிலை விரைவில் எதிர்பார்க்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : முன்பு சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்த திரு. இராசாராம் அவர்கள் இதற்கு 30 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் அந்தச் செலவு பற்றிய முழுப்பொறுப்பையும் மாநில அரசே ஏற்றுக் கொண்டு மகாபலிபுரத்தில் வைப்பதாக முடிவு செய்து விட்டது என்றும் முன்பு ஒரு முறை பேசினார்கள். அந்த முடிவு இப்போது மாற்றப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன். ஒரு வேளை மத்திய அரசு இதற்கான பணத்தைக் கொடுக்காவிட்டாலும், மாநில அரசு தேவைப்படும் பணம் முழுவதையும் செலவு செய்து இந்த ஒலி–ஒளிக்காட்சியை ஐந்து அல்லது ஆறு மாதத்திற்கு உள்ளாக வைக்க ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று [illegible] விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முடிவு செய்துவிட்டதாகச் சொல்லியிருக்க மாட்டார்கள். யோசிக்கிறோம் என்று சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆக தடையாக இருப்பது எல்லாம் நிதி வசதிதான். மத்திய அரசு சுற்றுலாத்துறைக்கு ஒதுக்கும் அளவுக்கு, இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒதுக்கவேண்டும். நம்மாலான அளவுக்கு சில அடிப்படைத் தன்மைகளை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆக, மத்திய அரசே இதற்கு முன் வரவேண்டும் என்பதைத்தான் நாம் வற்புறுத்தி வருகிறோம். இல்லாமல் நாமே இதை வைப்பதென்றால், பெருத்த நிதிச் செலவு ஏற்படும். அப்படி நிதி ஒதுக்கீடு செய்யமுடியாத ஒரு நிலைமையில் நாம் தற்போது இருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த இரண்டு இடங்களுமே சரியான இடங்களாக எனக்குத் தோன்றவில்லை. ஒன்று பல்லவர் காலத்திய பழம்பெருமையைக் குறிக்கும் இடமாக இருக்கிறது. இன்னொன்று நாயக்கர் காலத்திய பழம்பெருமையைக் குறிக்கும் இடமாக இருக்கிறது. பழைய சேர, சோழ, பாண்டியர்களுடைய பெருமைகளை நிலைநாட்டத்தக்க ஒரு இடத்தை அரசு தேர்ந்தெடுத்து அங்கு அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதெல்லாம் நிதி வசதி ஏற்பட்டு சுலபமாக வருகின்ற காலத்தில் ஏதாவது ஓரிடத்திலேதான் வைக்க வேண்டும் என்று இல்லாமல் இரண்டு மூன்று இடங்களிலே கூட வைக்கலாம். ஆகவே, நிதி வசதி ஏற்படும்போது, அவற்றைக் கவனிக்கலாம்.

### *Sugarcane.*

*248 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the management of the Arooran Sugar Factory Limited, Thiruvarur, has not paid the ryots the arrears of Rs. 5 per ton due to them for the sugarcane supplied during the year 1972-73; and

(*b*) if so, the action taken by the Government to redress the grievances of the ryots ?

### கரும்பு.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1972–73–ல் வழங்கப்பட்ட கரும்புக்காக, திருவாரூர் ஆரூரான் சர்க்கரை ஆலை (வரையறுக்கப்பட்டது) நிர்வாகத்தினர் உழவர்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகைகளைக் கொடுக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், உழவர்களின் துயரைப்போக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) இது சம்பந்தமாக ஆலை நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் நாடு அரசு தெரிவித்த உபரி விலையை ஆலை கொடுக்கவேண்டுமென முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, 1972–73-ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட கரும்புக்கு ஒரு டன்னுக்கு 5 ரூபாய் வீதம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் சுமாராக ஒரு ஏக்கர் சாகுபடி செய்பவர்களுக்கு 150 முதல் 200 ரூபாய் வரை இந்த ஆரூரான் சர்க்கரை ஆலையானது கொடுக்க வேண்டியிருக்கிறது. இது பல முறை கேட்டும் கொடுக்கப்படவில்லை. அரசு இதிலே தலையிட்டுச் செய்வதற்கு உரிமை உண்டா ? அதில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பேச்சு வார்த்தை நடந்துவருகிறது என்று சொன்னேன். இன்னும் பேச்சுவார்த்தை முறிந்துவிடவில்லை. ஆனால் கரும்பு சாகுபடியாளர்களுக்கு மாநில அரசு கூறும் நியாயமான விலையைக் கொடுக்காத ஆலைகளின் நிர்வாகங்களை நமது மாநில அரசு ஏற்று நடத்துவதற்கு மத்திய அரசு சம்மதம் தெரிவிக்கும் என்று பாராளுமன்றத்திலே வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஷா நவாஸ் கான் அவர்கள் கூறினார்கள். அவர்கள் இங்கே வந்தபோது இதுபற்றி நேரிலும் பேசினேன். அப்பொழுதும் அதை உறுதி செய்தார்கள். எனவே, தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், இந்த சர்க்கரை ஆலைகளை, அதிலும் குறிப்பிட்ட இந்த ஆலையை ஏற்று நடத்துவதற்கு தக்க நடவடிக்கை மாநில அரசு எடுக்கும்.

திரு. கே. எஸ். கணபதி : பணம் கொடுப்பதிலே எத்தனை ஆண்டுகள் காலத்தாழ்வு ஏற்பட்டால் அரசு இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

The Hon. THIRU SI. PA. ADITANAR : Sir, we have given them a long rope.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக பயிர் செய்த கரும்பு அத்தனையும் காய்ந்துவிட்டது. அதற்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்ற முறையில், முன்பு வருவாய்த்துறை அமைச்சாக இருந்தவர்கள் சேலத்துக்கு வந்தபோது இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்று கூறியிருந்தோம். அதுபற்றி ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனிக் கேள்வி போட்டால், அதுபற்றிய விவரம் அனைத்தும் சேகரித்துத் தரலாம்.

THIRU G. SWAMINATHAN : Sir, is it a fact that the South India Sugars at Mundiambakkam have not paid during the last three or four years ?

The Hon. THIRU SI. PA. ADITANAR : Sir, the South India Sugar Mills at Mundiambakkam are among the worst of the defaulters.

(பிற்பகல் 4–30)

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1972–73 ஆம் ஆண்டிலே ஆரூரான் சர்க்கரை ஆலையிலிருந்து வெட்டப்பட்ட கரும்பு எத்தனை டன்கள்? எவ்வளவு ரூபாய் விவசாயிகளுக்கு அந்த ஆலையால் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறதென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எவ்வளவு பாக்கி இருக்கிறதென்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. கே. ராஜாராம் : டன்னேஜ் கணக்கிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டன்னேஜ் கணக்கும் என்னிடம் இல்லை. ஆனால், ஆரூரான் சுகர்சுக்காக மாநில அரசு கொடுக்கச் சொல்கிற விலையில் ஒரு 5 அல்லது 5½ ரூபாய் குறைத்துக் கொண்டு கொடுத்து வருகிறார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதிலிருந்து, இந்த ஆலை ஆரம்பத்திலிருந்து கொடுக்க வேண்டிய தொகையில் டன்னுக்கு 5 ரூபாய் குறைத்துக் கொடுக்கிறார்களென்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையிலே கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். "லாங்ரோப்" என்று சொன்னார்கள். கொடுக்கப்பட்ட கயிறு கையில் ஒன்றும் இருக்கமுடியாது. கயிறு இல்லாமல் இழுக்க முடியாமல் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : என்ன நடவடிக்கை எடுப்பதென்பது அரசின் ஆய்வில் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றி நீண்டகாலமாகக் காத்திருக்கத் தேவைப்படாது என்று கருதுகிறேன். ஏனென்றால் மத்திய அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள், நேரிலும் பேசும்போது உறுதியான ஒரு கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதன்படி நடப்பதற்கு அரசு தயங்காதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know what the Hon. Minister means by saying that they are the worst of the defaulters ?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, what I mean is that they are among the people who owe very large sums of money to the cane-growers. If some other Mills pay, say, Rs. 2 or Rs. 3 less than the price recommended by the State Government, the South India Sugars pay something which is nearly Rs. 7·75 less than what we recommend.

*249 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that there is a sharp fall in the total area under sugarcane cultivation in the State during the current year (i.e. 1974-75) compared to the previous years; and

(b) if so, the reasons therefor?

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்ற ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டில் (அதாவது 1974–75) இம்மாநிலத்தில் கரும்பு பயிரிடும் மொத்த பரப்பளவு திடீர் என்று குறைந்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று மேலவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, பல காரணங்கள் இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டிருந்தும், கரும்பு வெட்ட வேண்டிய 10 மாத முடிவில் கட்டிங் ஆர்டர், வெட்டுக்கு உத்தரவு கொடுக்காத காரணங்களினாலும், பணம் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுவதாலும்தான் விவசாயிகள் கரும்பு உற்பத்தியிலே தளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன காரணம் 4—வது காரணமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அவர்கள் கொடுக்கும் விலையே குறைவாகவும் இருக்கிறது. கால தாமதாகவும் கொடுக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

---

@ 167 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, நான் கூறியது கரும்புப் பயிரானது முதிர்ச்சி பெறுவதற்கு 10 மாத காலமாகிறது. ஆனால் வேண்டியவர்களாக இருந்தால் 9 மாதத்திலேயே கூட வெட்டிக் கொடுத்து விடுகிறார்கள். சில சமயங்களில் 11 மாதம் வெட்டிக்கொடுக்காமல் இருக்கிறார்கள். காவேரி படுக்கையிலே பயிரிடுகிறபோது காவேரியிலே தண்ணீர் இல்லையென்றால் பயிர் காய்ந்து விடுகிறது. அதனுடைய சுகர் தன்மை குறைவாக இருந்தாலும் கூட, சர்க்கரைக்கு மன்னேஸ் குறைய வேண்டுமென்ற காரணத்தினாலேயே இந்த இலாக்காவினர் இப்படிச் செய்கிறார்கள். எனவே 10-இலிருந்து 12 மாதங்களுக்குள் தான் கரும்பு வெட்டப் படவேண்டும் என்று இப்போதாவது தெளிவாக உத்தரவு போட வேண்டும். குறைந்த பட்சம் அறிவுரையாவது கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முதலிலேயே இந்த நிறுவனத்திற்கும் கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, இவ்வளவு காலத்தில்தான் வெட்டவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இதையே நிர்வாகம் ஒழுங்காகச் செய்யவில்லை என்று அடிக்கடி புகார் வருகிறது என்பது உண்மை. அதனால் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்ந்துதான் செய்யவேண்டும்.

THIRU A. R. DAMODARAN: Sir, have these sugar factories defaulted in payment of other taxes also to the Government, by way of Excise Duty, Sugarcane Cess Fund, power charges, etc.? May I know if they have defaulted in that direction also?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, I know that they have made default in the payment of the Cess, but the other things I am not aware of; that question should be addressed to the other Ministers concerned. But, there is considerable default in payment of the Cess by many of these factories.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விவர அறிக்கையில் 1974–75ல் 15 அல்லது 20 சதவிகிதம் பரப்பளவு நிலம் கரும்பு பயிரிடுவதிலே குறையும் என்று எதிர்பார்க்கப் படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 15 அல்லது 20 சதவிகிதப் பரப்புள்ள நிலங்களை நெல் பயிருக்கு மாற்றியிருக்கிறார்களா அல்லது உணவுப் பயிர்கள் அதிலே செய்யப் போகிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, அந்தப் பகுதிகளிலே விளைவு செய்ய முடியும் என்ற காரணத்தால் நெல், சிறுதானியங்கள், வேர்க்கடலை போன்ற தான்யங்கள் விவசாயம் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கின்றேன்.

(உறுப்பினர் திரு சி. வி. ராஜகோபால் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கேள்வி கேட்கப்போகின்றார்களா அல்லது சொற்பொழிவு ஆற்றப்போகிறார்களா ?

திரு. சி. வி. ராஜகோபால்: நான் கேள்விதான் கேட்கப்போகின்றேன். பொதுவாகவே சர்க்கரை ஆலைகளைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று வேண்டுகோள் வந்திருக்கின்றதா ? அந்த நிலைமை, தன்மை பற்றி தமிழ் நாட்டைப் பொறுத்த அளவுக்கு எப்படி இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். பட்டாளம் சுகர் பாக்டரியிலே ஏதோ அடிக்கடி தகராறு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதனுடைய விவரம் என்ன ? கோர்ட்டுக்குப் போயிருக்கிறது என்று சொல்கின்றார்களே, அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, நாம் என்ன எண்ணத்தில் இதுவரையில் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று தெரியாமல் இருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறை ஆலைகளைப் பற்றிப் பேசப் போகிறார் என்று குறிப்பெழுதிக்கொண்டிருந்தேன். ஆனால் அவர் சர்க்கரை ஆலைகளைப் பற்றிப் பேசும்போது பட்டாளம் சர்க்கரை ஆலையைப்பற்றிப் பேசினார்கள். அவர் சொல்வது பட்டாளம் அல்ல. படாலம் சர்க்கரை ஆலை. அதுதான் அதன் பெயர். அது ஒரு கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலை. அதைத் தேசிய மயமாக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

*250 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) the names of the sugar factories in the State, which have not paid the final price of sugarcane fixed by the Government of Tamil Nadu for the year 1973-74;

(*b*) whether the Government have received any representation from the Tamil Nadu Sugarcane Growers' Association requesting intervention in the matter; and

(*c*) if so, the steps proposed to be taken in this regard ?

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் 1973-74 ஆம் ஆண்டிற்கு தமிழ் நாடு அரசு வரையறுத்த கரும்பின் இறுதி விலையைச் செலுத்தாதுள்ள சர்க்கரை ஆலைகள் யாவை ?





(இ) இதுகுறித்து அரசு தலையிட வேண்டுமெனக் கோரி, தமிழ் நாடு கரும்பு பயிரிடுவோர் சங்கத்திடமிருந்து முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) ஆமெனில், இதுகுறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ), (இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத்திலிருந்து தனியார் சர்க்கரை ஆலைகள் தவறுதல் செய்தால், அவற்றைத் தேசிய உடைமையாக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் வந்துள்ளதா ? அதுபற்றி அரசினுடைய கருத்து என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, தேசிய உடைமை ஆக்க வேண்டுமென்று கரும்பு உற்பத்தியாளர்கள் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் மத்திய அரசின் கொள்கை என்ன என்று நிச்சயமாக இல்லாமல் இருந்தது. அது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எனவே இனிமேல் நடவடிக்கை சற்று தைரியமாக எடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: தமிழ்நாடு அரசினுடைய கருத்து, கொள்கை அரசுடைமை ஆக்குவதிலே என்ன என்பதுதான் என்னுடைய பணிவான கேள்வி.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நாம் இதைப்பற்றி ஒரு முடிவுக்கும் இன்னும் வரவில்லை. எந்த சர்க்கரை ஆலையாவது கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அரசு சொல்கின்ற நியாயமான விலை கொடுக்காதபோது அதை மாநில அரசே எடுத்து நடத்துவதற்கு மத்திய அரசு சம்மதித்திருக்கிறது. மத்திய அரசு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பார்லிமெண்டிலும் அறிவித்திருக்கின்றார்கள். நேரடியாகப் பேசும்போதும் சொன்னார்கள். எல்லா ஆலைகளையும் நிரந்தரமாக எடுத்துக் கொள்வது என்பது பற்றி அரசு கொள்கை அளவில் எந்த ஒரு முடிவுக்கும் வரவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்குவது என்ற பிரச்சினை குறித்து அரசின் சார்பாக நாங்கள் மத்திய சர்க்காருக்கு எழுதினோம். ஒருவேளை மத்திய சர்க்காருக்கு ஆலைகளை தேசிய உடைமை ஆக்குவதிலே அக்கறை இருந்தால், மாநில அரசுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கலாம் என்று கேட்டு கடிதம் எழுதினோம்.

---

[@ 168 ஆம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்திற்கு வந்த பதில் உங்களுடைய கருத்தும் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது பார்லிமெண்டிலே அமைச்சர் சொல்லியிருக்கின்ற கருத்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால் எழுத்து உத்தரவாதமாக வரவில்லை. அப்படி வந்த பிறகுதான் அரசு ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

THIRU S. NARAYANASWAMY: Sir, what is the record of the Co-operative Sugar Mills with regard to payment of dues to cane-growers?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I believe that the Co-operative Sugar Mills have paid to the cane-growers, the price as fixed by the State Government.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்தக் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் கருப்பஞ்சாற்றுக் கழிவுகள், மொலேசஸ் பொருள்கள் விற்பனையில் அவர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே அரசினிடம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதைப்பற்றி, அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இது பின்னர் வரக்கூடிய ஒரு காரியம். இனிமேல் கரும்பு விலையை மத்திய அரசு வேறு விதமாக நிர்ணயித்துவிடுவது என்று தீர்மானித்து அதை வெளியிட்டிருக்கின்றார்கள். மத்திய அரசு கெஜெட்டிலே வெளியிட்டிருக்கின்றார்கள். "பார்கோவா பார்முலா" என்ற அடிப்படையில் அந்த விலையைச் சொல்லப் போகிறார்கள். அதாவது "S" சர்பிளஸ் ஈக்வல்டு மார்க்கெட் பிரைஸ் minus லெவி பிரைஸ் என்று எடுத்துக் கொண்டு அந்த விலையிலே..அந்த சர்பிளஸில் பாதியை கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுப்பது என்ற ஒரு பார்முலாவைச் சொல்லியிருக்கின்றார்கள். இப்படி லாபம் என்ன என்று கணக்கிடும்போது, நாம் இரண்டு வகையான லாபத்தையும் சேர்த்து பங்கு வைக்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பாகச் சொல்லியிருக்கிறோம். ஒன்று, ரிபேட் ஆன் எக்சைஸ், அதாவது நீண்ட காலமாக, அதாவது 5 மாதத்திற்கு மேலாக நாம் உற்பத்தி செய்வதில், அதிகமான உற்பத்தி இருக்குமானால்; கடந்த 5 ஆண்டுகளுக்கு கணக்கிட்டுப் பார்த்து, அதில் என்ன சராசரியாக வருகிறதோ, அதில் 90 பெர்சென்டுக்கு மேலே எவ்வளவு வருகிறதோ அதற்கு அவர்கள் ரிபேட் ஆன் எக்ஸைஸ் கொடுத்து விடுகிறார்கள். அதோடுகூட மோலேஸஸ் கூட சேர்த்து கணக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[பிற்பகல் 4·40]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

அரசு லெவி காரணத்தால் தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோவிலிலுள்ள திருக்கோயிலும் அனாதை இல்லமும் மூடப்பட்டுள்ளது குறித்தும் மஞ்சக்கொல்லை, நாகப்பட்டினம் உள்பட ஏனைய திருக்கோயில்களிலும் நெல் இருப்பு சீல் வைக்கப்பட்டுள்ளது குறித்தும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. சுவாமிநாதன், எம்.எல்.சி. அவர்கள் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்:

"தஞ்சாவூர் மாவட்டம், நாச்சியார் கோவிலிலுள்ள திருக்கோவிலில் 1958-ம் ஆண்டு முதல் கால பூஜைகள் செய்யப்பட்டு, திருக்கோவிலில் அனாதைக் குழந்தைகளுக்கு உணவும் வழங்கப்பட்டு வந்தது. அரசு லெவி காரணத்தால், அறங்காவலர்கள் குழு திருக்கோவில் நிலையத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமல் மேற்படி திருக்கோவிலையும், அனாதைகள் இல்லத்தையும் 14—4—1975 முதற்கொண்டு மூடியதைக் குறித்தும்; தஞ்சாவூர் மாவட்டத்தில் வெற்றி வேலாயுத ஸ்வாமி தேவஸ்தானம், மஞ்சக்கொல்லை, நாகப்பட்டினம் உள்பட ஏனைய திருக்கோவில்களிலிருந்தும் அத்தகைய தகவல்கள் வந்துள்ளன. அங்கு தேவையான 60 சதவிகித லெவியை தேவஸ்தானம் ஏற்கெனவே கொடுத்திருந்தும், நெல் இருப்பு சீல் வைக்கப்பட்டுள்ளதும் குறித்து"

இது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மான விதிகளின்கீழ் வரும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, இந்த மாதம் 7-ம் தேதியன்று தஞ்சை மாவட்டத்திலேயுள்ள நாச்சியார் கோவில் என்ற ஊரில், ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலுக்கு, தஞ்சையிலே இருக்கக்கூடிய சிவில் சப்ளைஸ் துறையைச் சேர்ந்த லெவி அதிகாரிகள் சென்று, குறிப்பிட்ட அளவு லெவி கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கோவிலிலே, அதிகாரிகளாக இருப்பவர்கள், அவர்கள் சொன்ன அளவுக்கு லெவி கொடுக்க நெல் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். போதிய அளவு நெல் விளையவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய கோவில்கள், தங்கள் நிலங்களிலே 20 ஏக்கர் தவிர மற்றவற்றையெல்லாம் குத்தகைக்காரர்களிடம் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே விதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி நிலங்களை வைத்திருக்கும் குத்தகைதாரர்கள் கடந்த பல ஆண்டுகளாக கோவில்களுக்குத் தர வேண்டிய குத்தகை பாக்கியைக் கொடுக்காமல் இருக்கிறார்களென்பது எல்லோருக்கும் தெரியும்; அரசுக்கும் தெரியும். ஏனென்றால், லெவி தள்ளுபடி செய்யக்கூடிய சட்டங்களை அடிக்கடி போட்டு, குத்தகைதாரர்கள் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியைக் கொடுக்க வேண்டாமென்று அடிக்கடி தள்ளுபடி செய்தால், அவர்கள் சரியாகக் குத்தகை கொடுக்காத நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகப் பல கோவில்களில் நிர்வாகம் சரியாக இல்லாமல், பூசை

சரிவர நடைபெறவில்லை. மேலும் தமிழ் நாட்டிலுள்ள கோவில்களுக்கு கோடிக் கணக்கான ரூபாய் அளவில் இழப்பு ஏற்பட்டது. இப்படிப்பட்ட தொரு நிலைமையிலே, அதிகாரிகள் அந்தக் கோவிலுக்குச் சென்று, கோவிலுக்கு இருக்கக்கூடிய எல்லா நிலங்களையும் கணக்கிட்டு, இவ்வளவு நெல் "லெவி" கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எல்லாம் குத்தகை நிலமாக இருக்கின்றது ; குத்தகைதாரர்கள் நெல் கொடுக்க வில்லை ; ஆகவே அந்த அளவுக்கு லெவி கொடுக்க முடியாத துர்பாக்கிய மான நிலைமையில் இருக்கிறோம் என்று கோவில் நிர்வாகிகள் சொல்லி யிருக்கிறார்கள். அதன் பிறகு அந்தக் கோவிலிலே நெல் வைத்திருக்கும் இடங்களைப் பூட்டி வைத்துவிட்டு வந்திருக்கிறார்கள் ; நெல்லையும் எடுத்து வந்திருக்கிறார்கள். மேலும், கோவில் நிர்வாகிகள் "ஆர்பனேஜ்" என்ற அளவில், ஓர் அனாதை இல்லமும் நடத்தி வருகிறார்கள். இதன் காரண மாக, அவர்கள் அதிகாரிகளிடத்தில் சென்று முறையிட்டிருக்கிறார்கள். அப்படி முறையிட்டும், அவர்களுக்குத் தகுந்த நிவாரணம் கிடைக்க வில்லை. ஆதலால், 14-ம் தேதியன்று கோவிலைப் பூட்டி, இருக்கின்ற நெல்லையும் எடுத்துக் கொண்டு போய் விட்டதால், கோவிலை நடத்த முடியவில்லை ; அனாதை ஆசிரமத்தையும் நடத்த முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே ஓரிடத்தில் மட்டும் இப்படி நடைபெறவில்லை. இன்னொரு கோவிலிலேகூட இப்படி நடந் திருக்கிறது. நாகப்பட்டினத்திற்கு அருகில், மஞ்சைக் கொல்லை என்ற ஊரில் வெற்றிவேலாயுத ஸ்வாமி கோவில் இருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய, களஞ்சியம் வைக்கப்பட்டிருந்த அறையையும் பூட்டி வைத்து விட்டு வந்திருக்கிறார்கள். அரசு போட்டிருக்கும் உத்தரவின் காரணமாக லெவி அதிகாரிகள் பல இடங்களில் அநீதியாக நடக்கிறார்கள். இதற்கு நான் சொன்னவையெல்லாம் எடுத்துக் காட்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன். அண்மையிலேகூட, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும் போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மதுரையிலே, மாங்குளம் என்ற கிராமத்திலே லெவி அதிகாரிகள் குழந்தைகளை அறையிலே வைத்துப் பூட்டிவிட்டார்கள் என்றும், 10 மணி நேரத்திற்குப் பிறகு அந்தக் குழந்தைகள் சத்தம் போட, அதற்கு மேலாக பக்கத்திலுள்ள கிராம மக்கள் அந்தக் குழந்தைகளை வெளியே கொண்டுவந்த ஒரு துர்ப்பாக்கிய மான நிலைமை ஏற்பட்டதென்று இங்கே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளைப் பல அதிகாரிகள் கொண்டு வருகிறார்களென்பதைப் பார்க்கிறோம்.

இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். லெவி எல்லாக் கோவில்களிலும் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. திருச்சி யிலேயும் லெவி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி யிலும் லெவி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தஞ்சையில் மட்டும் இப்படி நடக்க முக்கியமான காரணம், அரசு லெவி வாங்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறது என்பதுதான். லெவியை ஓரளவுக்கு வாங்கித்



தான், நெல் கொடுக்க வேண்டிய அவசியத்தில் அரசு இருக்கிறது. ஆனால், அதிகாரிகளைப் பொறுத்தவரையில், லெவி வாங்க வேண்டு மென்று சொல்லும் போது "அட்மினிஸ்டிரேடிவ் கெபாசிடி" என்ற அளவில் வருகிறார்கள். அதனால் மக்கள் மனதில் என்னவிதமான கருத்துக்கள் ஏற்படுமென்பதைப் பற்றிக் கொஞ்சம்கூட யோசனை செய்து பார்க்காமல், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். கோவில்களா கட்டும், தனிப்பட்டவர்களின் இல்லங்களாகட்டும், அவற்றை அதிகாரிகள் பூட்டிவிட்டு வந்து விடுகிறார்கள். அப்படிப் பூட்டுவதற்கு அதிகாரிகளுக்கு ஏதாவது அதிகாரம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. The Tamil Nadu Procurement and Levy Order, 1974 என்ற சட்டம் போட்டிருக்கிறார்கள். அதில் அதிகாரிகளுக்கு இன்னின்ன அதிகாரங்கள் இருக்கின்றனவென்று போட்டிருக்கிறார்கள். அவற்றை நான் படித்துப் பார்த்தேன். ஓரிடத்தில் நெல் இருக்கிறதென்று தெரிந்தால் அல்லது அந்த நெல்லை ஊர்திகள் மூலமாகவோ அல்லது போட்டுகள் மூலமாகவோ எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று தெரிந் தால், அந்த நெல்லை எடுத்துக்கொள்வதற்கு அதிகாரம் இருக்கிறது. வீடாக இருந்தால், லெவிக்கு எவ்வளவு நெல் வைத்திருக்கிறீர்கள் ; உங்கள் கணக்கு என்ன என்று கேட்க அதிகாரம் இருக்கிறது.

"Enter with such assistance as may be necessary any land, place or other premises where paddy is produced or stocked, stop and search any person, boat, motor vehicle.."

இப்படி 4, 5 அதிகாரங்கள்தான் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் மூலமாக எந்த அதிகாரியும் ஒரு வீட்டையோ அல்லது நெல் வைக்கப்பட்டுள்ள அறையையோ, கோவில் களில் நெல் வைக்கப்பட்டுள்ள அறையையோ பூட்டி வைப்பதற்கு அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

முக்கியமாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நான் ஒன்றைச் சொல்வேன். கோவில்களைப் போன்று பல தர்ம ஸ்தாபனங்கள் நடந்து வருகின்றன. அங்கேயெல்லாம்கூட லெவி அதிகமாகக் கேட்கி றார்கள். தஞ்சை மாவட்டம் பூராவிலும் லெவி வாங்கும்போது, ஓரிரு இடத்தில் தவறு ஏற்படலாமென்று நினைக்கலாம். ஆனால், இந்த மாதிரித் தவறுகள், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் எடுத்துக் காட்டாக இருக்கின்றன. தஞ்சையிலே, செங்கிப்பட்டி சானடோ ரியம் என்று இருக்கின்றது. அதற்கு மாவட்டக் கலெக்டர்தான் தலைவர். அதற்கு ஒரு நோட்டீஸ் வந்தது. அதனால், அவர்களே நெல் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, இருக்கின்ற நெல் அவ்வளவையும் கொடுத்துவிட்டு, அந்த சானடோரியம் தனக்கு வேண்டுமானால் 8 ரூபாய்

கொடுத்து, வெளியே வாங்கிக் கொள்ளும்படியான துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முடிவாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மதத் துறையைப் பொறுத்த வரையில், இந்த அரசு இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; கோவில்களைப் பொறுத்த வரையில், இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

கோவில்கள் நல்ல முறையில் நடந்துகொண்டிருந்தால்தான், நாட்டு மக்களின் நிலைமையும் முன்னேறுமென்று உறுதி கொண்டவர்கள் நாங்கள். ஆகவே, மத உணர்ச்சியுள்ள மக்களின் உள்ளம் புண்படாத வகையில், காரியங்கள் நடைபெற வேண்டும். இப்படிப்பட்ட அநீதியான காரியங்களைச் செய்கின்ற அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே, இதைப்பற்றிப் பேசுவதற்கு இன்னும் அவகாசம் கொடுக்க வேண்டுமென்றும், சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4–50)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, முதல் முதலாக இது போன்ற பிரச்சினைகளை ஒத்திவைப்புப் பிரேரணை மூலமாக விவாதிப்பது பொருத்தமற்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன். இது அரசாங்கத் தரப்பிலே........................

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நான் உறுப்பினர் என்ற முறையில் சொல்வது பொருத்தமுடையது. ஏனென்றால் அசாதாரண நிகழ்ச்சி ஒன்று நடந்தால் அதற்கு................

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்தான் சொல்லி விட்டார்களே.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நான் சொன்னதைப் பொருத்தமற்றது என்று அமைச்சரவர்கள் கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். தலைவரவர்கள்தான் தீர்ப்புத் தர வேண்டும். நான் சொல்வது அரசாங்க சார்பிலிருந்து. இந்த ஒத்தி வைப்புப் பிரேரணை பொருத்தமற்றது என்பது அரசாங்கத்தினுடைய வாதம். நான் அவர்களிடத்தில் சொல்வதற்குக் காரணம் பல பிரச்சினைகள் எழும்பும் என்பதுதான். குறுகிய காலக் கேள்வியாக இருக்குமானால்,



உடனடியாக நாங்கள் செய்தியைச் சேகரித்துத் தர முடியும். ஆனால், இந்தப் பிரச்சினையைப் பற்றி ஏற்கெனவே வேறு மன்றத்திலே பதில் சொன்ன காரணத்தாலே, என்னிடத்தில் பதில் இருக்கிறது, நான் பதில் சொல்லலாம். கோயில்களிலே பொதுவாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்கக் கூடாது என்பது அரசாங்கத்தினுடைய கருத்தாகும். அந்த சந்தர்ப்பத்திலே அப்படிச் செய்திருக்கக்கூடாது. அதாவது அந்த சட்டத்திலே அதிகாரம் இல்லையென்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. அதை எடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. எடுக்கும் போது அந்த நபர் அங்கே இல்லாவிட்டால், அவர்கள் வரும்வரையில் அதற்கு சீல் வைத்து விட்டு அவர்கள் வந்ததற்குப் பின்னாலே எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அதிகாரம் இல்லையென்று சொல்வது தவறு. ஆயினும் கோயிலுக்கும் அரசாங்க அதிகாரிகளே இருக்கிறார்கள். அப்படி இருக்கும் பொழுது நம்முடைய சிவில் சப்ளை அதிகாரிகள் நேரடியாக அவர்களோடு போய் மோதி, பூட்டை உடைப்பதோ அல்லது அவர்கள் இல்லாதபோது எடுப்பதோ தேவையில்லை என்று நான் கருதுகின்றேன். ஆகவே, அந்தக் கோயில்களிலே அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்படுமேயானால், அதாவது லெவி கொடுக்கமாட்டோம் என்ற ஒரு நிலைமை ஏற்படுமேயானால் அந்தக் கோயில்களிலே உள்ள அதிகாரிகள் தவறுகள் செய்வதாக சிவில் சப்ளை அதிகாரிகள் கருதுவார்களேயானால், அது சம்பந்தமாக ஒரு முறையை அவர்கள் பின்பற்ற வேண்டும். அந்தக் கோயிலுக்கு மேல் அதிகாரிகள் இருக்கின்றார்கள். உதாரணத்திற்கு நாச்சியார் கோயிலிலே எக்ஸிகியூட்டிவ் அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர் ஏதோ தகராறு செய்திருக்கின்றார். அவருக்கு மேலே டெபுடி கமிஷனர் தஞ்சாவூரிலே இருக்கின்றார். ஆகவே, அவர் மூலமாக அதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமேயொழிய, கீழே உள்ள அதிகாரிகள் நேரடியாகக் கோயிலிலேயே போய் பூட்டுவதோ, உடைப்பதோ தவறு என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. அதை எல்லா அதிகாரிகளுக்கும் தெரிவித்திருக்கின்றோம். இந்த நாச்சியார் கோயில் பிரச்சினையைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு மேல் அதிகாரிகளை, டெபுடி கமிஷனரை, என்டோமெண்ட் அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசி, எல்லோரும் சமாதான முறையிலே எவ்வளவு கோயிலுக்குக் கொடுப்பது, எவ்வளவு அரசாங்கத்துக்குக் கொடுப்பது என்ற முடிவெடுத்து, அவர்களே கையெழுத்திட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பிரச்சினை பற்றி ஒரு நல்ல முடிவு ஏற்பட்டு விட்டது. பொதுவாக கோயில்களிலே இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படாது ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனிக்க வேண்டும். அந்தக் கோயில் நிர்வாகிகள் தவறு செய்ததாகக் கருதினாலும் தவறு செய்வதாக நான் சொல்ல முடியாது—தவறு செய்வதாகக் கருதினாலும் அதை உடனடியாக மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமேயொழிய சிவில் சப்ளை அதிகாரிகளே சேர்ந்து கதவுகளை உடைப்பது, பூட்டை உடைப்பது, சீல் வைப்பது எல்லாம் தேவையில்லை என்று

நான் கருதுகின்றேன். அது மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. ஆனால், பொதுவாக அது பொருத்தமில்லாத ஒரு நிகழ்ச்சி என்று நான் சொல்வதற்குக் காரணம் தமிழ் நாடு முழுவதும் இலட்சக் கணக்கான விவசாயிகளிடத்திலேயிருந்து இலட்சக் கணக்கான டன் புரோக்யூர்மெண்ட் செய்கிறோம், அதனால் ஆங்காங்கே இப்படிச் சில தவறுகள் நடக்கலாம். தவறுகள் நடக்கின்ற இடத்திலே நாம் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் என்பதை மட்டும் நான் கூறி, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும் ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு இது பொருத்தமில்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகும், இது அன்றாட நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டுள்ளதாலும், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு எனது இசைவை மறுக்கிறேன்.

3. உரிமைப் பிரச்சனை.

சங்கங்கள் பதிவுச் சட்ட முன் வடிவில் சில பிரிவுகள் கூட்டாய்வுக் குழுவின் முடிவுக்கு முரணாக இருப்பது குறித்து.

THIRU G. VASANTHA PAI : Sir, I seek leave to move a motion of breach of privilege in respect of the Tamil Nadu Societies Registration Bill, 1975 (L. A. Bill No. 53 of 1972) as introduced in the Assembly after the Select Committee's report and introduced today in this House. Sir, clause 3 of this Bill has been worded like this :

" (1) Subject to the provisions of sub-section (2), any society which has for its object the promotion of education, literature, science, religion, charity, social reform, art, crafts, cottage industries, athletics, sports (including indoor games), recreation, public health, social service, cultural activities, the diffusion of useful knowledge or such other useful object with respect to which the State Legislature has power to make laws for the State, which may be prescribed, may be registered under this Act. "

Sir, this has been prefaced by a report in which it has been stated that this clause—clause 3—specifies societies which may be registered and also enumerates the objects for which the societies can be registered. Then the sentence appears—"The Committee decided to enlarge the objects for which a society can be registered such as education, athletics, sports (including indoor games), public health, social service and cultural



activities. This sub-clause has been amended accordingly". Sir, this is against the decision of the Committee and what the Committee decided on 25th November 1974 after clause-by-clause reading and an elaborate discussion. At page 58 of the Report and Proceedings of the Joint Select Committee on the Tamil Nadu Societies Registration Bill, 1972 submitted in December 1974, it is clearly stated thus :

"Thiru G. Vasantha Pai urged that societies which had for their object the promotion of 'athletics, sports recreation' be excluded from the purview of the legislation, as a number of small clubs which were run by permanent officers employed elsewhere in an honorary capacity would be covered and sports would be very much hampered.

Thiruvalargal R. Ponnappa Nadar and K. A. Wahab were of the view that a society which had for its object the promotion of 'recreation' need not be excluded, as in the name of recration club, a society might indulge in other undesirable activities.

Thiru G. Vasantha Pai stated that 'recreation, might include sports He also referred to a decision of the Supreme Court where 'rummy' or 'bridge' was held to be not a game of chance but skill. He, therefore, suggested that 'sports and indoor games' be specifically excluded from 'recreation' so as to make the meaning quite clear in case the word 'recreation' should be retained.

After some discussion, the Committee decided to amend the sub-clause as follows :—

"(1) Subject to the provisions of sub-section (2), any society which has for its object the promotion of education, literature, science, religion, charity, social reform, art, crafts, cottage industries, recreation excluding sports and indoor games, public health, social service, cultural activities, the diffusion of useful knowledge or such other useful object with respect to which the state Legislature has power to make laws for the state, which may be prescribed, may be registered under this Act."

Sir, this sub-clause as amended was approved. Now the Bill has come as if the Committee had approved the Bill and clause 3 in its present form. I submit that a new version has been added and it has escaped the notice of the Chairman of the Select Committee. My submission is that the Bill as introduced has a wrong clause in it and that the original clause should be put in there and that some persons in the Law Department have been responsible for this. My submission is that this is a breach of privilege of the Select Committee as well as this House

and I request the Hon. Minister to take note of this and correct the Bill by incorporating clause 3 as approved by the Select Committee and place the Bill in that form before the House. Sir, I feel that this is a breach of privilege of the Committee, because the clause has been put in a form contrary to the recommendation of the Committee.

The Legislative Assembly has passed it in the belief that the Select Committee has approved the Bill in its present form. I request the Hon. Minister to rectify the mistake and see that the Bill comes with the original clause as approved by the Select Committee.

( பிற்பகல் 5–00 )

மாண்புமிகு திரு.செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த சட்டமுன் வடிவைப்பற்றி ஆய்வுக் குழுவிலே விவாதிக்கும் பொழுது, திரு. வசந்த பாய் அவர்கள் Sports and indoor games" சொசைட்டிகளைப் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். எல்லோரும் அந்தக் கருததை ஏற்றுக்கொண்டோம். இப்பொழுதும் மூன்று பிரிவுகளையும் சேர்த்துப் பார்த்தால், அவர் எதை விரும்பினாரோ அது அப்படியே இருக்கிறது. கிளாஸ் 3-லே அவர்கள் சொல்லியபடி "Excluding sports and indoor games" என்று இருப்பதற்குப் பதிலாக, அதே கருத்து வேறு விதமாக 4, 5 பிரிவுகளிலே போடப்பட்டிருக்கிறது. இதுதான் அதிலே உள்ள பிரச்சினை. திரு. வசந்தபாய் அவர்களுடைய கருத்தை முற்றிலும் மறுத்து, இந்த மசோதா கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. அவர்கள் சொன்ன முறையிலே போட முடியவில்லை என்பது உண்மைதான். இப்போது 3-வது பிரிவிலே பொதுவாக சொசைட்டிகளைப், பதிவு செய்யலாம் என்று போட்டிருக்கிறோம். "May be registered" என்றுதான் போட்டிருக்கிறோம். அதிலே இந்த "Sports and indoor games" சேர்க்கப்பட்டிருக்கிறது. அடுத்து 4-வது பிரிவிலே எந்தெந்த அமைப்புகள் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்று போட்டிருக்கின்றோம். திரு. வசந்த பாய் அவர்கள் கூறிய கருத்தை ஏற்றுக்கொண்டு "அத்லெடிக்ஸ் ஸ்போர்ட்ஸ் இன்குளுடிங் இன்டோர் கேம்ஸ்" சொசைட்டிகள்—இவைகளைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்று 4-வது பிரிவிலே போட்டிருக்கின்றோம். 5-வது பிரிவில் ஒரு புதிய பிரிவைக் கொண்டு வந்திருக்கின்றோம். அந்தப் புதிய பிரிவிலே "ஆப்ஷன்" கொடுத்திருக்கின்றோம். சில சொசைட்டிகளை, விரும்பினால் பதிவு செய்யலாம் என்று போட்டிருக்கிறோம். ஸ்போர்ட்ஸைப் பொறுத்தமட்டில், அவர்கள் விரும்பினால் பதிவு செய்யலாம் என்று போட்டிருக்கின்றோம். அதிலே அவர்கள் சொன்ன கருத்தை, இதைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கக்கூடாது என்ற ஒரு கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதே சமயத்தில் சில ஸ்போர்ட்ஸ் கிளப்பைப் பொறுத்தமட்டில், அவர்கள் விரும்பினால் பதிவு செய்வதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே 5-வது பிரிவிலே போட்டிருக்கின்றோம். ஆகவே இதை ஒரு பெரிய பிரச்சினையாக அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்களுடைய கருத்தை





[பிற்பகல் 5–00]

நான் மறுத்துவிட்டதாகவும், வேண்டுமென்றே திருப்பி விட்டதாகவும் அவர்கள் எடுத்துகொள்ளக்கூடாது. முறைப்படி எப்பொழுதுமே எல்லாப் பிரிவுகளையும் ஆய்வு செய்து முடித்தவுடன், அதை இறுதியாக்கி, அதை அறிக்கையாகக் கொடுக்கின்ற ஒரு உரிமையைத் தலைவருக்குக் கொடுக்கின்றார்கள். அந்த முறையிலே இது ஒரு "பார்மாலிட்டி", "டெக்கனிக்கல், டிராப்டிங் பார்மாலிட்டி" என்ற முறையிலேதான் இதைச் செய்திருக்கின்றார்கள். நிச்சயம் அவர்களைப் புண்படுத்துவதாகவோ அவர்களுடைய கருத்தை மறுக்க வேண்டுமென்ற எண்ணத்தாலோ அது செய்யப்படவில்லை. இப்பொழுதும் தெளிவாக இல்லையென்று அவர்கள் ஏதாவது கருத்துக்கள் கூறுவார்களானால், அதை நாங்கள் மறுபரிசீலனை செய்து திருத்திக்கொள்வதற்கும் தயாராக இருக்கின்றோம். நிச்சயம் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்ற எண்ணத்திலே இது செய்யப்பட்டதல்ல என்பதை மட்டும் நான் மிகப் பணிவோடு அவர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். law டிபார்ட்மென்ட்டில் ஒரு ட்ராஃப்டிங் மெதட்டில், அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மூன்று பிரிவாகப் பிரிக்க வேண்டும். (1) "May be registered" என்று போட வேண்டும். (2) "Must be registered" என்று போட வேண்டும். அதிலே "sports and indoor games are exempted" (3) "They must be also given optiod to register" என்று போடுகிற formality-ல் போட்டிருக்கின்றார்கள் என்றுமட்டும் சொல்லிக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய உரிமையை மீறுவதற்காகவோ, அவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்ற எண்ணத்திலோ இல்லை என்று உறுதி கூறி இதை அவர் இதோடு விட்டுவிடலாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, I wish to point out one more thing. Clause 4 of the Bill says that any society which consists of not less than 20 members or whose annual gross income or expenditure is not less than Rs. 10,000 should be compulsorily registered. This must have correlation to Clause 3 which says about societies which may be registered. Otherwise, it will lead to enormous complications. If the Hon. Minister agrees with me, I request him to have that also corrected. The proceedings of the Select Committee meeting on 9th August 1974 can be seen at page 53 of the report. There it is stated thus:

"Clause 3 :—The object of the Society could be enlarged to include "athletics, sports, recreation, Public health, social service and cultural activities"

**The Hon. Thiru S. MADHAVAN** : Just a minute. The hon. Member may please note that there is a printing mistake in sub-clause (3) of clause 4. "After the word Religion" the words "athletics, or sports (including indoor games" have been added. We have given a correction slip. I think this will satisfy the hon. Member.

**Thiru G. VASANTHA PAI** : What has been said here is..........

**Thiru S.T. ADITYAN** : My hon. Friend may kindly look into sub-clause (3) of clause 4 also. It says: "Nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion athletics or sports (including indoor games)." It is made very clear here.

**Thiru G. VASANTHA PAI** : I am sorry I did not see the correction slip.

**Thiru S.T. ADITYAN** : The Clause as a whole must be read.

**Thiru G. VASANTHA PAI** : Sub-clause (3) says—"Nothing in this section shall apply to any society which hasfor its object the promotion of religion, athletics or sports (including indoor games)." It is clear. In view of the clarification made by the Hon. Minister, I do not press this motion. I only want to point out one thing. That is about clause 25. That may also be looked into. Clause 25(2) reads thus: "No part of the funds of a registered society (save those funds earmarked specifically for the purpose of making provision for a dependant of a deceased or disabled member) shall be divided by way of bonus or dividend or otherwise among its members."

**Thiru G. SWAMINATHAN** : On a point of order, Sir. I want to know whether this is also a matter of privilege.

**Thiru G. VASANTHA PAI** : Sir, I have mentioned clause 25 also in my notice of privilege motion. Sub-clause (2) says: "No part of the funds of a registered society (save those funds earmarked specifically for the purpose of making provision for a dependant of a deceased or disabled member shall be divided by way of bonus or dividend or otherwise among its members." It should be either the dependant of a deceased or a disabled member" It looks as though it applies only to dependants and that is against the report of the Committee.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்னறிவிப்பை வலியுறுத்துகிறாரா ?

**Thiru G. VASANTHA PAI** : Sir, I am not pressing.



## 4 அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு மற்றும் தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1975-ம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இது அரசியலமைப்புச் சட்ட 199-வது பிரிவுப்படி பணச் சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன் :—

(1) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, பந்தய (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1975).

(2) தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 53/1972).

(3) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1974).

(4) தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத் தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1974).

(5) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974).

(6) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1975).

5 கவன ஈர்ப்பு.

## தஞ்சாவூர் நகராட்சி அண்மையில் எடுத்துக்கொண்ட அண்மைப் பகுதிகளில் சொத்து வரியை உயர்த்தியுள்ளது குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"தஞ்சாவூர் நகராட்சி அண்மையில் எடுத்துக்கொண்ட அண்மைப் பகுதிகளிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு எவ்விதக் கூடுதல் வசதிகளும் செய்து கொடுக்காமல், அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் செலுத்தி வந்ததைப் போன்று இருபது மடங்கு அளவிற்கும், சில நேர்வுகளில் அதற்கு மேலும் சொத்து வரியை நகராட்சி உயர்த்தியுள்ளது குறித்து".

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : துணைத்தலைவரவர்களே, நீலகிரி, தெறகுத்தோட்டம், நாஞ்சிக்கோட்டை, மேல்வேலி, இராமநாதபுரம், புதுப்பட்டினம் ஊராட்சிகளில் சில பகுதிகள் ஊராட்சி எல்லைகளிலிருந்து பிரிக்கப்பட்டு 1974 பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் முதல் தஞ்சாவூர் நகராட்சியுடன் சேர்க்கப்பட்டன.

ஊராட்சியில் வீட்டுவரி சாதாரணமாக மொத்த சொத்து மதிப்பின் மேலே 100 ரூபாய்க்கு 50 பைசாவாகும். ஆனால் இந்நகராட்சியில் சொத்துவரி, வருட வாடகை மதிப்பின்பேரில் முப்பது சதவிகிதமாக விதிக்கப்படுகின்றது. எனவே, நகராட்சியில் விதிக்கப்படும் சொத்துவரி ஊராட்சியில் விதிக்கும் வரியைவிட அதிகமாகத்தான் இருக்கும். ஒரு பஞ்சாயத்துப் பகுதி மற்றொரு பெரிய நகராட்சியுடன் இணைக்கப்படும் பொழுது நகராட்சியின் வரி விதிகளுக்கும் இதர மாற்றங்களுக்கும் அவசியம் உட்படவேண்டியுள்ளது. சொத்து வரி கட்டாயமாகச் செலுத்தவேண்டிய தொன்றாகும். அதனை "நேரடி பயன் பெறுதல்" என்ற அடிப்படையில் கணக்கிட முடியாது. சட்ட திட்டங்களின் கீழ் விதிக்கப்படும் சொத்து வரி நகராட்சிகளில் வருவாய் ஆதாரங்களின் அதி முக்கியமானதாகும். வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாயின் அடிப்படையில்தான், நகராட்சியின் தேவைகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு மக்களுக்கு வசதிகள் செய்து தரப்படுகின்றன.

இப்பகுதிகளுக்கு அருகாமையில் தஞ்சை மருத்துவமனை, ஸரபோஜி கல்லூரி, மத்தியக் கிடங்கு, கூட்டுறவு நூற்பாலை முதலியவை உள்ளன. இப்பகுதிகளில் நவீன முறையில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் பல உள்ளன. ஆகவே இப்பகுதிகள் ஏற்கெனவே ஓரளவு முன்னேற்றமடைந்தும், மேலும் முன்னேற்றமடைந்து வருவதாயுள்ளன. அங்கே நகராட்சியால் தேவையான வசதிகளும் செய்து தரப்பட்டு வருகின்றன. அநேகமாக எல்லாப் பகுதிகளிலும் நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெரு





விளக்குகளும் உள்ளன. பர்மா காலனி, அண்ணா நகர், நாஞ்சிக்கோட்டை முதலிய இடங்களில் குடிநீர் விநியோகமும் செய்யப்படுகின்றது. தஞ்சாவூர் நகராட்சியின் ஏனைய பகுதிகளில் உள்ளதைப்போல எல்லா வசதிகளும் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளிலும் விரைவில் கிடைக்க நகராட்சி தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

சட்டத்தின் விதிமுறைகளின்படி சேர்க்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. நகராட்சியில் தறபோது புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளிலும் ஏற்கெனவே உள்ள பழைய பகுதிகளிலும் சொத்துவரி ஒரே விதமாக முப்பது சதவிகிதமாக விதிக்கப்பட்டுள்ளது. வரி விதிக்கப்பட்டவர்களுக்கு ஆட்சேபனை செய்யப் போதிய சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. பின்னர் சீராய்வு மனுக்கள் ஆராயப்பட்டு மதிப்பீடுகள் இறுதி செய்யப்படுகின்றன. இதன் மேலும், நகராட்சி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய விதிமுறைகள் உள்ளன. ஆக, இப்பகுதிகளுக்கு அளித்துள்ள வசதிகளையும் சுற்றுப்புற அமைப்புகளையும் கருத்தில் கொண்டு, சட்ட விதிகளுக்குட்பட்டு சரியான முறையில் நகராட்சி வரிவிதிப்புச் செய்துள்ளது.

(பிற்பகல் 5-10)

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தப் புறநகர் பகுதிகளிலே அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தது பஞ்சாயத்துக்கள். அந்த வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து பஞ்சாயத்து யூனியன் ஒரு வீட்டுக்கு 15 ரூபாய் ஒரு ஆண்டுக்கு வாங்கிக் கொண்டிருந்தது. இந்த பஞ்சாயத்து யூனியனை தஞ்சாவூர் நகராட்சி ஏற்றபிறகு, 15 ரூபாய் கட்டிய வீட்டுக்கு 300 ரூபாய் என்றும் 25 ரூபாய் கட்டிய வீட்டுக்கு 500 ரூபாய் என்றும் ஏற்றியிருக்கிறார்கள். இவ்வாறு உயர்த்தி இந்த டிசம்பர் மாதத்திற்குள் அந்த வரியைக் கட்ட வேண்டுமென்றும் ஆணைகள் பிறப்பித்திருக்கிறார்கள். அதிலே எல்.ஐ.சி. காலனி, கோவாப்பரேட்டிவ் காலனி மற்றும் சாதாரண மக்கள் வசிக்கக் கூடிய பர்மா காலனி இவைகள்தான் இருக்கின்றன. இதிலே இருப்பவர்கள் பல பேர் 20 ஆண்டுக்கால அளவுக்கு கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி அல்லது எல்.ஐ.சி. போன்ற ஸ்தாபனங்களிடமிருந்து கடன் வாங்கி அதற்கு மாதா மாதம் தவணை முறையில் பணம் செலுத்திக் கொண்டிருப்பவர்கள்தான். மேலும், இந்த நகராட்சிகளைப் பொறுத்த வரையில், எல்லா நகராட்சிகளுக்கும் ஒரே வரிவிதிப்பு முறை என்பது சரியானதாக இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு ஆயிரம் சதுர அடி உள்ள வீடு சென்னையிலே இருக்குமானால், அதற்கு 500 ரூபாய் வாடகை என்றால், அந்த வீடு தஞ்சையிலே இருக்குமானால் அதற்கு 100 ரூபாய் தான் வாடகை வரும். ஆனால் கட்டின பணத்துக்கு அங்கு இருப்பவர்களுக்கு 4 சதவிகிதம் வருமானால், இங்கு இருப்பவர்களுக்கு 12 சதவீதம் வரும். நிலைமை இப்படி இருக்கும் போது, எல்லா நகராட்சிகளுக்கும் ஒரே மாதிரி வைத்திருப்பது சரியன்று. இன்றைன்று நகராட்சிக்கு மாறிய உடனேயே 15 ரூபாய் கட்டியவர்கள் 300 ரூபாய் கட்ட வேண்டுமென்ற ஒரு நிலைமையை ஏற்படுத்துவார்களேயானால், சாதாரணமாக இருக்கக் கூடியவர்கள், ஏழையெளிய

மக்கள் அதுவும் கஷ்டப்படுகின்ற பர்மா காலனியில் இருக்கக்கூடியவர்கள், 10 ரூபாய், 5 ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருப்பவர்கள், திடீரென்று 50 ரூபாய், 100 ரூபாய் என்று கட்ட வேண்டிய நிலைமையை ஏற்படுத்துவார்களேயானால், அது எப்படி நியாயமாகும்? அதுவும் இந்த நகராட்சியினாலே எந்தவிதப் பலனும் அடையாமல், அதற்கு முன்னாலே இருந்த பஞ்சாயத்து யூனியன்களினாலே பலன் அடைந்தவர்கள், இந்த நகராட்சிக்கு இவ்வாறு கட்ட வேண்டும் என்று சொல்லுவது எப்படி நியாயம் என்று அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, இவ்வாறு கட்ட வேண்டியதை ஒரு மூன்றாண்டு அல்லது நான்காண்டுகளுக்கு உள்ளாகக் கட்டலாம் என்று ஏதாவது ஒரு ஏற்பாட்டினை அமைச்சரவர்கள் செய்தாலும் நல்லது. அங்கு வாழக்கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் இதனாலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, மக்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒரு நல்ல மதிப்பை அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டுமென்று அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :</u> துணைத்தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள் எல்லாம் நகராட்சியாக ஆகும்போது இப்படியெல்லாம் ஒரு நிலைமை வரும் என்பது தெரியும். அதைத் தெரிந்து கொண்டு தான் அவர்கள் எல்லாம் சேர்ந்திருக்கிறார்கள். சில பஞ்சாயத்துக்கள் சேரமாட்டேன் என்று கூட மறுக்கிறார்கள். இருந்தாலும் நகரங்களைப் போல வாழவேண்டுமென்ற ஆசையிலே சில பஞ்சாயத்துக்கள் இப்படிச் சேர்ந்துக்கொள்ளுகிறார்கள். சேர்ந்த பிறகு ஒரேமாதிரியாகத்தான் வரி விதிக்க முடியும். 30 சதவீதம் என்று இதிலே வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்திலே நூற்றுக்கு-ஐம்பது பைசா என்றுதான் வைத்திருந்தது. இது நகரம் ஆனவுடனே, அதுவும் 30 சதவீதம் என்றவுடனே அதிகமான அளவிலே தெரிகிறது. ஆனாலும் இதிலே போட்ட எந்தத் தொகையும் அவர்கள் சொல்லுவது போல சென்னை, அடுத்தது திருச்சி, அடுத்தது, தஞ்சை இப்படியெல்லாம் இருக்கிறது. அதுவும் தஞ்சை மாவட்டத்திலே பல பகுதிகள் இருக்கின்றன. தஞ்சை நகரத்திலே இருக்கிற விலை இன்னும் சில நகரங்களிலே இருக்காது. சில கிராமங்களிலே தஞ்சை நகரத்தைவிட அதிகமான விலை இருக்கின்றது. தஞ்சையை அடுத்த பகுதிகளை நாம் எடுத்துக்கொள்வோமேயானால், மனைகள் வீடுகள் விலை எல்லாம் அதிகமாகவே இருக்கின்றது. ஆக, இப்படிப்பட்ட பகுதிகளையும் நாம் பார்க்கிறோம். அந்தந்தப் பகுதிகளுக்குத் தகுந்தவாறு நில கீழ் மனைக்கட்டு, மற்றும் அந்தக் கட்டிடங்களுக்கு எல்லாம் விலை மதிப்பு போட்டுத்தான், அப்படி வரி போட்டிருக்கிறார்கள். அப்படி அதிகமாக வரி விதித்துவிட்டாலும் கூட, இதை எடுத்துச் சொல்லுவதற்கு இதற்கான அப்பீல் கமிட்டி இருக்கிறது. திரு சுவாமிநாதன் போன்றவர்கள் அவர்களைப் பார்த்து இம்மாதிரி விஷயங்களை அங்கேயே தீர்த்துக்கொள்வதும் முடிகிற காரியம்தான். 30 சதவீதத்துக்கு மேல் போயிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அப்படி ஏதாவது 30 சதவீதத்துக்கு மேல் போயிருந்தால், அப்பீல் கமிட்டிக்கு அவர்கள் அப்பீல் செய்துகொள்ளலாம்.



<u>திரு ஜி. சுவாமிநாதன் :</u> தலைவர் அவர்களே, இவர்கள் இந்த நகராட்சியிலே சேர்ந்துவிட்ட காரணத்தினால் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இப்போது நகராட்சி வேண்டாம் என்று அங்கிருக்கும் நாங்கள் எல்லாம் எழுதிக்கொடுத்தால், மறுபடியும் பஞ்சாயத்து யூனியனுக்குப் போகும் வழிமுறை ஏதாவது உண்டா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அப்பீல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்பீல் செய்ய வேண்டுமென்று சொன்னால், சாதாரணமாக 100 ரூபாய், 200 ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர்கள் 2,000 ரூபாய் பணம் கட்டி சேர்மனுக்கு அப்பீல் செய்ய வேண்டும். பணம் கட்டுவது என்பது இயலாத காரியம். சாதாரணமாக கிளார்க்காக இருக்கும் ஒருவர் பணம் கட்டித்தான் சேர்மனுக்கு அப்பீல் செய்ய வேண்டும். பணம் கட்டாமல் அப்பீலுக்குப் போகலாம் என்ற ஒரு நிலைமை ஏற்படுத்தினால் அவர்களாலே முடியும். பணம் கட்டி அதுவும் இரண்டு ஆறு மாதத்திற்குப் போக வேண்டுமென்று சொன்னால், சாதாரண மக்களாலே முடியாது. ஆகவே, அமைச்சர் அவர்கள் கருணை கூர்நது நேரடியாக இதை கவனித்து தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதுவும், அப்பகுதி அவர்களுடைய மாவட்டத்தின் தலைநகர் என்பதையும் நான் ஞாபகப்படுத்தி முடித்துக் கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :</u> துணைத்தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டம் மட்டுமல்ல. அவருடைய மாவட்டமும் கூட இரண்டு பேருக்கும் சேர்ந்த மாவட்டம் தான் அது. அதிலும் அந்தப் பகுதி வளர்ச்சியடைய வேண்டும் என்பதிலே என்னைவிட அவர் ரொம்பவும் அக்கறை கொண்டவர். அதனாலேதான் ரொம்பவும் அக்கறையாக அந்தப் பகுதியை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்று சொன்னவர்களிலே அவரும் ஒருவர். ஆகையால் அந்த மக்கள் அவரைத்தான் கேட்க வேண்டும். ஏன் இப்படிச் சேர்த்து, இப்படி அதிகமாக வரிப்பளு வந்துவிட்டது என்று திரு சுவாமிநாதன் அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> தவறான அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார்கள். அதுமாதிரி நான் சொல்லவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :</u> என்னென்ன விதிமுறைகள் என்று பார்த்து, எப்படி எப்படி நடைமுறைகளிலே சரிசெய்யலாம் என்று பார்த்துச் சரி செய்யலாம். மக்களைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணமே இல்லை. விதிமுறைகளின்படி எப்படி அதைச் செய்யலாமோ அதைச் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

## 6. 1974ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளி (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தங்கள்.

திரு செ. முத்துசாமி: துணைத்தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு கல்வித் துறையின் 1974-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29-ஆம் நாளிட்ட 1966ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்டு, 1974-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளி (முறைப்படுத்தல்) விதிகளில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு திருத்தமாக உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து, அதை ஆமோதித்து, உறுப்பினர் அவர்கள் அபிப்பிராயம் சொல்லி, அதை வோட்டுக்கு விட்டு, அது முடிந்த பிறகுதான் அடுத்த திருத்தம். திருத்தங்களையெல்லாம் மொத்தமாகப் படிக்க முடியாது. முதல் திருத்தத்தை முன்மொழியலாம்.

விதி (2).

திரு செ. முத்துசாமி: முதல் திருத்தமாக, தற்போதைய ரூல் 2-லே, துணை விதி 2-சி-யிலே ஆசிரியர் என்பதற்கு ஒரு விளக்கத்தைச் சேர்க்குமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போதைய விதிகளிலே ஆசிரியர் என்பதற்கு விளக்கம் தலைமையாசிரியரையும் உள்ளிட்டு என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம் செய்ய வேண்டியதன் நோக்கம் ஆசிரியர் என்று சொல்லும்போது தலைமையாசிரியரைக் குறிக்க வில்லை என்று சொல்லி......

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முழுவதும் படித்து முடித்து விட்டு பிறகு அதை வழிமொழிந்த பின்புதான் உறுப்பினர் அவர்கள் அபிப்பிராயம் சொல்ல வேண்டும்.

THIRU S. MUTHUSWAMY: Sir, I move—

"In Rule 2(*c*), for sub- rule (*c*) the following shall be substituted, namely—

"teacher" shall include a Headmaster, a language Pandit, a specialist teacher such as physical training instructor, craft instructor, Music teacher and Pre-Voctational Instructor including part-time Pre-Vocational Instructor."

Thiruvalargal M. Arumugaswami and K.S. Ganapathi: We sceond the amendment.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அடுத்து உறுப்பினர் அவர்கள் அபிப்பிராயத்தைச் சொல்லலாம்.



திரு செ. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் என்பதற்கு விளக்கம், தலைமையாசிரியர், மொழி ஆசிரியர்கள், இன்னும் மற்ற ஆசிரியர்களும் என்று எல்லாப் பிரிவுகளிலும் வரக்கூடியவர்களைச் சேர்த்து விட்டால்தான், எதிர்காலத்திலே நிர்வாகிகள் இதிலே இடமில்லை என்று சொல்லி மற்றவர்களுக்குச் சலுகை அளிப்பதற்கு இடம் இல்லாமல் செய்யலாம். ஆசிரியர் என்று இந்தச் சட்டத்திலே எல்லா இடங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆசிரியர் என்பது இவர்களையும் சேர்த்துக் குறிக்கும் என்று இந்த விளக்கத்திலே சொல்லி விட்டால், அவர்களுக்கு அடிப்படையிலே இப்பொழுது வழங்கப் பட்டிருக்கக் கூடிய பணிப்பாதுகாப்பு உறுதி செய்யப்படும். ஆசிரியர் என்று மட்டும் இப்போது கூறப்பட்டிருப்பதிலிருந்து தலைமையாசிரியர் கள் தனியாக இருக்கிறார்கள் என்று நிர்வாகிகள் அந்தத் தலைமை யாசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், அவர்களைப் பாதுகாப்பதற்கு இந்தச் சட்டத்திலே வழியில்லை என்று கூறி தள்ளிவிடுகிறார்கள். ஆகவே, இந்த விளக்கத்திலே இதைச் சேர்த்துக்கொள்ளுவது மிகவும் நியாய மான ஒன்றாகும். அதைச் சேர்த்தால்தான் அவர்களுக்குப் பாது காப்பாக இருக்கும். நான் இந்த நேரத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், திருத்தங்கள் கொடுக்கப் படும்போது பொதுவாக அரசே கொண்டுவந்தால்தான் ஏற்பது என்றும், தனிப்பட்டவர்கள் கொண்டு வரும்போது அதை ஏற்பது மர பில்லை என்றும் கருதாமல் இதை "டிராப்ட்" செய்யப்படும்போது விடப் பட்டிருக்கின்ற சில விஷயங்கள் செலக்ட் கமிட்டியிலே கூட பல்வேறு விஷயங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எல்லாம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விதியைப் பொறுத்தவரையில், அரசு நினைத்தால், ஒரு வார காலத்திற்குள் திருத்தி வெளியிடுவதற்கான வாய்ப்பை அரசு வைத்திருக்கிறது என்பதையும் நாங்கள் அறிகிறோம். இருந்தாலும் கூட சட்டமன்றத்திலே வைக்கப் படும்போது, ஆசிரியர்களின் பிரதிநிதி என்ற முறையில் எது எது விடப் பட்டிருக்கிறது என்று நாங்கள் சிந்திக்க வாய்ப்புகள் வேண்டும். எதிர் காலத்திலே நிர்வாகிகளோ ஆசிரியர்களுக்கு எதிராக, இந்தத் திருத்தம் இல்லாவிட்டால், இந்த விதியைப் பயன்படுத்துவார்கள் என்ற ஒரு அச்சத் தின் காரணமாகத்தான் சொல்லுகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் இதை ஏற்று, இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று இந்த முதல் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் இந்த பாதுகாப்புச் சட்ட விதிகளுக்குத் திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தினுடைய அடிப்படையிலே விதிமுறைகளை நாம் வகுக்கிறோம். சட்டத்தை உருவாக்குகின்றபோதே கூட்டுப் பொறுக்குக் குழுவிலேயும் அதுபற்றி ஆராய்ந்து பல்வேறு கருத்துக்கள் வெளியிடப் படுகின்றன. ஆக, எல்லா சாராரையும் உள்ளடக்கி வைத்து சிலபல விதிமுறைகளைத் தகுந்தாற்போல நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக் கிறோம். இவ்வாறு செய்து இந்தத் துறையை இயக்கிச் செல்ல வேண்டியவர் களாக நாம் இருக்கிறோம். இப்பொழுது அந்தச் சட்டமே சரியில்லை என்ற அளவுக்கு 400-க்கு மேற்பட்டவர்கள் உயர்நீதி மன்றத்திலே

வழக்குத் தொடுத்து இந்தச் சட்டமே செல்லுபடியாகக் கூடாது என்ற அளவுக்குச் சென்றிருக்கிறார்கள். பல்வேறு கருத்துக்களினுடைய அடிப்படையில் அவைகளை உள்ளடக்கி, கூடுமானவரையில் பெரும்பாலானவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் பல்வேறு வகைகளிலே நாம் இந்த விதிமுறைகளை வகுத்திருக்கிறோம். அதுவும் 1-12-1974-லேயிருந்து இது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சூழ்நிலை வரவில்லை. இதிலே என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் பொறுத்திருந்து பார்த்து, பல்வேறு நிலைமைகளிலே நாம் அவைகளை ஆராய்ந்து தக்கவைகளைச் செய்ய வேண்டிவரும். ஆக, இப்போது திருத்தங்களும், மற்றவைகளும் கொண்டு வருவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுவிட்டனவா என்று கேட்டால், அப்படிப்பட்ட வாய்ப்பு ஏற்பட வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நடைமுறையில் வரும்பொழுது என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நாம் பார்க்கலாம். ஆனால் பொதுவாக ஒரு சாதாரண சூழ்நிலையிலே எல்லா சாராரையும் மனதில் வைத்துக் கொண்டு, அவர்களின் தகுதிகளை அடிப்படையாகக்கொண்டு நாம் விதிமுறைகளை உருவாக்கி வந்திருக்கிறோம். ஆசிரியர்கள் என்பது தலைமையாசிரியர்களையும் உள்ளடக்கிப் பொருந்தும் என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறோம்.

(பிற்பகல் 5-20)

அதிலே குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து. ஆனால் ஆசிரியர்கள் என்றாலே சாதாரணமாக இன்ஸ்பெக்டர்கள், டீச்சர்கள் என்று இரண்டு பேருக்குமே பொதுவாகப் பொருந்தும். இதில் சங்கடம் இல்லை. ஆனால் தலைமை ஆசிரியர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் என்பதால் சங்கடத்திற்கு இடமளிக்கும். ஆகவேதான் அவர்களை உள்ளடக்கி ஆசிரியர்கள் என்றால், தலைமையாசிரியர்களும் உள்ளடக்கி என்று போட்டோம். ஆக எல்லாவிதமான ஆசிரியர்களும் இதில் உள்ளடங்குவார்கள். நாம் குறிப்பிட்டுக்காட்டி விடுவோமானால், எதிர்காலத்திலே புதுவிதமான ஆசிரியர்கள் கூட வரக்கூடும். குறிப்பிட்டுக் காட்டிவிடுவோமானால், ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விதமான ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போதும், சேர்த்துக் கொண்டே வரவேண்டும். இல்லாவிட்டால் அதிலே சங்கடம் ஏற்படும். பொதுவாகவே ஆசிரியர்கள் என்பதற்கு பொருள் எல்லோருக்கும் விளக்கமாகத் தெரியும். இதிலே சங்கடங்கள் ஏற்படாது. ஆகவே இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: உறுப்பினர் அவர்கள் இந்தத் திருத்தத்தை வலியுறுத்துகின்றார்களா?

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தைப்பற்றி, ஆசிரியர்கள் என்றால் இவர்கள் அத்தனை பேர்களும் அடங்குவார்கள் என்று இந்த அவையிலே கொடுத்த விளக்கத்தை ஏற்று இதை வற்புறுத்தாமல் விட்டுவிடுகிறேன்.

**திருத்தம், அவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.**



63166

விதி 9.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் திருத்தத்தைப் படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்த திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன் என்று சொன்னால் போதுமானது. வழிமொழிபவர் பின் சொன்னால் போதும். கொஞ்சம் சுருக்கமாக இருந்தால் [illegible]

திரு. செ. முத்துசாமி: நான் கீழ்க்கண்ட இரண்டாவது திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"In rule 9, in sub-rule (2), the following shall be added as item (*l*):—

"The School Committee shall call for a list of qualified persons from the Employment Exchange and make appointments from the list furnished by the Employment Exchange."

திரு. எம். ஆறுமுகசாமி: நான் இத்திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது 1-12-1974-க்கு முன்னால் வரையில் தமிழ் நாட்டிலே தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்கள் நியமனம் செய்யும்போது வேலை தேடித்தரும் நிறுவனத்திலிருந்து, பெயர்களைக் கேட்டு வாங்கித் தான் போடவேண்டும் என்ற நடைமுறை இருந்தது. ஆனால் இந்த விதிகளில் அது இடம் பெறாமல் இருக்கின்றது என்பதை கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திலிருந்து வேலை இல்லாதவர்களுடைய சீனியாரிட்டி முறைப்படி, அரசாங்க விதிமுறைப்படி, லிஸ்டுகளை அனுப்புகிறார்கள். ஒரு ஆசிரியரை நியமிப்பதானால், 10 அல்லது 15 என்று நிர்வாகிகள் எத்தனை பேர்களைக் கேட்கின்றார்களோ, அத்தனை பேர்களையும் அனுப்புகின்றார்கள். ஆதலால் நிர்வாகிகளைப் பொறுத்த வரையிலே, அவர்களுடைய உரிமைகள் எதுவும் பாதிக்கப்படவில்லை. வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களிலிருந்து இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற நியாயமான முறை தற்போது நடைமுறையில் உள்ளது இந்த விதிகளிலே இடம் பெறாமல் இருக்கின்றது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த முறை விதியிலே இடம் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சர்வீஸ் கமிஷன் முறையிலே கூட சீனியாரிட்டி அடிப்படையிலே வைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. தனியார் ஸ்தாபனங்களை அப்படிக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறிய காரணத்தினால், அப்படிப்பட்ட முறை விதிகளிலே வற்புறுத்தப்படாமல் விட்டுவிடப்பட்டது. அரசாங்கத்தினுடைய முழு வரிப்பணத்திலிருந்து, முழு ஊதியத்தையும் அந்தத் தனியார் பள்ளிகளுக்கு வழங்குகின்ற காரணத்தினால், அரசு கட்டுப்படுத்தக்கூடிய முறையிலே, செய்யப்படுகின்ற நியமனங்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களிலிருந்துதான் செய்யப்பட வேண்டுமென்பதற்கான வழியிலே, விதிகளிலே திருத்தத்தைக் கொண்டுவரவேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆசிரியர்களை தனியார் பள்ளிகளிலே நியமிக்கின்றபோது, வேலை தேடித் தரும் நிறுவனத்திலிருந்து பெயர்களைப் பெற்று அவர்களை நியமிக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே இந்தத் திருத்தத்தை உறுப்பினர் கொண்டு வந்திருக்கின்றார்கள். வேலை தேடித்தரும் நிறுவனத்திலிருந்து பெயர்களைப் பெற்று நியமிக்கின்ற ஒரு முறையை மேற்கொள்வதானால் மிகமிக நல்லது. அது வரவேற்கத்தகுந்த ஒன்று. ஆனால் சட்டப்படி வற்புறுத்த இயலுமா என்பதுதான் பிரச்சினையாக இருக்கின்றது. ஆனால் இப்போது சாதாரணமாக தொழிற்சாலைகளாக பள்ளிகள் கருதப்படுமா என்பது வேறு. அதிலே நீதி மன்றங்கள்தான் தீர்ப்பு அளிக்க வேண்டும். தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் தொழிற்சாலைகள் சட்டத்திலே அத்தகைய நிலைமை இல்லை. தனியார் துறையிலே நடக்கின்ற தொழிற்சாலைகளில் இந்த வேலை தேடித் தரும் நிறுவனத்திடமிருந்துதான் பெயர்களைக் கேட்டு நியமிக்க வேண்டும் என்பதை வற்புறுத்த முடியாத ஒரு சூழ்நிலை இன்னும் இருந்துகொண்டிருக்கின்றது. அவர்களுக்குக்கூட சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், 25 பேர்களுக்கு மேல் தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகளில் இடம் காலி ஏற்படுமானால் அதை வேலை தேடித்தரும் நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை வற்புறுத்துகின்ற சூழ்நிலை இல்லை.

அரசுத் தொழிற்சாலைகளிலே, அரசு சார்பாக நடைபெறுகின்ற தொழிற்சாலைகளிலே எப்படி வேலை தேடித் தரும் நிறுவனத்தினின்று பெயர்களைப்பெற்று எடுக்கின்றார்களோ அது போன்று தனியார் நிறுவனங்கள் பெயர்களைப் பெற்று நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்த வழி முறைகள் இல்லை. அண்மையில் நடைபெற்ற தொழிலமைச்சர்கள் மகாநாட்டிலேகூட, அதற்காக மத்திய அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று தொழில் அமைச்சர்கள் தெரிவித்துக்கொண்டார்கள். அங்கேயே இன்னும் முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அங்கு அமைச்சர்களே அந்த மாதிரித் தீர்மானம் போட்டிருக்கின்றார்கள். தேவையானால் ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும், மேலும் தேவைப்படுமானால், அரசியலமைப்புச் சட்டத்தையே இதற்காகத் திருத்த வேண்டும் என்ற அளவுக்குத் தொழிலமைச்சர்கள் மாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை தொழிற்சாலைகளைப் பொறுத்து இருக்கும்போது, பள்ளிகளைப் பொறுத்து இம்முறையைக் கொண்டு வருவது மிகமிகக் கடினம். அங்கேயே கொண்டுவரமுடியாதபோது, இங்கே மிகவும் கஷ்டம். ஆனால் அந்தக் கருத்தின் அடிப்படையில் வேலை தேடித்தரும் நிறுவனங்களைப் பயன்படுத்திக்கொள்கின்ற அளவுக்கு வருவார்களானால், "ரெகமன்டேட்டரி" என்ற அளவுக்கு நாம் தெரிவிக்கலாம். அவர்கள் பயன்படுத்திக்கொள்வதுதான் நல்லது. ஆனால் வற்புறுத்துவதற்குச் சட்டப்படி இடம் இருக்காது. ஆக இப்போது இருக்கின்ற அளவிலே இருப்பதுதான் பொருத்தமானது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, தொழிற்சாலைகளிலே அரசாங்கம் எந்தவிதமான பணத்தையும் ஊழியர்களுக்குச் சம்பளமாகத் தருவதில்லை. ஆனால் இங்கே தனியார் பள்ளிகளிலே பணியாற்றக் கூடிய



ஆசிரியர்களுக்கு, ஒரு பைசாகூட தனியார் பள்ளியினுடைய நிர்வாகிகள் கையிலிருந்து கொடுக்காத வண்ணம், அரசாங்கமே வரிப்பணத்திலிருந்து முழுக்க முழுக்க, நூற்றுக்கு நூறு சம்பளமாகக் கொடுக்கின்றது. எல்லா விதமான மான்யங்களையும் தருகின்றார்கள். இது கடந்த காலத்திலே நடைமுறையிலே இருந்த முறை என்பதோடு, இப்போதும் எம்பிளாய்மெண்ட் ஆபீசிலிருந்து பெயர்களைப் பெற்று பிறகுதான் ஆட்களை எடுக்கின்றார்கள். "அப்பாயின்ட்மெண்ட்" ஐப் பொறுத்த வரையில், அப்படி நியமித்தால்தான் அரசு அங்கிகாரம் செய்யக்கூடிய நடைமுறை கல்வித் துறையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஒரு புதிய நியமனம் ஏற்படுமானால், அந்த நியமனம் எம்பிளாய்மெண்ட் அலுவலகத்திலிருந்து "லிஸ்ட்டு" வந்து அப்பாயின்ட்மெண்ட் ஆனதாக இருந்தால்தான், அந்த நியமனத்திற்கு அங்கீகாரம் செய்து, கிராண்டை "ரிலீஸ்" செய்கிறார்கள். இந்த நடைமுறைதான் தற்போது இருக்கிறது. எந்த மானேஜர்களும் இது வேண்டாம் என்று வழக்கு மன்றத்திற்குச் செல்லவில்லை. அப்படி இருக்கும்போது இந்த விதிகளிலே அது ஏன் சேர்க்கப்படவில்லை? தற்போது ஒப்புக்கொண்டு இவ்வளவு காலம் அவர்கள் பின்பற்றி வருகிறார்கள். ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற முறையாக இருக்கிறது. அப்படியும் இந்த விதிகளிலே சேர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணம் தெரியவில்லை. சட்டம் இருக்க வேண்டும் என்றுதான் கல்வியமைச்சர் அவர்கள் கூறுகிறார்களே தவிர, சட்டம் இருக்கின்றது என்று இங்கே சொல்லவில்லை. ஆதலால் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த விஷயத்தை அரசு பரிசீலித்து எதிர்காலத்திலே கொண்டு வருவதற்கு வழி செய்ய வேண்டும்; அதற்கான உறுதிமொழியைக் கல்வி அமைச்சர் அவர்கள் தர வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதிலே சங்கடங்கள் ஏற்படும் என்று சொன்னேன். இப்போதே வழக்கு மன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள் என்று நான் சொன்னேன். ஆகவே, 'administer' செய்ய சிறுபான்மையினர் மற்றையோர்களுக்கெல்லாம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலே வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த அளவில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, நாங்களே எங்கள் விருப்பப்படி எங்களுடைய பள்ளிகளிலே நியமிக்க உரிமையில்லை; கேட்டுத்தான் வாங்க வேண்டும். ஆகவே, வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்குத்தான் வாய்ப்புகள் ஏற்படும். ஆகவே இந்த நிலைமை தொழிற்சாலைகளில் ஏற்பட்ட பிறகு, அந்த முறையைக் காரணம் காட்டி, இதைச் செய்வது பற்றி யோசிக்கலாம் என்றுதான் நான் இப்போது சொல்கின்றேன். இப்போது கொண்டுவந்தால் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். கட்டாயப்படுத்தினால் வம்புக்கு இடம் ஏற்படும் என்ற காரணத்தினாலும் சுமுகமாக நடைபெற இடம் தரவேண்டும் என்பதற்காகவும், இதனால் சங்கடங்கள் இல்லாமல் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவும் தான் பொறுத்திருக்கின்றோம். ஆகவே இந்த முறையைக் கொண்டு வந்தால் அது கேள்விக்குறிக்கு இடமாகிவிடும். வழக்கு மன்றத்திற்குச் செல்கின்ற ஒன்றாக ஆகிவிடும். இதுதான் இந்தச் சட்டம் கொண்டுவருவதற்குக் காலதாமதமானதற்குக் காரணம். இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இரண்டொரு மாநிலங்களில் தள்ளி விட்டார்கள். அதற்குப் பிறகு தான் மத்திய அரசுடன் உட்கார்ந்து, நீங்கள் எந்த வகையிலே இருக்க

வேண்டும் என்று கேட்கின்றீர்களோ அந்த அளவுக்கு வரவேண்டுமென்று, நாமும் முதலிலே குறித்த அளவுக்குச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று, மத்திய அரசு கூறிய யோசனையின்பேரில் சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கின்றோம். ஆகவே இதை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை வாபஸ் பெறுகிறார்களா?

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, திருத்தம் இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய விஷயமாக இருப்பதன் காரணத்தினால் நான் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:—

In rule 9, in sub-rule (2) the following shall be added as item (1):—

"The School Committee shall call for a list of qualified persons from the Employment Exchange and make appointments from the list furnished by the Employment Exchange."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும். பின்னால் ஏதாவது விளைவாக எழுப்பி விளக்கம் கேட்கவேண்டுமே தவிர, திருப்பத் திருப்பச் சொற்பொழிவாற்றினால், எப்போது முடிவது? 27 திருத்தங்கள் கொடுத்திருக்கின்றார்கள்.

திரு. செ. என். கணபதி: துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் ஏற்கெனவே உயர்நீதி மன்றத்திலே வழக்கிலே இருக்கின்றது. அப்படி இருக்கும்போது, அந்தச் சட்டத்திற்கு இப்போது திருத்தம் கொண்டால் உயர்நீதி மன்றத்திலே இந்தத் திருத்தத்தை எடுத்துச் சென்றால், அங்கேயும் அவர்கள் ஒரு மறுப்பைச் சொல்லி, முடிவு எடுப்பதிலே காலதாமதம் ஏற்படும். அந்த அளவிலே நாம் இப்போது இதைப் பற்றிப் பேசுவது சரியான முறையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ்: துணைத் தலைவரவர்களே, சட்டத்தைப் பொறுத்த அளவிலே திருத்தம் கொண்டுவரவில்லை. ஆனால் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விதிமுறைகளில்தான் திருத்தம் கேட்கப்படுகிறது. எனவே மீண்டும் இந்த விதிமுறைகளை ஆசிரியர்களோடு, ஆசிரியப் பிரதிநிதிகளோடு ஆலோசித்த பிறகு இதை எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது நீதி மன்றத்தில் எந்த 400 பேர்கள் போயிருக்கின்றார்களோ அவர்களைப் பொறுத்த மட்டும்தான் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த 400 பள்ளிகளைத் தவிர மற்ற பள்ளிகளிலே இந்தச் சட்டத்தை அமல்படுத்த முழு அளவுக்கு நமக்கு உரிமை இருக்கின்றது. ஆகவேதான் அதனுடைய அடிப்படையிலே இந்த விதிகளை நாம் கொண்டு வருகிறோம். அந்தச் சட்டத்தை முழுமையாகத் தடுத்து நிறுத்தியிருப்பார்களானால், நாம் விதிமுறைகளைப்பற்றி விவாதிப்பதற்கு இடமிருக்காது. ஆக 400 பள்ளிகளை விட்டு, மற்ற பள்ளிகளிலே இந்தச் சட்டத்தின்படி நாம் இந்த நடைமுறையைச் செயல்படுத்துவதன் காரணமாக, விவாதம் செய்வதிலே தவறு இல்லை. அது தேவையா என்பதுதான் பிரச்சினை.

(பிற்பகல் 5–30)

விதி 13.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, இந்த அரசு இரும்பு சக்தியோடு, கடுமையான எதிர்ப்புக்கிடையே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறதென்பதை, தனியார் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மனமாரப் பாராட்டுகிறார்கள். ஆனால்; இன்று எதிர்பார்ப்பது, தனியார் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் இதுபோன்றதொரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதுதான்......

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதலில் திருத்தத்தை முன்மொழிய வேண்டும். அதை வழிமொழிந்த பிறகு, பேசலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட மூன்றாவது திருத்தத்தை முன் மொழிகிறேன்:—

In Rule 13 the following shall be added as sub-rule (7), namely:—

"The Secretary of the School Committee or the Headmaster of the School or the Educational agency or the Officers of the Education or any other Departments of the Government shall not ordinarily employ the teachers for duties not connected with Education."

திரு. பி. ஆர். தாமஸ்: துணைத் தலைவரவர்களே, நான் அதை வழி மொழிகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு தனியார் நிர்வாகங்களிலே இருக்கக்கூடிய பள்ளிகளிலே ஸ்கூல் கமிட்டி என்று வைத்துக் கொண்டு, மானேஜர்கள் என்று வைத்துக் கொண்டு, ஆசிரியர்களுக்கு கல்விக்கு அப்பாற்பட்ட பணிகளைத் தருகிறார்கள். அந்த நிர்வாகிகள் தங்கள் சொந்த வேலைகளையும் ஆசிரியர்கள் மீது சுமத்துகிறார்கள். அரசாங்கத் துறையைப் பொறுத்தவரையில், எப்போ

[திரு. செ. முத்துசாமி] [1975 ஏப்ரல் 18

தாவது ஒரு தேசியக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்லப் படுகிறது. ஆனால் தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவர்களது மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும், மொழியின் பெயராலும், பள்ளி நிர்வாகியின் சௌகரியத்திற்காக ஆசிரியர்கள் சில பணிகளில் ஈடுபட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உதாரணத்திற்கு நான் ஒரு விஷயத்தைச் சொல்ல முடியும். ஓர் இந்துப் பள்ளியில் ஒரு கிருத்துவர் பணியாற்றினார். அவரை, ஒரு ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கு வர வேண்டு மென்று சொன்னார்கள். ஞாயிற்றுக் கிழமை, "பிரேயர் டே" இருப்பதால் வர முடியாதென்று அந்த ஆசிரியர் சொன்னார். எனவே, அவர் மீது நடவடிக்கை எடுத்து, பணியிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். இப்படிப் பட்ட விரோத மனப்பான்மையில் நிர்வாகிகள் ஈடுபடுகிறார்கள். எனவே, கல்வி அல்லாத பிரச்சினைகளை அவர்கள் மீது திணிக்கக்கூடாதென்பதற் காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். கல்விக் கூடங் களிலே சங்கடங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பொது வாக கல்விப் பணியோடு தொடர்பில்லாத பல்வேறு பணிகளில் ஆசிரியர் களை ஈடுபடுத்தி, அதனால் அவர்களுடைய வசதி வாய்ப்புக்கள் பாதிக்கு மானால், அதன் மீது தக்க நடவடிக்கைகளை மேல் முறையீடுகள் மூலம் எடுத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட புகார்கள் பெரும்பாலும் வந்த தாகத் தெரியவில்லை. ஆனால், நாம் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டால், அதில் பல்வேறு சங்கடங்கள் வரக்கூடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அளவுக்கு எங்கேயாவது ஆசிரியர்களின் உரிமைகள் பறிக்கப்படுகிற அளவுக்கோ அல்லது வசதி வாய்ப்புகள் பறிக்கப் படுகிற அளவுக்கோ இருந்தால், அவற்றை மேல் முறையீடுகள் மூலமாகத் தீர்த்துக் கொள்ள தக்க நடவடிக்கை எடுக்க ஏற்கெனவே இருந்த சட்ட திட்டங்களை விட, புதிதாக உள்ள சட்ட திட்டங்கள் நமக்கு ஓரளவுக்குப் பயன்படும் வகையில் அமையும். ஆனால் இந்தத் திருத்தத்தை மேற் கொண்டால், ஒரு குறிப்பிட்ட அளவிலே கட்டுப்படுத்தும் சூழ்நிலைகளை ஏற்படுத்திய பிறகு, யாரும் எந்த வித வேலையும் செய்ய முடியாத அளவுக்கு மாறுகின்ற சூழ்நிலைகள் ஏற்பட்டால், அதனால் நாட்டிற்குச் சங்கடங்கள் ஏற்படும். அந்த வகையில் பொதுவாகப் பார்ப்போமானால், பல திட்டங்கள் இன்று இருக்கின்றன. மதிய உணவுத் திட்டம் இருக்கிறது. கல்விக்கும் அதற்கும் சம்பந்தமில்லையென்று வாதிட முடியும். அந்தப் பொறுப்புக்களை எல்லாம் ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளும் நிலைமை வரும். பொதுவாக தேசியப் பணிகள் என்ற அளவுக்கு, வாக்காளர் பட்டியல் தயார் செய்தல், மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்றவை களிலே உள்ளாட்சித் துறையிலே பணி புரிபவர்கள் பணி புரிவது போன்று ஆசிரியர்களும் பணி புரிய வேண்டி வரும். இந்தத் திருத்தத்தை மேற் கொண்டுவிட்டால், அப்படிப்பட்ட நிலைமை வரும்போது, அதற்கு சிறிது கூட இடம் இல்லாத அளவுக்குச் சங்கடங்கள் ஏற்படும். ஆனால், உறுப் பினர் அவர்கள் கூறுகின்ற மாதிரி ஏதாவது நிகழ்ந்தால், தனிப்பட்ட



[1975 ஏப்ரல் 18 [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முறையில் அதை நிவர்த்தி செய்ய வழி வகைகளை நாம் மேற்கொள்ளலாம். ஆகவே, இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. செ. முத்துசாமி அவர்கள் தம்முடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், கல்வி அமைச்சரவர்கள் கூறக்கூடிய கருத்துக்களில் எந்த வித வேறுபாடும் இல்லை. இன்றைக்கு, "கோட் ஆப் காண்டக்ட்"ல் ஸ்கூல் கமிட்டி வைத்துக் கொள்ளலாமென்று இருக்கிறது. கல்வி அதி காரிகள் இதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. "கோட் ஆப் காண் டக்ட்"-ல் ஸ்கூல் கமிட்டி வைத்துக் கொள்ளலாமென்று கொண்டுவந்து விட்டால், அதை பின்னால் அரசாங்கமே தடுத்து நிறுத்தக்கூட உரிமை யில்லை. மீண்டும் சட்ட மன்றத்திலே திருத்தம் கொண்டு வந்து, நிறை வேற்றிய பிறகுதான் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். அப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்பட்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேறு எந்த விதிகளிலும் இடமில்லாத காரணத்தால்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். வேறு விதிகளில் இடம் இருக்கிறது அல்லது இடம் இல்லாமல் போனால் விதி கொண்டுவரப் படுமென்று கல்வி அமைச்சரவர்கள் கருதுவார்களானால், இந்தத் திருத்தத்தை வற் புறுத்தாமல் திரும்பப் பெறுகிறேன். அதற்கான விதி முறைகளை எதிர் காலத்தில் கொண்டுவர வேண்டுமென்று கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முன்பு இல்லாத அளவுக்கு, இப்போது பள்ளியை நிர்வகிக்கும் குழுவில் தலைமை ஆசிரியரும், பொறுப்புள்ள இரண்டொரு ஆசிரியர்களும் இடம் பெறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடம் ஏற் படாது. அப்படி ஏற்பட்டால்கூட, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு மேல் அதிகாரிகளிடம் முறையீடு செய்து கொள்ளலாம். பின்னால் இந்தத் திருத்தத்தைச் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அதுபற்றிப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். இப்போது இது தேவையில்லை.

திருத்தம் (3), அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

விதி 14.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத் தம் (4)ஐ நான் முன் மொழிகிறேன் :—

In rule 14, in sub-rule (3), the following sentence shall be added at the end namely—

"The minutes of the meeting of the School Committee shall be displayed prominently in the notice board of the school."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திருத்தத்தை வழி மொழிவதற்கு யாரும் இல்லாததால்...............

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவரவர்களே, நான் வழி மொழிகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் குழு ஒன்று இருக்கிறது. அந்தக் குழுவிலே எத்தனை உறுப்பினர்கள் இருப்பார்களென்ற விவரம் இல்லை. பள்ளி நிர்வாகம் எத்தனை பேர்களை வேண்டுமானாலும் உறுப்பினர்களாகப் போடலாம். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், இத்தனை பேர்கள் என்று உச்ச வரம்பு சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழுவிலே ஆசிரியர்களுக்கு எவ்வளவு மரியாதை இருக்குமென்பது இனிமேல்தான் தெரியும். அரசினுடைய சட்டத்தை மதிக்காமல், பல்வேறு நிர்வாகங்கள் இந்தக் குழுவையே ஏற்படுத்தாமல் இருக்கிறார்கள்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருப்பது, அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தைப் பொறுத்ததாக இல்லை. வேறு விஷயமாக இருக்கிறது. "மினிட்ஸ்"-ஐப் பொதுவாக வெளியிட வேண்டுமென்று திருத்தம் இருக்கிறது. அதைப் பற்றிப் பேசுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : நான் அந்தக் குழு என்ன செய்கிறதென்பதற்குத்தான் சொல்கிறேன். குழுவின் "மினிட்ஸ்"-ஐப் பொதுவாக வெளியிட வேண்டுமென்பதற்காகத்தான், குழுவின் அடிப்படையைப் பற்றிச் சொன்னேனென் என்று உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குழுவினுடைய நடவடிக்கைகளை பள்ளியினுடைய நோட்டீஸ் போர்டிலே வெளியிட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதைப் பற்றி நீண்ட நேரம் கூட்டாய்வுக் குழுவில் ஆராய்ந்து, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். நான் முதலிலேயே குறிப்பிட்ட மாதிரி, இந்தக் குழுவில் தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்கள் இடம் பெறுகிறார்கள். ஆகவே, பெரும்பான்மை, சிறுபான்மை, என்று இடையிலே ஒரு முடிவெடுத்து, அநியாயத்திற்கு இடம் தரும் சூழ்நிலை இப்போது இல்லை. இந்தக் குழுவிலே வாதாடுவதற்கான வாய்ப்பு தலைமை ஆசிரியருக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. மெஜாரிட்டி அடிப்படையிலே ஓர் அநியாயமான முடிவை எடுத்துவிடுவார்களேயானால், மேல் முறையீடு மூலம், அந்த அநியாயம் நடக்காத அளவுக்கு வாய்ப்பும், வசதிகளும் இன்று இருக்கின்றன. ஆனால், உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தம், நடவடிக்கைகளை விளம்பரப் பலகையில் போட வேண்டுமென்று இருக்கிறது. அந்தக் குழுவில் ஆசிரியர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். தலைமை ஆசிரியர் இடம் பெற்றிருக்கிறார். அந்தக் குழுவின் நடவடிக்கைக் குறிப்புகள் அவர்களுக்குக் கிடைக்கும். அவர்கள் மூலமாக மற்ற ஆசிரியர்கள் அறிய வாய்ப்பு இருக்கிறது. எந்த ஒரு அமைப்பும், குழுவின் நடவடிக்கைகளை விளம்பரப் பலகையில் போட்டு, மற்றவர்கள் பார்க்கும்படியாக வைக்க மாட்டார்கள். அந்தக் குழுவிலுள்ள அங்கத்தினர்கள் மூலமாக மற்றவர்கள் அறியும் வாய்ப்பு இருப்பதால் விளம்பரப் பலகையில் போடத்தான் வேண்டுமென்று வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

திரு. செ. முத்துசாமி : திருத்தத்தை வலியுறுத்தவில்லை ; திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம் அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

## விதி 15

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தம் 5-ஐ முன்மொழிகிறேன்:

**In rule 15 (1), in sub-rule 4 or item (i)the following shall be substituted, namely :**

**"Promotion shall be made in accordance with strict seniority except where a senior does not possess the prescribed qualification for holding the higher post or is definitely proved incompetent to hold such post.**

**Non-promotion to any post shall be deemed to be an alteration of service conditions under section 23 of the Act".**

திரு. பி. ஆர். தாமஸ் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, பதவி உயர்வு அளிக்கும்போது, சீனியாரிட்டி அடிப்படையிலே வழங்க வேண்டுமென்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அரசுப் பள்ளிகளிலும், உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த பள்ளிகளிலும் சீனியாரிட்டி அடிப்படையில் தான் பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன. பல்வேறு இடங்களில் அப்படி கொடுக்கப்பட்டும் இருக்கிறது. அந்த சீனியாரிட்டி முறையிலே பதவி உயர்வு தனியார் பள்ளிகளிலே வழங்கப்படுவதில்லை. மற்ற அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளில் உள்ளதுபோல், சீனியாரிட்டி அடிப்படையிலே பதவி உயர்வு வழங்க, இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5—40).

திரு. எஸ். டி. ஆதித்தன்: தலைவரவர்களே, அதிலே அடிப்படையான ஒரு விஷயம் அடங்கியிருக்கிறது. அதாவது பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற பிள்ளைகள் இருக்கின்றார்களே அவர்களுடைய நன்மைகளை கவனிக்க வேண்டுமா அல்லது ஆசிரியர்களுடைய நன்மைகளை கவனிக்க வேண்டுமா ? அடிப்படை யாது ? பதவி உயர்வுக்குத் தகுதியான அடிப்படை என்பது மாணவர்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். சீனியாரிட்டி அதாவது மூப்பின் பேரிலே பதவி உயர்வு என்பது ஆசிரியர்களுக்கு மாத்திரம் தான் நன்மை பயக்கும். ஆனால் மாணவர்களுடைய கோணத்திலிருந்து அதைப் பார்க்க வேண்டும். மாணவர்களுடைய கோணத்திலிருந்து பார்க்கிறபொழுது, பதவி உயர்வு தகுதியுடையவர்களுக்கு மாத்திரம் தான் கொடுக்கப்பட வேண்டும். சிற்சில சமயங்களில் நீண்டகால அனுபவத்தையொட்டி ஒருவேளை மூப்பையும் வைத்து கவனிக்கலாமே தவிர, மூப்பை அடிப்படைத் தகுதியாக வைப்பது முக்கியமாக தனியார் பள்ளிகளிலே பொருத்தமாயிராது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பதவி உயர்வு என்று வருகின்றபொழுது, பொதுவாகவே தகுதி, திறமையினுடைய அடிப்படையிலே தரப்பட வேண்டும். அதோடு வேண்டுமானால் மூப்பு நிலையும் சேர்த்து கவனிக்கப்பட வேண்டும் என்பது தான் பொதுவாக இப்பொழுது இருக்கின்ற சட்டம். எந்த ஒரு இடத்திலேயும் சீனியாரிட்டிபடிதான் கொடுக்க வேண்டுமென்று எந்த ஒரு சட்டத்தை நாம் புரட்டிப் பார்த்தாலும் இருக்காது. தகுதி, திறமை தான் இருக்கும். ஆனால் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், பணி மூப்பு நிலை, தகுதி, திறமை இவற்றை அலசிப் பார்க்கிறபோது, பெரும்பான்மையான இடங்களில் பணி மூப்புக்குத் தான் இடம் தந்து வருகின்றோம். ஆனால் சட்டத்திலே எப்படி இருக்கிறது என்று பார்த்தால், எந்த இடத்தைப் பார்த்தாலும், எந்த புரமோஷனைப் பார்த்தாலும், தகுதி, திறமையினுடைய அடிப்படையிலே தான் இருக்கிறது. ஆனால் இரண்டு பேர் ஒரே தகுதி, திறமையுடையவர்களாக வந்து விட்டார்கள் என்ற நிலை வருகின்றபொழுது அங்கு தான் சீனியாரிட்டியையும் கவனிக்க வேண்டுமென்று எந்தச் சட்டத்திலும் இருக்கும். ஆனால் பெரும்பாலும் பணி மூப்பு நிலை கவனிக்கப்பட வேண்டுமென்பதுதான் நாம் நடைமுறையிலும் கடைப்பிடித்து வரும் முறையாகும். ஆனால் சட்ட திட்டத்திலே பதவி உயர்வுக்கு தகுதி, திறமை எல்லாம் இருக்க வேண்டுமென்ற நிலைமை தான் இருந்து வரும். ஆனால் யாராவது, புறக்கணிக்கப்பட்டு, மேல் முறையீடுகள் வந்தால், அதை ஆராய, சீர் செய்ய வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால் எல்லாத் துறைகளிலேயும் கடைப் பிடிக்கப்படுகின்ற அதே முறை தான் இங்கேயும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கத் தன்மைகளிலே கூட நாம் சீனியாரிட்டி படி தான் கொடுக்க வேண்டுமென்று இல்லை. இங்கேயும் தகுதி, திறமை என்று தான் வைத்திருக்கின்றோம். ஆனால் பணி மூப்பு நிலையைப் புறக்கணிக்காமல்



எந்த அளவுக்கு நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோமென்பது யாராவது இதை ஆராய்ந்து பார்த்தால் புரியும். யாரையாவது கீழே தள்ள வேண்டுமென்று சொன்னால், அப்பொழுது தகுதி, திறமை என்று சொல்லி, திறமையுள்ளவர் இல்லையாதலால் தான் அடுத்தவர்களைக் கொண்டு வருகிறோமென்று காரணம் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் பணி மூப்பு நிலை தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அப்படி வேண்டுமென்றே யாராவது புறக்கணிக்கப்பட்டு கீழே உள்ளவர்களை மேலே கொண்டு வந்தால், அப்படிப் புறக்கணிக்கப்பட்டவர்கள் விண்ணப்பித்துக்கொண்டால், அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலே நியாயம் கோர வழிவகைகள் இப்பொழுது இருப்பதன் காரணமாக இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அரசுத் துறையிலே இருக்கக்கூடிய அளவிற்கு இவர்களுக்கும் கொடுப்பதற்கு ஒப்புதல் அளிப்பது போல், அதைப் பொறுத்தவரையில் அமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்லுகிறார்கள்.. அரசுத் துறையிலேயும், உள்ளாட்சித் துறையிலேயும், நிறுவனங்களிலேயும் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு எந்த முறையில் இந்தப் பதவி உயர்வுக்கான விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவோ அதே விதியை இவர்களுக்கும் கொண்டு வருவோம் என்ற அடிப்படையிலே கல்வி அமைச்சர் அவர்களுடைய ஒப்புதல் இருக்குமானால், இதை வற்புறுத்தத் தேவையில்லை. இதை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஒப்புதலை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைக் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த முறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று தான் நானும் சொல்வேன். அவர்களும் இந்த முறையைக் கடைப்பிடித்தால் தான் நல்லது. அவர்கள் இன்னாருக்குத்தான் தகுதியிருக்கிறது, இன்னாருக்குத் தான் திறமை இருக்கிறது., ஆகவே தான் அவரை விட்டுவிட்டு இவரைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறபொழுது, இது கேள்விக் குறியாகிறது. அப்படி பாதிக்கப்பட்டவர்கள் விண்ணப்பித்துக்கொண்டால் அது ஆராயப்பட்டு, தவறு என்று படுமேயானால் சில இடங்களிலே மேல் நிலையிலே இருக்கின்றவர்கள் தீர்ப்பு அளிக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் வர வேண்டும். பெரும்பாலும் தகுதி, திறமை இருந்து பணி மூப்பு நிலையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கை. அதைத் தான் நாம் வற்புறுத்தி வருகிறோம். ஆனால் தவறு ஏற்படுகின்றபொழுது, மேல் முறையீட்டின் மூலம் அதைத் திருத்துவதற்கு வாய்ப்பு தரப்பட வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அரசுத் துறையைப் போலவே இதற்கும் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று நான் திரும்பவும் கேட்கிறேன். அதைப்பொறுத்தவரையில் கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆதலால்........

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 27 திருத்தங்களை வைத்துக் கொண்டு, ஒரு திருத்தத்திற்கு இரண்டு நிமிஷம் ஆனால்கூட 7 மணிக்குக்கூட இது முடியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசு துறையில் கூட நாம் வைத்திருக்கிறோம். சீனியாரிட்டிபடிதான் நாம் கொடுக்கிறோம். நடைமுறையில் நாம் அதற்கு அதிக மதிப்பு அளித்து வருகிறோம். மற்றவர்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை..

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறுவதிலிருந்து அதை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்பதுதான் கருத்து. எனவே நான் இதை வலியுறுத்தவில்லை.

விதிகள் 15, 16, 17, 20 விதி 31 மற்றும் இணைப்புகள் *II, III*

திருத்தம் மேலவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, திருத்தங்கள் 6 முதல் 10 வரை ஆசிரியர்களுடைய பணி வரன்முறை காலத்தைப் பொறுத்த அளவில் இருக்கின்ற காரணத்தினால் திருத்தங்கள் 6 முதல் 10 வரை ஒன்றாகவே முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: திரு. முத்துசாமி அவர்கள் 27-ஐயும் மொத்தமாக முன் மொழிந்தால் கூட நான் அனுமதிக்கிறேன்.

திரு. எஸ். டி. ஆதித்தன்: தலைவரவர்களே, ஆறு முதல் பதின் மூன்று அல்லது ஆறு முதல் பத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 6 முதல் 10 வரை தான்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, தாங்கள் கூறுவதுபோல் உறுப்பினர் அவர்கள் திருத்தங்கள் 6 முதல் 27 வரை ஒன்றாக முன் மொழிவதற்கு வழிவகை செய்யப்படுமானால், அவர்கள் குறிப்பிடுவதற்கு முன் வருவார்கள் என்று நம்புகிறேன். அந்த அடிப்படையில் விதி முறைகள் அனுமதிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவர் அப்படி ஒன்றாகக் குறிப்பிடுகிறேன் என்றுதான் சொன்னார். நான் தான் தனித்தனியாகக் கொண்டுவரும்படி சொன்னேன். ஆனால் இப்பொழுது மொத்தமாகக் குறிப்பிட்டால் நல்லது என்று உணர்கிறேன். விதிமுறைகள் இடம் தரும். திரு. முத்துசாமி அப்படியே செய்யலாம். "6 முதல் 27 வரை இருக்கிற திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்" என்று திரு. முத்துசாமி அவர்கள் சொன்னால் போதும்.



திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, நேரம் போதாதென்ற காரணத்தால் அத்தனையையும் எடுத்து மொத்தமாகச் சொல்லி விடுகிறேன். ஆனால் அதற்கான விளக்கம் அளிக்கப்படவேண்டுமென்ற அந்த உரிமையின் அடிப்படையிலே நான் (6) முதல் (27) வரையிலான கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:—

After sub-rule (5), the following shall be added as sub-rules (6) to (13), namely :—

"(6) Any teacher or other person appointed in a private school under regular vacancy shall be on probation for a period of one year from the date of taking charge of his appointment."

(7) Extension of probation: If at the end of the prescribed period of probation the School Committee considers that he is not suitable for confirmation, the School Committee may extend his probation by a period which in no case shall be longer than one year from the date of expiry of the period of probation prescribed in sub-rule (6). In cases where the probation is extended a condition should be attached to the order of extension that the probationer's increment will be stopped until he is declared to have satisfactorily completed his probation. Such stoppage of increment shall not be treated as a penalty but only a condition of extension of probation and shall not have the effect of postponing future increments after he is declared to have satisfactorily completed his probation.

(8) (*a*) Termination of probation: The School Committee may before the expiry of the period of probation for reasons to be specified in writing terminate the probation of a teacher or other person with the previous permission of the competent authority under rule 17 :

Provided that an opportunity to show cause against termination of probation shall be given to the person concerned after the School Committee has arrived at a provisional conclusion, regarding the termination of probation.

(*b*) At the end of the period of probation or the period of probation as extended under sub-rule (7), the School Committee shall consider the probationer's suitability for confirmation in the post for which he was selected. If the School Committee decides that the probationer is suitable for confirmation, it shall as soon as possible issue an order declaring the probationer to have satisfactorily completed his probation. If no such order is issued within a period of three months from the date on which he is eligible for such declaration, the probationer shall be deemed to have satisfactorily completed his probation on the date of expiry of the prescribed or extended period of probation.

(c) No order passed under clause (a) shall be based either wholly or in part upon the probationer's work and conduct after the expiry of the prescribed period of probation.

(9) Any teacher or other person appointed in a private school who has completed his probation under rule 15(6) shall be confirmed at the earliest opportunity according to his seniority as determined under Explanations (1) and (2) of sub-rule (10).

*Explanation*: An approved probationer may be confirmed in a post with retrospective effect from the date on which the vacancy arose or from the date on which he was continuously on duty in that post or in a higher post whichever is later. For the purpose of this rule an approved probationer on leave shall be deemed to be on duty in the grade concerned as if he would have been on duty in such grade or in a higher grade but for his absence on leave.

(10) *Order of discharge or reversion of persons due to want of vacancy*—The order of discharge of teachers or other persons who have been appointed in temporary vacancies who are on probation and persons who have completed the period of probation, for want of vacancy, shall be—

(i) persons who have been appointed in temporary vacancies in the order of juniority ;

(ii) persons who are on probation in the order of juniority ; and

(iii) persons who have completed their period of probation in the order of juniority.

*Explnation* (1) For the purpose of this rule, juniority as between persons who are on probation in a grade and as between the persons who have completed their period of probation in a grade shall be determined with reference to their date of first appointment in that grade, other than temporary appointment.

Where the date by which seniority is determined is the same in the case of two or more persons of a grade, their seniority *inter se* shall be determined by the order of preference, if any previously laid down in their cases, or in case of doubt, seniority shall be determined by the ompetent authority.

In case of temporary appointments the seniority shall be determined with reference to the actual date of joining the post.



*Explanation* (2) The unit for selection of persons for discharge r roversion shall be the group of holders of the posts of the same grade r higher grades if any to which transfers, appointments or promotions re normally made.

(11) (*a*) *Re-appointment of persons discharged or reverted*—ersons who have been discharged or reverted for want of vancancies nder sub-rule (10) shall be re-appointed as vacancies aries in the iverse order laid down in that rules

Provided that nothing contained in this sub-rule shall be deemed give any such person a right to be re-appointed in preference to iother who has been discharged or reverted later due to abolition of osts and who is entitled to re-appointment.

(*b*) When an approved probationer or probationer in a post who is been discharged for want of vacancy fails to join duty when re-pointed to that post, he shall be called upon to show cause before a ecified date against the removal of his name from the list of approved obationers or probationers, as the case may be. If no cause is shown gainst such removal within the specified time or if the grounds adduced e not acceptable to the School Committee, the School Committee all by an order in writing remove his name from the list of approved obationers or probationers as the case may be and record the reasons erefor and communicate a copy of the order of removal to him. An peal against such order of removal (which should be preferred within ie month from the date of receipt of the order) shall lie to such appelte authority as prescribed in rule 18.

(12) *Order of preference for employment in a unit*— When candites are required for employment in a unit, preference shall be given the persons already discharged or reverted from such posts in the it so long as such persons desirous of such appointments are available, pointments being made in the inverse order in which they were disarged or reverted.

(13) *Appeal by persons eligible for re-employment*—Any person gible for re-employment shall be entitled to appeal to the authority whom an appeal from an order dismissing him would lie on the ground at some person who would have been re-employed later has been employed before him. Such appeal shall be preferred within one onth after the date on which such other person is re-employed.

[திரு. செ. முத்துசாமி] [1975 ஏப்ரல் 18

விதி 16.

In rule 16, for sub-rule (2) the following shall be substituted namely :—

"(2) A teacher or other person employed in a private school may be liable to disciplinary action and punishment if he violates any of the provisions of the code of conduct"

விதி 17.

In rule 17, to sub-rule (2), the following shall be added as proviso, namely :—

"Provided that an order of suspension made or is deemed to have been made under this rule may, at any time, be revoked by the School Committee which made or is deemed to have made the order' or by the appellate authority prescribed in rule 18.

விதி 20.

In rule 20, the following sentence shall be added at the end, namely :—

"Any teacher or other person affected by closure of the class or course of instruction shall be absorbed in any private school or in any school maintained by the Government or by the Local bodies without prejudice to his pay and allowances and service conditions."

புதுவிதி 31.

After rule 30, the following shall be added as rule 31, namely :—

(1) Save as otherwise provided for in these rules or any other rules for the time being in force the conditions of service of teachers or other persons employed in private schools shall be the same as those of teachers or other persons employed in Government schools in respect of the following matters, namely—

(a) Pay and allowance ;

(b) Leave and Leave salary ;

(c) Travelling allowance ;

(d) Superannuation and retirement ; and

(e) Superannuation and retirement benefits.



[திரு செ. முத்துசாமி] [1975 ஏப்ரல் 18

(2) The Fundamental Rules the Tamil Nadu Leave Rules, the Manual of Special Pay and Allowances and Pension Code, as amended from time to time, in so far as they may be applicable and except to the extent expressly provided in these rules shall MUTATIS MUTANDIS apply to the teachers or other persons employed in private schools in the matter of pay and allowances, Leave including study leave, leave salary and other conditions of service.

The powers assigned to the Government under the Funbamental Rules shall be exercised by the School Committee and the powers assigned to the Head of the Department shall be exercised by the Secretary to the School Committee.

இணைப்பு II.

18. In Annexure II for paragraph (2) the following shall be substituted ; namely :

"No teacher or other person employed in a school shall ordinarily absent himself from his duties without prior permission from the headmaster of the school".

19. For paragraph (3) the following shall be substituted; namely :

"No teacher or other person employed in a school shall engage directly or indirectly in any trade or business. In case of remunerative works other than private tuitions specific written sanction of the school authority shall be obtained.

Nothing in this section shall be deemed to prohibit any teacher or other person in setting or valuation of examination papers conducted by the Government or any statutory body.

Notwithstanding anything contained in this rule or any other rules, a teacher or other employee may publish works of literature, short story, drama, essay or poetry.

Notwithstanding anything contained in this rule, a teacher may engage himself in not more than five tuitions without prior approval of the school authority.

20. For paragraph the (6) following shall be substituted namely :

A teacher or other person employed in a private school shall avoid habitual indebtedness. If he is adjudged or declared insolvent or has incurred debt aggregating to a sum which in ordinary circumstances

he could not repay within a period of two years or if a part of his salary is frequently attached for debt or has been continuously attached for a period of two years or is attached for a sum which in ordinary circum stances he could notrepay within a period of two years, he may unless he proves that the insolvency or indebtness is the result of thecircumstances which with exercise of ordinary diligence he could not have foreseen, over which he had no control and has not proceeded from extravagant or dissipated habits, be presumed to have contravened this code of conduct. A teacher or other person employed in a private school who applied to be or is adjudged or is declared insolvent shall forthwith repott his insolvency to the School Committee.

21. For paragraph (8) the following shall be substituted namely:

"No teacher or other person in a private school shall engage himself in any political activity. He shall not be associated with any political party or organisation which takes part in politics or shall subscribe to, or assist in, any other manner any political movements.

Nothing in this rule prohibits any teacher or other person employed in a private school from associating with any service organisation or unions or Federations and in taking part in such associations unions or federations or in assisting in any other manner in organisational matters of such associations, unions or Federations.

22. Omit paragraph (9).

23. Renumber existing paragraph (10) as paragraph (9).

24. For existing paragraph 11, the following shall be substituted; namely:

"No teacher or other person employed in a private school shall engage himself or participate in any demonstration or activity which is prejudicial to the sovereignty and integrity of India, the security of the State, the friendly relations with foreign states, public order, decency, or morality or which involves contempt of court, defamation or incitemet of offence.

Nothing in this item shall prevent the teacher or other person employed in a private school from participating in the demonstrations or processions or activities sponsored by the service unions, associations or federations".

25. Renumber existing paragraph (12) as paragraph (11).



இணைப்பு III.

26. In Annexure III, in paragraph 1 in sub-paragraph (1) for items (a) and (b), the following shall be substituted, namely:

*Pre-primary, Primary and Middle Schools in Non-Panchayat Union areas*: The Secretary of the school shall submit a monthly statement containing details of teachers and other persons, their pay and allowances etc., for the month to the Deputy Inspector of Schools. The Deputy Inspector of Schools after scrutiny shall submit the same to the District Educational Officer concerned with the recommendations. The District Educational Officer shall release the teaching grant to the Secretary in the form of individual cheques drawn in favour of teachers or other employees which will be sent to the respective teachers or other employees by post before the 25th of every month.

27. (*b*) *Pre-primary, Primary and Middle Schools in Panchayat Union areas*: The Secretary of the School Committee shall submit the details of teachers and other persons, their pay and allowances for the month to the Deputy Inspector of Schools. The Deputy Inspector of Schools after scrutiny of the statement shall submit them to the District Educational Officer concerned with his recommendations marking a copy to the Commissioner of the Panchayat Union concerned.

The Panchayat Union Commissioner shall issue cheques during the last week of the month to the teachers and other persons for the amount recommended by the Deputy Inspector of Schools. Such cheques shall been cashed on the 1st of the next month or any date authorised by the Director of School Education.

In the meantime the recommendations of the Deputy Inspector of Schools shall be perused by the District Educational Officer and he shall issue sanction orders to the Commissioner. If any variations are found between the amount for which cheques are issued and the amount sanctioned by the District Educational Officer, the amount shall be adjusted in the payment for the next month by the Commissioner.

திருத்தங்கள் முறைப்படி வழிமொழியப்பட்டன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தகுதிகாண் பருவம் அதாவது புரபேஷனைப் பொறுத்த விதிகளை டீச்சருக்கும், மானேஜருக்கும் இடையே இருக்கக்கூடிய காண்டிராக்ட் பிரிவிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த "புரபேஷன்" எப்படி இருக்க வேண்டும், எந்த அடிப்

[திரு. செ. முத்துசாமி] [1975 ஏப்ரல் 18

படையிலே இருக்க வேண்டுமென்று அனெக்சரிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. துணை விதிகளிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் துணை விதிகளில், மானேஜருக்கும் ஆசிரியருக்கும் இடையே ஏற்படக்கூடிய காண்டிராக்ட் மீறப்பட்டால் யார் நடவடிக்கை எடுப்பது என்பது சனிலே தெளிவாகத் தரப்படவில்லை. ஆதலால் தான் இந்த காண்டிராக்டிலே இருக்கக் கூடிய புரபேஷனைப் பொறுத்தவரை, ஓராண்டுக்குப் பிறகு "புரபேஷன்" டிக்ளேர் செய்யப்பட வேண்டுமென்ற முறையை விதிகளிலே் கொண்டுவர வேண்டுமென்று நான் திருத்தமாகக் கொடுத்திருக்கிறேன். அரசுத் துறைகளிலே எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறதோ, அரசுத் துறையிலே எவ்வாறு ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு பணி வரன்முறைக்கான விதிமுறை வகுக்கப்பட்டிருக்கின்றதோ அதே விதியைத்தான் ஏற்றுக் கொள்கிறோம் என்று செலக்ட் கமிட்டியிலே கூட அரசு ஒப்புக் கொண்டது. கல்வி அமைச்சர் அவர்கள் கூட ஒப்புக் கொண்டார்கள். இங்கே தெளிவாக, அரசுத் துறையிலே, உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு என்ன நடைமுறை இருக்கிறதோ அந்த நடைமுறையை வகுத்துத் தர வேண்டும். எதிர் காலத்தில் அந்த முறையைக் கட்டாயம் கொண்டுவர வேண்டும். காண்டிராக்டுகளில் இருப்பதை விதிகளில் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் காண்டிராக்டிலே விதிமுறைகள் மீறப்பட்டால், நடவடிக்கை எடுப்பதற்கு இதிலே வழி இல்லை என்பதை நான் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, 11-வது திருத்தத்தைப் பொறுத்த வரையில், பணிக் குறைப்பு வரும்போது, "ரிடிரென்ச்மென்ட்" வரும்போது, பணிக் குறைப்பைப் பொறுத்த அளவில், "ஜூனியர் மோஸ்ட்" ஆக இருக்கக் கூடியவரை "ஊஸ்ட்" செய்ய வேண்டுமென்ற நடைமுறை அரசுப் பள்ளிகளிலே இருக்கிறது. உள்ளாட்சித் துறையில் இருக்கிறது. தனியார் துறையில் சில நேரங்களில் அதை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அந்தப் பணிக் குறைப்புக் காரணமாக "ஜூனியர் மோஸ்ட்" ஆசிரியர்தான், கடைசி ஊழியக் காலம் உள்ள ஆசிரியர் தான் நீக்கப்பட வேண்டும் என்று விதித் திருத்தம் கூறுகிறது. அதையும் அரசுத் துறையிலே இருப்பதுபோலவே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தங்கள் 12 மற்றும் 13 பணி நீக்கம் செய்தவர்களைப் பற்றியது. ஒரு தனியார் பள்ளியிலிருந்து ஆசிரியர்கள் நீக்கப்பட்டு விடுகிறார்கள். 4, 5 பேர் நீக்கப்பட்டு மீண்டும் அங்கே பணி இடம் ஏற்பட்டு சேர்க்கப்படும் பொழுது, சீனியாரிட்டி அடிப்படையிலே உரிமை வழங்கி அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய உத்திரவாதத்தை வழங்க வேண்டுமென்று இந்தத் திருத்தம் கூறுகிறது. இதிலும் கல்வி அமைச்சரவர்கள் அரசுத் துறையிலே இருக்கிற நடைமுறையைத்தான் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். பொதுவாக அரசுத் துறையிலே இருக்கின்ற செலக்ட் கமிட்டியிலே ஒப்புக் கொண்ட முறைகள் தான் இப்பொழுது இருக்கக் கூடிய நடைமுறைக்கு உட்பட்டு இந்தத் திருத்தங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான கல்வி அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1975 ஏப்ரல் 18] [திரு. செ. முத்துசாமி]

அதற்கு அடுத்தாற்போல் 14வது திருத்தத்திலே நடத்தை விதியை மீறினால் ஒழுங்கு நடவடிக்கை என்பதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நடத்தை மீறினால் ஒழுங்கு நடவடிக்கை என்று சொல்லும்பொழுது, அந்த விதியிலே மிகக் கடுமையான வாசகத்தைப் போட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-50)

இந்தக் code of conduct-ன்படி liable to disciplinary action கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும் என்ற ஒரு முறையில், நாம் திட்டவட்டமாக அவர்களுக்கு, மானேஜ்மெண்டிற்குச் சொல்லுவதைப் போல, "நீங்கள் நடவடிக்கை எடுக்காமல் விடக் கூடாது, உங்களுக்கு discretion இல்லை, உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று இந்த விதிகளிலே சொல்லப்பட்டிருக்கின்றது. சாதாரணமாக; கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லும் போது, பள்ளிக்கூடத்திற்குச் சற்று நேரம் கழித்து வருவதைக் கூட, code of conduct-ன் கீழே கொண்டு வருகிறார்கள். இதிலே "Shall" என்ற வார்த்தையை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக, "May" என்ற வார்த்தையைப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, "டிஸிப்பிளினரி ஆக்ஷன்" என்று சொல்லும்போது, தண்டனையாக என்ன கொடுக்க வேண்டும் என்ற "இன்டிகேஷன்" விதிகளிலே கொடுப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். "டிஸிப்ளினரி ஆக்ஷன்" என்றால் எல்லா நடவடிக்கையும் பொருந்தும். அதிலே பணி நீக்கம் செய்வது வரையில், includes dismissal, removal, termination of services or reduction in rank என்று நான்கு விதமாக அதைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இப்படி இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று விதிகளிலே சொல்லிவிட்டால், மானேஜ்மெண்டு இதைத் தவிர வேறு எதையும் எடுக்க மாட்டார்கள். "includes" என்று இந்த நான்கையும் போட்டுக் காண்பித்து விட்டால், அவர்கள் அதைத்தான் செய்ய வேண்டும் என்று சொல்லுவார்கள். வேறு எதையுமே செய்யமாட்டார்கள். இத்தகைய கொடூரம், அரசாங்கத் துறையிலே உள்ளவர்களுக்குக் கூடச் சொல்லப்படவில்லை. எனவே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்கான பணிப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி நல்லெண்ணத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இதிலே இப்படிப்பட்ட விதிகள் இருக்குமானால், மானேஜ்மெண்டுகள், "Shall" என்ற வார்த்தையைப் பிடித்துக் கொண்டு அதிலே குறிப்பிட்டுள்ள நான்கு தண்டனைகளில் ஒன்றையே வற்புறுத்தும் போக்குதான் நீடிக்கும். "டிஸிப்பிளினரி ஆக்ஷன்" என்று குறிப்பிட்டுவிட்டு, அதிலே தண்டனையையும் குறிப்பிடுவது இயற்கை விதிகளின் முறைக்குப் புறம்பாக இருக்கின்றது என்று தெரிவித்துக் கொண்டு—இந்த விதியின் காரணமாக மிக மிக சாதாரண குற்றங்களுக்காகக் கூட பணியிலிருந்து வெளியேற்றப்படக் கூடிய அபாயம் இருக்கின்றது என்பதைக் கருதி—இது நீக்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்களின் சார்பிலே கல்வி அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, "தற்காலிகப் பணி நீக்கம்" என்ற முறையில், ஒரு ஆசிரியரை
இரண்டு மாத காலத்திற்கு ஸஸ்பென்ஷனில் வைக்கலாம் என்று இருக்
கின்றது. இரண்டு மாதத்திற்குள்ளே இருந்தால் என்ன என்பது பற்றி
விதிகளில் குறிப்பிடவில்லை. அதிக பட்சமாக இரண்டு மாத காலத்திற்கு
ஸஸ்பென்ஷனில் வைக்கலாம். இரண்டு மாத காலத்திற்கு உட்பட்ட
காலமாக இருந்தால், மானேஜ்மெண்டு அவர்களை மறுபடியும், "ரீயின்
ஸ்டேட்" செய்து கொள்ளுவதற்குப் "ப்ரோவிஷன்" இல்லை. நான் எந்த
மானேஜ்மெண்டையும் குறிப்பாகக் குறை கூறவில்லை. யாரும் தவறு
செய்துவிட்டார்கள் என்று சொல்லவில்லை. நான் கேட்டுக் கொள்வதெல்
லாம், இன்றுள்ள நிலையில், இப்படிப்பட்ட விஷயத்தில் இப்படிப் பொருள்
படும் விதிகளை வைக்கக் கூடாது என்பதுதான். எனவே திட்டவட்டமாகக்
கேட்டுக்கொள்கிறேன், இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்
என்று. இரண்டு மாதத்திற்குள் விட்டிருந்தாலும், அதைத் தீர்ப்பதற்கான
வழிமுறைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பதினாறாவது திருத்தம் பற்றி ஒரு சிறு விளக்கத்தைச்
சொல்ல விழைகிறேன். பள்ளிகள் மூடும்போது ஆசிரியர்கள் பணி நீக்கம்
செய்யப்படுகின்றார்கள். இதைப்பற்றி செலக்ட் கமிட்டியில் சட்டம்
வந்தபோதும் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆசிரியர்கள் பல்வேறு காரணங்
களுக்காக ரிட்ரெஞ்ச்மெண்ட்டு செய்யப்பட்டால், பள்ளிகளை மூடும் காரணமாக
அல்லது உள்ள பிரிவுகளைக் குறைப்பதன் காரணமாக அவர்கள் பணியிலி
ருந்து தூக்கி எறியப்பட்டால், அவர்களுக்கு உடனுக்குடன் வேலை வாய்ப்பு
அளிக்கப்படும் என்று சட்டத்தில் இருக்கின்றது. மூலச் சட்டத்தில் சொல்லப்
பட்டிருக்கும் அது, இங்கே விதிகளிலே சொல்லப்படவில்லை. தெளிவாகச்
சொல்லப்படவில்லை. இதைப் பற்றிப் பல முறை செலக்ட் கமிட்டியிலும்
குறிப்பிட்டிருக்கின்றேன். சட்டத்தில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்
கிறோம், "உள்ளாட்சித் துறைப் பள்ளிகளில் அல்லது தனியார் பள்ளிகளில்
அல்லது அரசுப் பள்ளிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு மீண்டும் பணிக்கு
அமர்த்தப்படும்போது, அவர்களுடைய சம்பளம், அலவன்ஸ்கள் இவை
யெல்லாம் குறையாத அளவிற்குப் பாதுகாப்பு இருக்கும்" என்ற
அளவிற்கு எடுத்துச் சொல்லி இருக்கின்றோம். ஆனால், அவைப்பற்றி
விதிகளிலே வழி செய்யப்படவில்லை. சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பது விதி
களிலே குறிப்பிட்டு இருக்கவில்லை என்பதை கல்வி அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது மிக மிக முக்கியமானது.
ரிட்ரெஞ்ச்மெண்ட் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் பதவியில் எடுத்துக்
கொள்ளப்படும்போது, அல்லது ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு
லிங்கிலுள்ள பள்ளிக்கு மாற்றலில் போகின்றபோது—பதவி உயர்வு
காரணமாகப் போகலாம்—அப்படிப்பட்ட நேரத்தில் அவர்களுடைய ஊதியம்,
படிகள், விடுப்பு ஊதியம், பயணப்படி, மருத்துவச் சலுகைகள்
இவை பாதிக்கப்படாத அளவிற்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அடுத்தபடியாக அரசு ஊழியர்
களுக்கு உள்ளதைப்போல ஆசிரியர்களுக்கும் ஊதியம், படி, விடுப்பு
ஊதியம், வீட்டு வாடகைப்படி, பயணப்படி, பென்ஷன், மருத்துவச்
சலுகைகள் இவைகள் எல்லாம் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதற்கான முறைகள்
விதிகளிலே சேர்க்கப்படுவதற்கான வழி வகுக்க வேண்டும் என்று



கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக, 1966 லிருந்து பார்த்தால்,
இல்லாத பல சலுகைகளை ஆசிரியர்கள் விஷயத்தில், அரசு ஊழியர்களுக்கு
இருந்ததைப்போல, பெருமனத்தோடு கொடுத்திருக்கின்றார்கள். ஆசிரி
யர்கள் அல்லாத ஊழியர்களுக்கும் கொடுத்திருக்கின்றார்கள். விடுப்பு
வசதிகள், மருத்துவச் சலுகைகள், வீட்டு வாடகை அலவன்ஸ் என்று
இவற்றையெல்லாம் மனமுவந்து கொடுத்திருக்கின்றார்கள். அப்படி
இருக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு விதியினைக் கொண்டு வருவதால்
எந்தவிதமான சங்கடமும் ஏற்பட்டுவிடாது என்ற எண்ணத்தில் கேட்டுக்
கொள்கிறேன். பல நேரங்களிலே கொடுக்கப்பட்டுள்ள சலுகைகளை அமுல்
படுத்துவதிலே காலத் தாழ்வு ஏற்படுகின்றது. "சிவப்பு நாடா" என்று
சொல்லப்படும் அந்த முறையில், மேலிருந்து கீழே ஒரு உத்தரவு வரும்
போது, அதை அமுல்படுத்துவது ஆண்டுக் கணக்கில் ஆகிவிடுகின்றது.
இதைத் தடுப்பதற்காக, மேலும் டைரக்டர் அலுவலகத்திலும் வேலைப்
பளுவினைக் குறைக்கும் வகையில், "அரசு ஊழியர்களுக்கு ஒரு சலுகையை
அளிக்கும்போது அது ஆசிரியர்களுக்கும் உண்டு" என்று பொதுவாக
ஒரு உத்திரவினைப் போட்டுவிட்டால், எந்தச் சலுகையும் அவர்களுக்கு
இயற்கையாகவே கிடைத்துவிடும் ஒரு நிலை ஏற்பட்டுவிடும். ஆண்டுக்
கணக்கில் இருந்து வரும் இந்தக் குறை நீக்கப்படும் வகையில் இது
சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, "முன் அனுமதியின்றி விடுப்பில் செல்லக் கூடாது" என்று
"கோட் ஆஃப் காண்டக்ட்"–ல் சொல்லப்பட்டிருக்கின்றது. உடல் நலம்
சரியில்லை என்று மருத்துவ விடுப்பில் சென்றால் கூட, நிர்வாகம்
திருப்திப்படும் அளவிற்கு மருத்துவச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்
என்கின்றார்கள். நிர்வாகம் திருப்திப்படும் அளவிற்கு என்றால், பிறகு
டாக்டர் எதற்கு? எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர் சொல்லுகின்றார்,
"உடல் நலம் சரியில்லை இவருக்கு" என்று. மருத்துவச் சான்று
கொடுக்கின்றார். அதிலும் நிர்வாகத்திற்குத் திருப்தி ஏற்பட வேண்டும்
என்றால், என்னவென்று சொல்வது? மேலும் குளிர், காய்ச்சல் என்று
வந்தால் ஒரு நாள் விடுப்பு, இரண்டு நாட்கள் விடுப்பு என்றாலும்,
டாக்டரிடம் சென்று ஐந்து ரூபாய் கொடுத்து மருத்துவச் சான்றிதழ்
கொடுக்க வேண்டும் என்றால், ஒரு நாள் இரண்டு நாட்கள் சிறு விடுப்
பிற்கும் இப்படிப்பட்ட பனிஷ்மெண்ட்டை ஏற்க வேண்டியதாக இருக்
கின்றது. ஆகவே, நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்
திற்குக் கொண்டு வருகின்றேன், இப்படிப்பட்ட விதிமுறை அவசியம்தானா
என்று தயவு செய்து யோசிக்க வேண்டும். "முன் அனுமதி வாங்கிச்
செல்ல வேண்டும்" என்றால், எல்லா நேரத்திலும் அது சாத்தியமா
என்று பார்க்க வேண்டும். திடீரென்று தலைவலி, காய்ச்சல் என்று
ஏதாவது ஏற்பட்டால், அல்லது சொந்தக்காரர்களுடைய மரணம் என்று
திடீரென்று செல்ல வேண்டியிருந்தால், அப்படிப்பட்ட நேரங்களிலே
மானேஜ்மெண்டுடைய முன் அனுமதி பெற்றுத்தான் போக வேண்டும்
என்ற நிலைமை ஆசிரியர்கள் விஷயத்தில் இருப்பது என்ன நியாயம்
என்பதை யோசிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களை
வேண்டிக் கொள்ளும் முறையில், இதை அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வருகின்றேன். இந்த மாதிரி விஷயங்களிலேதான் ஆசிரியர்

களுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இன்றைக்கு மானேஜ்மெண்டு கமிட்டியில் யார் இருக்கின்றார்கள் என்பதைப்பற்றிக் கவலை இல்லை. ஆசிரியர்கள் நிம்மதியாக வாழ வேண்டும், அவர்கள் நிம்மதியாகப் பணியாற்ற வேண்டும், அதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் ஆசிரியர்களுடைய வேண்டுகோள். எனவே, இந்த விஷயத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் நீதியின் அடிப்படையில், நல்ல தீர்ப்பினை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதெல்லாம் வழங்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு எதையும் சொல்லவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பினை அளிக்க வேண்டும் என்றுதான் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வேண்டியதை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் உரிமைகளை வழங்கியிருக்கின்றீர்கள். எனவே, அவர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன், இதையெல்லாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக......

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : இப்போது எங்கே இருக்கின்றார்கள் ?

<u>திரு. செ. முத்துசாமி</u> : தலைவரவர்களே, இன்னும் இரண்டு மூன்று தான் இருக்கின்றன. இருபதுக்கு வந்து விட்டேன். அடுத்துச் சொல்ல வந்தது, ஆசிரியர்கள் ட்யூஷன் சொல்லிக் கொடுப்பதைப் பற்றி. ஐந்து மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க பெர்மிஷன் வாங்க வேண்டியது இல்லை, அதற்கு மேலே இருந்தால் பெர்மிஷன் வாங்க வேண்டும் என்று இருந்தால் பரவாயில்லை. ஐந்திற்கு மேலே இருந்தால், With prior permission என்று இருக்கலாம். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், குடும்பத்தில் யாராவது தொழில் செய்து கொண்டிருந்தால் கூட, உங்களுக்கு அதில் சம்பளம் உண்டு என்று நடவடிக்கை எடுக்கிற மாதிரி ஆகிவிடும். ஆகவே, இதைப் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்கள் ஸால்வெண்ட்டாக இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். ஒரு ஆசிரியர் இன்ஸால்வெண்ட் என்று தீர்ப்பாகி விட்டது என்றால், அதன் விளைவாக அந்த ஆசிரியர் பதவிக்கு "அன்பிட்" என்று "டிக்லேர்" பண்ண வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத்தில் அப்படி "அன்பிட்" என்று டிக்ளேர் செய்வதற்கு எங்கேயும் இடமில்லை. ஆனால், விதிகளிலே அப்படி "டிக்ளேர்" செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மூலச் சட்டத்தில் இல்லாத ஒன்றை அதன் கீழ் வரும் விதிகளில் சொல்லியிருப்பது எந்த விதத்தில் நியாயமாகும் என்று யோசிக்க வேண்டுகிறேன். "தகுதி இல்லை", "அன்பிட்" என்று யார் சொல்வது ? அரசாங்கமா ? ஸ்கூல் அத்தாரிட்டியா ? அல்லது ஸ்கூல் கமிட்டியா ? யார் சொல்வது ? அவருக்குள்ள அத்தாட்சியை "கான்சல்" செய்தால்தான் "அன்பிட்" என்று சொல்ல முடியும்.

(மாற்றுத் தலைவர் திரு. எஸ்.டி. ஆதித்தன் தலைமை)





இந்த நேரத்திலே உதாரணத்திற்காக, கண்ணீர் உகுக்கக்கூடிய நிகழ்ச்சி ஒன்றினை எடுத்துச் சொல்ல சபையின் அனுமதியை வேண்டுகிறேன். இது மிகப் பரிதாபமானதொரு நிகழ்ச்சி என்ற முறையில், கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவர்கள் மனமுவந்து "ஸ்டே" கொடுத்திருக்கின்றார்கள். பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில்—நாமக்கல்லில் நம்மாழ்வார் என்று ஒருவர் ஒரு மேனேஜ்மெண்டு பள்ளியை நடத்துகின்றார். நீண்ட காலமாக நடத்தி வருகின்றார். மிக மிக நல்லவர். ஆசிரியர்களுக்கு ஒழுங்காக எந்தக் காலத்திலும் முழுச் சம்பளத்தைக் கொடுத்து அறியாதவர். இப்போது தான் கொடுக்கின்றார். அங்கே உள்ள கல்வி அதிகாரி, இப்போதுள்ள சட்டத்தை எடுத்துக் காட்டிய பிறகு கொடுக்கின்றார். இதற்குப் பிறகுதான் இப்போது அங்கே 36 ஆசிரியர்கள் வேலை செய்யும் இடத்திலே 12 பேர், "கமிஷன் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லும் தைரியத்தைப் பெற்றிருக்கின்றார்கள். அங்கே பணியாற்றும ஆசிரியர் ஒருவரின் தகப்பனார், இராமசாமி ரெட்டியார் தமக்குள்ள நிலத்தைப் பயிரிடுவதற்காக கடன் வாங்கியிருக்கின்றார். ஆனால், ஐந்தாண்டுக் காலமாகப் பயிராகவில்லை. கடைசியில் இன்ஸால்வெண்ட் ஆகிவிட்டார். பட்ட கடனை அவருடைய மகனால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. 1—4—1974க்கு முன்பே அவர் இன்ஸால்வெண்டாகிவிட்டவர்...............

<u>மாற்றுத் தலைவர் (திரு. எஸ்.டி. ஆதித்தன்)</u> : தனிப்பட்ட மானேஜ்மென்டைப்பற்றி இந்த அவையில் சில அலிகேஷன்களைக் குறிப்பிட்டுப் பேசுவது நமது மரபிற்கு விரோதமாக இருக்கின்றது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. செ. முத்துசாமி</u> : தலைவரவர்களே, உதாரணத்திற்காகவே சொல்லுகிறேன். அலிகேஷனைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லவில்லை. அதைத் தொடர்ந்து அரசு எடுத்துள்ள நடவடிக்கையைப் பாராட்டுவதற்காகவே இதைச் சொல்லுகிறேன். அந்த மானேஜ்மெண்ட்டின் மீது எந்த விதமான குற்றச் சாட்டையும் சொல்லவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். உள்ள நிலைமையைச் சொல்லுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

<u>மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்)</u> : உதாரணம் என்று சொல்வதானாலும் கூட, இந்த அவையுடைய மரபு, யாருடைய பெயரையும் சொல்லாமல் குறிப்பிடுவதுதான்.

<u>திரு. செ. முத்துசாமி</u> : தலைவரவர்களே, நாமக்கல்லில் ஒரு நிர்வாகம் என்று சொல்கிறேன். அந்த ஆசிரியரைப் பொறுத்த வரையில்...

<u>திரு. ஜி. சுவாமிநாதன்</u> : தலைவரவர்களே, பெயரைச் சொன்னாலும் யாரைச் சொல்[illegible] என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-00).

திரு. செ. முத்துசாமி: இது யாரையும் குறிப்பிடவில்லை. ஏதோ ஓரளவுக்கு மரியாதை கொடுக்கலாம். ஒரேயடியாக அநீதியைச் சொல்லக் கூடாது என்ற அளவுக்கு இருக்கக்கூடாது.

அடுத்தபடியாக, அந்தப் பையனுக்கு "இன்சால்வெண்ட்" என்று சொல்லி நீ உன் அப்பா பட்ட கடனைச் செலுத்த வேண்டும், இல்லையேல் உனக்குச் சம்பளம் கொடுக்க முடியாது என்று சொல்லி, அங்கிருந்த மானேஜர் அவர்கள் டி.இ.ஓ. விடம் தகராறு பண்ணினார். டி.இ.ஓ. இது பற்றிய விவரங்களை டைரக்டர் ஆபீசுக்கு எழுதினார். டைரக்டர் கவர்ன்மெண்டிடம் "கன்சல்ட்" பண்ணினார். இவ்வாறு இருக்கும் இந்த நிலைமையிலே மானேஜர் சம்பளத்தை நிறுத்தவேண்டும் என்று சொல்லி தகராறு பண்ணினார். உடனடியாக கல்விச் செயலாளரைப் போய்ப் பார்த்தோம், டைரக்டரைப் பார்த்தோம், மற்றும் எல்லோரையும் பார்த்தோம். கவர்ன்மெண்ட் சர்வெண்ட்டு களுக்கு இருக்கக்கூடிய "காண்டக்ட் ரூல்ஸ்" மாதிரி இதிலே இல்லை. அரசாங்கத் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு அவர்கள் சால் வெண்ட்டாக இருக்கவேண்டும் என்பதற்கு என்ன விதிமுறை இருக் கிறதோ அந்த விதியை வகுத்துக்கொடுத்தால்கூட எங்களுக்கு ஒரு திருப்தி தான். ஆனால் ஒரு ஆசிரியர் சால்வெண்ட்-ஆக இருப்பதற்கும் அவர் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ அவன் அப்பன், பாட்டன் பட்ட கடன், இவனுக்கு சொத்திலே உரிமை இருக்கிறது என்ற காரணத்தினால், இவன் சின்னப் பிள்ளையாக இருந்தபோது கையெழுத்து வாங்கிவிட்டார்கள். அதை வைத்துக்கொண்டு இவன் இப்பொழுது சம் பளம் வாங்குவதற்கு உரிமையில்லை என்று சொல்லுவது மனிதாபிமானத் தின் அடிப்படையில் நியாயம் தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கவர்ன்மெண்ட் சர்வண்ட்களுக்கும் இப்படித்தான் இருப்பின் அதுவும் நியாயம் தானா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது எப்பொழுதோ வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த முறை, ஆகை யால் தயவு செய்து இதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். எத்தனையோ நல்ல சீர்த்திருத்தங்கள் அரசு செய்திருக்கிறது. மேலும், இன்னும் எத்தனையோ நல்ல சீர்த்திருத்தங்கள் ஆசிரியர்கள் மத்தியில் செய்யவேண்டுமென்று எடுத்துச்சொல்லியிருக்கிறது. ஆகவே, குறிப்பாக இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், இவ்வாறு இந்த காண்டக்ட் ரூல்சை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் கட்சி நடவடிக்கைகளில் "டெமான்ஸ் ட்ரேஷன்" போன்றவை நடந்திருக்கின்றன. அதே போன்று ஆசிரியர் களின் சங்கம் நடத்துகின்ற நடவடிக்கைகளிலும் இந்த விதிகள் குறுக்கிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசியல் ரீதியாக சங்கங்கள் வைத்து செயல்படுத்துகின்ற விதிகள் இருக்கின்றன. அதைத்தான் "ஆட்" பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் சங்கங்கள் வைப்பதிலோ, கோரிக்கைகள் வைப்பதிலோ, தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலோ அது



தடையாக இருக்கக்கூடாது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தில் அதற்கான உரிமை இருந்தாலும் கூட விதியிலும் அதைக் கொடுக்கலாம் என்றுதான் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் தொகுதித் தேர்தலில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளலாம். இந்த முறை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. அரசுத் துறை பள்ளிகளிலே இருப்பவர்களுக்கு அந்த உரிமை இல்லை. அது எப்படி இருந்தாலும், கோத்தாரி கல்விக் கமி ஷனிலே "சிவிக் உரிமை" எல்லோருக்கும் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையிலிருந்து பாராளுமன்றம் வரையிலும் எல்லோருக்கும் ஈடுபடவேண்டிய உரிமையைத் தரவேண்டும் என்று கல்வியைப் பற்றி நிபுணர்கள் உட்கார்ந்து தயாரித்த அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இந்த அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது, மத்திய அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையிலே கல்வியிலே பல்வேறு சீர்திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அத்துடன் இந்த உரிமையும் வழங்கப்பட வேண்டும் என்று நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக; ஆசிரியர்கள் நடத்தும் ஊர்வலம், முழக்கங்கள் இவை களைப் பற்றிய பிரச்சினை. இவைகள் அரசியல் சட்டம் அளித்த உரிமை களாகும்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): திரு, முத்துசாமி அவர்களே; இப்போது எங்கே இருக்கிறீர்கள் ?

திரு. செ. முத்துசாமி: திருத்தம் (24) இதோ இரண்டு நிமிஷங்களில் முடித்துக்கொள்ளுகிறேன்.

அதாவது விதிகளுக்கு உட்பட்டு, ஏற்கெனவே இருக்கும் அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளுக்கு உட்பட்டு வைத்திருக்கக்கூடிய சங்கங் களின் அடிப்படையிலே அவர்கள் முழக்கங்கள் போடுவதற்கும், ஊர் வலங்கள் நடத்துவதற்கும் கோரிக்கைகள் கொடுப்பதற்கும் உரிமையளிக்கக் கூடிய விதியாக இந்த விதி இருக்க வேண்டும். இல்லையேல் இந்த மானேஜர்கள் அவர்களுக்குப்பிடித்தால் வைத்துக்கொள்வார்கள், இல்லா விட்டால், "நீ அந்தச் சங்கத்திற்கு, சங்கத்தின் கூட்டத்திற்குப் போனாய், ஊர்வலத்திலே முழக்கம் போட்டாய், அரசாங்கமே நீ கொடு என்று சத்தம் போட்டாய்," என்று சொல்லி நடவடிக்கை எடுப்பார்கள். இப்படி யாக ஆசிரியர்கள் உரிமைக்குரல் எழுப்புவதையே எதிர்க்கிறார்கள். இவ் வாறு எழுப்பக்கூடிய உரிமைக்குரல் சில சமயங்களில் அந்த மானேஜர் களையே எதிர்த்து எழுப்பப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அரசாங் கத்தினிடத்திலே பல்வேறு பிரச்சினைகள் குறித்து கோரிக்கைகள் வைக்க வேண்டியிருக்கும், அவற்றை அரசாங்கம் தரவேண்டும் என்று கேட்க வேண்டி வரும். உடனடியாக அப்போது என்ன செய்வார்கள் என்றால், இந்த அரசாங்கத்தை எதிர்த்து நீ முழக்கம் போட்டாய், ஆகையால் அதற்கான காரண-காரியத்தை உடனடியாக விளக்கவேண்டும் என்று

கேட்பார்கள். உடனே இவர் விளக்கம் கொடுப்பார். உடனே, விளக்கம் அளித்தது திருப்தியாக இல்லை என்று சொல்லி, அதை வைத்து சஸ்பெண்ட் செய்வார்கள். சஸ்பெண்ட் செய்வதற்கு சார்ஜஸ் போடுவார்கள். பின்பு, மீண்டும் இவர்கள் சார்ஜுகளுக்கு பதில் கொடுப்பார்கள். பின்பு, அவர்கள் "சார்ஜஸ்க்கு நீ அளித்த விளக்கங்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை" என்று சொல்லுவார்கள். எப்படி ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால், சட்டங்களும், திட்டங்களும் அங்கே வராது, அதற்கு பதிலாக அவர்களுடைய மன நிலைமை சரியாக இருந்தால், ஏற்றுக்கொள்வார்கள், மனநிலை சரியில்லை என்றால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது மட்டுமல்ல, அவர்களுடைய நிலைமை என்னவென்றால் அந்த மானேஜர்கள் என்னென்ன சொல்கிறார்களோ அதை ஆண்கள் ஆனாலும், பெண்கள் ஆனாலும், சமமாகக் கேட்க வேண்டும். நிர்வாகிகள் கேட்டாக வேண்டும். அப்படியில்லாவிட்டால் அந்த மாதிரி.............

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : ஏற்கெனவே அரசியல் அமைப்பிலே கொடுக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு உரிமைக்கு விரோதமாக இந்த விதிகளிலே எந்த வாசகம் இருக்கிறது ? ஒன்றும் இல்லையே. எந்த வாசகத்திலே அரசியல் அமைப்பு சங்கம் சேர்த்தல் விதிக்கு எதிராக இருக்கிறது ? அப்படி ஒரு வாசகமும் காணவில்லையே!

திரு. செ. முத்துசாமி : இந்த விதியைச் சேர்க்கவேண்டும் என்றுதான் திருத்தத்திலே கொடுத்திருக்கிறேன். இந்த விதியிலே எதுவும் இல்லை என்றோ, எதிராக இருக்கிறது என்றோ சொல்லவில்லை. இதையும் சேர்க்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறேன். இதைச் சேர்க்காவிட்டால், மானேஜர்கள் அதை இந்த விதத்தில் எடுத்துக்கொள்வார்கள். பின்பு உயர்நீதி மன்றத்திற்குப் போய்த்தான் அந்த உரிமையை நிலைநாட்ட வேண்டும். இந்தத் திருத்தம் விதியிலே வந்துவிட்டால் அதை அங்கே உள்ள கல்வி அதிகாரிகளே நிலைநாட்டி விடுவார்கள். நாட்டிலே இருக்கிற கல்வி அதிகாரிகள் துணையாக.........

மாற்றுத் தலைவர் (திரு எஸ். டி. ஆதித்தன்) : அப்படிச் செய்வார்கள், இப்படிச் செய்வார்கள் என்று சொல்லி ஒவ்வொன்றுக்கும் போட்டுவிட்டால் எத்தனை "வால்யூம்" ஆகும் ? அப்படிச் செய்வார்கள், ஆகவே அதறகுப் பாதுகாப்பு, இப்படிச் செய்வார்கள், ஆகவே இதற்குப் பாதுகாப்பு என்று சொல்லிக்கொண்டே போனால், எத்தனை "வால்யூம்" தேவைப்படும் ?

திரு. செ முத்துசாமி : தலைவர் அவர்களுடைய கருத்து இப்படி இருக்கலாம். மக்களுடைய நலனுக்காக எத்தனை "வால்யூம்" தேவைப்பட்டாலும், அவைகள் இயற்றப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இப்படி தலைவர் அவர்களும், உறுப்பினர் அவர்களும் விவாதத்தில் இறங்கினால் யார் மத்தியஸ்தம் செய்து வைப்பார்கள் ?





திரு. செ. முத்துசாமி : தற்காலிக தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். "வால்யூம்" எழுதவேண்டும் என்பதல்ல முக்கியம், மக்களுடைய வாழ்வுக்காக என்ன வேண்டும் என்பதுதான் முக்கியம், வாழ்வுக்காக வால்யூம்களே தவிர, வால்யூம்க்காக மக்கள் வாழவில்லை. பிரிண்டிங்குக்காக, பேப்பர் குறைந்து சிக்கனமாக இருக்க வேண்டும், பேப்பர் மில்ஸ்லே உற்பத்தி கம்மி என்று பேப்பரைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், சட்டங்கள் இயற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. மக்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சட்டங்கள் இயற்ற வேண்டும். அதைக் கொஞ்சம் விளக்கமாக எழுதுவதானாலும், நான் கல்வி அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், "தமிழிலே எழுதுவதற்கான முயற்சியிலே ஈடுபடுங்கள்". இந்தச் சட்டம் வரும்போது அதைத் தமிழிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அதைப் படித்து முடிப்பதற்குள் நான் பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல. இரண்டு பேரை வைத்துக்கொண்டு, மிக்க கெட்டிக்காரர்களை வைத்துக்கொண்டு, மிகவும் கஷ்டப்பட்டேன். செலக்ட் கமிட்டியிலே இருந்ததினால் ஓரளவுக்கு இந்தச் சட்டங்களைப் புரிந்துகொள்வதற்குரிய ஆற்றலைப் பெற்றேன். அப்படி இல்லாவிட்டால் மிகவும் சங்கடமாக இருந்திருக்கும். ஆகவே, தமிழிலே போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழிலே கொடுக்க வேண்டுமென்று வேண்டுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. ஆங்கிலத்திலே கொடுப்பதைத் தடுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை. ஆகவே, தயவு செய்து தமிழ் அச்சகத்திலே கொடுத்து இவற்றையெல்லாம் தமிழிலே அச்சிட்டுக்கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள் புரிந்துகொள்வதற்கு அப்போதுதான் மிக்க வசதியாகவும், தெளிவாகவும் இருக்கும். ஆங்கிலம் தெரிந்தவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நிலைமை ஆங்கிலத்துக்காரர்களுடன் போகட்டும். தமிழ் நாட்டிலே, இன்றைக்கு தமிழைக் கொண்டுவந்திருக்கக்கூடிய பெருமைக்குரியவர்கள், இந்த அரசினர். ஏற்கெனவே ஒரு தடவை தமிழில் வந்தது. பின்னர் ஆய்வுக் குழுவிற்குப் போய்விட்டு வந்தபின்பு வந்த சட்டங்கள் தமிழிலே வரவில்லை. அதற்குப்பின் விதிகள் வந்தன. அந்த விதிகளும் வரவில்லை. நான் ஆந்திராவிலே சமீபத்திலே வெளியிட்ட சட்டத்தைப் பார்த்தேன். தலைப்பு முதல் தெலுங்கிலே போட்டுத்தான் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே எல்லா விஷயங்களையும் இங்கே தமிழிலும் வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நேரடி ஊதியப் பட்டுவாடா பிரச்சினை இருக்கிறது. எத்தனையோ கூட்டங்களிலே ஆசிரியர்களுக்கு அமைச்சரவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். அப்போது நாங்கள் எல்லாம் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம், "நம்முடைய இந்தத் தமிழ் நாடு அரசு நேரடியாகச் சம்பளத்தைக் கொடுக்க இருக்கிறது" என்று. கமிஷன் ஏஜெண்டுகளாகத்தான் இந்த நாட்டிலே நிர்வாகிகள் இருக்கிறார்கள். தெரிந்தோ, தெரியாமலோ majority of the schools அப்படித்தான் இருக்கின்றன. இதை நான் சொல்லும்போது, முத்துசாமி வேகத்தில் சொல்கிறான் என்றும் யாரும் நினைக்கத் தேவையில்லை. கோத்தாரி கல்விக் கமிஷனுடைய அறிக்கையை எடுத்துப்பாருங்கள். "Several of them are business concerns" என்று அதிலே தெளிவாக

எழுதியிருக்கிறார்கள். இது நான் சொல்லும் குற்றச்சாட்டல்ல. இந்திய நாடு பூராவும் உள்ள நிலைமைகளை ஆராய்ந்து, தெளிந்து பல்வேறு நாட்டு நிறுவனங்கள் சேர்ந்து விருப்பு வெறுப்பற்ற முறையில் ஆசிரியர்களுடைய உரிமை பெரிதா, மானேஜர்களுடைய உரிமை பெரிதா, என்று எண்ணாமல் கல்வியினுடைய நலன் கருதி தயாரித்த அந்தக் குழுவின் அறிக்கையிலே "Several of them are business concerns" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் வியாபாரம் தான் நடத்துகிறார்கள். தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறேன். கல்விக் கூடத்தை வியாபாரமாக நினைத்து நடத்தக்கூடிய நிலை, ஒரு முறை இந்த நாட்டிலே நீண்டகாலமாக வளர்க்கப்பட்டு விட்டதே, இன்னும் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியாமல் சட்டங்கள் தடுக்கின்றனவே என்று கல்வி அமைச்சர் அவர்கள் கூறும்போது நான் அந்த உணர்வை உணர்கிறேன், ஏற்கிறேன். இருந்தாலும் அந்த நேரடிப் பட்டுவாடாவிலே சட்டம் எதுவும் குறுக்கே நிற்கவில்லை. அமைச்சரவர்கள் பலமுறை உறுதியளித்திருக்கிறார்கள். ஜாயின்ட் செலக்ட் கமிட்டியிலே அமைச்சரவர்கள் கொடுத்த உறுதிமொழி இருக்கிறது. ஆசிரியர்களிடத்திலேயும் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்களே ஆசிரியர்களுடைய பெரும் மாநாடுகளிலே சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த திரு. சிட்டிபாபு அவர்கள் பல கூட்டங்களிலே அறிவித்திருக்கிறார்கள். பத்திரிகையிலே ஸ்டேட்மென்டாகத் தந்திருக்கிறார்கள். பல்வேறு சிக்கல்களைச் சொல்கிறார்கள். எதிலே, எந்த மாற்றத்திலே சிக்கல் இல்லாமல் இருக்கிறது ? எந்த மாற்றத்திலும் சிக்கல் உண்டு. ஆனால் பக்கத்திலே இருக்கக்கூடிய மாநிலத்திலே நேரடிப் பட்டுவாடாவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே முடியவில்லை என்று காரணம் சொல்கிறார்கள்.

நான் இந்த நேரத்திலே கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அண்ணா அவர்கள் படியரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, பல பேர் மிரட்டினார்கள். நாட்டிலே அதிகாரிகள் தங்களுக்கு அந்த மாதிரித் திட்டத்தை நடத்தி அனுபவம் இல்லாத காரணத்தினால், அரசே திவாலாகிவிடும் என்று சொன்னார்கள். ஆனால் அண்ணா அவர்கள், "அறிவித்த ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக வந்திருக்கிறேன். இது முடியாவிட்டால் தோளிலே கிடக்கக்கூடிய துண்டை உதறிப் போட்டுவிட்டுச் சென்றுவிடுவேன். நீங்கள் திட்டம் தரவேண்டுமே தவிர; அதைச் செயல்படுத்த வேண்டுமே தவிர, கொள்கையை வகுக்க வேண்டியது நீங்கள் அல்ல. மக்களுக்கு நாங்கள் சொல்லியிருக்கக்கூடிய இந்தக் கொள்கைக்கு திட்டம் வகுத்துக் தாருங்கள்" என்று அதிகாரிகளிடம் கேட்டார்கள். அதிகாரிகளும் திட்டம் வகுத்துத் தந்தார்கள். அண்ணா அவற்றைச் செயல்படுத்தினார்கள். ஆகவே, நான் அமைச்சரவர்களை வேண்டுகிறேன், "நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், அறிவித்திருக்கிறீர்கள், உங்களுடைய அறிவிப்பை எப்பாடுபட்டாவது செயல்படுத்த வேண்டும்." கல்வி அமைச்சர் அவர்கள் உறுதி மொழியாக ஆசிரியர் சமுதாயத்திற்கு தந்துவிட்ட ஒன்றை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகளும், அரசும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு காரணம் சொல்லி தட்டிக் கழித்துவிடக்கூடாது. எல்லா இடங்களிலும்





இப்போது போஸ்ட் ஆஃபீஸ் இருக்கிறது, எஸ். பி. அக்கவுண்ட் இருக்கிறது. மற்றும் வங்கிகள் நிறைய திறக்கப்பட்டுவிட்டன. எல்லா இடங்களிலும், அதாவது தனியார் பள்ளிகள் இருக்கக்கூடிய எல்லா இடங்களிலும் வங்கிகள் இருக்கின்றன. அதை நான் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆகவே, தயவு செய்து அந்த நேரடிப் பட்டுவாடாவை அரசு செய்ய வேண்டும்.

(பிற்பகல் 6-10)

அதுதான் ஆசிரியர்களுக்கு மன நிறைவை அளிக்கக்கூடியதாக இருக்கும்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : உறுப்பினர் அவர்கள்......

திரு. செ. முத்துசாமி : இத்துடன் பேசி முடித்துக் கொள்கின்றேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : பிரச்சினை ஒன்றும் இல்லை. உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : கடைசியாக, இப்போது ஆசிரியர்களுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய ஒரே வேண்டுகோளாக நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருந்தது "நேரடியாகச் சம்பளம் வழங்குவது" என்பதுபற்றி. மானேஜர்கள் மூலமாகக் கொடுத்தால் கை வைத்து விடுகிறார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் பல்வேறு கூட்டங்களிலே, இந்த அவையிலே சொல்லியிருக்கின்றார்கள். அந்தச் சட்டத்திலே அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வழியில்லை என்ற ஒரு நிலைமை இருந்தது. இன்றைக்கும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமைதான் இருக்கின்றது. ஏனென்றால் முழுச் சம்பளம் அவர்களிடம் சென்றால், அவர்கள் ஆசிரியர்களிடம் கையெழுத்து சம்பளம் முழுவதற்கும் என்று வாங்கிக் கொண்டு, குறைவாகக் கொடுக்கின்றார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கக்கூடிய இந்தக் காலத்திலே என்ன வேண்டுமானாலும் நடக்கும். கல்லூரிகளிலே கூட இந்த அநியாயம் நடக்கிறது. கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவருகிறேன்.

கல்வி அமைச்சர் அவர்களுக்கு இது தெரியாதது அல்ல. அவர்களுக்குப் புரியாதது அல்ல. கல்வி அமைச்சர் அவர்கள் நாடு பூராவும் தெளிவு படுத்திய ஒன்றுதான் இது. ஏற்றுக்கொண்ட ஒன்றுதான். இதை நீக்க கொள்கையையும் அறிவித்திருக்கின்றார்கள். அறிவித்த கொள்கையை அமைச்சரவர்கள் எப்பாடுபட்டாவது செயல் படுத்த வேண்டும். இதிலே ஆசிரியர் சமுதாயத்திற்குக் கொடுக்கின்ற சம்பளம் அவர்கள் பாக்கெட்டிற்குப் போய்ச் சேர்கின்ற மாதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். வழியிலேயே வழிபறி மாதிரி எடுத்துவிடுகின்றார்கள். இவ்வளவு நாள் வழிப்பறி செய்கின்ற மாதிரி நிலைமைகள் நாட்டில் நடக்கலாமா? கல்விக் கூடத்திலே, உண்மையே பேசு, நியாயத்தைப் பேசு, அநியாயத்தை எதிர்த்து நில், துணிந்து நில், அச்சம் தவிர், "உச்சிமீது வானிடிந்து வீழினும் அச்சமில்லை அச்சமில்லை" என்று சொல்லிக்கொடுக்கக்கூடிய ஆசிரி

யர்கள், நியாயத்தைச் சொல்லிக்கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள், அரசியல் சொல்லிக் கொடுக்கக்கூடியவர்கள், இன்றைக்கு மானேஜருக்குப் பணிந்து அடிமையாகி வாங்கக் கூடிய சம்பளத்தை முழுதாக வாங்க வழியில்லாமல் அவர்கள் சொல்லக்கூடிய இடத்திலே கையெழுத்து போட்டுவிட்டு, ஆசிரியர்கள் பெறவேண்டிய சம்பளத்தை அவர்களுடைய ஜேபியிலே வைத்துக் கொண்டு செல்லக்கூடிய அதே நிலைமைதான் இன்று வரை இருந்து கொண்டிருக்கின்றது. அரசை கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறேன், வேதனையோடு கேட்கிறேன், உங்களைச் சங்கடப்படுத்த வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இன்னும் அவர்கள் கண்ணீர் நின்ற பாடில்லை. இந்தச் சட்டத்திலேகூட ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகள், பெண்டிங் கேஸ்களாக இருப்பவைகள் எல்லாம் அமுலுக்கு வருகின்றன என்று சொல்லப்படுகிறது. ரிட் போட்டிருக்கின்றார்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் யார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். தயவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : உறுப்பினர் அவர்கள் 6-15 மணிக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : நியாயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். கல்வி அமைச்சர் அவர்கள் இதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். இருந்தபோதிலும்கூட நான் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. நான் உருக்கமாக வேண்டுகிறேன். நீங்கள் இந்த வேண்டுகோளை நிறைவேற்றினால்தான், நீங்கள் இந்தப் பாதுகாப்பை அளிப்பதிலே முழு அளவுக்கு வெற்றிகொண்டதாக இருக்கும். பள்ளியிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு மாதச் சம்பளத்தை எடுத்துக்கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்படுமானால், அவர்கள் பையன்களுக்குச் சொல்லிக்கொடுப்பதிலே நிம்மதி இருக்காது, குடும்பத்திலே தகராறு ஏற்படும். "என்னங்க சம்பளம் வாங்கிக் கொண்டு வந்தீர்களா?" என்று மனைவி கேட்க, "சம்பளம் வாங்கிக் கொண்டு வந்தேன்" என்று சொல்ல "இந்த மாதம் எவ்வளவு சம்பளம் கிடைத்தது?" என்று கேட்க, "இந்த மாதம் கிடைத்தது இவ்வளவுதான், எண்ணிப்பார்த்துக்கொள்" என்று சொல்கின்ற அளவுக்குத்தான் இருக்கின்றது. இது நீக்கப்பட வேண்டாமா? சட்டம் கொண்டு வந்துவிட்டோம். சரியாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அது முடியவில்லை, இந்தச் சட்டம் சரியில்லை என்று இன்று இருக்கக்கூடிய சட்ட அடிப்படையிலே நீதி மன்றங்களால் தூக்கி எறியப்படுமானால், நீதிமன்றங்களுக்குச் சரியான சட்டத்தை வழங்குவதற்கு நாம் சட்டதைத் திருத்துவதற்கான நிலைமையை நாம் செய்ய வேண்டும். அமைச்சரவர்கள் அதற்குச் சரியானவர்கள், உரிமையுள்ளவர்கள், தைரியமானவர்கள். ஆகவே அவர்கள் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நடுவண் அரசிலேதான் சில சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்று சொன்னால், தெளிவாகச் சொல்லிவிடுங்கள், பாராளுமன்றம் இந்த நாட்டு மக்களுக்கு உரியதுதான். கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து கடல் கடந்து வாழக்கூடிய மக்களுக்கு தொடர்பில்லாதது அல்ல. சட்டத்தின் அடிப்படையிலே, நியாயத்தின் அடிப்படையிலே ஆசிரியர்களுக்கு உண்



டான உரிமைகளை வழங்க வேண்டும். அரசியல் சட்ட ரீதியாக மத்திய அரசு உறுதி அளித்துள்ளது. அந்த உறுதிக்கு பங்கம் ஏற்படுத்துவதற்கு அங்கே இருக்கின்ற சட்டமே எதிராக இருக்கின்றது என்றால், அந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கு ஆசிரிய சமுதாயமும் மக்களும் தயங்கமாட்டார்கள், அமைச்சரவர்களும் தயங்கக் கூடாது. அமைச்சரவர்கள் அதை நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும், சரியான பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டு, நேரடியாகச் சம்பளப் பட்டுவாடா முறையைக் கொண்டு வருவதற்கு ஒரு அறிவிப்பையாவது விரைவாகச் சொல்லி அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : உறுப்பினர் அவர்கள் கூறியது கூறல் என்ற குற்றத்திற்கு ஆளாகிவிட்டதனால், இதற்கு மேலும் அந்தக் குற்றத்திற்கு ஆளாக வேண்டாம் என்று கருதுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : வாக்கியத்தையாவது முடித்துக்கொண்டு விடுகிறேன்........

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே....

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தமிழிலே வாக்கியத்தைப் பாதியோடு நிறுத்துவது மரபல்ல. தமிழிலே வாக்கியத்தைப் பாதி முடிக்காமல் நிறுத்தினால் பொருள் ஆகாது. முற்றுப்புள்ளி வைத்து விடுவார்கள். இவ்வளவு நேரம் பேசிய பேச்சுக்கு கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டுகிறேன், உரிமையோடு வேண்டுகிறேன், அன்போடு வேண்டுகிறேன், ஆசிரியர்களுக்கு உரிமை வழங்குங்கள். உறுதிமொழி வழங்குங்கள் என்று வேண்டிக் கேட்டு அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய அறிவிப்பை இந்த அவையிலேயே கூறுவார்கள் என்று வேண்டிக்கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தங்களைப்பற்றி எனது கருத்துக்களைச் சொல்லவேண்டாம் என்று இருந்தேன். அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னதனால் நானும் எனது ஒருசில கருத்துக்களைச் சொல்லி அமைவது முறை என்று நினைக்கின்றேன். இந்தப் பணிப் பாதுகாப்புச் சட்டம் வேண்டும் என்று தனியார் தீர்மானத்தை இந்த அவையிலே முன் மொழிந்தவன் நான். ஒரு மணி நேரம் பேசியதும் உண்டு. நண்பர்கள் அதைத் தொடர்ந்து பேசியதும் உண்டு. ஆசிரியர்களுடைய பதவிப் பாதுகாப்பு என்கிற முறையிலே, இந்த அரசு எவ்வளவு அக்கறையோடு பல காரியங்களைச் செய்திருக்கின்றது என்பதற்கு, அதைச் செய்தார்கள், இதைச் செய்தார்கள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். இதைவிட உருக்கமாக யாரும் பேச முடியாது. அப்படியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே நாம் உணர்ச்சி வயப்படாமல் சட்ட ரீதியாக, ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு நன்மைகளைச் செய்கின்ற வகையில் ஆராயக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆசிரியர்கள் என்று சொன்னால், அங்கு கல்வி

கற்பிக்கப்படுகிறது. மாணவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள், பெற்றோர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். இரண்டு சாரார்களும் செயல்படுவதை எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆசிரியர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள், அநியாயமாக வெளியே அனுப்பப்பட்டார்கள் என்று இருந்த போது, ஆசிரியர்கள் பால் அனுதாபம் கூடிக்கொண்டே வந்தது. நல்ல முறையிலே பாதுகாப்பு கொடுக்கப்பட்ட பிறகு, அதிலே தளர்ச்சி ஏற்படுகிறது என்றால், அந்த அனுதாபம் மாறி மறு பக்கம் திரும்பிவிடும் என்றும் ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து வந்தவன் என்ற அளவிலும், ஆசிரியர்கள் சார்பிலும் நான் தெளிவாகச் சொல்கிறேன். இப்போது சில விதிகளைச் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். இதைவிட வலுவான, நல்ல பாதுகாப்பான விதிகளை இப்போதே அமுலில் வைத்திருக்கிறோம். உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், தகுதி அடிப்படையிலே செய்யவேண்டுமென்று அந்த விதியிலே இல்லை, அதைச் சேர்க்க வேண்டும் என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்திலே எச்.எம். ஆர். ஐ. உயர்நிலைப் பள்ளியிலே ஒரு தனியார் பள்ளியிலே ஒரு தலைமையாசிரியர் பதவியை 3வது ரேங்க்கிலே இருந்தவருக்குக் கொடுத்தார்கள். இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலே, சீனியராக இருக்கக்கூடிய திரு. சுப்பையா செட்டியார் என்பவரை விட்டுவிட்டு, திரு. பிரின்ஸ் என்பவருக்குக் கொடுத்தார்கள். தமிழக கல்வித் துறை, என்ன சட்டமிட்டது? மூன்றாவது ரேங்க்கில் இருப்பவரை நியமித்ததை "அப்ரூவ்" பண்ணவில்லை. அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை. ஆனால் இதற்கு முன் இருந்த முறையில் எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பளம் கொடுக்கும் முறை இல்லாமல் எல்லாருக்கும் நிறுத்துகின்ற அளவில் இருந்தது. ஏதாவது ஒரு தவறு நிர்வாகம் செய்துவிட்டால் அந்தப் பள்ளிக்கே சம்பளம் கொடுக்காமல் இருப்பது, ஒருவர் செய்கின்ற தப்புக்கு மற்றவர்கள் கஷ்டப்படுகின்ற நிலைமை கூட இருந்தது. அதை மாற்றி யார் முறை தவறினார்களோ அவர்களுக்கு மட்டும் சம்பளம் கொடுக்காது மற்றவர்களுக்கு எல்லாம் சம்பளம் என்று இந்தத் தமிழக அரசு வகை செய்திருக்கின்றது.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு தலைவரவர்களே, அவர்கள் கூறியது பொருத்தமாக ஆகாது. ஏனென்றால் பதவி உயர்வு கொடுப்பதிலே அரசாங்கம் தனியார் பள்ளிகளிலே தலையிடுவதற்கு அதிகாரம் ஒன்றுமில்லை. வேண்டுமானால் நாங்கள் ஊதியம் தரமாட்டோம் என்று நாள் கழிக்கலாமே தவிர, இதிலே தலையிடுவதற்கு அரசுக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது.

திரு. பி. ஆர். தாமஸ் : தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையிலே, சிறுபான்மையினர் பள்ளிகளாக இருந்தாலும், வேறு பிரிவினர்களால் நடத்தப்படும் பள்ளிகளாக இருந்தபோதிலும், பதவி உயர்வு கொடுக்கப்படும்போதுத் நிச்சயமாக, திட்டவட்டமாக அனுபவதின்பேரில்கொடுக்கப்பட்டாலொழிய, ஆசிரியர்கள் கட்டாயம் வேதனைக்கு ஆளாவார்கள். ஏனென்றால் அங்கு பலவிதமான சூழ்நிலைகள் உருவாகி, விருப்பு வெப்பு ஏற்படும் காரணத்தினாலே, முன் உரிமையுள்ள ஆசிரியரைத் தள்ளிவிட்டு குறைந்த கல்வியுள்ள வெறும் ரப்பர் ஸ்டாம்ப் என்று சொல்லக்கூடிய அளவுக்கு





திறமையில்லாத, அடிமைத்தன்மை உள்ள ஆசிரியர்களைத்தான் முன்னுக்கு கொண்டு வருகிறார்கள். திறமை அங்கே குறைவாகத்தான் இருக்கிறதென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். திறமை உள்ளவர்கள் அங்கே புறக்கணிக்கப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது என்பதுதான் என்னுடைய கருத்தாக இருக்கின்றது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, முரண்பட்ட கருத்துக்களாக இருக்கின்றன. ஆனாலும் எனக்குச் சாதகமான. கருத்து. நமது நண்பர் திரு. முத்துசாமி அவர்கள்......

(திரு. முத்துசாமி எழுந்தார்.)

திரு. எம். சங்கரலிங்கம் : உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்லி விட்டார்கள். என் கருத்தைச் சொன்ன பிறகு, உறுப்பினர் சொல்லலாம். என் வாதம் முழுவதையும் கேட்க வேண்டும்.

(மீண்டும் திரு. முத்துசாமி எழுந்தார்.)

I am not yielding. என்னுடைய டைமிலே குறைக்கக் கூடாது. உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் மீது பேசிய பிறகு பேசலாம். திரு. முத்துசாமி என்ற உடனே எழுந்தால் எப்படி சபையில் விவாதம் நடக்க முடியும்?

திரு. செ. முத்துசாமி : நான் எழுந்தேன். யாருக்குமே "ஈல்ட்" பண்ணப் போவதில்லை என்று பேசிக்கொண்டிருப்பதை நான் தடை செய்யவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதை நான் தடை பண்ணவில்லை என்று தெரிவித்துக் கொள்கின்றேன். அவரைத் தாக்குவதற்கு நான் விரும்பவில்லை. ஏற்கனவே இரண்டு பேருக்கு "ஈல்ட்" பண்ணினார்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): 10-வது தடவையாகச் செய்ததால், 11-வது தடவையும் செய்யலாம் என்பது விதியல்ல.

திரு. செ. முத்துசாமி : இதற்கு முன் இடம் கொடுத்ததனால்தான் இது ஏற்படுகிறது.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : பத்துப் பேருக்கு இடம் கொடுத்ததால், 11வது பேருக்கும் இடம் கொடுக்கவேண்டும் என்பது விதியல்ல. அங்கத்தினர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, நான் அவர் சொன்ன திருத்தத்தைப் பற்றிச் சொல்கிறேன். சீனியாரிடியை அனுசரித்து பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்பதைத்தான் இந்த அரசு அமுல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய வாதம்.

(பிற்பகல் 6.20.)

திரு. கணபதி அவர்கள் சொல்கிறபோது, அரசுக்கு உரிமையில்லை என்று சொன்னார்கள். திரு. தாமஸ் அவர்கள் உரிமை இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசு இப்போது அப்படிச் செய்துகொண்டிருக்கிறதென்று நான் சொல்லுகிறேன். அதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் சட்ட ரீதியாக உரிமையில்லை என்ற சூழ்நிலை இருக்குமானால், விதியில் அப்படி இருந்தால், ரத்து செய்யப்படும். இந்த நேரத்தில், ஓர் எடுத்துக்காட்டாக வடசேரி எஸ். ஆர். எம். உயர்நிலைப் பள்ளியில் நடந்த சம்பவத்தை நான் எடுத்துச் சொன்னேன். தலைமை ஆசிரியருக்கு அங்கே சம்பளம் கொடுக்காமல் நிறுத்தி வைத்து, சீனியர் மோஸ்ட் ஆசிரியரை தலைமை ஆசிரியராகப் போட்டால்தான், எல்லா நன்மைகளையும் அந்தப் பள்ளிக்குச் செய்வோம் என்று அரசு சொன்னதிலிருந்து, இந்த விதி இல்லாமலேயே, நண்பர் திரு. மூத்துசாமி அவர்கள் என்னென்ன நினைக்கிறாரோ அவற்றை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறதென்பதை நன்கு அறியலாம். அவர்கள் என்ன நினைக்கிறாரோ அதை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறதென்று சொன்னால்; அவரைவிட வேறு யாரும் அதிக மகிழ்ச்சி அடைய மாட்டார்கள். ஒரு வேளை நாம் இந்த விதியைச் சேர்த்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்கிற சட்டப் பிரச்சினைக்கு உட்பட்டு, கிடைத்திருக்கிற நன்மைகளும் தடைப்படலாம். இப்போது ஆசிரியர் சமுதாயத்திற்குக் கிடைக்கும் அரவணைப்பு, ஆதரவு தடைபடலாம். ஆகவே, இதுவே இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : உறுப்பினரவர்கள் இன்னும் 4 அல்லது 5 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : ஆசிரியர்களுக்கு மேலும் மேலும் பதவிப் பாதுகாப்பு ஏற்பட வேண்டுமென்பதற்காகவும், அதன் மூலம் கல்வி வளம் வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மூத்துசாமி அவர்கள் பல்வேறு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் கூறுவதெல்லாம், இந்தத் திருத்தங்கள் இல்லாமலேயே இப்போது இந்த அரசு அவற்றை அமல் நடத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த விதிகள் வரும்போது, அவற்றில் சட்டச் சிக்கல்கள் ஏற்படலாம். சட்டச் சங்கடங்கள் ஏற்படலாம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தகுதி காண் பருவத்திற்கு இப்போது இரண்டு வருடம் வைத்திருக்கிறார்கள். 10 (ஏ) (1) வைத்திருக்கிறார்கள். அது கூடாதென்று நாம் சொல்லி வருகிறோம். தனியார் பள்ளியில் தகுதி காண் பருவம் 2 வருஷம் என்று வைத்திருக்கிறார்கள். அதை ஓராண்டாக ஆக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்போது ஓர் ஆசிரியருடைய நிலை என்னவாகும்? ஓராண்டு கழித்து "கன்பர்ம்" செய்வார்கள்; இல்லையென்றால் வெளியேறு என்று சொல்லுவார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டால் அந்த ஆசிரியர் சக்தி பெறுகிறார். இரண்டு ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறேன்; இதற்குப் பிறகு ஏன் போகச் சொல்லுகிறீர்கள்;





நல்ல ரிசல்ட் இருக்கிறதே என்று அவரால் கேட்க முடியும். இப்போதிருக்கும் விதிகளிலே இடம் இருக்கிறதோ இல்லையோ, இந்த அரசு செய்து கொண்டு வருகிறது.

இந்த நேரத்தில் ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாகிகள் மாநாட்டில், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கலந்துகொண்டு, ஆசிரியர்களுக்குப் பதவிப் பாதுகாப்பு அளிக்காமலிருந்தால், அந்தப் பள்ளியை அரசே எடுத்துக்கொள்ளும் என்று எச்சரிக்கும் அளவுக்குத் தகுதியான, நேர்மையான கல்வி அமைச்சரவர்களைப் பெற்று, அவர்களால் உருவாக்கப்பட்ட கல்வி இலாகாவைப் பெற்று, எல்லா ஆசிரியர்களும் பாதுகாக்கப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். திரு. மூத்துசாமி அவர்கள் சொன்ன விளக்கங்களை எல்லாம் இந்த அரசு கருத்தில் கொண்டு செயல்முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதி முறைகளில் எதையெதைச் சேர்க்க முடியுமோ அவற்றைச் சேர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மற்றவற்றையெல்லாம் அரசின் நல்லெண்ணத்திற்கு விட்டுவிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உரிமையுண்டு. ஏனெனில் ஒரே கருத்தை உடையவர்கள் நாங்கள். அவருடைய ஆர்வ மிகுதியினால் சட்டச் சிக்கல்களைக் கொண்டுவந்து, நிர்வாகிகளுக்குச் சாதகமாக்கிவிடக் கூடாதென்ற எண்ணம் இருக்கிறது. திரு. கணபதி அவர்கள் அரசுக்கு உரிமை கிடையாதென்று சொன்னார்கள். ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்கமாகக் கூற வேண்டுமென்று நினைத்தேன். தலைவரவர்கள் அதிக நேரம் தர மாட்டார்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நேரம் தாழ்த்தி வந்தால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறதென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. எனக்கு நன்றாகத் தெரியும். கண்டப்பட்டிவிளை என்ற ஊரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் 10 நிமிடம் ஓர் ஆசிரியர் "லேட்" ஆக வந்தார் என்று சொல்லி நடவடிக்கை எடுத்ததற்கு டி. இ. ஓ. ஒப்புதல் அளிக்கவில்லை; சி. இ. ஓ. ஒப்புதல் அளிக்கவில்லை.

அப்படிப்பட்ட ஐயப்பாடுகளெல்லாம் இந்த நிலையில் தேவையில்லை. அவர் எந்த நேரத்திலும் சூழ்நிலை ஏற்படுமென்று நினைக்கிறார். தீர்ப்புகள் எல்லாம் வந்த பிறகு, இன்னும் நம்முடைய கருத்துக்களையெல்லாம் சொல்லி, அவற்றை ஏற்று, பல்வேறு முறையில் சீர்திருத்தங்களைச் செய்யலாம். ஒவ்வொரு வாய்ப்பிலும் சில சீர்திருத்தங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும், மேலவை என்றாலே "ஆசிரியர் சபை"; "கல்வி சபை" என்று வெளியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இன்று திரு மூத்துசாமி அவர்கள் உருக்கமாகப் பேசியதுபோல், யாரும் பேச முடியாது. "தயவு செய்து, தயவு செய்து" என்று 25 முறைக்கு மேல் சொல்லியிருக்கிறார். கல்வி அமைச்சரவர்களின் உள்ளத்தைத் தொட்டுவிட்டார். கல்வி இலாகாவினுடைய உள்ளத்தைத் தொட்டுவிட்டார். இதோடு இதை விட்டு விட்டு, இந்த அரசினுடைய நல்லெண்ணத்தில் அவர்கள் நம்பிக்கை கொண்டு இந்த அரசை மேலும் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைச்சர் தன் வாயால் இதைச் சொன்னால் நல்லதென்று அவர் சொல்லக்கூடும். எனவே, இதுபற்றி மேலும் வற்புறுத்த வேண்டா மென்று அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு எம். சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, என்னைக்குறிப்பிட்டு, "நான் கூறினேன்" என்று சொன்னார்கள். சட்டப்படி தலைமை ஆசிரியராக ஒருவர் உயர்த்தப்படும்போது அதிலே தலையிடுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையென்று சொன்னேன். அது என்னுடைய கருத்தல்ல. அப்படித்தான் இருக்க வேண்டுமென்பதும் என்னுடைய விருப்பமல்ல. இன்றுள்ள சட்டப்படி அவர்கள் தலையிடுவதற்கில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு முத்துசாமி அவர்கள் சொன்ன கருத்துடன் ஈடுபாடு உள்ள கருத்துத் தான் என்னுடையது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம் அவர்கள் கூறும்போது, "நான் கூறினேன்" என்று சொன்னதை என்னுடைய கருத்து என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. என்னுடைய கருத்து மாற்றியமைக்க வேண்டுமென்பதுதான்.

திரு எம்.சங்கரலிங்கம்: நான் சொன்னதில் கருத்து மாறுபாடு இருக்குமானால், அதை "வாபஸ்" பெற்றுக்கொள்ளுகிறேன்.

VICE-CHAIRMAN (Thiru S. T. Adityan) : How far the Industrial Disputes Act will be applicable is a moot point. Let us not go into it further now.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு முத்துசாமி அவர்கள் பல்வேறு திருத்தத் தீர்மானங்களைப் பற்றிப் பேசினார்கள். தகுதி காண் பருவம் பற்றியும் அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆசிரியர்களும், நிர்வாகமும், ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது, அந்த ஒப்பந்த விதியிலேயே இது குறித்த விதியையும் சேர்த்திருக்கிறோம். அதிலே தெளிவுபடச் சொல்லியிருக்கிறோம்.

"If orders extending the probation are passed in writing within six months after the period of probation, the said person shall be deemed to have completed his/her probation.

Termination of the probation shall be done only with the previous permission of the competent authority specified in rule 17."

(பிற்பகல் 6-30)

என்று குறிப்பிட்டிருக்கிறோம். இதை மீறினால், அதற்காக இருக்கிற அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகைகள் இருக்கின்றன. ஆகவே விதிமுறைகளில் ஒன்றாகத்தான் இதைப் போட்டிருக்கிறோம். நிர்வாகத்திற்கும் ஆசிரியருக்கும் ஒப்பந்தம் ஏற்படுகின்றபொழுது, அந்த



ஒப்பந்தத்தைக் காப்பாற்ற நிர்வாகத்தினர் தயாராக இருக்கிறார்கள். அப்படிக் காப்பாற்ற நிர்வாகத்தினர் தவறுவார்களேயானால், அப்படி தவறியவர்கள் யார் என்பதைச் சுட்டிக் காட்டினால், அதன் மீது நடவடிக்கை எடுக்க "காம்பிடெண்ட்" அதாரிடி" -க்கு உரிமை இருக்கிறது. விதிகளிலே இவை அத்தனையும் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்ற அவசியமில்லை. இதிலே ஒப்பந்தத்தினுடைய தன்மைகள் இருந்தாலும்கூட, விதிகள் புத்தகத்திலே நாம் இதையெல்லாம் இணைத்திருப்பதன் காரணமாக, தகுதிகாண் பருவத்தைப் பொறுத்தவரையிலும், நிலைமைகள் ஒன்றும் ஏற்படாது. அப்படியே நிறுத்த வேண்டுமானாலும், தகுதி காண் பருவத்தில் அதற்குரிய அதிகாரிகளுடைய அனுமதி பெற்றுத்தான் நிறுத்த வேண்டுமென்று நாம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு ஆண்டு தான் தகுதி காண் பருவம். மேற்கொண்டு ஓராண்டு நீடிக்க வேண்டுமென்று விரும்பினால், எழுத்தின் மூலமாகப் பதிவு செய்து தான் நீடிக்க வேண்டும். அதற்கிடையிலே நிறுத்த வேண்டுமென்றால், அனுமதி பெறாமல் யாரையும் நிறுத்தக்கூடாது என்ற பாதுகாப்பு நாம் போட்டிருப்பதன் காரணமாக இதனால் ஆபத்து ஒன்றும் ஏற்படாது. இது மீறப்படுமேயானால், அதன்மீது மேல் முறையீடு செய்து அதற்குரிய அதிகாரிகள் 17-வது விதியில் குறிப்பிட்டிருக்கிறபடி, தக்க நடவடிக்கை எடுக்கலாமென்று இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, விதி 14 -லே "Shall" என்பதற்கு "may" என்று இருக்கலாமென்றும், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம், தண்டனை தரலாம் என்றும் திருத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "Shall" என்பதற்கு " May " என்று போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். " Shall " என்று நாம் போட்டிருக்கிறோம். " Shall " ஆ "May" யா என்பது உலகம் முழுவதும் இன்று இருக்கிற பிரச்சினை. முன்பு " Shall " " May " என்று மொழிப் பிரச்சினை வந்த போது கூட இருந்தது. கூட்டுப் பொறுக்குக் குழுவிலே "shall" போடலாமா அல்லது "May" போடலாமா என்று ஆராய்ந்து கடைசியிலே ஒழுக்க விதிகளுக்கு அதிக மதிப்புத் தர வேண்டும், இரண்டு சாராரும் அதற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டுமென்ற முடிவினுடைய அடிப்படையிலே தான் "shall" என்று போட்டோம். அதற்காக அதைத் தவறாகப் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாம் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. வேறு பல பாதுகாப்பு முறைகள் ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக, குழுக்கள் அமைத்து, அதிலே அங்கம் பெறுவதற்கான வாய்ப்பினை தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு எல்லாம் தந்திருப்பதன் காரணமாகவும் அவர்கள் மீறிச் செய்கின்ற சூழ்நிலை ஒன்றும் ஏற்படாது. அப்படியே இருந்தாலும் கூட மேல் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அதை விட இன்னொரு கடினம் என்னவென்று கேட்டால் நாம் ஆக்டிலேயே " shall என்று போட்டுவிட்டோம். ஆக்டிலே shall என்று போட்டுவிட்டு, விதி முறைகளிலே May என்று போடமுடியாது. அந்த ஒரு காரணத்தைப் வைத்துப் பார்க்காலும் கூட அதிலே Shall என்றுதான் போட முடியும்

VICE-CHAIRMAN (Thiru S. T. Adityan): Is there no difference between "shall be punished" and "shall be Table to be punished"? There is a lot of difference. Is that not ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே வழக்கு மன்றங்களிலும் 'May' also means 'may not' என்று கூட வாதாடலாம். Shall என்பதற்கு அப்படி வாதாடமுடியாது. ஆகவேதான் அப்படி நாம் போட்டிருப்பதால் விதி முறைகள் வரும்போது அந்த வகையிலே நாம் போடவேண்டியவர்களாக இருக்கிறோம்.

திருத்தம் 15-ஐப் பொறுத்தவரை தனியார் பள்ளிச் சட்டம் 22, 23-வது பிரிவுகளின்படி பெரும் ஒழுங்கீனத்துக்கு மட்டும் ஆசிரியர் தாற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்படலாம். இரண்டு மாதத்திற்கு மட்டும் பணி நீக்கம் செய்ய நிர்வாகத்தினருக்கு அதிகாரம் உண்டு. ஆசிரியர்களுடைய தவறினால் இரண்டு மாதத்திற்கும் அவர் மீதான விசாரணையை முற்றுவிக்க இயலாவிட்டால், மாவட்டக் கல்வி அலுவலர், தலைமைக் கல்வி அலுவலர் ஆகியோர் பணி நீக்கத்தை மேலும் இரண்டு மாதத்திற்கு நீடிப்பதற்கு அனுமதிக்கலாம். தற்காலிகமாக பணி நீக்க உத்தரவை பள்ளி நிர்வாகமோ, மேல் அதிகாரிகளோ இரண்டு மாதத்திற்கு முன் அல்லது 4 மாதத்திற்கு முன் ரத்து செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் தந்து ஒரு குறுகிய சரத்தைச் சேர்க்கவேண்டுமென்பது மாண்புமிகு அங்கத்தினருடைய கருத்து. இந்தப் புதிய சரத்துத் தேவையில்லை. தமிழ்நாடு ஜெனரல் கிளாஸஸ் ஆக்ஸ்ட் 1891, 15-வது விதியின்படி யாராவது ஒரு சட்டத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் தரப்பட்டுள்ள அதிகாரத்தைப் பின்பற்றி ஏதாவது நடவடிக்கை எடுத்தாலோ அல்லது ஆணை பிறப்பித்தாலோ அவருக்கு அந்த நடவடிக்கையை, அந்த ஆணையை ரத்து செய்யும் முழு அதிகாரம் உண்டு என்று இருப்பதன் காரணமாக எந்த சமயத்திலும் இதைச் செய்துகொள்ளலாம். ஆகவே இந்தத் தனி சரத்தைச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்பதையும் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் திருத்தம் 16ஐப் பொறுத்த வரையில், ஏதேனும் ஒரு தனியார் பள்ளி நிர்வாகம் பள்ளியில், ஒரு வகுப்பை மூடிவிட விரும்பினால் அப்பள்ளியை அல்லது வகுப்பைத் திறக்க எந்த அதிகாரி அனுமதியளித்தாரோ அந்த அதிகாரியிடமிருந்து 6 மாதத்திற்கு முன்பு அந்த நிர்வாகம் முன் அனுமதி பெற்றாக வேண்டுமென்று விதி 20 கூறுகிறது. மூடுவதனால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதோடு பள்ளி இறுதி ஆண்டிலே தான் மூட வேண்டுமென்று விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறு மூடுவதனால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை, சம்பளம், பணி நிலைகள் ஆகியவற்றில் பாதிப்பு இன்றி, வேறு தனியார் பள்ளிகளிலோ அரசுப் பள்ளிகளிலோ உள்ளாட்சிப் பள்ளிகளிலோ வேலைக்கு அமர்த்த வேண்டும் என்பது அங்கத்தினர் அவர்களுடைய நோக்கம். ஆகவே நாம் தனியார் பள்ளிச் சட்டத்தின் 26-வது பிரிவின்படி அரசின் ஆணையின் காரணமாக பள்ளிகளோ வகுப்போ மூட நேர்ந்து அதன்



காரணமாக ஆசிரியர்கள் வேலை இழக்க நேர்ந்தால், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் நிறுவனங்கள் பள்ளியையோ வகுப்புகளையோ மூடிவிடும் நேர்வுகளில் மேற்சொன்ன பாதுகாப்பைத் தருவது நடைமுறையில் கடினமாக வந்து சேரும். எனினும் கூட பள்ளியையோ வகுப்புகளையோ நிர்வாகிகள் தாமாக மூடிவிடும் நேர்வுகளில் அதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இயன்றவரை மாற்று வேலை அளிக்க பள்ளிக் கல்வித் துறை முயலுகிறது. என்றாலும் நாம் விதிகளில் போட முடியுமே தவிர கட்டாயம் தருவோம் என்று சொல்லுவோமேயானால் ஒரு கட்டத்தில் தனியார் பள்ளிகள் எதுவும் இல்லாமல் அரசாங்கப் பள்ளிகளாக எல்லாம் மாறுகின்ற சூழ்நிலை தானாக வந்து சேர்ந்துவிடும். மேலும் நடைமுறையில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஏனென்றால் அப்படிச் செய்தால் அரசாங்கம் முழுப்பாதுகாப்பு தந்து எடுத்துக்கொள்வது மாதிரி ஆகிவிடும். மேலும் ஆசிரியர்கள் சுலபமாக அரசாங்க ஆசிரியர்களாக வருவதற்கு ஒரு வழியாகக் கூட அமைந்துவிடும். ஆனாலும் கூட கூடுமான வரை அவர்களுக்குப் பாதுகாப்பு தந்திருக்கிறோம். கூடுமானவரை அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிப்பதை, அவர்களுடைய சம்பளம் பாதிக்கப்படாத அளவுக்கு அவர்களுக்கு தனியார் பள்ளிகளில் அல்லது அரசாங்கப் பள்ளிகளில் வேலை தருகின்ற நோக்கத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நடைமுறைப் படுத்துகின்றபோது இதில் அதிகமான சிக்கல்கள் ஏற்படுமானால், அப்பொழுது அதைப் பற்றித் தனியாகக் கவனிக்கலாம். இப்பொழுது வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே இருந்த நிலையை விட்டுவிட்டு இந்தச் சட்டத்தின் மூலம் இப்பொழுது நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். ஏற்கெனவே எந்தத் தன்மைகளும் இல்லாமல் இருந்தது. இப்பொழுது இதிலே நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சம்பளம், பயணப்படி, ஓய்வூதியம் போன்ற விஷயங்களில் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்னென்ன விதிகள் பொருந்துமோ அதையே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும்படி ஆக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே சம்பளம், விடுமுறைச் சம்பளம், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை ஆகிய பல விஷயங்களில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உள்ள எல்லாச் சலுகைகளையும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தந்திருக்கிறோம். இன்னும் மெல்ல மெல்ல தான் முதலிலே கேள்விக்கு பதில் சொன்னபோது குறிப்பிட்ட மாதிரி, இடைவெளியை நாம் குறைத்து வருகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கிறோம். இதிலே சிக்கல்கள் ஒன்றும் இல்லாத ஒரு சூழ்நிலையிலே அப்படிப்பட்ட சட்டம் இயற்றுவதிலேயே தவறு இல்லை. ஆனால் இன்னும் தெளிவாக ஆக்க வேண்டியிருக்கிற காரணத்தால் கூடுமான வரை இடைவெளியே இருக்கக் கூடாது, வேறுபாடே இருக்கக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் இப்பொழுது முயற்சிகளில் நாம் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம். இப்பொழுது சம்பளம், விடுமுறைச் சம்பளம், விடுப்பு வசதிகள், ஓய்வூதியம் ஆகியவற்றிலே வேறுபாடு ஒன்றும் இல்லாமல் செய்துவிட்டோம்.

ஓரிரண்டு இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்று சொன்னால், அவற்றையும் மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்த பிறகு இப்படிப்பட்ட விதிகள் கொண்டு வந்தால் சங்கடங்கள், சிக்கல்கள் ஏற்படாமல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 ஏப்ரல் 18

இருக்கும். அந்த நிலை வருகின்ற வரையிலும் இந்த விதியை வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதிலே சங்கடங்கள் ஒன்றும் ஏற்படாமல் பின்னால் நிறைவேற்றிக்கொள்ளலாம். இப்பொழுது அது தேவையில்லை. மற்றும் 18-லிருந்து 25-வது விதிகள் வரையிலும், இரண்டாவது இணைப்பில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குரிய ஒழுக்க நெறி முறைகள் பற்றிய விதிகள் சொல்லப்பட்டுள்ளன. மொத்தம் 12 விதிகள் உள்ளன. அதிலே 18-ல் இருந்து 25 வரை அடங்கும். உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள திருத்தங்களை ஏற்றால் ஒழுக்க நெறி முறைகளில் செயல் திறன் குறையக் கூடும். இதிலுள்ள விதியின்படி உடல் நலக் குறைவின் காரணமாக விடுப்பில் செல்லும் ஆசிரியர்கள் ஒரு வாரத்திற்குள் மருத்துவச சான்றிதழ் தர வேண்டுமென்று குறிப்பிடுகிறோம். ஏற்கெனவே விடுப்பு எடுக்க வேண்டுமென்று விரும்புவோர் எதற்காக எடுக்கிறோம் என்பதை முன் கூட்டியே தெரிந்து கொண்டு விடுப்புக்கு விண்ணப்பிக்க உரிமையுண்டு. எதிர்பாராத காரணங்களினால் அவ்வாறு வர முடியாத நிலை ஏற்பட்டால், நாம் வைத்திருப்பதன்படி, ஒரு வார காலத்திற்குள் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும் என்று தான் கூறுகின்றோம். மருத்துவக் காரணங்களுக்காக விடுப்பில் செல்லும் அரசு ஊழியர்கள் கூட மருத்துவச் சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்று தான் நாம் விதி வகுத்திருக்கிறோம். ஆக ஒரு வாரம் என்று நாம் அவர்களுக்கும் கொடுத்திருக்கிறோம். அதிலே ஏதாவது சங்கடங்கள் ஏற்படுகிற சூழ்நிலை எதிர்காலத்திலே ஏற்படுமேயானால், அதை வேண்டுமானால் நாம் நீட்டிக்கொள்வதற்கு முயற்சி செய்யலாம். மற்ற எல்லா இடங்களிலும் நாம் ஒரு வாரம் என்று தான் வைத்திருக்கிறோம். எதிர்பாராத விதமாக ஒரு "ஆக்சிடென்ட்"லே ஒரு ஆசிரியர் மாட்டிக் கொண்டால், உடனே விடுப்பு வாங்க முடியாது. ஒரு வார காலத்திற்குள் அவர் சார்பாக வேறு ஒருவர் விடுப்பு விண்ணப்பத்தைக் கொண்டு போய்க் கொடுக்கின்ற சூழ் நிலை ஏற்படலாம். அதனால் தான் அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக என்று சொல்லியிருக்கிறோம். அதுமாதிரி சமயங்களிலே முன்கூட்டியே விடுப்பு எடுத்து விட்டுச் செல்ல வேண்டுமென்ற நிலை இல்லை. சாதாரணமாக விடுப்பில் செல்பவர்கள் முன் கூட்டியே தெரிவிக்கலாம். எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற விபத்துக்கள், எதிர்பாராத தன்மைகள் ஏற்படுகின்றபோது, டிரெயின், பஸ் போன்றவைகளிலே வரும்பொழுது வர முடியாமல் தடை ஏற்படும்போது, அத்தகைய எதிர்பாராத சந்தர்ப்பங்களில் தான் ஒரு வார காலத்திற்குள் அந்த விடுப்பு வேண்டுகோளைத் தரவேண்டுமென்று நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதனால் அதிக சங்கடங்கள் ஏற்படாது.

பிரைவேட் டியூசன் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் டியூசன் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அனுமதி பெற்றுத்தான் டியூசன் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று நாம் வைத்திருக்கிறோம். ஆக 5 பேர் வரை டியூசன் சொல்லிக் கொடுப்பதற்கு அனுமதி இல்லாமல் வைத்துக் கொள்ளலாம் என்று வைப்பதன் மூலமாக எந்தக் கட்டுப்பாடற்ற நிலைமையும் ஏற்படாது. அது ஆசிரியருக்கும் நல்லது. பிரைவேட்டாகச் சொல்லிக் கொடுப்பவர்களுக்கும் நல்லது. பிறகு அவர்கள் வினா எழுப்புவதற்கும், பிள்ளைகளைப் பற்றிப் பார்ப்பதற்கும், முறையிடுவதற்கும்,



1975 ஏப்ரல் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தலைமை ஆசிரியர் கவனிப்பதற்கும் கூட வழிவகைகள் இருக்கின்றன. ஆசிரியர்களுக்குக் கூட நல்லது. தான் ஒரு அனுமதி பெற்றுத்தான் செய்கிறேன்—இப்பொழுது அப்படிச் செய்கிறார்களா என்பது வேறு—ஆனாலும் கூட இப்படிப்பட்ட ஒரு சூழ் நிலை ஏற்படுமானால் அவர்களுக்கும் நல்லது, தலைமை ஆசிரியர்களுக்கும் நல்லது.—முறையோடு தான் செய்திருக்கிறோம் என்று நிம்மதியுடன் இருக்கலாம். யாரும் சந்தேகப்படாத அளவுக்கு—அவன் யாரிடமும் குறைபடாத அளவுக்கு அப்படிச் செய்கிறான்—இவன் இப்படிச் செய்கிறான்—அனுமதி இல்லாமல் செய்கிறான் என்றெல்லாம் குறைபாட்டைச் சுமத்த முடியாத அளவுக்கு அது இருக்கக்கூடும். அவர்களுக்கும் தெரியக் கூடும். இதிலே ஏதாவது குறைபாடுகள் இருந்து நிர்வாகிகள் தடை செய்ய முன் வருவார்களேயானால், அதைத் தடை செய்யாத அளவுக்கு பாதுகாத்துக் கொள்ள அந்தக் குழுவிலே ஆசிரியர்களும் தலைமை ஆசிரியரும் முறையோடு இடம் பெற்றிருக்கிறார்கள். ஆக அதைப் பொறுத்த அளவிலும் விதியைத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மற்றொன்றையும் அவர்கள் சொல்லுகின்றபோது சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு உள்ள மாதிரி விதிகளில், "இன்சால்வென்சி" கொடுக்கின்றவர்களுக்கு வேலைக்குப் பாதுகாப்பு தர வேண்டும், அந்தக் காரணத்தைக் கொண்டு பாதிக்கக்கூடாது என்பதற்கு பல காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த விதிகளில் உள்ளபடி "இன்சால்வென்சி" விதிப்படி அவர்கள் தாத்தாவோ அல்லது அவர்கள் அப்பாவோ செய்ததற்கு இவர்கள் என்ன செய்வார்கள்? அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு இவர்களை "இன்சால்வென்ட்" என்று சொல்லி விடக் கூடும் என்பதையெல்லாம் இங்கே உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அது உள்ளபடியே என்னுடைய உள்ளத்தையும் கூட ஓரளவுக்கு உருக்கத்தான் செய்தது. நான் ஏற்கெனவே படித்துப் பார்க்கிறபொழுது, அதிலுள்ள தன்மைகளையெல்லாம் நன்கு உணர்ந்தேன். ஆனால் அந்தத் தன்மைகளைப் பொறுத்த வரையிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களை வற்புறுத்த வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதைத் திருத்தம் செய்வது என்ற ஒரு முடிவுக்கு நான் வந்திருக்கிறேன். ஆக அதிலே இவ்வளவு பெரிய திருத்தங்களாகச் செய்ய வேண்டிய தேவையில்லை. மற்றைய அரசாங்க ஊழியர்களுக்கெல்லாம் "இன்சால்வென்சி" என்று சொன்னால் அதற்குரிய காரணங்களையெல்லாம் எழுதி விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அந்த அளவுக்கு அவர்களும் எழுதி அதிகாரிகளுக்கும் தெரிவித்து விடுவார்களேயானால், அது போதுமானது. அதையே காரணமாக வைத்து அவர்களை வேலையில் வைக்காமல் இருக்கவோ, அல்லது வேலையை விட்டு எடுக்க வேண்டிய அவசியமோ ஏற்படாது. அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பு தருகின்றோம். வேலை நீடிக்கிற அளவுக்குச் செய்வது தான் முறையும் நியாயமுமாகும் என்பதையும் நான் உணர்கிறேன். அதற்கான அளவுக்கு விதியையும் திருத்துகின்ற ஏற்பாட்டினை அரசு செய்யும். வற்புறுத்த வேண்டாம். ஆனால் அவ்வளவு பெரிய திருத்தங்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை. சுருக்கமாக நாம் அந்தத் திருத்தங்களைக் கொண்டு வரலாம். இந்தத் திருத்தத்தைப் பொறுத்த வரையில், ஏற்றுக்கொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. அந்தக் கருத்தை ஏற்றுக்

கொள்ள ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே அந்தக் கருத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். விதியை அதற்கேற்றபடி விரைவிலே திருத்தம்செய்யலாம்.

[பிற்பகல் 6-40]

*தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்முறைபற்றி ....*

Thiru **G. SWAMINATHAN** : Sir, there is another point. Item 10 of the Code of Conduct says: "No teacher or other person employed in a private school shall bring or attempt to bring any political or outside pressure on his superior authority in respect of his individual service interests." Sir, this is a private school. Somebody asks somebody to go and inform the Management that he may be given a promotion or something. Then he will be liable for dismissal according to this. It may be relevant for a Government Department and not for a private school, because it is run by a private manager. Somebody, a political person or a friend may go to him and ask for a promotion or some other favour to be given to him. He becomes liable for dismissal. It is necessary that there should be such a strict provision in respect of a management school. The Hon. Minister may also consider this.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது இல்லாவிட்டால் அதைச் செய்யலாம் என்று ஆகிவிடும், ஆகவேதான்......

Thiru **G. SWAMINATHAN** : Sir, there is a difference between the Government teachers and private school teachers. The teachers in Government service should not bring any kind of pressure on the higher authority. Here it is a private institution, something like a private firm, where anybody can go and represent to the private Manager. By such mere representat on, he is liable for dismissal. The Hon. Minister may consider this also, as he is reconsidering the question of insolvency.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சங்கடங்கள் வந்தால் பிறகு யோசிக்கலாம். ஆனால் இப்பொழுது எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள். அல்லது அதிகாரிகள் இவர்களை வைத்துக்கொண்டு, ஆக இவர்களுடைய சலுகைகளில்தான் தனியார் பள்ளிகள் நடைபெற வேண்டும் என்ற நிலையில், "உள்ளபடியே அப்படிப்பட்ட ஆசிரியர்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இல்லைதான். ஆனால் அவர்களுடைய தயவின்கீழ் இருக்கும் காரணத்தினால்தான் செய்தேன்" என்று சொல்லக்கூடும். அப்படிப்பட்ட குறைபாடு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றுதான் பொதுவாக இது போடப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின் சார்பில் இருந்தாலுங்கூட, தனிப்பட்ட நிலைமைகளைப் பார்க்கும்போது, நியாயத்தின் அடிப்படையில்தான் செய்யவேண்டியிருக்கிறது. சங்கடங்கள் ஏற்பட்டால், பிறகு அதைப் பார்த்துக்கொள்ளலாம். இப்போது இருப்பது ஓரளவிற்குப் பாதுகாப்பாக இருக்கும். ஆனால் யாரும் அத்தகைய நிலைமைகள் வருவதற்குக் காரணமாக இல்லாமல் இருப்பதற்கு, இது வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



அடுத்து, ஆசிரியர்களும் அவர்களை ஒத்த மற்றவர்களும் ஊர்வலம் எடுப்பது போன்ற பிரச்சினைகள் பற்றி சொல்லி,

**Nothing in this item shall prevent the teacher or other person employed in a private school from participating in the demonstrations, processions or activities sponsored by the service unions, associations or federations.**

இது சேர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது இல்லாமலேயே அது சாதாரணமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றது. இப்போது அதைப் போட்டுவிட்டு, "நீங்கள் செய்யலாம்" என்று சொல்லி சில விதிகளின் மூலம் சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. இதையெல்லாம் நியாயத்தின் அடிப்படையில் அரசாங்கம் அவ்வப்பொழுது கவனித்து நடைமுறையில் செய்யவேண்டியதைச் செய்துகொண்டு வருகின்றது. பொதுவாக இருக்கும் தன்மையின் அடிப்படையில், அரசு அல்லது நாட்டின் நன்மை, தேசத்தின் பாதுகாப்பு, ஒற்றுமை ஆகியவற்றின் அடிப்படையில் இருப்பதுதான் நல்லது. இதையெல்லாம் எந்த ஒரு அரசாங்கமும் சில நேரங்களிலே கண்டும் காணாததுபோலத்தான் இருக்க வேண்டிவரும். ஆனால் விதிகளிலே இதைச் சேர்த்து, இதை நீங்கள் செய்யலாம் என்று சொல்லிவிட்டால், அது ஆசிரியர்கள் உலகத்திற்கே கேடுவிளைவிப்பதாகும். ஆசிரியர்களே விரும்பும் ஒரு கட்டுப்பாட்டை, ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படக்கூடும். ஆகவே நியாயத்தின் அடிப்படையில் அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறும் போது சூழ்நிலைக்கொப்ப முடிவெடுக்கவேண்டிய தன்மையிருப்பதால் இதை வலியுறுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

26, 27-வது திருத்தங்கள் பற்றிக் கூறும்போது, தனியார் பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதிலே பல வகைகளிலே வாதிட்டு வந்தோம். இப்போதுகூட அவர்கள் எடுத்துச் சொல்லுவதைப் போல, அதிலே பல சங்கடங்கள் வருகின்றன. அவற்றை ஆராய்ந்து பார்த்துதான், இப்போது எங்கேயாவது இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்பட்டு புகார்கள் கொண்டுவரப்பட்டு, சரியான தலைமைகள் இல்லை என்று சொல்லி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கும் சூழ்நிலை வந்தால், அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களிலே நேரடியாக பள்ளித் தலைமை ஆசிரியருக்கோ அல்லது பள்ளி ஆசிரியர்களுக்கோ சம்பளம் கொடுக்க மூன்றாவது இணைப்பு, இரண்டாவது விதியில் வகை செய்திருக்கிறோம். எங்காவது இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டால், நேரடியாகச் சம்பளத்தைத் தரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும் வகையில், சட்டத்தில் வழி செய்திருப்பதால், அதைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றார்கள். ஆனால் எல்லாப் பள்ளிகளிலும் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்ற முடிவிற்கு வரவேண்டிய அவசியம் இல்லை. இப்போதுள்ளதை மாற்றி அப்படிப் போட்டால், அதை எடுத்துக்கொள்ளுவதற்கும் அதுவும் ஒரு காரணமாகிவிடும். பின்னர் ஒரு நிர்வாகத்தை நடத்திச் செல்லுவதற்கு வழிவகை ஏற்பட்டுவிடும். இதிலே ஒரு சிலருக்கு விதிவிலக்கு என்று தந்துவிட்டு மற்றவர்களுக்கு அதைத் தராவிட்டால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். ஆகவே பல முறை ஆராய்ந்துபார்த்த பிறகு, இப்படிப்பட்ட

சூழ்நிலைகளில் எங்கேயாவது தகராறு ஏற்பட்டால், முறைகேடுகள் ஏற்பட்டால், அங்கே நாமே நேரடியாக தலைமை ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தரலாம் என்று சேர்த்திருக்கிறோம். இது நடைமுறையில் எப்படி வருகின்றது என்று பார்த்து, இதையும் மீறி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அப்போது அதைக் கவனிக்கலாம். ஆகவே இப்போது இதை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே எப்படி இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு வாதிட்டோமோ அதேபோல நானூற்றுச் சில்லரை பேர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று இந்தச் சட்டம் செல்லாது என்று வாதிட இருக்கின்றார்கள். அதை எதிர்த்து அழுத்தம் திருத்தமாக, உண்மையோடு எதிர்த்து, இந்தச் சட்டத்தைக் காப்பாற்றுவதற்கு ஆயத்தமாக அரசாங்கம் இருக்கின்றது. அவசியமானால் சுப்ரீம் கோர்ட்டிற்குச் செல்லவேண்டுமானால் அங்கு போவதற்கும் தயாராயிருக்கிறோம், அரசாங்கத்தின் சார்பில், என்ற முறையில்தான் வாதிட்டிருக்கிறோம். இதற்குக்கூட அட்வொகேட்-ஜெனரல்தான் வாதிட வேண்டும் என்று உரிமை கேட்டு, இது மிக மிக முக்கியமான பிரச்சினை என்ற காரணமாக—ஒரு தலைமுறையில் விதிமுறைகள் மாற்றப்பட்டுவிட்டால், பிறகு தலைமுறை தலைமுறையாக அதைத் திருத்துவதற்கு இடமில்லாது போய் விடும் என்று கருதி, இதிலே அட்வொகேட்-ஜெனரலே வாதிட வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறேன். அந்த அளவிற்கு முக்கியமான பிரச்சினையாக அரசாங்கம் இதிலே கவனம் செலுத்திவருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றபடி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. முத்துசாமி அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும், திரு. கணபதி அவர்களும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் தன்மையில் நடைமுறையில் எந்தெந்த அளவிற்கு அவற்றைச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்ய அரசு ஆயத்தமாக இருக்கின்றது. புரியாத நிலைமைகள் ஏற்பட்டு, நம்மையும் மீறி, சட்டத்தையும் விதிகளையும் மீறி யாராவது நடந்துகொண்டால், அப்போது அதை மாற்றியமைத்து அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கின்றது என்று சொல்லி, உள்ள நிலைமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முக்கியத்துவம் தரும் வகையில் இந்த விவாதங்கள் பயன்பட்டதாக எடுத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களுக்கு, உணர்வுகளுக்கு மதிப்பளித்து எந்தெந்த முறையில் அவற்றை நடைமுறைப் படுத்தலாமோ அந்த வகையில் அரசு அவற்றை நிச்சயமாக ஆராயும் என்று கூறி, இவற்றை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இந்த அரசு தனியார் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் நல்ல உணர்வோடு சட்டங்களைக் கொண்டுவந்து, நடைமுறையில் சிக்கல்கள் ஏற்படும்போது சட்டரீதியாக ஆராயும் வகையில், நல்ல உணர்வோடு, எப்போதும் ஆசிரியர்கள் தரப்பில் சற்றும் விட்டுக்கொடுக்காமல் நமது கல்வி அமைச்சர் அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும் ஆதாரவாக இருந்திருக்கின்றார்கள் என்ற



நம்பிக்கையோடு ஆசிரியர் சமுதாயம், குறிப்பாக தனியார் பள்ளி ஆசிரியர்கள் இன்றைக்கு இருக்கின்றார்கள் என்பதை இந்த அளவில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த அவையில் பேசும் நேரத்திலே இரண்டொரு விஷயங்களைப் பொறுத்தவரையில், சங்கடங்கள் வந்தால் அந்தச் சங்கடங்களை அவ்வப்பொழுது களைவதற்கு இந்த அரசு தயங்காது, அவசியமானால் விதிகள் தளர்த்தப்படும் அல்லது திருத்தப்படும் என்ற ஒரு நல்ல கருத்தினை கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். எந்தச் சங்கடங்கள் வந்தாலும், அவற்றை நீக்குவதற்கான உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு அரசுக்கு ஒருவார காலம் போதும். எனவே அந்த வகையில், ஆசிரியர் சமுதாயத்திற்கு எத்தகைய சங்கடங்கள் ஏற்பட்டாலும், அவர்களுடைய உணர்வுகளை அறிந்து வேண்டியதைச் செய்வார் என்று அவருடைய நல்ல தன்மைகளில் ஆசிரியர் சமுதாயம் பெரும் நம்பிக்கை வைத்திருக்கின்றது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் உயர் நீதி மன்றம் இல்லை, அவசியமானால் சுப்ரீம் கோர்ட்டிற்கும் செல்ல அரசு தயாராயிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் கொடுத்த செய்தியானது ஆசிரியர்கள் சமுதாயத்திற்குக் கிடைத்த நல்ல செய்தி. அதற்காக ஆசிரியர் சமுதாயமே அவரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றது என்ற தன்மையில் அவருக்குப் பாராட்டுதல்களையும் நன்றியையும் அவர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்சால்வென்சி காரணமாக ஒருவரை 'அன்ஃபிட்' என்று 'டிக்ளேர்' செய்யும் தன்மை பற்றிய கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அதை ஏற்றுக்கொண்டு அதையொட்டிய விதிமுறைகளை மாற்றிக் கொள்ளலாம் என்று அறிவித்தமைக்காக அவருக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒரே ஒரு விஷயத்தில், ஆசிரியர்களுக்கு—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்குவதுபற்றிய கருத்துக்களைப் பொறுத்த மட்டில், மரபின் காரணமாக இப்போது அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாத நிலை இருந்தாலும், பின்னால் இதை நடைமுறைப் படுத்துவார்கள் என்ற முழு நம்பிக்கையை இந்த அரசின்மீது, அமைச்சர் அவர்கள்மீது ஆசிரியர் சமுதாயம் வைத்திருக்கின்றது என்று சொல்லி, அப்படிப்பட்ட நம்பிக்கை காரணமாக இந்தத் திருத்தங்களை வலியுறுத்தாமல், கல்வி அமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து, அவற்றைத் திரும்பப் பெறுகிறேன் என்று சொல்லி, கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் மீண்டும் நன்றிகூறி அவற்றைத் திரும்பப் பெறுகிறேன்.

(6) முதல் (27) வரை உள்ள திருத்தங்கள், அவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டன.

[பிற்பகல் 6·50]

## 7. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/1975).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாற்றுத் தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு @(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1930-ஆம் ஆண்டு பந்தயச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 3/1930) தற்போதைய விதித்துறைகள் செயல்படுவதில், சிறப்பாக பருத்தி விலைகள் குறித்த பந்தயச் சூதாட்டம் மற்றும் அதே வகைப்பட்ட சூதாட்டங்களையொட்டி, அவை செயல்படுவதில் காணப்படும் குறைபாட்டினைத் திருத்தி, அச்சட்டத்தின் விதித் துறைகளைக் கடுமையாக்கும் பொருட்டு தக்க திருத்தங்களைத் தெரிவிக்கும் நோக்குடன், அச்சட்டத்தின் அப்போதைய விதித்துறைகளைப் பரிசிலனை செய்வதற்கென, 1960-ஆம் ஆண்டில் அரசு ஒரு குழுவை நியமித்தது. பருத்தி விலைகள் மூதலியவை குறித்த பந்தயச் சூதாட்டத்தின் கேடுகளை ஒடுக்கும்பொருட்டு, கடுமையான நடவடிக்கைகளுக்கு வகை செய்வதற்காக சட்டத்தைத் திருத்துவதற்கு குழு பல கருத்துரைகளைக் கூறியுள்ளது. குழுவின் கருத்துரைகள் அரசால் பரிசிலனை செய்யப்பட்டன. இச் செயல் நோக்கத்துக்காகத் தமிழ் நாடு 1930-ஆம் ஆண்டு பந்தயச் சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 3/1930) திருத்துவதெனை முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை (மத்தியச் சட்டம் 2/1974) செயலுக்கு வந்ததையொட்டி சட்டத்தில் சில திருத்தங்கள் செய்ய இவ்வாய்ப்பு பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் அனைத்தையும் ஓர்ந்தறியும் குற்றங்களாகச் செய்யவும் இவ்வாய்ப்புப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு 1930-ஆம் ஆண்டு பந்தயச் சட்டத்தில் புதிய பிரிவு ஒன்றைச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது. சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்து சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பளிக்க புதிய 13-எ பிரிவு வகை செய்கிறது.

மாற்றுத் தலைவர் அவர்களே, மேலவை இதனை ஏற்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

VICE-CHAIRMAN (THIRU S. T. ADITYAN) : Nobody speaks on this subject ?

@ 111-112 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

* திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன் :

"In clause 3, in the proposed section 4-A, sub-section (1) omit item (iii)"

அதாவது "newspapers containing publication of such price, are found in any house, room, tent, enclosure, vehicle, vessel or place, it shall be presumed unless the contrary is proved that such house, room, tent, enclosure, vehicle, vessel or place is used for the purpose of gaming within the meaning of sub-section (1) of section 4."

பத்திரிகைகளில் இந்த "காட்டன் பெட்டிங்ஸ்" சம்பந்தமாக பருத்தி விலைகள் வெளியிடப்படுகின்றன. எல்லா பத்திரிகைகளிலும் அது வருவதில்லை. இரண்டொரு பத்திரிகைகளில் அது வெளிவருகிறது. அந்தப் பத்திரிகைகளை வாங்கிப் படித்துவிட்டு அவரவர்களுடைய வீட்டில் வைத்திருந்தால்—பழைய பத்திரிகைகளை வெளியே எறியப் போவதில்லை, வீட்டில் தான் வைத்திருப்போம்—அப்படி அந்தப் பழைய பத்திரிகைகள் ஒரு அறையிலே இருக்கும் பட்சத்தில் அது சட்ட விரோதம் என்று புதிதாக இந்த "அமெண்ட்மெண்ட்" வருகிறது. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில், ஆளும் கட்சியை ஆதரிக்கக் கூடிய பத்திரிகையில் பெரிய பார்டர் கட்டி இந்த "காட்டன் பிரைஸ்" எல்லாம் தினமும் போடுகிறார்கள். அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துவிட்டு நாம் வீட்டில் வைத்திருந்தால் அது குற்றம். அன்றாடம் வரும் பத்திரிகைகளைக் கசக்கி வெளியே போட்டு விட முடியாது. தொடர்ந்து......

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அது எந்தப் பத்திரிகை என்று சொல்லுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: சொல்ல வேண்டிய அவசியமில்லை. இப்போது எல்லோரும் தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தினமணியா, தினத் தந்தியா ?

திரு. கே. ராஜாராம் : உறுப்பினர் அவர்கள் இரண்டாவது சொல்லுகிற பத்திரிகைதான். அந்த ஒரு பத்திரிகையிலே தான் பெரியதாக எல்லோருக்கும் தெரியும்படியாக "பிளாக் பார்டர்" பண்ணி "காட்டன் பிரைஸ்" போட்டு வருகிறது. இந்தப் பத்திரிகையை வாங்கிப் படிப்பவர்கள், படித்து விட்டு அதை வீட்டிலே வைத்திருந்தால், ரூமிலே வைத்திருந்தால், அது சட்ட விரோதம் என்று இந்த "அமெண்ட்மெண்ட்" சொல்கிறது. இது ஒரு ஆபத்தான நிலைமை. எதைச் செய்வதற்கும் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. பத்திரிகைகளில் இந்த மாதிரி வருவதையே ban பண்ணி விடலாம். இந்த மாதிரி பஞ்சின் விலையை "கேமிங் ஆக்ட்"-க்கு உபயோகப்படுகிற மாதிரி விலைகளைப் விளம்பரப்படுத்தக் கூடிய அளவுக்கு பெரியதாக பத்திரிகைகளில் போடக்கூடாது என்று சொல்லி, ஏன் அவற்றைத் தடுக்கக் கூடாது? சந்தா கட்டி இதை வாங்கிப் படிப்பவர்கள் ஒரு 10 ஆயிரம் பேர், 20 ஆயிரம் பேர் தான் இந்த ஆபத்துக்கு உட்பட வேண்டுமா என்பதைத்தான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது அரசாங்கம் தீவிரமாக யோசிக்க வேண்டிய முக்கியமான விஷயம். பத்திரிகைகளிலே இந்த மாதிரிப் போடக் கூடாது என்று சொல்லிவிட வேண்டும். மற்றபடி விலைகள் போடுவதுபோல போடட்டும். அப்படிச் செய்தால் அவ்வளவு தெரியாது. இதை தனியாக எடிட்டோரியல் பேஜில் கறுப்பு பார்டர் கட்டி போடுகிறார்கள். சூதாட்டத்திற்கு உபயோகப்படும்படியாக, உதவியாக இருக்கும்படியாக அந்தப் பத்திரிகையிலே போடுகிறார்கள். அதைத் தடை பண்ணுவது ரொம்ப உத்தமம். வாங்கிப் படிப்பவர்களை தண்டனைக்கு உள்ளாக்குவதைக் காட்டிலும் அதைப் பத்திரிகையிலே வெளியிடக்கூடாது என்ற ஒரு ஷரத்தை திருத்தமாக ஏன் அரசு கொண்டுவரக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இப்போது என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : பத்திரிகையிலே இதைப் பிரசுரிக்காமல் தடை செய்ய வேண்டுமென்று சொல்லுகிறேன்.

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பத்திரிகை வைத்திருந்தால் குற்றம் என்று போடவில்லை. "ப்ரசம்ஷன் கிளாஸ்" என்ற முறையிலேதான் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் பெரிய தவறு ஏற்பட்டுவிடாது என்று கருதுகிறேன். பத்திரிகையைப் பொறுத்த வரையில் அதுபோன்ற ஒரு நிலைமை இருக்குமானால், அதுபற்றி தனியாகக் கவனிக்கலாம்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்களா அல்லது வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. கே. ராஜாராம் : திருத்தத்தின் நோக்கமே, இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான். அதைப் பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதினால் நான் வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 4 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே,
"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

VICE-CHAIRMAN (THIRU S. T. ADITYAN) : Time is extended. What is the sense of the House ? Shall we proceed or...........

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, let us proceed.

(2) தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1972).

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I beg to move—

"That the Tamil Nadu Societies Registration Bill, @1975 (L.A. Bill No. 53 of 1972), as passed by the Assembly, be taken into consideration".

The Societies Registration Act, 1860 (Central Act XXI of 1860) was passed at a time when the law relating to Soceities was in its infancy in India. The actual working of the Act for over a century has brought

@ 113–140 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

to light many defects, as for instance, there is no provision in the Act permitting change of name of a society, the alteration of by-laws, the keeping of a registered office, the maintenance of a register of members and committee members, the holding of annual general meeting, the winding up of the societies under the orders of the Registrar, etc. The result is that much difficulty has been felt by the public and by the administrative officers alike. In order to meet the present day-requirements, the provisions of the Act have to be amplified.

The question of amending the Act had been under the consideration of the Government for a long time and it has been decided to repeal the Soceties Registration Act, 1860 and any corresponding law in force in the transferred territory and to replace them by a more comprehensive legislation, namely, the Tamil Nadu Socetios Registration Bill, 1975 (L. A. Bill No. 53 of 1972) which would apply throughout the State. The Bill was introduced in the Legislative Assembly in December 1972 and referred to Joint Select Committee for consideration.

The Joint Select Committee, which has considered the provisions of the Bill in detail, has submitted its report in December 1974 to the Assembly. The Legislative Assembly considered and passed the Bill on 15—4—1975.

Sir, I request the House to accept the motion.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1972) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்."

[பிற்பகல் 7–00 மணி]

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு பழமையானது என்றும், அவற்றிலே சில கருத்துக்கள் புதுப் பிக்கப்பட வேண்டும் என்றும், இந்தச் சட்ட முன்வடிவானது அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. புதுப்பிக்கப்பட்ட சீரிய சிறந்த கருத்துக் களைக் கொண்டதாக இல்லாமல், இது பழைய கால முறைக்கு பலவிதமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும். அவசியம் இல்லாத, தேவையில்லாத பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலே திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின் றன. கூட்டுறவுச் சங்கச் சட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்களை எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாக்குகின்றனவோ அதைவிடச் சிக்கலான நிலைமைக்கு இந்தச் சட்டம் சங்கங்களை ஆட்படுத்திவிடும் என்ற என்னுடைய சில கருத்துக்களை இங்கே நான் கூற விரும்புகிறேன்.



பிரிவு 15 (2)-ல்

" the appoinment of the members of the first committee "

என்று இருக்கிறது. உடனடியாக இதனுடைய நகல் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப் பப்பட வேண்டும், பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும் என்று சொல்லப் படுகிறது. நாம் எல்லோரும் அறிந்தது, மினிட்ஸ் என்பது எப்போதும் நிரந்தர மாக இருக்கக்கூடியது. அந்தப் பதிவேடு இருக்கும்போது இந்த நகல் அனுப் புவதற்கு என்ன அவசியம் இருக்கிறது ? பதிவாளர் அதைப் பார்க்கப் போகின்றாரா ? அது ஒரு வேஸ்ட் பேப்பராகத்தான் அந்தப் பதிவாளர் அலுவலகத்திலே இருக்கப் போகிறது. அப்படி இருக்கும்போது என்ன புதுமை இருக்கிறது ? என் அனுப்பப்பட வேண்டும் ? தேவையானால், அந்தக் கமிட்டி உறுப்பினர்களை அந்த மினிட்ஸ்-ஐக் கொண்டு வரச் சொல்லிப் பார்க்க முடியாதா ? இதனுடைய அவசியமென்ன ? இதில் என்ன சிறப்பு இருக்கின்றது என்று எனக்குத் தெரியவில்லை. எனவே இது தேவையில்லாத ஒன்று என்று நான் நம்புகிறேன்.

பிரிவு 15 (3)-ல்—

" The members of the committee shall be appointed at a meeting of the society by a resolution of a majorty of the members present and entitled to vote thereat ".

என்று இருக்கிறது. என்னுடைய தாழ்மையான கருத்து, பல கல்வி நிறுவனங்கள் தங்களுடைய சங்கங்களை அமைத்துக் கொண்டபோது, அந்தக் கல்வி நிலையங்கள் ஏற்படுவதற்குச் சாதாரணமாக இருந்த சில குடும்பத்தினர்கள் அந்த நிர்வாகக் குழுவிலே பரம்பரையாக அங்கத் தினராக வரக்கூடிய நிலைமை, வாரிசு தன்மையாக அளிக்கப்பட்டிருக் கிறது. பல நிறுவனங்களிலே அப்படி வழங்கப்பட்டிருக்கிறது. "ஹெரிடி டரி மெம்பர்சிப் " என்பது அது. ஒருவருடைய காலத்திற்குப் பிறகு அவ ருடைய வாரிசுதாரர் உறுப்பினராக ஆவது என்பதுதான் அது. இதிலே அவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கொடுக்கப்படவில்லை. இந்தக் குடும்பத்திலே உள்ளவர்கள்கூட உறுப்பினர்கள் ஆவதற்கு மற்ற உறுப்பினர் களால் நியமிக்கப்படவேண்டியவர்களாக ஆகின்றார்கள். எதிர்காலத்திலே பல குழப்பங்கள் விளைவுகள் ஏற்படக்கூடும். பொதுவாக பொதுவாழ்விலே பெரிய மனிதர்கள் நன்மைகள் பயக்கவேண்டும் என்று தங்களுடைய சொத்துக் களை இதுபோன்ற நிறுவனங்களுக்கு எழுதிவைத்துவிட்டு அந்த நிறுவனங் கள் நன்றாக நடக்கவேண்டும் என்பதற்காக அந்தக் குழுவிலே தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு மாறாக அந்த உறுப்பினரும் மற்ற உறுப்பினர்களால் நியமிக்கப்பட வேண்டியவராக ஆகிவிட்டால், தாங்கள் எதிர்பார்த்த பயனை அடைய முடியாது. அரசு இதை மறு பரிசீலனை செய்யவேண்டும். "ஹெரிடிட்டரி மெம்பர்சிப்" வாரிசுகளுக்கு நியமனம் கொடுப்பதிலே ஒரு முறையை வகுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதில் கிளாஸ் 16 (3) ல்

" within such period as may be prescribed after the expiration of each financial year, place before the general meeting the receipts and

[திரு. கே. எஸ். கணபதி] [1975 ஏப்ரல் 18

expenditure account and the balance-sheet together with the report referred to in sub-section (2) duly signed by the auditor or the members appointed under sub-section (1) and the members of the committee, and

(b) within such period as may be prescribed after the date of such general meeting, file with the Registrar an authenticated copy of such receipts and expenditure account, balance sheet and report....

என்று இருக்கிறது. இதனுடைய அவசியம் என்ன? ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் இருக்கின்றதா? அதிலே ஏதாவது பிழை ஏற்பட்டிருந்தால், அதைக் கேட்பதற்கு அதிகாரம் இருக்கிறதா அல்லது வெற்றுத்தாளாகவே ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்திலே தேவைப்படாமல் இருக்கின்ற பல கட்டுகளுடன் இவை இருக்கவேண்டுமா? இதனுடைய அவசியம் என்ன? இது சங்கங்களுடைய வேலையைத் தொடர்ந்து செயல்படுத்த முடியாத அளவுக்கு இடம் கொடுக்கிறது. வேலையை அதிகப் படுத்துவது என்ற நோக்கம் இருக்கின்றதே தவிர இதிலே சிறப்பாக எதுவும் செய்யப்படவில்லை என்பது தான் என்னுடைய கருத்து. எனவே அனுவசியமாக பதிவாளர் அலுவலகத்திலே காகிதங்களைச் சேர்ப்பதைக் காட்டிலும் இந்த நிலைமையானது தவிர்க்கப்பட்டிருக்கவேண்டிய ஒன்று என்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இது ஒரு முக்கியமான திருத்தம். கிளாஸ் 24-ல்,

" Investment of funds: A registered society may, to such extent and under such conditions as may be permitted by..................

THIRU G. SWAMINATHAN: Sir, on a point of order. May I know whether there is quorum in the House?

VICE-CHAIRMAN (THIRU S. T. ADITYAN): Am I not one of the persons who will make up the quorum?

THIRU K. RAJARAM: Quorum includes the Chair.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்த சொசைட்டிகள் தங்கள் தொகையை எப்படி முதலீடு செய்வது என்பதிலே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே அவர்கள் இஷ்டப்படி கொடுக்கமுடியாது.

" upon immovable properties " என்று இருக்கிறது.

கடைசியாக (5)-ல்

"In such other mode of investment as may be prescribed." என்று இருக்கிறது.



1975 ஏப்ரல் 18]. [திரு. கே. எஸ். கணபதி]

ஒரு குழு ஏற்படுத்தியிருக்கின்ற பணத்தை எப்படி முதலீடு செய்வது என்பதற்கு இதிலே வழிமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் இந்த கோவாப்பரேட்டிவ் சொசைட்டியை எப்படி நிர்வகிக்கிறார்களோ அது போன்று இந்த நிர்வாகத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தத் திருத்தமானது கொண்டுவரப்படுகிறது என்று நான் எண்ணுகிறேன். ஏனென்றால், எல். ஐ. சி. போன்ற நிறுவனங்கள் எல்லாம், பப்ளிக் கம்பெனியிலே ஷேர்களை வாங்குகிறது. அப்படி இருக்கும்போது, 20, 25 உறுப்பினர்கள் சேர்ந்து பொது நன்மைக்காக வைத்திருக்கின்ற குழுவிலும் பப்ளிக் கம்பெனியிலே ஷேர் வாங்கக் கூடாது என்பதுதான் பொருள். ஏனென்றால் பப்ளிக் கம்பெனியிலே ஷேர் வாங்குவதற்கான உரிமை இங்கே கொடுக்கப்படவில்லை. இதிலே என்ன தவறு இருக்கிறது? எல். ஐ. சி. போன்ற நிறுவனங்கள் வாங்கும்போது, இந்தச் சிறிய அமைப்பு பப்ளிக் கம்பெனியிலே ஷேர் வாங்குவதிலே என்ன தவறு இருக்கிறது? தவறு ஒன்றுமில்லை என்று தான் நான் நம்புகிறேன். எனவே இந்தத் திருத்திலே "மே பி பிரஸ்கிரைப்ட்" என்று கூறும்போது, ரூல்ஸ் "பிரேம்" பண்ணும்போது பப்ளிக் கம்பெனியிலே ஷேர் வாங்கலாம் என்ற பகுதியைச் சேர்க்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். கடைசியாக

26(4): " The Registrar may nominate an officer subordinate to him to be present at any such general meeting ".

ஆனுவல் ஜெனரல்பாடி மீட்டிங்கிலே ரிஜிஸ்ட்ராரோ அல்லது அவரது பிரதிநிதியோ போய் இருக்கவேண்டிய அவசியம் என்ன? அவருக்கு வோட்டுப்போட உரிமை உண்டா? நடவடிக்கை என்ன நடந்தது என்று பின்னர் கோர்ட்டில் ஏதாவது விவகாரம் வந்தால், அதிலே சாட்சியம் சொல்வதற்கு அதிகாரம் இருக்கிறதா? அதிகாரி எதற்காகப் போக வேண்டும்.? அதிகாரி என்றால் நாம் ரெவின்யூ டிபார்ட்மென்டில் டெபுடி தாசில்தார் என்று சொல்லுவது போல போட்டிருக்கிறார்களா? அது மாதிரி ஒன்றும் இல்லையே. ஆபிசர் என்றால் நான் தமாஷாகச் சொல்கிறேன். மணி ஆர்டர் கூப்பனிலே பின்பக்கம் மணியார்டர் வாங்கிய உடனே, அதில் போஸ்ட்மேன் கையெழுத்துப் போடவேண்டும். டிஸ்பர்சிங் ஆபிசர் என்ற அளவில் பணத்தை டிஸ்பர்ஸ்மெண்ட் பண்ணியதற்காக அதிலே கையெழுத்துப்போடவேண்டும் அதிலே "சிக்நேசர் ஆப் தி டிஸ்பர்சிங் ஆபிசர்" என்று இருக்கின்றது. ஆகவே போஸ்ட்மேன் ஒரு ஆபிசர் ஆகிவிடுகிறார். அது மாதிரி ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்திலேயே தபால் கொண்டுபோய் கொடுத்துவிட்டு வந்தால், அந்த பியூனுக்கு அதிகாரம் இருந்தால் அவர் அதிகாரி ஆகிவிடுவாரா? யார் அந்த அதிகாரி? அதிகாரி என்றால் என்ன விளக்கம்? யாரை வேண்டுமென்றாலும் போகச் சொல்லலாமா? அவர் அங்கே போய் என்ன பண்ணப்போகிறார்? எனக்கு அதற்கான விளக்கமே தெரியவில்லை. ஏன். இவர் அங்கே போகவேண்டும்? ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்திலே வேலை குறைந்து போய்விட்டதா? அதற்காக நாம் அவரை அனுப்பப்போகிறோமா? ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒவ்வொரு அதிகாரியை அனுப்புவதால் என்ன உபயோகம்? அவசியம் என்ன? உடனே மினிட்சை வாங்கிக்கொள்ளுங்

கள். மினிட்சைப் பார்ப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி இருந்த அனாவசியமாக ஒரு அதிகாரியை அனுப்பி, அந்தக் கூட்டத்திலே அவ பங்கு கொள்வதற்கான நோக்கம் என்ன என்பதை நான் கேட்டுக் கொண் இந்த அனாவசியமான திருத்தங்கள் அகற்றப்படலாம் என்று கோரி என் னுடைய பேச்சை முடிக்கிறேன்.

(பிற்பகல் 7–10)

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது ஒரு நல்ல சட்டம் பொதுவாக இன்று பார்ப்போமானால், நகரங்களில் தெருவுக்குத் தெரு ஒரு சங்கம் அல்லது மன்றம் என்று வைத்துக்கொண்டு பணம் வசூலிட் பதை அவர்களுடைய முக்கிய நோக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறா கள். மசோதாவில் இருந்ததைக் கொஞ்சம் தளர்த்தி, 10,000 ரூபாய் வரை வரவு செலவு இருந்தால் மட்டும், இந்தச் சட்டம் கட்டுப்படுத்து மென்று சொல்லுவதன் மூலம் பெரும்பாலான சங்கங்கள் விடுபட்டுப்போகும். பொதுவாக ஒரு கட்டுப்பாடு என்று இருப்பதில் தவறல்ல. நல்லதுதான். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போதுதான் இதில் பலவிதமான குறைகள் வருமென்பது எல்லோருக்கும் தெரியும். எல்லாச் சட்டங்களைப் போன்றும் இதிலும் குறைகள் தோன்றும். அவற்றை நாம் பின்னால் தீர்த்துக்கொள்ள முடியும். 10,000 ரூபாய் என்பதை இன்னும் கொஞ்சம் குறைத்திருந்தால் கூட நலமாக இருந்திருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

சங்கங்களின் கூட்டங்களைக் கவனிப்பதற்கு யாராவது ஒருவரை—சபார்டினேட்டை—அனுப்ப ரிஜிஸ்டிரார்களுக்கு அனுமதி கொடுப்பதன் மூலம் எல்லாச் சங்கங்களுக்கும், அசோசியேஷன்களுக்கும் இந்தத் துறையிலிருந்து ஆள் அனுப்ப முடியுமென்பது துர்லபம்; அது நடக்காது. ஆனால் ஏதாவது சண்டை, சச்சரவுகள் வருமென்று ஏற்கனவே புகார் வந்திருந்தால், குறிப்பிட்ட அந்த இடத்திற்கு வேண்டுமானால், கண் காணிப்பதற்காக ஓர் ஆளை அனுப்பலாமென்பதற்காக "ப்ரொவிஷன்" வேண்டுமென்பதற்காகப் போடப்பட்டிருக்கிறதென்று நான் எண்ணுகிறேன். அப்படிப்பட்ட ஷரத்து இருப்பதில் தவறில்லை.

Thiru G. SWAMINATHAN : On a point of order, Sir. May I know whether there is quorum in the House?

VICE-CHAIRMAN (Thiru S. ADITYAN) : Yes, there is quorum.

*திரு. கே. ராஜாராம் : தவிர, இதில் சில ஷரத்துக்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. கூட்டம் நடைபெற "கோரம்" எவ்வளவு இருக்க வேண்டும்; கூட்டத்திற்கு எத்தனை நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டு மென்பதெல்லாம் சொல்லப்படவில்லை. "பை-லாஸ்" போடும் போது இவை களையெல்லாம் சேர்க்கவேண்டும். "பை-லாஸ்"-ல் இத்தனை "கிளியர் டேஸ் நோட்டீஸ்" இருக்கவேண்டுமென்பதும், இத்தனை உறுப்பினர்கள் இருந்தால் தான் "கோரம்" இருக்கிறதென்பதும் தெளிவாகச் சொல்லப்பட வேண்டும். இவற்றைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சில விஷயங்களைப்பற்றி நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்த "கிளாஸ்" வரும்போது அவை பற்றிப் பேசுகிறேன். இப்போது இத்துடன் நிறுத்திக்கொண்டு, பொதுவாக வரவேற்கக் கூடிய சட்டமென்று கூறி, முடிக்கிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே "கிளாஸ்" 15 (3) -ல் சொல்லப்பட்டிருப்பது:

"The members of the the Committee shall be appointed at a meeting of the society by a resolution of a majority of the members present and entitled to vote thereat."

உறுப்பினர்களுடைய மெஜாரிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் இருக்கவேண்டுமென்பதற்காக, "ரெகுலேட்டரி" ஆக இருந்த "கிளாஸ்" உருவாக்கப்பட்டிருக்கிறது.

கிளாஸ் 15 (2) ஐப் பொறுத்த மட்டில் சொல்லப்பட்டிருப்பது:

"A copy of the register shall be filed either at the time of the registration of the society or within such period as may be prescribed from the appointment of the members of the first committee and the notice of any change among the members of the society or of the committee shall be filed within such period as may be prescribed from the date of such change".

The change in the personnel of members is to be filed with the Registrar after the original register is filed. It is only to regulate the functioning of the society. If there are any complaints, then the Registrar gets powers to make enquiry and inspection under clause 15. The accounts and audit report are also subject to such regulation."

இன்வெஸ்ட்மென்டைப் பொறுத்த மட்டில், விதிகளிலே "பிரெஸ்கிரைப்" செய்யலாமென்று விதியிருக்கிறது.

Investment—Investment of funds in such other mode of investment as may be prescribed

என்று ரூல்ஸ் செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களையும் கவனத்தில் கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, 26 (4)-ல் சொல்லப்பட்டிருப்பது,

"The Registrar may nominate an officer subordinate to him to be present in any such general meeting."

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லியதுபோல, எல்லாக் கூட்டங்களுக்கும் ஆட்களை அனுப்புவது சாத்தியமல்ல. இருக்கின்ற நிலைமை களை அனுசரித்து, ரிஜிஸ்டிரார்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்க ளென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1975 ஏப்ரல் 18

மாண்புமிகு உறுப்பினர் 10,000 ரூபாய் என்ற வரம்பைக் குறைத்திருக்கலாமென்று சொன்னார்கள். 10,000 ரூபாய் வரவு செலவிருந்தால் கட்டாயம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று விதி செய்யப்பட்டிருக்கிறது. மிக அவசியமான சட்டமென்ற முறையில் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 53/1972) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. பிரிவுகள் 2 முதல் 11 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 12

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, 12-வது ஷரத்துக்கு நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஏற்கனவே உள்ள மசோதாவில்—

"A registered society may, by special resolution amend the provisions of its memorandum relating to the objects of the registered society so far as may be required to enable it."

என்று சொல்லி, (a), (b), (c), (d) என்று 4 உள் ஷரத்துக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதில், (c) and (d) இரண்டுக்கு மட்டும் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

(c) to amalgamate with any other registered society or (d) to divide itself into two or more societies.

என்ற இந்த இரண்டு ஷரத்துக்களும் General Body Meeting 2/3 பகுதியினராவது ஆதரித்தால்தான் ஒரு சங்கத்தை இரண்டு மூன்றாகப் பிரிப்பதோ அல்லது வேறொரு சங்கத்தோடு இணைவதாகவோ இருக்க வேண்டும். ஏனெனில் இம்மாதிரி கூட்டத்தில் செல்வாக்குள்ளவர்கள் போய்............

VICE-CHAIRMAN (Thiru S. T. ADITYAN): "A registered society may by special resolution" என்று இருக்கிறது.

The definition of "special resolution" at page 5 is "Special resolution" means "a resolution passed by a majority of not less than three-fourths"

இதையும் சேர்த்துப் பார்த்தால், உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை "ப்ரபோஸ்" பண்ண வேண்டாமென்று நினைக்கிறேன்.



1975 ஏப்ரல் 18]

திரு. கே. ராஜாராம் : ஆமாம் ; தேவையில்லை.

திரு. க. அறிவழகன் : ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : நான் திருத்தத்தைப் பிரேரேபிக்கவேயில்லை.

திரு. க. அறிவழகன் : இதற்கு முன்னால் சொசைட்டி ஆக்டிலே ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, 10,000 ரூபாய் வருமானம் வராத, 20 உறுப்பினர்களும் இல்லாத சொசைட்டிகள் இருந்தால் அதனுடைய கதி என்னவாகுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : விதிகளைப் படித்துப் பார்க்க வேண்டும்.

பிரிவுகள் 12 முதல் 58 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1972) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு எஸ். டி. ஆதித்தன்) : அவை முன் உள்ள பிரச்சினை.—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 7-20)

(3) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன் வடிவு எண் 51/1974)

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,
சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"
என்று முன்மொழிகின்றேன்.

---

@199-200 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது

[திரு. அ. பெ. தர்மலிங்கம்[ [1975 ஏப்ரல் 18

தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவேட்டுச் சட்டம் [தமிழ்நாடு சட்டம் 10/1969], இம்மாநிலத்தில் உள்ள வேளாண்மை நிலங்கள் குறித்த குத்தகை உரிமைகள் பதிவேட்டைத் தயாரித்து வைத்து வர வகை செய்கிறது. மேற்படி சட்டத்தின் இரண்டாவது பிரிவைச் சார்ந்த [8] பகுதியில் கண்ட (ஏ) உட்பகுதி, தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம் 25/1955 பொருந்துகிற ஒரு நிலத்தைப் பொறுத்தவரையில் "குத்தகைக்காரர்" என்ற சொல்லுக்கு, 1955-ஆம் ஆண்டு 2-வது பிரிவைச் சார்ந்த (ஏ) பகுதியில் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ள பயிரிடு குத்தகைதாரர் ஒருவர் என்று பொருள் கூறுகிறது. ஆனால் தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு 25—ஆம் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயலில் இல்லை. தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10வது சட்டத்தில் குத்தகைக்காரர் என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மேற்படி பொருள் விளக்கத்தை மேற்படி மாவட்டத்திற்குப் பொருந்துமாறு செய்ய தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (8)-வது பகுதியில் கண்ட (ஏ) உட்பகுதியில் குறிப்பிட்டுள்ள வகையான பயிரிடு குத்தகைக்காரர் மேற்படி மாவட்டத்தில் இருக்கமாட்டார்கள் என்பதாலும், அத்தகைய குத்தகைக்காரர்கள் குறித்த குத்தகை உரிமைகளை எழுதி வைக்க இயலாது. தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2 (8) பிரிவு பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளபடி மேற்படி மாவட்டத்தில் குத்தகைக்காரர் எவரும் இல்லை என்ற காரணத்தால், அச்சட்டத்தின் செல்திறன்கூட 1974-ஆம் ஆண்டு 538-வது ரிட் மனுவில் ஆட்சேபிக்கப்பட்டது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பயிரிடு குத்தகைக்காரர்கள் தங்களது குத்தகை உரிமைகள் குறித்து நிலையானதும் அதிகார பூர்வமானதுமான பதிவேட்டைப் பெறும் நல்வாய்ப்பை இழக்கும் நிலையில் உள்ளனர். அத்தகைய பதிவேடுகள் இருந்தால், அவை நிலச் சொந்தக்காரர்கள் அவர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில், மனம் போன போக்கில் நடந்துகொள்வதிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்; அத்துடன் உரிமையில் வழக்குகளில் அந்த பதிவேடுகள் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும். எனவே, தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு 25-வது சட்டத்தில் உள்ளது போலவே "பயிரிடு குத்தகைக்காரர்" என்ற சொற்கள் பொருள் விளக்கத்தை அமைத்துக்கொள்ளும் வகையில் தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2 (8) பிரிவைத் திருத்துவதெனவும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட சொற்களையும், நடவடிக்கைகளையும் செல்திறன் உடையனவாக ஆக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலவை இதனை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."



1975 ஏப்ரல் 18]

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2-ம், 3-ம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1974) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மேற்சொன்ன சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட நடுவர்மன்றம் ஒவ்வொன்றும் வழக்கு ஒன்றை அல்லது மேல் முறையீடு ஒன்றை விசாரணை செய்யும்போது 1908-ஆம் ஆண்டு சிவில் நடைமுறை விதிக்கோவையின் கீழ் (மத்திய சட்டம் 5/1908) சிவில் நீதி மன்றம் ஒன்றில் நிலை

@ 201–204 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 ஏப்ரல் 18

பெற்றுள் அத அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு தமிழ் நாடு 1963-ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 26/1963) 8-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவும், தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1963) 7-ஆவது பிரிவைச் சேர்ந்த (4)-வது உட்பிரிவும் வகை செய்கின்றன. தமிழ் நாடு 1963-ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 46-ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழும் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) 30 ஆவது பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின் கீழும் சிறப்பு மேல்முறையீட்டு நடுவர் மன்றத்திற்கு இதே போன்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1908 ஆம் ஆண்டு சிவில் நடைமுறை விதிக் கோவையினை (மத்தியச் சட்டம் 5/1908) 51 (டி) பிரிவும், 1 ஆவது விதியின் 40 ஆவது ஆணையும் சொத்து நிர்வாகி (ரிசீவர்) ஒருவரையும் மேற்சொன்ன விதிக்கோவையின் 26 ஆவது ஆணை கமிஷனர் ஒருவரையும் நியமிப்பதற்கு வகை செய்கின்றன. பல வழக்கு களில் நடுவர் மன்றங்கள் நிர்வாகிகளை நியமிப்பதால், நிலத்தைப் பயிரிடு பவர்களுக்கு நிலத்தில் சுவாதீனம் இல்லாமற் போகிறது என்று முறையீடு செய்யப்பட்டுள்ளது. உண்மையில் நிலத்தைப் பயிரிடுபவர்களுக்கு இதனால் இடையூறு ஏற்பட்டுள்ளது. எனவே நடுவர் மன்றம் அல்லது பிரிவு அதிகார மன்றத்தின் முன் ஒரு நிலம் குறித்து நடவடிக்கை எதுவும் முடிவு பெறாத நிலையில் அத்தகைய நடுவர் மன்றம் அல்லது பிற அதிகார மன்றம் சொத்து நிர்வாகியையோ அல்லது கமிஷனரையோ நியமிக்கக்கூடாது என்று அரசு முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க இச் சட்டம் வகை செய்கிறது. சட்டம் இயற்றுவதற்கான விதிமுறை சிறு தலைப்பு 2 (3), 3 (3) பகுதிகள் ஆகியவற்றிற்கு திருத்தங்கள் இச்சட்ட வரைவுப் பகுதி பகுதியாகப் பரி சீலனை செய்யும்போது முன்மொழியப்படும். இச் சட்ட வரைவினை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மேலவையைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 61/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2-ம், 3-ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.



1975 ஏப்ரல் 18]

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : அவைமுன் உள்ள பிரச்சினை :

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு-1975 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974) நிறைவேற்றப்பட வேண்டும் ."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1975)

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

அரசு நிலம் ஒன்றை உரிமையின்றி அனுபவித்து வருபவரை, வரு வாய்த்துறை அதிகாரிகளும், "அதிகாரம் பெற்ற அதிகாரி" எனப்படும் மாநில அரசால் உரிமையளிக்கப்பட்ட அதிகாரியும் தமிழ்நாடு 1905 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1905) 6ஆவது பிரிவிற்கிணங்க வெளியேற்றலாம். பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப்பணிகள் துறை ஆகிய இத்துறைகளின் பொறுப்பிலுள்ள நிலங் களைப் பொறுத்தமட்டில், அவற்றில் ஏற்படும் நில ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க மேற்கூறிய துறைகளின்

@ 167-168 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 ஏப்ரல் 18

உதவிப் பொறியாளர்களுக்கு மேற்சொன்ன விதித்துறையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதிகாரம் பெற்ற அதிகாரியின் எந்தவொரு முடிவும் அல்லது ஆணைக்கு எதிராகவும் மேற்சொன்ன சட்டத்தின் 10ஆவது பிரிவிற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அதிகாரம் பெற்ற அதிகாரி பிறப்பிக்கும் எந்த முடிவையும் அல்லது ஆணையையும் மாவட்ட ஆட்சித் தலைவரும், வருவாய்த்துறை வாரியமும், மாற்றியமைக்கலாம். வருவாய்த் துறை வாரியம் செய்த முடிவு அல்லது ஆணையைத் திருத்தியமைக்கும் உரிமை மாநில அரசிடம் உள்ளது. அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் முடிவுகளுக்கும், ஆணைகளுக்கும் எதிராகச் செய்யப்படும் மேல்முறையீடுகள், மறு ஆய்வு மனுக்கள் ஆகியவற்றை விசாரணை செய்யும் பணியை உதவி கலெக்டரின் மீதோ, மாவட்டஆட்சித் தலைவரின் மீதோ, வருவாய் வாரியத்தின் மீதோ சுமத்துவது அவசியமானதுமல்ல, விரும்பத்தக்கதுமல்ல என கருதப்படுகிறது. எனவே, அதிகாரம் பெற்ற அதிகாரிகள் எந்தத் துறைகளைச் சார்ந்துள்ளனரோ அந்தத் துறைகளிலுள்ள மேலதிகாரிகளுக்கு மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரங்களை வழங்குவதும், அதுபோன்று மேல்முறையீட்டு அதிகாரிகளின் முடிவுகளையும் ஆணைகளையும் மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்குவதும் அவசியமானதென்று கருதப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான நிலத்தை ஒருவர் உரிமையின்றி அனுபவித்து வருவதாக அனைவருக்கும் தெரிந்திருந்தால், அந்த நபர் மீது இச்சட்டத்தின் 6வது பிரிவிற்கிணங்க ஏன் நடவடிக்கை தொடரப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படிக்கான அறிவிப்பு ஒன்றை அவருக்குக் கொடுக்க, வருவாய்த் துறை அதிகாரிகளோடு, பிரிவு அலுவலர் பதவித் தரத்திற்கு குறையாதவரும் அதிகாரம் அளிக்கப்பெறாத அதிகாரியாகவுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரிக்கும் இச்சட்டத்தின் 7வது பிரிவின்கீழ் அதிகாரம் அளிக்கப்படலாம். அவ்வாறு காரணம் கேட்கும் அறிவிப்பு அனுப்புவதற்கான அதிகாரத்தை ஏனைய துறைகளின் அதிகாரிகளுக்கும் வழங்கவேண்டும் என்பது அவசியமெனக் கருதப்படுகிறது. அதற்கென அத்தகைய அதிகாரங்களைக் குறிப்பிடுவதற்கான அதிகாரத்தை மாநில அரசு பெற்றிருக்க வேண்டும். மேற்சொன்ன நோக்கங்களுக்காக, தமிழ்நாடு 1905 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமெனக் கருதப்படுகிறது. எனவே இம்மேவை இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-30)

மாற்றுத் தலைவர் (திரு எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



1975 ஏப்ரல் 18]

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவுகள் 1, சட்டமியற்றும் முறை நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-34)

## 8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

176. Notification issued with G.O. Ms. No. 47, Prohibition and Excise, dated the 12th February 1975 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [*Laid on the table of the House under section* 54(3) *of the Tamil Nadu Prohibition Act*, 1937 (*Tamil Nadu Act X of* 1937).]

177. Notification issued with G.O. Ms. No. 289, Revenue, dated the 23rd January 1974 in regard to cancellation of Revenue Department Notification No. S.R.O. II-1 No.2698 of 1966, published at page 1033 of Part II—Section IX of the *Tamil Nadu Government Gazatte,* dated the 29th June 1966. [*Laid on the table of the House under section* 116(3) *of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Tamil Nadu Act* 22 *of* 1959)].

178. Notification issued with G.O. Ms. No. 1636, Revenue, dated the 15th April 1974 in regard to cancellation of the Revenue Department Notification II-1 No. 3522 of 1961, dated the 31st July 1961, published at page 1199 of Part IISection I of the *Tamil Nadu Government Gazette,* dated the 9th August 1961 and the RevenueDepartment Notification II-1 No. 3306 of 1964, dated the 4th June 1964 published at page 1373 of Part II Section I of the *Tamil Nadu Government Gazette,* dated the 29th July 1964. (*Laid on the table of the House under section* 116(3) *of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Tamil Nadu Act* 22 *of* 1959).]

179. Notification issued with Memorandum No. 24175 A.M.I/74-75, Agriculture, dated the 15th October 1974 in regard to an amendment to the Agriculture Department Notification II-1 No. 1326 of 1972, dated the 3rd January 1972, published at pages 365-367 of Part II-Section I of the *Tamil Nadu Government Gazette* dated the 29th March 1972. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act,* 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

### *B. Reports, Notifications and Other Papers.*

*146. The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 51 of 1974), as passed by the Assembly.

*147. The Tamil Nadu Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1975 (L.A. Bill No. 61 of 1974), as passed by the Assembly.

*148. The Tamil Nadu Land Encroachment (Amendment) Bill 1975 (L.A. Bill No. 6 of 1975), as passed by the Assembly.

---

*Circulated to all M.L.Cs. on 16th April 1975.



## இணைப்பு I.

( 78 ம் பக்கத்தில் 249 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க)

1973–74ல் கரும்பின் மொத்தப் பரப்பு 1·49 லட்சம் ஹெக்டேர், வெல்ல உற்பத்தி 13·73 லட்சம் டன்னும், 135·95 லட்சம் டன் கரும்பும் ஆகும்.

1974–75ல் ஜனவரி 1975 முடிய கரும்பு சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு 1·004 லட்சம் ஹெக்டேர். நீர்ப்பாசன வசதி கரும்பு நடவிற்கு போதுமான அளவிற்கு உள்ள சிற்சில இடங்களில் மட்டுமே தற்சமயம் நடவு செய்யப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட இடங்களானது மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால் கரும்பு சாகுபடி பரப்பில் 1974–75ல் சென்ற ஆண்டைவிட 15 அல்லது 20 சதவிகிதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், பரப்பின் மொத்த குறைவானது இடைப்பட்ட நடவு முடிந்த பிறகே முடிவெடுக்க முடியும்.

கரும்பு பரப்பின் குறைவுக்கு முக்கிய காரணங்களாவன —

1. முக்கியமாக இரு பருவக் காற்றுகளும் தவறியமையாலும், இதன் பயனாக கிணறுகளில் தண்ணீரானது மிகுந்த அளவு குறைந்து காணப்படுவதாலும் இருக்கும் தண்ணீரைக் கொண்டு இன்னும் 12 மாதங்களுக்கு கரும்பு பயிருக்கு முழுமையாக நீர்ப் பாய்ச்ச முடியாமல் இருப்பதால்;

2. குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் குறுகிய கால பயிர்களாகிய நெல், சிறு தானிய வகைகள், நிலக்கடலை முதலியவற்றின் சாகுபடி செய்வதால் ;

3. கரும்பைவிட குறுகிய காலத்தில் நெல், சிறுதானியம், நிலக்கடலை ஆகிய பயிர்கள் அதிக லாபம் கொடுப்பதால்;

4. ஆலைகளில் இருந்து கரும்புக்கு கொடுக்கப்படும் விலை கரும்பு சாகுபடிக்குத் தேவையான உரம் மற்றும் வேண்டியுள்ள சாதனங்கள் விலையை ஒப்பிடும் போது மிகவும் குறைவாக காணப்படுவதால், கரும்பு சாகுபடியில் போதிய ஊக்கம் இல்லை.

## இணைப்பு II.

(80 ஆம் பக்கத்தில் 250 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

தமிழ்நாட்டிலுள்ள மதுரா சர்க்கரை ஆலை, அருணா சர்க்கரை ஆலை தென்னிந்தியா சர்க்கரை ஆலை மற்றும் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை ஆகிய நான்கு ஆலைகள், 1973–74ஆம் பருவத்திற்கு தமிழ்நாடு அரசு நிர்ணயம் செய்த கரும்பின் இறுதி விலையை இதுகாறும் செயற்படுத்த முன்வரவில்லை. தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர் சங்கத்திடமிருந்து இது குறித்து அரசு தலையீடு மேற்கொள்ள முறையீடுகள் பெறப்பட்டன. 1973–74 ஆம் பருவத்திற்கு அரசு நிர்ணயித்த கரும்பு இறுதி விலையை மேற்கொள்ளுமாறு மேலே குறிப்பிட்ட கரும்பு ஆலை நிர்வாகிகள் வலியுறுத்தப்படுகின்றனர்.

அருணா சர்க்கரை ஆலையைப் பொருத்தளவில், அதன் பங்குதாரர் ஒருவர் நகர சிவில் நீதி மன்றத்தில் இந்திய அரசு நிர்ணயித்த கரும்பு விலைக்கு மிகுதியாக தனியார் நிறுவனம் கரும்புவிலை கொடுப்பது எவ்வாறு ஏற்புடையதாகும் என வழக்கு தொடர்ந்துள்ளார். எனினும் அருணா சர்க்கரை ஆலை நிறுவாகம், வழக்குத் தொடர்ந்துள்ள பங்குதாருடனும் கரும்பு உற்பத்தியாளர்களுடனும் கூடிப்பேசி இரு சாராருக்கும் திருப்தியான முறையில் ஒரு முடிவு எடுக்க ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளது. 30–9–1974 ஆம் நாளுடன் முடிந்த சர்க்கரை ஆண்டு கணக்குகள் முடிவு பெற்றபின் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படும். இதற்கு இன்னும் சுமார் இருவாரகால அளவு தேவைப்படலாம். 1973–74ஆம் பருவத்திற்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்த கரும்பின் இறுதி விலையை அருணா சர்க்கரை ஆலை நிர்வாகம் விரைவில் செயற்படுத்தும் என நம்பலாம்.



## இணைப்பு III.

[148 ஆம் பக்கத்தில் இனம் 7 (1) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

*A Bill further to amend the Tamil Nadu I Gaming Act,* 1930.;

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty sixth Year of the Republic of India as follows :—

1. *Short title*—This Act may be called the Tamil Nadu Gaming (Amendment) Act, 1975.

2. *Amendment of section* 4, *Tamil Nadu Act III of* 1930—In section 4 of the Tamil Nadu Gaming Act, 1930; (Tamil NaduAct III of 1930) here in after referred to as the principal Act) in sub-section (1), for the portion commencing with the words "shall be punishable" and ending with the words "or fine of not less than five hundred rupees or both", the following shall be substituted, namely:—

"shall be punishable with imprisonment for a term which may extend to two years and with fine which may extend to five thousand rupees, but in the absence of special and adequate reasons to the contrary to be mentioned in the judgment of the court—

(i) such imprisonment shall not be less than three months and such fine shall not be less than five hundred rupees for a first offence ;

(ii) such imprisonment shall not be less than six months and such fine not be less than seven hundred and fifty rupees for a second offence ; and

(iii) such imprisonment shall not be less than one year and such fine shall not be less than one thousand rupees for a third and subsequent offences."

3. *Insertion of new section* 4, *A. in Tamil Nadu Act III of* 1930.-After section 4 of the principal Act, the following section shall be inserted, namely :—

"4-A. *Presumption of offence.*—(1) Where in any trial of on affence punishable under sub-section (1) of section 4, it is proved that—

(i) slips containing certain digits showing the market price of cotton, bullion or other commodity, or

(ii) accounts which appear to relate to cash recevied or disbursed for the purpose of wagering or betting on the market price of cottn, bullion or other commodity, or

[1975 ஏப்ரல் 18

(iii) news-paper containing publication of such price, are found n any house room, tent, enclosure, vehicle, vessel or place, it shall be presumed unless the contrary is proved that such house, room, tent, enclosure, vehicle, vessel or place is used for the purpose of gaming within the meaning of sub-section (1) of section 4.

(2) Where in any trial of an offence punishable under sub-section (2) or sub-section (3) of section 4 it is proved that the accused person is found in possession of any of the materials specified in sub-section (1), it shall be presumed unless the contrary is proved that the accused has committed the offence of gaming within the meaning of sub-section (2) or section (3) as the case may be of section 4 "

4. *Amendment of section* 5 *Tamil Nadu Act III of* 1930.—In sub-section (1) section 5 of the principle Act, for the words " If any salaried Magistrate not inferior to a Magistrate of the second class", the words "If any Judicial Magistrate not inferior to Judicial Magistrate of second class " shall be substituted.

5. *Amendment of section* 1;, *Tamil Nadu Act III of* 1930—In section 10 of the principal Act, for the word "Magistrate" occuring for the first, time, the words "Judicial Magistrate" shall be substituted.

6. *Amendment of section* 11-*A*, *Tamil Nadu Act III of* 1930.—In section 11-A of the pricipal Act, for the word " Magistrate " occurring in two places, the words "Judicial Magistrate" shall be substituted.

7. *Amendment of section* 12, *Tamil Nadu Act III of* 1930.—In section 12 of the pricipal Act, for the words "fifty rupees " and " one month " the words " one hundred rupees " and " three months " shall respectively be substituted.

8. *Substitutions of new sections for section* 13, *Tamil Nadu Act III of* 1930.—For section 13 of the pricipal Act, the following sections shall be substituted, namely :—

" 13. *Offences under the Act to be cognizable.*—Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974), all offences punishable under this Act shall be cognizable.

13-A. *Indemnification of witness*—Any person who shall have been concerned in gaming in contrary to this Act, and who shall be examined as a witness before a Judicial Magistrate on the trial of any person for a breach of any of the provisions of this Act relating to gaming, and who upon such examination shall make true and faithful discovery to the best of his knowledge of all things as to which he shall be so examined, and who shall thereupon receive from the said Magistrate a certificate in writing to that effect shall be freed from all prosecutions under this Act for anything done before that time in respect of such gaming".



1975 ஏப்ரல் 18]

## இணைப்பு IV

(93 ஆம் பக்கத்தில் இனம் 7 (2) க்கான அடிக்குறிப்பைக் காண்க)

L.A. Bill No. 53 of 1972.

(As passed by the Assembly.)

## THE TAMIL NADU SOCIETIES REGISTRATION BILL, 1972.

*A Bill to provide for the registration of literary, scientific, religious, charitable and other societies in the State of Tamil Nadu.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-Sixth Year of the Republic of India as follows :—

### CHAPTER I.

### Preliminary.

1. *Short title; extent and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Societies Registration Act; 1975.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the Government may; by notification, appoint and different dates may be appointed for different areas and for different provisions of this Act :

Provided that any reference in any such provision to the commencement of this Act shall, in relation to any area, be construed as a reference to the coming into force of that provision in such area.

(2) *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "committee " means the governing body of a registered society to whom the management of its affairs is entrusted ;

(b) "court" means, in the Presidency town, the Madras City Civil Court and elsewhere, the District Court;

(c) "district" means the district formed under section 5 of the Registration Act, 1908 (Central Act XVI of 1908);

(d) "financial year" means the period of twelve months for which the accounts of a registered society are required to be made-up by the by-laws of the registered society and if the by-laws do not so provide, the period of twelve months ending with the thirty-first day of March each year;

(e) "Government" means the State Government;

(f) "memorandum" means the memorandum of association of a registered society as originally framed and as amended; from time to time; in pursuance of the provisions of this Act;

(g) "officer" includes any trustee, director, manager, treasurer, secretary, assistant secretary or member of the committee, or any person authorised in this behalf by the by-laws of the registered society to bring or defend or cause to be brought or defended any action or other legal proceeding touching or concerning any property, right or claim of the of the registered society or any other person empowered under its by-laws to give directions in regard to the business of the registered society;

(h) "registred society" means a society registered or deemed to be registered under this Act;

(i) "Registrar" means the Inspector-General of Registration appointed under sub-section (1) of section 3 of the Registration Act, 1908 (Central Act XVI of 1908), or the Registrar of a district appointed under section 6 of that Act; or any person authorised by the Government to, exercise all or any of the powers of the Registrar under this Act;

(j) "special resolution" means a resolution passed by a majority of not less than three-fourths of such members of a registered society entitled to vote as are present in person or by (proxy where proxies are allowed) at a general meeting of which a notice of not less than such period as may be prescribed, specifying the intention to propose the resolution as a special resolution, has been duly given:

Provided that, if all the members entitled to vote at any such meeting so agree, a resolution may be passed as a special resolution at a meeting of which a notice of less than the period prescribed under this clause has been given;

(k) "transferred territory" means the Kanyakumari district and he Shencottah taluk of the Tirunelveli district.



## CHAPTER II.

### CONSTITUTION AND REGISTRATION.

3. *Societies which may be registered.*—(1) Subject to the provisions of sub-section (2), any society which has for its object the promotion of education, literature, science, religion, charity, social reform, art, crafts, cottage industries, atheletics, sports (including indoor games), recreation, public health, social service, cultural activities, the diffusion of useful knowledge or such other useful object with respect to which the State Legislature has power to make laws for the State, which may be prescribed, may be registered under this Act.

(2) Notwithstanding anything contained in sub-section (1), no association which has for its object the improvement of the economic condition of workmen, no club where games of chance providing prizes for winners are played and no society which does not consist of at least seven persons shall be registered under this Act.

4. *Compulsory registration of certain societies.*—(1) Subject to the provisions of sub-sections (3) and (4), every society formed on or after the date of the commencement of this Act, which has for its object any object mentioned in, or prescribed under section 3, and

(a) which consists of not less than twenty members; or

(b) whose annual gross income or expenditure in any financial year after the date of the commencement of this Act, is not less than the ten thousand rupees,

shall be registered under this Act within such period as may be prescribed.

(2) Every society in existence on the date of the commencement of of this Act, which has for its object any object mentioned, in or prescribed under section 3 and which has not been registered under the Societies Registration Act, 1860 (Central Act XXI of 1860), or under any law corresponding to this Act in force in the transferred territory immediately before the date of the commencement of this Act including the Travancore Cochin Literary, Scientific and Charitable Societies Registration Act, 1955 (Travancore-Cochin Act XII of 1955), and

(i) which consists of not less than twenty members; or

(ii) whose annual gross income or expenditure in any financial year after the date of the commencement of this Act, is not less than ten thousand rupees; or

(iii) whose gross income or expenditure in any such period preceding the date of the commencement of this Act, was not less than such amount, as may be prescribed, the period so prescribed, bearing to twelve months the same proportion as the amount so prescribed bears to ten thousand rupees;

shall be registered under this Act within such period as may be prescribed.

(3) Nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion, atheletics or sports (including indoor games).

(4) Nothing contained in this Act shall be deemed to require the registration under this Act of any society formed, established, registered or incorporated under any other law.

5. *Optional registration.*—Any society which has for its object—

(a) the promotion of religion, atheletics or sports (including indoor games);

(b) any other object mentioned in or prescribed under section 3 and to which society the provisions of section 4 are not applicable

may, at its option, be registered under this Act.

6. *Memorandum, by-laws, etc., to be filed with the Registrar.*—For the purpose of registration of society, there shall be filed with the Registrar of the district in which the society is formed by a member of the committee of the society or by any person duly authorised by the committee in this behalf—

(1) a memorandum specifying—

(a) the name of the sciety;

(b) the objects of the society; and

(c) the names, addresses and occupations of the members of the committee, and

(2) the bye-laws of the society.

7. *Memorandum and by-laws to be printed or typewritten and signed.*—

(1) The memorandum and the bye-laws of the society shall be printed or typewritten.

(2) The memorandum shall be signed by at least seven members who shall add their addresses and occupation in the presence of at least one witness who shall attest the signatures.



(3) The bye-laws shall be signed by the signatories to the memorandum.

8. *By-laws.*—The bye-laws shall contain provisions in respect of such matters as may be prescribed.

9. *Name of society.*—(1) No society shall be registered by a name which, in the opinion of the Registrar, is undersirable.

*Explanation.*—For the purposes of this sub-section, the name of a society shall be deemed to be undesirable, if such name is—

(a) obscene or against decency and decorum; or

(b) likely to promote disharmony or feelings of enmity, or hatred or ill-will between different religious, racial, language, or regional groups or castes or communities; or

(c) identical with, or too nearly resembles, the name by which a society in existence has been previously registered.

(2) Except with the previous sanction in writing of the Government, no society shall be registered by a name which contains any of the following words, namely:—

(a) "Co-operative" or "Land Development";

(b) "Reserve Bank";

(c) "Union" or "State" or any word expressing or implying the sanction, approval or patronage of the Central or any State Government; and

(d) "Municipal" or "Chartered" or any word which suggests or is calculated to suggest connection with any municipality or other local authority:

Provided that nothing in this sub-section shall apply to societies registered under the Societies Registration Act, 1860 (Central Act XXI of 1860), before the date of the commencement of this Act.

10. *Certificate of registration.*—(1) The Registrar, on being satisfied that a society has complied with the provisions of this Act, and the rules made thereunder as to registration, shall issue to that society a certificate of registration and such certificate shall be conclusive evidence that the society therein mentioned is duly registered, unless it is proved that the registration of the society has been cancelled.

(2) The Registrar shall, after the issue of a certificate of registration to a society, enter in a register prescribed in that behalf such particulars as may be prescribed.

| 7 For an appeal under sub-section (5) or an application under sub-section (6) of section 44 or for an appeal under sub-section (1) of section 45. | Ten Rupees. |



[159-ஆம் பக்கத்தில் இனம் 7 (3)க்கான அடிக்குறிப்பைக் காண்க,]

L. A. Bill No. 51 of 1974.

(As passed by the Assembly)

*Bill further to amend the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act,* 1969.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the wenty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil adu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Act, 975.

(2) It shall be deemed to have come into force on the 8th September 971.

2. *Amendment of section 2, Tamil Nadu Act* 10 *of* 1969.—In section of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 969 (Tamil Nadu Act 10 of 1969) (herein-after referred to as the principal ct), for clause (8), the following clause shall be substituted, namely :—

"(8) (i) 'tenant' in respect of any area in the State other than the anyakumari district—

(*a*) means in relation to any land to which the Tamil Nadu ultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), pplies, a cultivating tenant as defined in clause (*aa*) of section 2 of at Act and includes—

(i) *a mattuvaramdar* referred to in clause (*a*) or clause (*b*) of ection 7 of the Tiruchirappalli *Kaiaeruvaram and Mattuvaram* Act, 958 (Tamil Nadu Act XXXVI of 1958); and

(ii) a possessory mortgagor, who under a tenancy agreement, xpress or implied, with the possessory mortgagee, contributes his own hysical labour or that of any member of his family in the cultivation of e land subject to possessory mortgage; and

(*b*) means in relation to any land to which the Tamil Nadu ublic Trust (Regulation of Administration of Agricultural Lands) Act, 961 (Tamil Nadu Act 57 of 1961), applies, a cultivating tenant as defined clause (5) of section 2 of that Act

(ii) 'tenant' in respect of any area in the Kanyakumari district—

(a) in relation to any land other than the land to which the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961) applies—

(i) means a person who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of any land belonging to another, under a tenancy agreement express or implied; and

(ii) includes—

(a) any such person who continues in possession of the land after the determination of the tenancy agreement;

(b) the heir of such person, if the heir contributes his own physical labour or that of any member of his family in the cultivation of such land;

(c) a sub-tenant if he contributes his own physical labour or that of any member of his family in the cultivation of such land; or

(d) any such sub-tenant who continues in possession of the land notwithstanding that the person who sublet the land to such sub-tenant cases to have the right to possession of such land;

(e) a possessory mortgagor, who under a tenancy agreement express, or implied with the possessory mortgagee, contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land subject to possessory mortgage; but

(iii) does not include a mere intermediary or his heir;

(b) means in relation to any land to which the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961) applies a cultivating tenant as defined in clause (5) of section 2 of that Act."

3. *Validation*—Notwithstanding anything contained in any judgment decree or order of any court or other authority, all acts done and proceedings taken by any officer or authority under the principal Act before the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, on the basis that the definition of tenant in clause (8) of section 2 of the principal Act as in force immediately before the date of such publication,had included all categories of persons specified in sub-clause (ii) of clause (8) of section 2 of the principal Act as amended by this Act shall, for all purposes be deemed to be and to have always been validly done or taken in accordance with law as if this Act had been in force at all material times when such acts or proceedings were done or taken.



[161 ஆம் பக்கத்தில் இனம் 7 (4)க்கான அடிக்குறிப்பைக் காண்க]

L.A.Bill No. 61 of 1974

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Inam Estates (Abolitionand Conversion into Ryotwari) Act,* 1963 *and the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act,* 1963.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-sixth year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Inam Estate and Minor Inams(Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1975.

(2) It shall come into force at once.

2. *Amendment of Tamil Nadu Act* 26 *of* 1963.—In the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1963) (Tamil Nadu Act 26 of 1963),—

(1) in sub-section (4) of section 8, for the expression "Every Tribunal shall", the expression "Every Tribunal shall, subject to the provision of section 72-A" shall be substituted;

(2) in sub-section (3) of section 46, for thr expression "The Special Appellate Tribunal shall", the expression "The Special Appellate Tribunal shall, subject to tho provisions of section 72-A" shall be substituted;

(3) after section 72, the following section shall be inserted, namely:—

"72-A. *Tribunal or other authority not to appoint receiver, etc.*—(1) Notwithstanding anything contained in sub-section (4) of section 8 or in sub-section (3) of section 46 or in any other provision of this Act or in any other law for the time being in force, no Tribunal or other authority under this Act shall have the power to appoint a receiver or commissioner in respect of any land in an inam estate and in respect of which any proceeding in pending before such Tribunal or other authority.

(2) Any person who was personally cultivating any such land on the notified date and continues to be in possession of that land shall not be dispossessed of the land, until it is finally decided that such person is not actually entitled to ryotwari patta in respect of that land under the provisions of this Act.

(3) Where any receiver or commissioner appointed before the date of the commencement of the Tamil Nadu Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1975 by any Tribunal or other authority in respect of any land in an inam estate, is functioning on such date, the Tribunal or other authority shall either on an application made by the aggrieved party within sixty days from such date, or *suo motu* cancel such appointment, and on such cancellation, the possession of such land shall stand transferred to the person who was personally cultivating such land immediately before the date of the appointment of such receiver if such person had been dispossessed of such land by the receiver.

(4) If it is finally decided that any such person as is referred to in sub-section (2) or sub-section (3) who was personally cultivating any such land (hereinafter in this section referred to as the "said person") is not actually entitled to ryotwari patta in respect of such land under the provisions of this Act, the person who has been granted ryotwari patta in respect of such land shall be entitled to recover arrears of fair rent in respect of such land determined in accordance with the provision contained in Schedule II, from the said person.

(5) Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force, the said person shall be deemed to be a cultivating tenant and shall continue to be a cultivating tenant for the purposes of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 Tamil Nadu Act XXV of 1955) and the Tamil Nadu Cultivating Tenantsd (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956) and the arrears referred to in sub-section (4) shall be paid to the owner or deposited in Court, in such manner and in such number of instalments and within such period as may be prescribed.

*Explanation.*—For the purposes of this section, a person is said to personally cultivate a land when he contributes his own physical labour or that of the members of his family in the cultivation of that land.

(6) The said person shall not be liable to be evicted under the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), in respect of the arrears referred to in sub-section (4), except for failure to pay the said arrears in accordance with the rules made in this behalf under sub-section (5)." ;

(4) in Schedule II, for the expression "[*See* section 33 (9).]", the expression "[*See* sections 33 (9) and 72-A (4).]" shall be substituted.



3. *Amendment of Tamil Nadu Act* 30 *of* 1963.—In the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963),—

(1) in sub-section (4) of section 7, for the expression "Every Tribunal shall", the expression "Every Tribunal shall, subject to the provisions of section 47-A" shall be substituted ;

(2) in sub-section (3) of section 30, for the expression " The Special Appellate Tribunal shall" the expression "The Special Appellate Tribunal shall subject to the provisions of section 47-A" shall be substituted ;

(3) after section 47, the following section shall be inserted namely:—

"47-A. *Tribunal or other authority not to appoint receiver, etc.*—(1) Notwithstanding anything contained in sub-section (4) of section 7 or in sub-section (3) of section 30 or in any other provision of this Act or in any other law for the time being in force, no Tribunal or other authority under this Act shall have the power to appoint a receiver commissioner in respect of any land in a minor inam in respect of which any proceeding is pending before such Tribunal or other authority.

(2) Any person who was personally cultivating any such land on the appointed day and continues to be in possession of that land shall not be dispossessed of the land, until it is finally decided that such person is not actually entitled to ryotwari patta in respect of that land under the provisions of this Act.

(3) Where any receiver or commissioner appointed before the date of the commencement of the Tamil Nadu Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1975 by any Tribunal or other authority in respect of any land in a minor inam, is functioning on such date, the Tribunal or other authority shall either on an application made by the aggrieved party within sixty days from such date, or *suo motu* cancel such appointment, and on such cancellation, the possession of such land shall stand transferred to the person who was personally cultivating such land immediately before the date of the appointment of such receiver if such person had been dispossessed of such land by the receiver.

(4) If it is finally decided that any such person as is referred to in sub-section (2) or sub-section (3) who was personally cultivating any such land (hereinafter in this section referred to as the "said person") is not actually entitled to ryotwari patta in respect of such land under the provisions of this Act, the person who has been granted

ryotwari patta in respect of such land shall be entitled to recover arrears of fair rent in respect of such land determined in accordance with the provisions contained in the Schedule, from the said person.

(5) Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force the said person shall be deemed to be a cultivating tenant and shall continue to be a cultivating tenant for the purposes of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955) and the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956) and the arrears referred to in sub-section (4) shall be paid to the owner or deposited in Court, in such manner and in such number of instalments and within such period as may be prescribed.

*Explanation.*—For the purposes of this section, a person is said to personally cultivate a land when he contributes his own physical labour or that of the members of his family in the cultivation of that land.

(6) The said person shall not be liable to be evicted under the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), in respect of the arrears referred to in sub-section(4), except for the failure to pay the said arrears in accordance with the rules made in this behalf under sub-section (5).";

(4) in the Schedule, for the expression "[*see* sections 8 (2) (i) (*b*). 20 (3) (i) and 21 (4).]", the expression "[*see* sections 8 (2) (i) (*b*), 20 (3) (i), 21 (4) and 47-A (4).]" shall be substituted.



## இணைப்பு VII.

[105 ஆம் பக்கத்தில் இனம் 7 (5) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L. A. Bill No. 6 of 1975 (As passed by the Assembly).

*A Bill further to amend the Tamil Nadu Land Encroachment Act,* 1905.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Land Encroachment (Amendment) Act, 1975.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section* 7, *Tamil Nadu Act III of* 1905.—In section 7 of the Tamil Nadu Land Encroachment Act, 1905 (Tamil Nadu Act III of 1905) (hereinafter referred to as the principal Act).—

(i) in the opening paragraph for the words "any officer of the Highways Department not below the rank of a Section Officer and not being an authorised officer", the words and brackets "any other officer specified by the State Government in this behalf (not being an authorised officer) (hereinafter referred to as the 'specified officer'), shall be substituted;

(ii) in the second proviso,—

(*a*) for the words "any officer of the Highways Department not below the rank of a Second Officer and not being an authorised officer", the words "any specified officer" shall, be substituted;

(*b*) for the words "or Deputy Tahsildar having jurisdiction" in the two places where they occur, the words "Deputy Tahsildar or authorised officer having jurisdiction, as the case may be" shall be substituted.

3. *Amendment of section* 10, *Tamil Nadu Act III of* 1905— In section 10 of the principal Act,—

(i) in clause (*a*), the words "or an authorised officer" shall be omitted;

(ii) after clause (*a*), the following clause shall be inserted, namely:—

"(*aa*) to such officer as may be specified by the State Government in this behalf (hereinafter referred to as the appellate authority) from any decision or order passed by an authorised officer under this Act and different appellate authorities may be specified for different classes of cases; and".

4. *Amendment of section* 10-A, *Tamil Nadu Act III of* 1905.—In sub-section (1) of section 10-A of the principal Act,—

(i) in clause (*a*), the words "an authorised officer or", shall be omitted;

(ii) in clause (*b*), the words "other than the appellate authority", shall be added at the end;

(iii) in clause (*c*), for the words "by the Board of Revenue", the words "by the appellate authority or the Board of Revenue" shall be substituted.

5. *Amendment of section* 10-*B*, *Tamil Nadu Act III of* 1905.—In section 10-B of the principal Act, after the words "the District Collector" the words "the appellate authority" shall be inserted.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

## திங்கட்கிழமை, 1975 ஏப்ரல் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Play grounds for Schools.*

*258 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of schools under Internal Assessment Scheme which are not provided with minimum play-ground facilities; and

(*b*) the steps taken to get play-grounds for those schools?

### பள்ளிகளுக்கு விளையாட்டு இடங்கள்

திரு. வே. தங்கபாண்டியன் (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உள் மதிப்பீடு திட்டம் (Internal Assessment Scheme) செயல்படும் பள்ளிகளில், குறைந்தஅளவு தேவையான விளையாட்டு இடங்கள் இல்லாதவை எத்தனை ?

(இ) அப்பள்ளிகளுக்கு விளையாட்டு இடங்கள் பெறுவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) பள்ளிகளில் உள் மதிப்பீட்டுத் திட்டம் செயல்பட குறைந்த அளவு எவ்வளவு விளையாடுமிடம் இருத்தல் வேண்டுமென எதுவும் வரையறுக்கப்படவில்லை. இருப்பினும் இத்திட்டம் செயல்பட்டுவரும் பள்ளிகள், விளையாட்டு வசதியைக் கொண்டதாகவே அமைந்துள்ளன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு கே. எஸ். கணபதி : துணைத் தலைவரவர்களே, இந்த உள் மதிப்பீட்டுத் திட்டம், 11-ம் வகுப்பிற்கும் புகுத்தப்பட்டு, அதை எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்விற்கும் எடுத்துக்கொள்ளத்தக்க விதத்தில் அரசு வகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இப்போது பத்தாம் வகுப்பு வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதிலே நாம் வெற்றி கண்டால், பின்னர் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்விற்கு அதைக் கொண்டுவர முயற்சிக்கலாம். இப்போது அதைக் கொண்டுவர வேண்டுமென்றால், அதற்குப் பல்கலைக் கழகத்தின் அனுமதி வேண்டும். எனவே இப்போதைக்குப் பத்தாவது வரையில் என்ற அளவில் வைத்திருக்கிறோம்.

திரு. கே. எஸ். கணபதி : உள்மதிப்பீடு திட்டம் செயல்படும் பள்ளிகளிலே, "க்ளெரிகல் ஒர்க்" மிக அதிகமாக இருப்பதால், அப்பள்ளியில் பணியாற்றும் ஏதாவதொரு ஆசிரியருக்கு, இப்போது என்.ஸி.ஸி. திட்டத்தில் செய்திருப்பதைப்போல, 18 வேலை நேரங்களை மட்டுமே கொடுத்து, அவர்கள் இந்த வேலையைச் செய்யும்படி வழி செய்ய அரசு முயற்சிக்குமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பற்றி முழு விவரங்களும் அதன் தன்மைகளும் என்ன என்று இல்லாத நிலையில் இது எப்படி என்று தெரியவில்லை. ஆராய்ந்து பார்க்கும்போது, வேலைப்பளு எப்படி இருக்கின்றது, இப்போது இருக்கின்றவர்களையே வைத்துக் கொண்டு செய்ய முடியுமா என்றெல்லாம் பார்த்துத்தான் முடிவெடுக்க வேண்டும். இன்றுள்ள நிலையில் இரண்டொரு ஆண்டுகள் பார்த்துவிட்டு, பிறகு இதுபற்றி ஆராயலாம்.

*Scholarship for Tamil Medium of Instruction.*

*259. *Q.* THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have issued any order to the effect that the students who opted for Tamil medium of instruction in Colleges should refund the amount of scholarship they have received therefor; and

(*b*) if so, the details thereof?

தமிழ் மூலம் பயிலுவதற்கு உதவித் தொகை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்;



(அ) கல்லூரிகளில் தமிழ் மூலம் பயிலும் மாணவர்கள் பெற்ற உதவித் தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்று அரசு ஆணை ஏதும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இதற்கிடமில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இப்படி உதவித் தொகைகளைக் கொடுத்தும், மாணவர்கள் விரும்பிச்சேர முன்வரவில்லை. இந்த நிலையிலே மாணவர்கள் தமிழிலேயே கற்க முன்வரும்படி, அதன் பேரிலே அவர்களுக்கு மோகம் ஏற்படும்படி வேறு ஏதாவது திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அதிலே அதிக மாணவர்களை ஈர்க்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட ஏற்பாடுகளில்தான் இதுவும் ஒன்று. புகுமுக வகுப்பில் 21 ஆயிரம் இடங்களை அனுமதித்திருந்தோம். அதேபோல பி.ஏ. மற்றும் பி.எஸ்ஸி. போன்ற பட்டப் படிப்பு வகுப்புகளிலே 9 ஆயிரம் இடங்கள் ஒதுக்கி வைத்திருந்தோம். மாணவர்களை இந்தத் துறைக்கு இழுக்க வேண்டும் என்றுதான் புகுமுக வகுப்பில் ரூ. 50-ஐ அவர்களுக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு என்றும், கல்லூரி அளவில் அவர்கள் ஆண்டொன்றுக்குக் கட்டவேண்டிய கட்டணமான ரூ. 180-ஐ அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுவது என்றும் வகுக்கப்பட்டிருக்கிறது. மேலும் சில குறிப்பிட்ட துறைகளில் தமிழ் மூலம் பயிலும் மாணவர்களுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதெல்லாம் அவர்களுக்கு இதிலே ஆர்வம் ஏற்பட வேண்டும் என்றுதான் செய்யப்பட்டிருக்கின்றது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தமிழ் போதனை மொழியாக உள்ள இடங்களிலே, கல்லூரிகளிலே நிரப்பப்படாத இடங்கள் உண்டா ? உண்டு என்றால் எவ்வளவு ? மேலும் தமிழ் மூலம் கற்றுத் தேர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை எந்தெந்தத் துறையில் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்பே குறிப்பிட்டேன். புகுமுக வகுப்புகளைப் பொறுத்தமட்டில், ஏறத்தாழ/ஓரளவிற்கு 3,000 அல்லது 4,000 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோலப் பட்டப்படிப்பு வகுப்புகளிலும் இடங்கள் காலியாக இருக்கின்றன. கணக்கு விவரம் கைவசம் இல்லை. ஆனால் இது தமிழை போதனைமொழியாக ஏற்றுக் கொண்டுள்ள வகுப்புகளில் மட்டும்தான் என்றால், ஆங்கிலத்தை வைத்துக்கொண்டுள்ள இடங்களும் காலியாக இருக்கின்றன. எட்டாயிரம் இடங்களுக்கு மேலே காலியாக இருக்கின்றன. ஆக மொத்தமாக கிட்டத்தட்ட 17 ஆயிரம் இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இது சென்ற ஆண்டைப் பொறுத்த வரையில் உள்ள நிலைமை.

அறநிலைய பாதுகாப்பு மற்றும் உள்ளாட்சித் துறைகளிலே தமிழிலே படித்துவரும்மாணவர்களுக்கு முன்னுரிமை தரலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. வேறு சில துறைகளுக்கும் இதை விரிவுபடுத்தும் தன்மை இருந்துவருகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, was there any proposal before the Government to withdraw the scholarship for such of those Tamil Medium students as answered in English in the Pre-University Class?

[பிற்பகல் 4–10]

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> இது பற்றிய விவரம் நமக்கு வரவில்லை. சில இடங்களிலே எழுதிக் கேட்டார்கள். நந்தனம், கோயம்புத்தூர் கல்லூரிகளிலே தமிழ்மூலம் பாடங்களைக் கற்பிப்பதாக எடுத்துக் கொண்டு ஊக்கத் தொகையையும் பெற்றுக்கொண்டு, அவர்கள் ஆங்கிலத்திலே தேர்வுகளை எழுதினால் என்ன செய்வது என்று கேட்டார்கள். "அப்படி எழுதினால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊக்கத்தொகையைத் திரும்பப் பெற வேண்டும்" என்று சொல்லியிருக்கிறோம். அப்படி யாராவது எழுதினார்களா, எழுதிய காரணத்தினால் அவர்கள் அந்தத் தொகையைத் திருப்பித்தரவேண்டிய நிலைமை ஏற்பட்டதா என்ற விவரம் இல்லை. ஊக்கத்தொகையைக் கொடுப்பதே அவர்கள் தமிழிலேயே எழுத வேண்டும் என்பதற்காகத்தான். அவர்கள் தமிழில் எழுதுகிறோம் என்று சொல்லி அதைப் பெற்றுக்கொண்டு ஆங்கிலத்திலே தேர்வினை எழுதினால், நாம் கொண்டுள்ள நோக்கமும் ஈடேறாது, கொடுக்கப்படும் ஊக்கத் தொகையும் அர்த்தமற்றதாகிவிடும். அது மட்டுமில்லை, இப்படிச் சொல்லி வாங்கிக்கொண்டு, ஆங்கிலத்திலேயே தேர்வுகளை எழுதிவிடுவது என்றால், ஏமாற்றுகின்றவர்களுக்குக் கொடுத்த பரிசு அது என்றாகிவிடும். இதிலே என்ன சங்கடம் இருக்கின்றது என்றால், தேர்வுக்கு உட்காரும் நேரத்திலே, கேள்வித்தாளுக்கு விடை எழுதும் கட்டத்திலே, "விடைகளை தமிழிலே எழுதுகின்றீர்களா, ஆங்கிலத்தில் எழுதுகின்றீர்களா" என்றதொரு வினா இருக்கின்றது. சிலர் ஆங்கிலத்தில் எழுதிவிடுகின்றார்கள். இத்தகைய இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் எழுதுகிறாயா, தமிழிலே எழுதுகிறாயா என்று கேட்பது நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகிறது. தமிழில் எழுத விரும்பினால் எழுதலாம் என்று டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் துணைவேந்தராக இருந்தகாலத்திலிருந்தே இருந்துவருகிறது. விரும்பினால் தமிழில் எழுதலாம் என்று இதற்குத்தான் "ஆப்ஷன்" இருக்கிறது. ஆனால் இப்போது அந்த நிலை இல்லை. தமிழிலேயே எழுதலாம். தமிழில் எழுத வேண்டும் என்று சொல்லிவிட்டு, ஆங்கிலத்திற்கு வேண்டுமானால் "ஆப்ஷன்" கொடுக்கலாம். கல்லூரியில் எப்படிச் சொல்லுகின்றார்களோ தெரியாது. ஊக்கப் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள், ஆனால் எதில் வேண்டுமானாலும் எழுதுங்கள் என்று சொல்லுகின்றார்களா என்று தெரியவில்லை.

<u>திரு. கே. ராஜாராம் :</u> நாம் உதவித் தொகையை கொடுப்பது, தமிழைப் பயிற்சிமொழியாக ஏற்றுப் படிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.





பரீட்சை எழுதும்போது; தமிழிலேலேயே எழுத வேண்டும் என்ற முறையில் அவர்களிடம் ஆரம்பத்திலேயே ஒரு கண்டிஷன் போட்டு அவர்களிடம் கையெழுத்து வாங்கியிருந்தால் அது பொருத்தமாக இருக்கும். தமிழில் பாடங்களைப் படித்து விட்டு, தேர்வு நேரத்தில் விடைகளை ஆங்கிதத்தில் எழுதுகின்றார்கள் என்றால், அவர்கள் மிகவும் கெட்டிக்காரர்களாகத்தான் இருக்கவேண்டும். ஆகவே இதற்காக அவர்களைத் தண்டிப்பது சரியில்லை என்றே நினைக்கிறேன். ஆகவே அவர்கள் தமிழிலேயே தேர்வுகளை எழுத வேண்டும் என்று, முதலிலேயே அவர்களிடம் ஒரு "கண்டிஷன்" போட்டு அவர்களிடமிருந்து கையெழுத்தையும் வாங்கிவிடுவதன் மூலம் இதைச் செய்யலாம். ஆதலின் அரசு இதைச் செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> நியாயத்தின் அடிப்படையில் பார்க்கும்போது தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டவர்கள் தமிழிலும் ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியை பயிற்சி மொழியாகக் கொண்டவர்கள் பிரெஞ்சிலும்தான் தேர்வுகளை எழுத வேண்டும். ஆனால் வகுப்பறைகளில் என்ன சொல்லிக் கொடுக்கின்றார்கள் என்று தெரியவில்லை. கிடைக்கும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள், ஆனால் ஆங்கிலத்தில் விடைகளை எழுதுங்கள் என்று சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை. இப்படி இருந்தால், இது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுவதாகும். ஆனால் இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் வந்ததாகப் புள்ளிவிவரங்கள் அல்லது தகவல்கள் இல்லை.

<u>திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :</u> சட்டக் கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கின்றவர்கள், கேள்வித் தாள்கள் ஆங்கிலத்தில் இருந்தாலும் தமிழிலேயே பதில் எழுத வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> இந்த ஆண்டுதான் இப்படிப்பட்டதொரு சிக்கல் ஏற்பட்டது. இந்த ஆண்டு, கேள்வித்தாள்கள் ஆங்கிலத்திலேயே இருந்தாலும் அவர்கள், விடைகளை தமிழிலே எழுதலாம் என்று பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினர் அனுமதி கொடுத்திருந்தார்கள். அடுத்த ஆண்டிலிருந்து தமிழில் எழுதுகின்றவர்களுக்குக் கேள்வித் தாள்களும் தமிழிலேயே தயாரித்துக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

<u>திரு. ஒய். வேங்கடேஸ்வர தீக்ஷிதர் :</u> தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு கிட்டத்தட்ட ஏழாயிரம் மாணவர்கள் படிக்கின்றார்கள் என்றார்கள் அமைச்சர் அவர்கள். அவர்கள் புகுமுக வகுப்பில் சேரும்போது, "தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டு படிக்கிறேன்" என்று தாமாக விரும்பி முன்வந்து சேர்ந்தார்களா அல்லது வேறு வழி இல்லாத காரணத்தினால், ஒரு வற்புறுத்தலின்கீழ் வந்து சேர்ந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாகப் பள்ளிக் கூடத்திற்கு மாணவர்கள் போகின்றதே நிர்பந்தம் காரணமாகத்தான். பெற்றோர்களுடைய வற்புறுத்தல் காரணமாகத்தான் செல்லுகின்றார்கள். அங்கே போய்ப் படிக்கும்போது தாய் மொழியையே பயிற்சிமொழியாகக் கொண்டு படித்தால் எதிர்காலம் பாதிக்கப்படுமே என்ற அச்சம் இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணத்தைப் போக்குவதற்காகத்தான் உள்ளேயும் வெளியிலேயும் இந்தத் தன்மைகளை உருவாக்கவேண்டிய பொறுப்பிலுள்ளவர்களாக இருக்கிறோம். அதை மெல்ல மெல்லப் போக்குவதற்கான வழி முறைகளைச் செய்துகொண்டுதான் வருகிறோம். பொதுத்துறை—அரசுத்துறை, தனியார் துறை, இன்னும் இரண்டும் சேர்ந்துள்ள துறை என்று எல்லாவற்றிலும் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். வேலை வாய்ப்பு பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தால்தான் இன்று ஆங்கிலத்திலேயே படிக்க வேண்டும் என்ற சூழ்நிலை அவர்களுக்கு இருக்கின்றது. அந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டியிருக்கிறது. நீந்தத் தெரிந்துகொண்டுதான் தண்ணீரில் இறங்க வேண்டும் என்றால், நீந்தத் தெரிந்துகொள்ளவே முடியாது போய் விடும். முதலில் இறங்கத்தான் வேண்டும். கரையிலேயே நின்று கொண்டு, நீந்தப் போகிறேன் என்று யாராவது சொன்னால் முடியாது. மெல்ல மெல்ல தண்ணீரில் இறங்கச் செய்யும் சூழ்நிலையை உருவாக்குகிறோம். உள்ளேயும் உருவாக்குகிறோம், வெளியிலேயும் அப்படிப்பட்ட சூழ்நிலையைக் கொண்டுவர முயற்சிக்கிறோம். அது நாளடைவில் நடைபெறும்.

## *Unrecognised Elementary Schools.*

*260. *Q.* THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sent a directive to the Commissioners of Panchayat Unions to discontinue the running of unrecognised Elementary Schools in their Unions; and

(*b*) if so, the number of such schools discontinued in the Revenue Districts of Thanjavur, Tiruchirappalli and Pudukkottai?

## ஏற்பளிக்கப்படாத தொடக்கப் பள்ளிகள்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்பளிக்கப்படாத தொடக்கப் பள்ளிகள் நடத்துவதை நிறுத்திவிடுமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு உத்தரவு ஒன்றை அரசு அனுப்பியுள்ளது உண்மையா ?



(ஆ) ஆமெனில், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்களில் அவ்வாறு நிறுத்தப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : ஊராட்சி ஒன்றியங்களுக்கு இதுபோன்ற சுற்றறிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதன் நகலும் என்னிடம் இருக்கின்றது. இதுபோன்று அங்கீகாரம் இல்லாத பள்ளிக்கூடங்களை நடத்துவது கூடாது என்று இயக்குனர் அறிவுரை கூறி பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் இந்த வினா எழுப்பப்பட்டிருக்கின்றது. அனுப்பப்பட்டதா என்று மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன் அனுமதி பெறாமல் பள்ளிக்கூடங்களை நடத்தக்கூடாது என்ற உத்திரவிருந்துகொண்டுதான் இருக்கின்றது. இதை எண்ணிப்பாராமல் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைத் துவக்கி நடத்திக்கொண்டு வருகின்றார்கள். நடத்திக்கொண்டு வரும் நேரத்திலே அவற்றுக்கு ரெகக்னிஷன் வேண்டும் என்று அனுமதி கோருகின்றார்கள். அந்த வகையில்தான் முன்பே அதற்கான தன்மைகளை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

முதலில் 294 "நான்-ரெகக்னைஸ்ட் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களும்" 152 "நான் – ரெகக்னைஸ்ட் ஸ்டாண்டர்ட்ஸும்" இருந்தன. அவற்றுக்கெல்லாம் மாணவர்களுடைய நலன்களைக் கருத்தில்கொண்டு 1969–70-ல் அவற்றிக்கு அனுமதி வழங்கினோம். பிறகும் ஏற்கனவே அனுமதி பெறாது நடந்துவந்த 23 பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களுக்கும் 7 அனுமதி பெறாது நடத்திவந்த வகுப்புகளுக்கும் தஞ்சை மாவட்டத்தில் அனுமதி அளித்திருக்கிறோம். திருச்சி மாவட்டத்தில் 1969–ம் ஆண்டிலே 76 நான்–ரெகக்னைஸ்டு பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களுக்கும் 12 நான்–ரெகக்னைஸ்டு ஸ்டாண்டர்ட்ஸ்க்கும் அனுமதி கொடுத்திருக்கிறோம். இப்போது இதுபற்றி 8—1—1975-ல் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன்களுக்கு. "முன் அனுமதி பெறாமல் பள்ளிகளைத் துவக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு அவர்களுடையதுதான்" என்ற அளவிற்கு பஞ்சாயத்து யூனியன் ஆணையர்களுக்கு அனுப்பியிருக்கின்றோம்.

திரு. வி. வெங்கா : ஊராட்சி ஒன்றியம் துவக்கப்பட்ட காலத்தில் "கல்வி இலாகாவின் முன் அனுமதி எதையும் எதிர் பாராது, தேவைக்கு ஏற்ப ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைத் துவக்கலாம்" என்ற விதி இருந்தது. அதை ஒட்டி துவக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு கல்வி இலாகாவில், தற்காலிக அனுமதியை வழங்கினார்கள். இப்படி தற்காலிக

(*d*) whether the Government have received any representation from the teachers of the said College in this connection?

மானியம் பெறும் கல்லூரிகளின் நிர்வாகத்தினரும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தத்தின் படிவம்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் கல்லூரிகளின் நிர்வாகத்தினரும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தம் ஒன்றின் படிவமொன்றை சென்னைப் பல்கலைக் கழகம் வரையறுத்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், மானியம் பெறும் கல்லூரிகளின் நிர்வாகத்தினர் மேற்படி ஒப்பந்தத்தில் மேலும் பல பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளும் உரிமையுள்ளதா?

(உ) திருச்சிராப்பள்ளியிலுள்ள மகளிர் கல்லூரியொன்று பல்கலைக் கழகம் வரையறுத்துள்ள உட்பகுதிகளுக்கு மேலும் பல உட்பகுதிகளைக் கொண்ட ஒப்பந்தம் தயாரித்துள்ளது உண்மையா?

(எ) இது தொடர்பாக மேற்படி கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து இவ்வரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தனியார் கல்லூரி நிர்வாகங்கள் பல்கலைக்கழகங்கள் குறிப்பிட்டுள்ள படிவத்தில் பணி ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு செய்யும்படி சென்னைப் பல்கலைக்கழகம் கல்லூரிகளை வற்புறுத்தும் எனத் தெரிகிறது.

(உ) ஆம்.

(எ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : திருச்சியிலுள்ள இந்தக் கல்லூரியில், மூன்று மாத நோட்டீஸ் கொடுத்தால், எந்த ஆசிரியரும் வேலையை விட்டுப் போய்விட வேண்டும் என்ற ஒரு நிபந்தனை, அந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஒப்பந்தம் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்படவில்லை. ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய படிவமும் கொடுக்கபடவில்லை. இதுபோன்ற நிலையை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர் யாரிடத்திலிருந்தும் அரசுக்கு இந்த வகையில் எந்தவிதமான முறையீடும் வரவில்லை. இப்படி ஒரு நிலை இருந்தால், அதைக் கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது. பல்கலைக் கழகம் சில விதிமுறைகளை வைத்து, அந்த விதிமுறைகளின் கீழ்தான் ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இரண்டு கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் சில மாற்றங்களைச் சொல்லி அதை நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றார்கள். இதையெல்லாம் பல்கலைக் கழகம்தான் கவனிக்க வேண்டும். ஹோலி க்ராஸ் கல்லூரியில் இரண்டு மாதம் நோட்டீஸ் என்று இருந்ததை ஒரு மாதம் என்று மாற்றியிருக்கின்றார்கள். இதைத் திருத்தியமைக்க பல்கலைக் கழகம்தான் வற்புறுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்கு முறையீடு செய்து கொண்டால், அரசு பல்கலைக் கழகத்திற்கு வேண்டிய பரிந்துரைகளைச் செய்து, எல்லாருக்கும் பொருந்தக்கூடிய ஒரே முறையைத்தான் அவர்களும் பின்பற்றிடச் செய்ய வேண்டும் என்று நாம் பல்கலைக் கழகத்திடம் வற்புறுத்தலாம்.

(பிற்பகல் 4-20)

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த இரண்டு கல்லூரிகளும் பெண்கள் கல்லூரிகள். இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் இது போன்ற முறையீடுகளைச் செய்ய முன்வரமாட்டார்கள். அந்த அடிப்படையிலே, இது அரசு தெரிந்துகொண்டுள்ள ஒன்று என்ற காரணத்தினாலே இப்போதே அரசு தனக்குக் கிடைத்துள்ள விவரங்களைக் கொண்டு "இது போன்ற நிகழ்ச்சிகள் இருக்கக்கூடாது" என்று பல்கலைக் கழகத்துக்கு அரசு அறிவுரை வழங்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முதலில் யாராவது ஒருவர் முறையீடு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினராவது இன்னின்னார்க்கு இப்படிச் செய்திருக்கின்றார்கள் என்று எழுதிக் கொடுப்பார்களேயானால், "இன்னின்னார்க்கு இப்படிச் செய்திருக்கின்றீர்களாமே" என்று பல்கலைக் கழகத்திற்குச் சொல்லி அப்படிச் செய்யலாமா, செய்யக்கூடாதா என்று பரிந்துரை செய்யலாம். ஆனால் இதுபற்றிய எந்த முறையீடும் வராத அளவில் பல்கலைக் கழகத்திற்கு இது சம்பந்தமாகப் பரிந்துரை செய்வது கடினமானதாகும்.

திரு. செ. முத்துசாமி : தற்போது தனியார் கல்லூரி நிர்வாகங்கள் பல்கலைக் கழகத்தினுடைய குறிப்புரைகளின்படி நடக்காமல் தவறாக, எதிராக நடந்து கொண்டிருக்கின்றன. அப்படித் தவறாக நடக்கின்றவைகள் மீது சட்ட ரீதியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகத்தின் கட்டுக்கடங்காமல் ஒரு கல்லூரி நடக்குமானால், அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "ரெகக்னிஷனை" பல்கலைக் கழகம் திரும்பப் பெற்றுக் கொள்ள

(d) whether the Government have received any representation from the teachers of the said College in this connection?

மானியம் பெறும் கல்லூரிகளின் நிர்வாகத்தினரும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தத்தின் படிவம்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் கல்லூரிகளின் நிர்வாகத்தினரும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தம் ஒன்றின் படிவமொன்றை சென்னைப் பல்கலைக் கழகம் வரையறுத்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், மானியம் பெறும் கல்லூரிகளின் நிர்வாகத்தினர் மேற்படி ஒப்பந்தத்தில் மேலும் பல பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளும் உரிமையுள்ளதா?

(உ) திருச்சிராப்பள்ளியிலுள்ள மகளிர் கல்லூரியொன்று பல்கலைக் கழகம் வரையறுத்துள்ள உட்பகுதிகளுக்கு மேலும் பல உட்பகுதிகளைக் கொண்ட ஒப்பந்தம் தயாரித்துள்ளது உண்மையா?

(எ) இது தொடர்பாக மேற்படி கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து இவ்வரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தனியார் கல்லூரி நிர்வாகங்கள் பல்கலைக்கழகங்கள் குறிப்பிட்டுள்ள படிவத்தில் பணி ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு செய்யும்படி சென்னைப் பல்கலைக்கழகம் கல்லூரிகளை வற்புறுத்தும் எனத் தெரிகிறது.

(உ) ஆம்.

(எ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : திருச்சியிலுள்ள இந்தக் கல்லூரியில், மூன்று மாத நோட்டீஸ் கொடுத்தால், எந்த ஆசிரியரும் வேலையை விட்டுப் போய்விட வேண்டும் என்ற ஒரு நிபந்தனை, அந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஒப்பந்தம் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்படவில்லை. ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய படிவமும் கொடுக்கப்படவில்லை. இதுபோன்ற நிலையை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர் யாரிடத்திலிருந்தும் அரசுக்கு இந்த வகையில் எந்தவிதமான முறையீடும் வரவில்லை. இப்படி ஒரு நிலை இருந்தால், அதைக் கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது. பல்கலைக் கழகம் சில விதிமுறைகளை வைத்து, அந்த விதிமுறைகளின் கீழ்தான் ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இரண்டு கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் சில மாற்றங்களைச் சொல்லி அதை நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றார்கள். இதையெல்லாம் பல்கலைக் கழகம்தான் கவனிக்க வேண்டும். ஹோலி க்ராஸ் கல்லூரியில் இரண்டு மாதம் நோட்டீஸ் என்று இருந்ததை ஒரு மாதம் என்று மாற்றியிருக்கின்றார்கள். இதைத் திருத்தியமைக்க பல்கலைக் கழகம்தான் வற்புறுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்கு முறையீடு செய்து கொண்டால், அரசு பல்கலைக் கழகத்திற்கு வேண்டிய பரிந்துரைகளைச் செய்து, எல்லாருக்கும் பொருந்தக்கூடிய ஒரே முறையைத்தான் அவர்களும் பின்பற்றிடச் செய்ய வேண்டும் என்று நாம் பல்கலைக் கழகத்திடம் வற்புறுத்தலாம்.

(பிற்பகல் 4-20)

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த இரண்டு கல்லூரிகளும் பெண்கள் கல்லூரிகள். இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் இது போன்ற முறையீடுகளைச் செய்ய முன்வரமாட்டார்கள். அந்த அடிப்படையிலே, இது அரசு தெரிந்துகொண்டுள்ள ஒன்று என்ற காரணத்தினாலே இப்போதே அரசு தனக்குக் கிடைத்துள்ள விவரங்களைக் கொண்டு "இது போன்ற நிகழ்ச்சிகள் இருக்கக்கூடாது" என்று பல்கலைக் கழகத்துக்கு அரசு அறிவுரை வழங்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முதலில் யாராவது ஒருவர் முறையீடு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினராவது இன்னின்னார்க்கு இப்படிச் செய்திருக்கின்றார்கள் என்று எழுதிக் கொடுப்பார்களேயானால், "இன்னின்னார்க்கு இப்படிச் செய்திருக்கின்றீர்களாமே" என்று பல்கலைக் கழகத்திற்குச் சொல்லி அப்படிச் செய்யலாமா, செய்யக்கூடாதா என்று பரிந்துரை செய்யலாம். ஆனால் இதுபற்றிய எந்த முறையீடும் வராத அளவில் பல்கலைக் கழகத்திற்கு இது சம்பந்தமாகப் பரிந்துரை செய்வது கடினமானதாகும்.

திரு. செ. முத்துசாமி : தற்போது தனியார் கல்லூரி நிர்வாகங்கள் பல்கலைக் கழகத்தினுடைய குறிப்புரைகளின்படி நடக்காமல் தவறாக, எதிராக நடந்து கொண்டிருக்கின்றன. அப்படித் தவறாக நடக்கின்றவைகள் மீது சட்ட ரீதியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகத்தின் கட்டுக்கடங்காமல் ஒரு கல்லூரி நடக்குமானால், அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "ரெகக்னிஷனை" பல்கலைக் கழகம் திரும்பப் பெற்றுக் கொள்ள

லாம். மேலும், அதற்குக் கொடுத்துவரும் மானியத்தை "கொடுக்க வேண்டாம்" என்று அரசை பல்கலைக் கழகம் கேட்டுக் கொள்ளலாம் இவ்வாறு, "இந்தக் கல்லூரிக்கு மானியம் கொடுக்க வேண்டாம்" என்று அரசிடம் பல்கலைக்கழகம் சொன்னால், அரசு அதுபற்றிப் பரிசீலனை செய்ய கடமைப்பட்டிருக்கும். ஆனால், அந்த அளவுக்கு இப்போது எந்தவிதமான நிலைமைகளும் இல்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the representation made by the Association of University Teachers, may I know whether Government have any proposal to introduce a Bill providing for the security of teachers employed in private colleges, as well as other colleges in our State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது பள்ளிகளில் எப்படி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று கொண்டுவந்திருக்கிறோமோ, அதுமாதிரி கல்லூரி அளவிலும் கொண்டுவரவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் அரசு இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. அதுபற்றி எந்த வகையிலே நடவடிக்கை எடுக்கலாம் என்பதற்காக, பக்கத்தில் இருக்கின்ற இரண்டு—மூன்று மாநிலங்களில் அவர்கள் நிறைவேற்றி இருக்கின்ற சட்டங்கள், மற்றவைகள் எல்லாம் வாங்கி அவற்றை கல்வித்துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அது பற்றி விரைவிலே தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். கணபதி: பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டமானது, தனியார் பள்ளிகளை வரன்முறைப் படுத்தும் ஒரு சட்டமாக இருக்கிறது என்று எல்லோராலும் கருதப் படுவதால், கல்லூரிகளிலே ஆசிரியர்களுக்கு மட்டும் பணிப்பாதுகாப்பு கொடுக்கும் வகையிலே சட்டம் கொண்டுவரப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுவும் வரன்முறைப் படுத்தப்பட்டு, அங்கிருக்கின்ற நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துகின்ற அளவுக்குத்தான் வரவேண்டும். ஒன்றைத் துவக்கும்பொழுது, இப்படி இப்படி நடக்க வேண்டும், சேர்க்கும்பொழுது இப்படி இப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்ல வேண்டி வருகின்றபொழுது, நாம் சிலபல நிபந்தனைகளை வகுக்க வேண்டி வரும். அந்த அடிப்படையிலே தான் இப்போது ஆந்திராவிலும் வேறு பல இடங்களிலும் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். நாமும், அதுபற்றியெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். அதனுடைய நோக்கமே, கூடுமானவரையில் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட வேண்டும் என்பதுதான். நினைத்தபடி அவர்கள் எடுக்கப்படக் கூடாது, வெளியேற்றப்படக்கூடாது என்பதுதான் நோக்கம். ஆக, அவ்வாறு கொண்டு வருவதற்கு எந்த அளவுக்குச் செய்யலாம் என்பதையெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். விரைவில் அது பற்றி முடிவெடுக்கப்படும்.



THIRU A. R. DAMODARAN: Sir, there would appear to be some Constitutional difficulties in providing security for teachers in institutions managed by minorities, unlike factories and business establishments which are run by Christians, Muslims and other minority institutions. The State is empowered to introduce legislation to protect the rights of the employees in such factories or industrial establishments. May I know, in view of the fact that this has now become an all-India issue and University teachers all over India are claiming a Bill to provide security for them, whether the state Government would consult other State Governments to find out whether some sort of a Constitutional amendment could not be put through to see that there is no Constitutional bar to the provision of security for such teachers—whether they belong to minority institutions or to majority institutions?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையிலே அவர்களுக்குச் சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற அளவிலேதான் இத்தகைய முறைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பள்ளிக்கூடங்களை வைத்து நடத்த, ஆசிரியர்களை நியமித்துக்கொள்ள உரிமை இருக்கிறது என்ற அளவுக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இன்னாரைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று சொல்ல உரிமை இல்லை. ஆனால், சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் ஒன்றில் அவர்கள் இன்னாரைத்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லவேண்டாம் என்றும், ஆனால், அதற்குரிய 'கிரைட்டீரியா' அல்லது முறைகள் வகுக்க அரசுக்கு உரிமை இருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும், அவர்களுடைய கோட் ஆப் காண்டக்ட் இப்படி இருக்கவேண்டும், அவர்களுடைய சர்வீஸ் இப்படி இருக்கவேண்டும் என்று இவற்றையெல்லாம் வரையறுக்க அரசுக்கு உரிமை இருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட் ஒரு வழக்கிலே தீர்ப்பளித்திருக்கிறது. அதை அடிப்படையாகக் கொண்டு தான் பள்ளிப் பாதுகாப்புச் சட்டத்தை மற்ற மாநிலங்களும் கொண்டுவந்திருக்கின்றன. அதே அடிப்படையில் நாமும் கொண்டு வந்தால்தான், அந்த நிர்வாகத்தார் சுலபமாகவும், எளிதாகவும் நினைத்த போது நினைத்தவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆக, அந்த வாய்ப்பு ஏற்படுகின்ற அளவுக்கு அந்தச் சட்டத்தைக் கொண்டுவருகின்ற முயற்சியிலே நாம் தற்போது ஈடுபட்டிருக்கின்றோம்.

(திரு. செ. முத்துசாமி எழுந்தார்..........)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அரை மணி நேரம் ஆகியும் நான்கு கேள்விகளைத் தாண்டவில்லை. சும்மா இப்படி நிறைய கேட்டால் எப்படி முடிப்பது? சரி, ஆகட்டும்.

திரு. செ. முத்துசாமி: இந்தக் கல்லூரி ஆசிரியர்களுடைய சட்டப் பாதுகாப்பு விஷயமாக நம்முடைய தமிழ் நாட்டிலே சட்டம் நிறைவேற்றிய பிறகு, இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே ஆந்திரா

அரசாங்கத்தின் கல்விச் செயலாளர் அவர்கள் அங்குள்ள தொடக்கப் பள்ளிகளுக்கும், செகண்டரி பள்ளிகளுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் சேர்த்து ஒரு அவசரச் சட்டம் கொண்டுவந்திருக்கின்றார்கள். நம்முடைய மாநிலம் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு பிறகு முயற்சி எடுத்தவர்கள் கல்லூரிகளுக்கும் சேர்த்துக் கொண்டு வந்துவிட்டார்கள். ஆதலால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்—இப்போது கல்லூரி ஆசிரியர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஒரு அவசரச் சட்டம் ஆந்திரா அரசாங்கம் போட்டிருப்பது போல—இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட முறையில் இந்த ஜூன் மாதத்திற்குள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஏதாவது ஆலோசனை வைத்திருக்கிறார்களா? இல்லையேல் இதுபற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கின்றது.

## *Playgrounds for Hockey Game.*

*262 *Q.*—THIRU D. V. D' MONTE : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether the Government have any proposals to provide playgrounds to improve the standard of Hockey in the City and Districts ;

(*b*) if so, the steps taken thereon ;

(*c*) whether, with a view to improving the standard of Hockey, the Government have any proposals to make Hockey a compulsory game for boys in schools ; and

(*d*) if not, the steps proposed to be taken to achieve this?

ஹாக்கி விளையாட்டிற்கு விளையாட்டுத் திடல் வசதிகள்.

திரு. டி. வி. டிமாண்டி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாநகரிலும் மாவட்டங்களிலும் ஹாக்கி விளையாட்டின் தரத்தை உயர்த்துவதற்காக விளையாட்டுத் திடால் வசதிகள் செய்து கொடுக்கும் செயற்குறிப்புகள் எவையேனும் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?





(உ) ஹாக்கி விளையாட்டின் தரத்தை உயர்த்தும்பொருட்டு பள்ளி மாணவர்களுக்கு ஹாக்கி விளையாட்டைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்புகள் எவையேனும் அரசிடம் உள்ளனவா?

(எ) இல்லையெனில், ஹாக்கி விளையாட்டின் தரத்தை உயர்த்த மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை,

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தற்போது நம் மாநிலத்தில் எல்லாப் பள்ளிகளிலும் கட்டாய விளையாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள விளையாட்டுகளுள் ஒன்றான ஹாக்கியும் வசதியுள்ள பள்ளிகளில் எல்லாம் விளையாடப்படுகிறது.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU D. V. D'MONTE : Sir, although India holds the fourth place in world standards in women's hockey, the standard as far as Tamil Nadu is concerned has fallen very much in recentyears mainly because of lack ofplaying-fields for exclusive use of women's and girls' teams. May I know whether there is any proposal before the Government of Tamil Nadu to provide an exclusive playing-field for promotion of women's hockey in our State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இருக்கின்ற பல்வேறு பள்ளிக்கூடங்களிலே, சில பள்ளிகளில்தான் நல்ல முறையில் விளையாட்டுத் திடல் அமைந்திருக்கின்றது. பல பள்ளிகளில் இடவசதி இல்லாததன் காரணமாக அடிப்படை விளையாட்டுகளுக்குக் கூட இடமில்லாமல், வசதியில்லாமல் இருக்கின்றது. ஆகவேதான் இப்போது புதிய பள்ளிகள் எங்கே துவங்கினாலும், ஒரு ஐந்து ஏக்கருக்குக் குறையாமல் இடவசதி இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். கட்டடங்களுக்கு என்று ½ ஏக்கர் போனாலும்கூட, ஒரு மூன்று ஏக்கர், நான்கு ஏக்கர் விளையாட்டுத் திடல்களுக்கென்று அமையவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். எங்கெங்கு இடவசதிகள் இருக்கின்றனவோ, அங்கேயெல்லாம் கால் பந்து விளையாட்டு, கைப் பந்து விளையாட்டு, ஹாக்கி விளையாட்டு, கிரிக்கெட் விளையாட்டு ஆகிய இவற்றுக்கெல்லாம் இடம் ஒதுக்கியிருக்கின்றார்கள். அது தவிர மாவட்ட விளையாட்டுக் குழுவினர் சார்பாகவும், எந்தெந்தப் பள்ளிகளில் இதற்கான வசதி வாய்ப்புக்கள் இல்லையோ, அந்தந்தப் பள்ளிகள் எல்லாம் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு மாவட்ட விளையாட்டுக் குழுக்கள் சார்பாக விளையாட்டுக் கூடங்களை அமைக்கின்ற அளவுக்கு நாம் முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றோம். அந்த அளவிலே, திருச்சி, வேலூர், நீலகிரி, ஊட்டி, மதுரை, நாகர்கோவில், காஞ்சீபுரம், கடலூர்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 ஏப்ரல் 21

சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஹாக்கி விளையாடுவதற்கென்று அங்குள்ள மாவட்ட விளையாட்டுக் குழுக்களின் சார்பில் தனியாக இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எந்தெந்தப்பள்ளிகள் விரும்புகின்றனவோ அவை அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கின்றோம். இப்படி பொதுவான இடங்களை உருவாக்கி ஒரு நான்கு, ஐந்து பள்ளிகள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற அளவுக்கு செய்ய முடியும் என்று சொன்னால், இவ்வாறு பெரிய நகரங்களில் எல்லாம செய்யலாம் என்ற கருத்தையும் நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம்.

### *Free Eye Camp.*

*263 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Health be pleased to state the number of persons benefited by the ' Free Eye Camp ' in Tamil Nadu till 31—1—1975, District-wise?

### இலவசக் கண் சிகிச்சை முகாம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் 31—1—1975-ஆம் நாள் வரை, இலவசக் கண் சிகிச்சை மூலம் உதவி பெற்றவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர்?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தமிழ்நாட்டில் 31—1—1975 ஆம் நாள் வரை மொத்தம் 8,05,959 பேர்கள் இலவசக் கண் சிகிச்சை மூலம் பல்வேறு வகையான உதவியைப் பெற்றுள்ளார்கள். அதன் விவரம் :—

| | |
|---|---|
| சென்னை .. .. .. .. | 11,422 |
| செங்கற்பட்டு .. .. .. | 41,610 |
| வடஆற்காடு .. .. .. | 52,792 |
| தென்னாற்காடு .. .. .. | 51,374 |
| தர்மபுரி .. .. .. | 23,851 |
| தஞ்சாவூர் .. .. .. | 1,01,356 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 92,701 |
| சேலம் .. .. .. | 63,185 |
| கோயம்புத்தூர் .. .. .. | 91,773 |
| நீலகிரி .. .. .. | 25,109 |
| மதுரை .. .. .. | 1,06,090 |
| ராமநாதபுரம் .. .. .. | 78,102 |
| திருநெல்வேலி .. .. .. | 49,876 |
| கன்னியாகுமரி .. .. .. | 12,403 |
| புதுக்கோட்டை .. .. .. | 4,323 |



1975 ஏப்ரல் 21]

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த சிகிச்சை முகாம் நடத்தா மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் மிகச் சிறப்பாக பயன் அளிக்கிறது. ஆனால் இந்த முகாமிலிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பியபின்பு சிகிச்சை பெற்றவர்களுக்கு மாதாந்திரமாகவோ அல்லது மூன்று மாதங்களுக்கோ தொடர்ந்த ஃபாலோ அப்—செக் அப் இருந்தால் நன்றாக இருக்கும். அவர்களுக்கு பின்னால் செக்-அப் இல்லை என்ற ஒரு குறைபாடு இருக்கின்றது. ஆகவே, இதை நிவர்த்தி செய்ய ஏதாவது திட்டம் அரசு வைத்திருக்கின்றதா என்றும், அவ்வாறு செய்யும் நேர்வில் இந்தத் தொழிலில் ஏற்கெனவே ஈடுபட்ட அந்த டாக்டர்களுக்கு தொடர்ந்து இந்தப் பணி கொடுக்கப்படுமா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதிலே பெரும்பான்மையானவர்கள் புறநோயாளிகளாக அவ்வப்போது கண்ணுக்கு ஏற்படுகின்ற சில தொல்லைகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்கின்றார்கள். 89,115 பேர் புரை அறுவை சிகிச்சை பெற்றவர்கள். அந்த 89 ஆயிரம் பேரில் ஏறத்தாழ 88 ஆயிரம் பேருக்கு எந்தவிதமான குறைபாடும் ஏற்பட வாய்ப்பு இடையாது. சிகிச்சை முறையாகச் செய்யப்படுமானால், அதற்குப் பின்னர் அவர்களுக்குப் போடப்படுகின்ற கண்ணாடி மூலமாகப் பார்வை கிடைக்கிறது. அத்தனை பேருக்கும் சிகிச்சையளித்த பின்னாலே திரும்பவும் அவர்களுக்கு மறுபரிசீலனை செய்து சிகிச்சை செய்து கொண்டிருப்பது என்பது, இது கேம்ப் ஹாஸ்பிட்டல் என்ற முறையில் நடைபெறுகின்ற காரணத்தால் இயலாத ஒன்றாகும். ஆனால் இவ்வாறு சிகிச்சை செய்யப்பட்டபின்பு யாருக்கேனும் குறைகள் இருந்து, அவர்கள் மாவட்ட மருத்துவ மனைக்கு வருவார்களேயானால், அங்கே அவர்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4–30).

திரு. வி. வெங்கா : இந்தக் கண்ணொளி வழங்கும் முகாம்களுக்கு பொது மக்களிடமிருந்து இதுவரையிலே வசூல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு? அரசு தன் பங்காகச் செலவு செய்த தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்போது அதற்கான விடை கைவசம் இல்லை. ஆனால் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்கு இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அந்த நிதி வசூலாகியிருக்கின்றது. ஆனால் அரசாங்கத்தின் சார்பாகவும் நிதி ஒதுக்கவேண்டிய நிலைமையிருக்கின்றது என்ற அளவுக்கு எனக்கு நினைவுக்கு வருகிறது.

*Scheme for the Physically Handicapped Persons.*

* 264 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of physically handicapped persons in Tamil Nadu benefited by the Scheme for the Physically Handicapped Persons?

உடல் ஊனமுற்றோர் திட்டம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றோர்களில், உடல் ஊனமுற்றோர் திட்டத்தின் அடிப்படையில் எத்தனை பேர் பயன் பெற்றுள்ளனர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுமார் 22,000 பேர் பயன் பெறுவர்.

திரு வே. தங்கப்பாண்டியன் : இந்த உடல் ஊனமுற்றவர்களில் படித்தவர்களாக இருந்து வேலை வாய்ப்புக்கு மனுச் செய்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் ; அப்படி வேலை வாய்ப்புக்கு மனுச் செய்தவர்கள் எத்தனை பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கின்றது? தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில், டிஸ்ட்ரிக்ட் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்களில், இந்த உடல் ஊனமுற்றோர்களுக்கு முன் உரிமை தந்து அந்த வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கு உத்தரவு இருக்கின்றதா? அப்படி உத்தரவிட்டிருந்தால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. வி. எம். அண்ணாமலை : அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலே முன் உரிமை அளிக்கப்படுகிறது என்பதை முதலிலே தெரிவித்துக் கொண்டு, உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வுத் திட்டத்தில் தொழிற் பயிற்சி அளிக்கவும் அவர்களுக்குரிய வேலைவாய்ப்புத் திட்டங்களும் இருக்கின்றன. உடல் ஊனமுற்ற இளைஞர்களுக்கு போக்கு வரத்துத் துறை, தமிழக அரசு சிறுதொழில் நிறுவனம், அரசு அச்சகம், கைத்தறி, விசைத்தறித் தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் கழகம், விவர அட்டை சோதித்துப் பார்த்தல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன் படி பயன் பெறுவோர்கள் விவரமும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த ஆணையின் படி, பல்லவன் போக்குவரத்துத் துறை மூலம் 200 பேர் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, முதல் கட்டத்திலே 100 பேர் பயிற்சி பெற்று வருகின்றார்கள். அது போலவே இந்த அரசு போக்கு வரத்துத் துறையில் 100 பேர்களுக்குப் பயிற்சி





அளிக்கப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 50 பேர்கள் இப்போது பயிற்சி பெற்று வருகின்றார்கள். சேரன் போக்குவரத்துக் கழகத்திலே 10 பேர், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 20 பேர், டான்சி நிறுவனத்தில் 100 பேர், கைத்தறித் துறையில் 200 பேர், அரசு அச்சகத்தில் 50 பேர், கதர் கிராமக் கைத்தொழிலில் 600 பேர், மொத்தம் 1280 பேர்களுக்கு முதற்கட்டமாக தற்போது வேலைவாய்ப்பு பெறுவதற்குரிய வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சற்றேறக்குறைய 1005 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் பயன் பெற எவ்வகையானவர் உடல் ஊனமுற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இருக்கின்ற தகுதிகள் என்ன என்பது பற்றி ஆய்வு செய்வதற்கு என்று மாநில அளவில் ஒரு குழு போடப்பட்டிருக்கின்றது. அந்தக் குழு உடல் ஊனமுற்றவர்களுக்கு அடிப்படைத் தகுதிகள் என்ன இருக்க வேண்டும் என்று ஆராய்கின்றது. தங்களுடைய சொந்த முயற்சிகளினால் பணி செய்து, பணிக் கூடங்களுக்குச் சென்று பயிற்சி பெற முடியாதவர்கள், படித்து அதே நேரத்தில் கைகள் நல்ல வகையிலே இயங்காத வகையிலே இருந்து, நடப்பதற்கு முடியாமல் இருந்தால், அவர்களுக்குத் தட்டெழுத்து பயிற்சி, அது போலவே நடப்பதற்கு முடியாதவர்களுக்கு எழுதுகின்ற, ஓவியங்கள், சித்திரங்கள் வரைதல் போன்ற பயிற்சிகள் அளிப்பது—இவ்வாறு குழு தனித்தனியாக அந்தந்த கருத்துகளுக்கு ஏற்ப, அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப, செயல்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல்வர் அவர்களின் "நெஞ்சுக்குநீதி" என்ற வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை கண்ணொளி இழந்தவர் ஒருவர் தலைமையில், தொழு நோய் இல்லத்தைச் சேர்ந்த ஒருவர் வெளியிட்டு இந்த உடல் ஊனமுற்றோர் ஒருவர் பெறுவதாக அண்மையில் ஒரு விழா பத்திரிகையைப் பார்த்தேன். அதற்கு ஏதாவது காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி.எம்.அண்ணாமலை: தலைவரவர்களே, அந்த விழாவினை ஏற்பாடு செய்திருப்பவர்கள்தான் காரணம் கூறமுடியும் என்று நான் கருதுகிறேன். இந்த நாட்டில் சமுதாயத்தில் ஏற்றமுறாத தன்மையிலே சமுதாய மக்களால் விடப்பட்ட தன்மையிலே, நீண்ட நெடுங்காலமாகவே மனம் புண்ணாகிப் போய் தாழ்ந்த நிலையிலே இருக்கின்ற தொழு நோய்க்காரர்களும் முடவர்களும் கண் பார்வை இழந்தவர்களும் இன்றைய தினம் பல தொல்லைகள் பட்டு வருகின்றார்கள். அவர்கள் தொல்லைகள் நீங்குவதற்கு அவர்களுடைய துன்பத்தைப் போக்குவதற்கு, கை கொடுத்து கரை ஏற்றுவதற்கு ஒரு புண்ணியவான் இருக்கின்றார்களே, அவரது பொற்பாதத்தை, அவரது பொற்கமலங்களைப்

போற்றித் தொழ வேண்டும் என்பதற்காக, அந்த "நெஞ்சுக்கு நீதி" என்கின்ற வரலாற்றுப் புத்தகத்தை வெளியிடுகின்ற குழுவினர்கள் அவர்களாகவே அந்த ஊனமுற்றவர்கள் எந்த வகையிலே போற்றுகின்றார்கள், எண்ணுகின்றார்கள், வாழ்த்துகின்றார்கள் என்பதை தமிழகமாகவது உணரட்டும், நல்லவர்கள் இருந்தும் பலபேர் வாழ்த்துவதிலே கஞ்சத்தனம் காட்டுகின்றார்களே அந்தக் கஞ்சத்தனத்தை, அப்படி இல்லாத தன்மையிலே மாற்றிக் கொள்ளட்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அருமையான சொற்பொழிவு ஆற்றினார்கள்.

திரு. க. அறிவழகன்: இந்த உடல் ஊனமுற்றவர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மனம் ஊனம் உற்றோரைச் சேர்த்துக் கொள்கின்ற ஒரு திட்டம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். **Mentally Retarded People**–ஐச் சேர்த்துக் கொள்கின்றார்களா?

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை: மூளை வளர்ச்சி அற்றவர்கள் இங்கே இந்தத்திட்டத்தின் மூலம் பலன் பெறுவதற்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. சி. வி. ராஜகோபால்: "நெஞ்சுக்கு நீதி" புத்தகத்தில் நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. உண்மையில்லை என்று சொல்லவில்லை. ஆனால் "நெஞ்சுக்கு நீதி" என்னும்போது, எல்லோருக்கும் நெஞ்சு இருக்கின்றது. இது சம்பந்தப்பட்டு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் நெஞ்சம் இருக்கின்றது, ஏதாவது கருத்தில் உடல் ஊனம் உற்றவர்களுக்கு அவர்கள் எழுத முடியுமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி.எம்.அண்ணாமலை: தலைவரவர்களே, இன்றும் எழுதுகிறேன், என்றும் எழுதுவேன், எங்கும் எழுதிக்கொண்டேதான் இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### *Untouchability* (*Offences*) *Act*, 1955.

* 265 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the number of cases filed during 1974, under the Untouchability (Offences) Act, 1955?

### 1955-ஆம் ஆண்டு தீண்டாமை விலக்குச் சட்டம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

1955-ஆம் ஆண்டு தீண்டாமை விலக்குச் சட்டத்தின் கீழ் **1974**-ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?



மாண்புமிகு திரு. க. இராசராம்: 911.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மேற்படி வழக்குகளில் இதுவரை முடிவு பெறாமல் இருக்கும் வழக்குகள் எத்தனை? முடிந்த வழக்குகள் எத்தனை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: 1974 ஆம் ஆண்டு அளவில் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகள் 954. நீதி மன்றத்திற்கு எடுத்துச்செல்லப்பட்ட வழக்குகள் 911. ரெபர் செய்யப்பட்ட வழக்குகள் 24, புலன் ஆய்வில் உள்ள வழக்குகள் 19, நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட வழக்குகளில் முடிந்த வழக்குகள் 514, விடுதலையில் முடிந்த வழக்குகள் 97, கம்பௌண்டிங்கில் முடிந்த வழக்குகள் 132. 31-12-1974 நீதிமன்ற நிலுவையில் உள்ள வழக்குகள் 166.

திரு. ஜி. சுவாமிநாதன்: நீதி மன்றத்திற்குப் போன 911 வழக்குகளில் தண்டனைக்கு உள்ளானவர்கள் 50 சதவிகிதம் பேர் என்றுதான் இருக்கின்றது. இப்படிக் குறைவான வழக்குகள் தண்டனை அடைவதற்கு ஏதாவது காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இதற்கு ஒரு காரணமும் இல்லை. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், ஊர்ப் பெரியவர்கள் இப்படிப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதி மன்றத்திற்குச் செல்கின்ற நேரத்தில், இவர்களே சமாதானம் செய்து மேலும் அப்படிப்பட்ட குறைகள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்கின்றோம் என்று அவர்களே பொறுப்பை ஏற்றுக் கொண்டு சமாதானம் செய்துவிடுவது தான் காரணம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த இளையபெருமாள் கமிட்டியின் அறிக்கையின் கீழ் மாநில, மாவட்ட அளவிலே ஒரு போர்டு அமைத்து இது போன்ற அரிஜனங்களின் நலன்களைப் பற்றி ஆராய வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதைப் பற்றி ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். அந்த போர்டுகள் அமைக்கப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: அந்த போர்ட் அடிப்படையிலே வேலை செய்ததன் காரணமாகத்தான் இப்போது நாம் இங்கே சொன்னது. தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்காக என்று 6 மாவட்டங்களில் இயங்கும் சிறப்பு காவல் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோயம்பத்தூர், மதுரை, தென் ஆற்காடு, திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் இப்போது அமைக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

(பிற்பகல் 4–40)

திரு. ஜி. சுவாமிநாதன்: இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் வைக்கத்திலே நடந்த சத்தியாக்கிரகத்தையொட்டி "பொன் விழா" கொண்டாட நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் கேரளா சென்றிருக்கி

ருர்கள். நம்முடைய தமிழ் நாட்டிலே தீண்டாமை ஒழிப்பு பல காலமாக நடந்து வருகிறது. அதே போன்ற பொன் விழா நிகழ்ச்சி நடத்த நம்முடைய அரசு உத்தேசித்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : அதே போன்ற நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்றுதான் இப்பொழுது முடிவெடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்பொழுது தேதி கொடுக்கிறார்களோ அப்போழுது அதை நடத்தி விடலாம்.

*Subordinate Judge's Court at Namakkal.*

* @255 *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a Subordinate Judge's Court at Namakkal, Salem District ; and

(*b*) if so, when?

நாமக்கல்லில் சார்பு நீதிபதி நீதி மன்றம்.

திரு. ஏ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சேலம் மாவட்டம், நாமக்கல்லில், சார்பு நீதிபதி நீதி மன்றம் ஏற்படுத்துவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழு நாமக்கல்லில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க பரிவுரை செய்து உள்ளது. 1975ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் அக்குழுவின் பரிவுரைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளை ஐந்தாண்டு காலத்தில் ஒவ்வொரு பரிந்துரையின் முக்கியத்துவத்தையும், அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு படிப்படியாக செயல்படுத்தப்படும்.

திரு. ஏ. பாலசுப்ரமணியம் : அது எப்பொழுது கொண்டு வரப்படும் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இது குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழகத்தின் முதல்வர் அவர்கள் அங்கு வந்திருந்த

@ 19-4-1975 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.



போது, அங்கு இருக்கக்கூடிய கட்டாயத்தைப் பற்றியும், அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பற்றியும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அவர்களை அங்கு இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் சங்க சார்பிலே அங்கே அழைத்துச் சென்று தேனீர் விருந்து கொடுத்து நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மற்றும் அங்கு இருக்கக்கூடிய அத்தனை பேரும் அதாவது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் வழக்கறிஞர்கள் எல்லோரும் அவரிடத்திலே போய் அங்கு இருக்கக்கூடிய சிரமத்தை எடுத்துச் சொன்ஞர்கள். காரணம் என்னவென்று சொன்னால், அங்கே ஏற்படக்கூடிய கிரிமினல் வழக்குகளுக்கு 60 மைல் செல்லவேண்டியிருக்கிறது. அதேபோல் புரோ சூட்ஸ்களில் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட கேஸ்களுக்கு 500 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே விரைவாக அந்த " சபார்டினேட் ஜட்ஜ் கோர்ட் " டைக் கொண்டு வர வேண்டுமென்று கருதி அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றம் அதற்குத் தருகின்ற முக்கியத்துவத்தைப் பொறுத்து அரசு முடிவெடுக்கும்.

2. உடுக்குறியிடாத வினா.

ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்.

4. கே. தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

1—8—1972 அன்றுள்ளவாறு, தமிழ் நாட்டில் ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் ?

பதில் : 1—8—1972 தேதிக்கான தகவல் இல்லை. 30—6—1972 தேதியில் ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் வேலையின்றி இருந்தவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | .. | 2110 |
| பெண்கள் | .. | 2181 |
| மொத்தம் | .. | 4291 |

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க உரை.

### ஒரு வினாவிற்கு விடை குறித்து.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இடையில் கண் சிகிட்சை முகாம் பற்றிய ஆணைக் கேள்விக்கு பதிலளிக்கிறபோது பொது மக்கள் தந்த நன்கொடைகள் என்கின்ற வகையில் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் என்று நான் தெரிவித்தேன். அப்படி ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வசூலானது தொழு நோய் மருத்துவ இல்லங்கள் அமைக்கிற அந்தப் பணிக்குத்தான். ஏறத்தாழ 45 அல்லது 50 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் கண் சிகிட்சை திட்டத்திற்காக நிதி கிடைத்தது. மிச்சம் அரசாங்கச் செலவிலேதான் பெரும்பாலும் நடைபெறுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் அனுமதித்தது அந்தத் தீர்மானமல்ல. இன்னொரு தீர்மானம். நான் அனுமதித்ததைப் பற்றித் தான் உறுப்பினர் அவர்கள் பேசப்போகிறார்கள் என்று அவர் எழுந்ததும் நான் நினைத்தேன். ஆனால் வேறு தீர்மானத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் பேசிவிட்டார்கள். நான் அனுமதித்துள்ள தீர்மானத்தை நான் படிக்கிறேன். அப்புறம் உறுப்பினர் அவர்கள் பேசலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நான் முதலில் பேசியது அலுவலக நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறுமா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலில் பேசியது அலுவலக நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறாது. தேவையும் இல்லை.

## 3. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

### (1) 100 சத விகித மின் வெட்டினால் தொழிற்சாலைகளில் பணி நிறுத்தம் ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அனுமதித்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முதலில் படித்து முடித்து விடுகிறேன். 100 சத விகிதம் மின் வெட்டு கொண்டுவரப்பட்டதன் காரணமாக அநேகமாக தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் அனைத்திலும் தற்காலிகமாக பணி நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு இம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலை தொழிலாளர்கள் அனைவருக்கும் இன்னல் ஏற்பட்டுள்ளது குறித்து. இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் **கீழ்** வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **சுருக்கமாகக் கூற** வேண்டும்.

* * * **Not recorded as ordered by the Chair.**



திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்பொழுது தமிழ் நாட்டிலே கடுமையான மின்சாரப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்பது எல்லோரும் நன்றாக அறிந்த ஒன்றாகும். அதுவும் கடந்த பல தினங்களாக 100 சத விகித மின்சார வெட்டு ஏற்பட்டு தமிழகத்திலே உள்ள தொழிற்சாலைகள் அநேகமாக ஓடாத நிலைமையும் சில தொழிற்சாலைகள் மட்டும் அதாவது " எஸன்சியல் சர்வீஸ் " என்று சொல்லக்கூடிய 75 சத விகிதம் மட்டும் வேலை செய்வதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் பொதுவாகப் பார்க்கிறபோது, சென்னை நகரிலே மட்டும் இருக்கக்கூடிய மின்சார நிலைமையையும், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலே இருக்கக் கூடிய மின்சார நிலைமையையும் பார்ப்போமானால் அநேகமாக மாநிலத்தின் மற்ற பகுதிகளிலே மின்சாரமே இல்லை. பல மணி நேரத்திற்கு மின்சாரமே இல்லையென்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறதை நாம் பார்க்கிறோம். மின்சார வெட்டு ஏற்பட்டதன் காரணமாக ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் " லே ஆப் " செய்யப்பட்டு அவர்களுடைய நிலைமை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல, சென்ற தடவை இங்கே மேலவை கூடியிருக்கிறபொழுது உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்காக " தேர்ட் கிராப் " என்று சொல்லக் கூடிய மூன்றாம் போகம் விளைவிக்க வேண்டுமென்றும், அதற்கு அரசு தகுந்த உதவிகளைச் செய்யும் என்றும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர் பெரு மக்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் தஞ்சைப் பகுதியிலும் மாநிலத்தின் இதரப்பகுதியிலும் இவ்வாறு மூன்றாவது போகம் பயிர் செய்ய முன் வரும் விவசாயிகளுக்கு 6 மணி நேரமாவது மின்சாரம் கொடுக்கப்படும் என்றும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இரவு நேரமோ அல்லது காலை நேரமோ அல்லது மாலை நேரமோ 6 மணி நேரம் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த 6 மணி நேரம் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் சொன்னதைநம்பி பல இடங்களிலே இந்த விவசாயத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படாமல் அந்தப் பயிர்கள் எல்லாம் வாடி வதங்குகிற ஒரு துர்பாக்கியமான நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல. கிட்டத்தட்ட 2,3 மாதங்களுக்கு முன்னாலே டீசல் பஞ்சம் ஏற்படும், அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்கு இந்த டீசலை அனுப்பி விடுவார்கள். ஆகவே இந்த மூன்றாம் போகத்திற்கு நீங்கள் கொஞ்சம் டீசல் வாங்கி வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு ஏற்பாட்டினை மேற்கொண்டால் நன்றாக இருக்கும் என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அன்று குறிப்பிட்டது போலவே, தமிழகத்திலே எங்கே பார்த்தாலும் டீசல் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் தங்களுக்கு வேண்டிய தண்ணீரை இறைப்பதற்கு முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் என்னவென்று பார்ப்போமானால், **man-made famine** என்பதைப் போல நெய்வேலி, எண்ணூர் ஆகியவை சரியான முறையிலே நடமுடியாத ஒரு நிலைமை. அதைச் சரிவரக் கவனிக்காத காரணத்தால் தான் இது போன்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக நான் அறிகிறேன். சென்னையிலே கூட பல சமயங்களிலே ஒரு மணி நேரம், $1\frac{1}{2}$ மணி நேரம்

"பவர் ஷெட்டிங்" என்ற அளவில் மத்தியானம் 2 மணியிலிருந்து கிட்டத்தட்ட 3 மணி வரையில் இந்த "பவர் ஷெட்டிங்" இங்கேயே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதைத் தவிர "பிளக்சுவேஷன் வோல்டேஜ்" என்ற நிலைமை கூட இங்கே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மின்சார வாரியத்தைப்பற்றி பல முறை இந்த அவையிலே சொல்லப்பட்டது. சரியான முறையிலே மின்சார வாரியம் நடைபெறவில்லையென்று பல முறை சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையிலே கூட அந்த மின்சார வாரியம் சரியான முறையிலே நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. தஞ்சையிலே மட்டும் கிட்டத்தட்ட 2,700 "டிரான்ஸ்பார்மர்"கள் ரிப்பேராக இருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 32,400 டிரான்ஸ்பார்மர்கள் கெட்டுப் போய் ரிப்பேர் கூட செய்ய முடியாத ஒரு நிலைமையிலே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 35 ஆயிரத்திலிருந்து 40 ஆயிரம் தொழிலாளர்கள் உபரியாகவும் பல மாதங்கள் வரையில் வேலை செய்யாமலும் இருக்கிற நிலைமை எல்லாம் இருக்கிறது. அண்மையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகவும் அனுபவம் பெற்ற திரு. அப்பாதுரை அவர்களை மறுபடியும் "அட்வைசர்" என்ற முறையிலே போட்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆயினும் இதற்கு உடனடியாக ஒரு "எக்ஸ்பெர்ட் கமிட்டி"யைப் போட்டு குறைந்தது 2, 3 வாரத்திற்கு உள்ளாக ஒரு முடிவு செய்யக்கூடிய ஒரு ஏற்பாட்டினை அமைச்சரவர்கள் துரித கால நோக்கோடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொன்னார்கள். இந்த மாதம் 21 ஆம் தேதி "ரெவியூ கமிட்டி" கூட்டப்படும். அதனுடைய முடிவுகள் 21 ஆம் தேதியே எடுக்கப்படும் என்று எல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு தேதியும் 21, அவையும் முடியும் நேரம், ஆகவே இந்த "ரெவியூ கமிட்டி" கூட்டப்பட்டதா, அதனுடைய முடிவுகள் என்ன என்பதை நாங்கள் எல்லாம் தெரிந்துகொள்ள மிகவும் ஆவலோடு இருக்கிறோம் என்ற காரணத்தினாலே, சபையினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதைப்பற்றிப் பேச அனுமதிக்க வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு மின்சார உற்பத்தியிலே இப்பொழுது ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே, நீர்த் தேக்கங்களிலிருந்து கிடைக்கிற மின்சாரத்தையும், தெர்மல் ஜெனரேட்டரிலிருந்து கிடைக்கிற மின்சாரத்தையும் கொண்டுதான் மின்சாரப் பற்றாக்குறை சமாளித்து வரப்பட்டது. சமீப காலமாக ஏற்பட்ட வறட்சியின் காரணமாக நீர்த்தேக்கங்களிலிருந்து நாம் எதிர்பார்த்த மின்சாரம் கிடைக்க நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆனால் நாம் ஓரளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து நெய்வேலியிலிருந்து கிடைக்கிற மின்சாரத்தைக் கொண்டும், எண்ணூர், பேசின் பிரிட்ஜிலே உற்பத்தி செய்கிற மின்சாரத்தைக் கொண்டும், நீர்த்தேக்கங்களிலிருந்து உற்பத்தி செய்கிற மின்சாரத்தைக கொண்டும் 1—12—1974 தேதி முதல் "இண்டஸ்ட்ரியல்



அண்ட் கமர்சியல் பர்பஸ்"க்கு 40 சதவித மின் வெட்டையும், "எசன்சியல் சர்வீஸ்"க்கு 15 சதவிகித மின் வெட்டையும் அமுல் படுத்தினோம். அதைத் தொடர்ந்து மின்சார உற்பத்தியில் மேலும் குறைவு ஏற்பட்ட காரணத்தினால், மீண்டும் 9-1-1975 தேதி முதல் "இண்டஸ்ட்ரியல் அண்ட் கமர்சியல் பர்பஸ்"க்கு 60 சதவிகித மின் வெட்டையும், "எசன்சியல் சர்வீஸ்"க்கு 25 சதவிகித மின் வெட்டையும் அமுல் படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் ஏற்கெனவே சொன்னது போல் நெய்வேலி, பேசின் பிரிட்ஜ், எண்ணூர் ஆகிய "தெர்மல் ஸ்டேஷன்"களை நம்பித் தான் நாம் மின்சார உற்பத்தி செய்ய வேண்டிய நிலைமையிலே இருந்து வருகிறோம். இப்படி இருக்கும்பொழுது எண்ணூரிலேயும், நெய்வேலியிலேயும் 4–4–1975 ஆம் தேதி முதல் எதிர்பாராத இயந்திரக் கோளாறு ஏற்பட்டதன் காரணத்தினால் மின்சார அளவு குறைந்தது. நம்முடைய மாநிலத்தில் 75 சதவிகித மின்சார வெட்டை அமுல் படுத்தும்பொழுது, நமக்குக் குறைந்தபட்சம் 16 லிருந்து 17 மில்லியன் யூனிட் மின்சாரம் தேவையாயிருக்கிறது. நெய்வேலியிலிருந்து சுமார் 7 மில்லியன் யூனிட்டும், எண்ணூர், பேசின் பிரிட்ஜிலிருந்து சுமார் 5 மில்லியன் யூனிட்டும், ஹைட்ரோ ஜெனரேட்டரிலிருந்து 5 மில்லியன் யூனிட்டுமாகச் சேர்த்து மேற்படி 16 லிருந்து 17 மில்லியன் யூனிட் வரும்படி மின்சாரம் உற்பத்தி செய்தால்தான், இந்த 75 சதவிகித மின்சார வெட்டை அமுலாக்க முடியும். இயந்திரத்திலே ஏற்பட்ட கோளாறு காரணமாக 4–4–1975 ஆம் தேதி முதல் "நான் கன்டினியூவஸ்—நான் எசன்சியல்" போன்றவைகளுக்கு மின்சாரம் வழங்குவது நிறுத்தப்பட்டது. "கன்டினியூவஸ் புராசஸ்" போன்றவைகளுக்கும் 48 மணி நேர நோட்டீசோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இன்றியமையாத துறைகளுக்கு இந்த மின் வெட்டு பொருந்தாது. மின்சாரத் துறைக்கு இந்த மின்சார வெட்டிலிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தஞ்சை மாவட்டமானாலும் சரி, மாநிலத்தின் இதர மாவட்டங்களானாலும் சரி, விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதிலே ஏற்கெனவே இருந்த நடைமுறையைத்தான் இப்பொழுதும் பின்பற்ற வேண்டுமென்ற நடைமுறையை மேற்கொண்டு வருகிறோம். இப்பொழுது நெய்வேலியிலிருந்து மின்சாரம் மிகக் குறைந்த அளவுக்குக் கிடைத்து வருவதாலும், நமது நீர் மின் தேக்கங்களிலிருந்து நாம் ஓரளவே மின்சாரம் பெற முடிவதாலும் 4–4–1975 ஆம் தேதி முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள அவசர கால வரன்முறைகளை நெய்வேலியிலிருந்து கிடைக்கும் குறைந்தது 6 மில்லியன் யூனிட் அளவுக்காவது நிலைமை உறுதிப்படும் அளவில் தொடர்ந்து செயல்படுத்த வேண்டியுள்ளது.

(பிற்பகல் 4-50)

நெய்வேலியில் இயந்திரக் கோளாறுகள் தொடர்ந்து ஏற்பட்டு வருவதே இதற்கு முக்கியமான காரணமாகும். மேலும் 1974–75 ஆண்டு முழுவதற்கும் நெய்வேலியிலிருந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட மின்சார அளவு 2,200 மில்லியன் யூனிட்டுகளாகும். ஆனால் கிட்டிய மின்சாரம் 1,791 மில்லியன் யூனிட்டுகளாகும். இதனால் 480 மில்லியன்

யூனிட்டுகள் துண்டு விழுந்திருக்கிறது. பேசின் பிரிட்ஜ், எண்ணூர் அனல் மின் நிலையங்கள் நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 4.5 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்குகின்றன. மின்சார உற்பத்திக் கணக்கைப் பார்த்தால், நெய்வேலியில் 1–4–1975-லே அதன் உற்பத்தி 3.3 மில்லியன் யூனிட் அளவிற்குக் குறைந்தது. நமக்கு நெய்வேலி மூலமாக 6 அல்லது 7 மில்லியன் யூனிட்டுகள் கிடைக்க வேண்டும். 1–4–1975-ல் அது 3.3 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யும் அளவிலேதான் இருந்தது. இப்போது, ஏப்ரல் 16-ம் தேதி கணக்குப்படி 4.17 மில்லியன் யூனிட் அங்கிருந்து கிடைத்திருக்கிறது. எனவே 5 மில்லியன் யூனிட்டுக்கு மேல் நெய்வேலியில் கிடைக்கும் நிலைமையில்லை. நெய்வேலியில் 5 மில்லியன் யூனிட்டுகள்; எண்ணூர், பேசின் பிரிட்ஜில் 3 அல்லது 4 மில்லியன் யூனிட்டுகள்; நீர் மின் நிலையங்கள் மூலமாக 5 மில்லியன் யூனிட்டுகள்—ஆக 13 லிருந்து 14 மில்லியன் யூனிட்டுகள் அளவுக்குத்தான் இப்போது கிடைக்கும் நிலையிருக்கிறது. 75 சதவிகித மின்வெட்டு 4–4–1975-ல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுவது போன்று, தினந்தோறும் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். நேற்றைய தினம் கூட இது பற்றிப் பேசப்பட்டது. நெய்வேலியிலிருந்து 6 மில்லியன் யூனிட்; 7 மில்லியன் யூனிட் என்ற அளவுக்குக் கிடைக்கும்போதுதான் நிலைமை சீர்திருந்துமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இயந்திரங்களில் சில கோளாறுகள் இருப்பதாக நெய்வேலியில் உள்ள அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அவர்களை நாங்கள் கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். அந்தக் கோளாறுகளைத் தீர்த்து, மின்சார வெட்டைத்தீர்க்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினரவர்கள், தெர்மல் ஜெனரேட்டர்களெல்லாம் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசினுடைய Secretary for Power in the Energy Ministry at the meeting of industrialists in New Delhi on 15th April 1975. நிலைமைகளைப் பரிசீலனை செய்து சொல்லியிருக்கிறார்.

"Tamil Nadu's problems had arisen mainly because of difficulties in generation in the Thermal Plants including the Centrally operated Neyveli Lignite System. However, as a result of co-operation between the Tamil Nadu Government and Bharath Heavy Electricals Limited, the problems of the Thermal Plants have now been identified and the Bharath Heavy Electricals Limited has taken on hand the rehabilitation system/plant-wise. In the case of Neyveli also, the defects have now been identified and remedial measures initiated." என்று ஏப்ரல் 17-ம் தேதி கொடுத்துள்ள ஓர் அறிவிப்பில் அவர் சொல்லியிருக்கிறார். நம்முடைய மாநிலத்தில் ஏற்கெனவே டாடா கன்சல்டன்டைச் சார்ந்த இன்ஜினியர்கள்; பி.எச்.எல். இன்ஜினியர்கள்; நம்முடைய இலாகாவினர் ஆகியோர் கடந்த சில மாதங்



களாக எண்ணூரில் செயல்பட்டு வருகிறார்கள். 24 மணி நேரமும் அங்கேயிருந்து, பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அங்கேயுள்ள இயந்திர சாதனங்களிலே ஏற்படும் கோளாறுகளை உடனடியாகக் கவனிக்க இப்போது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே "டிசைன்" தவறாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் அவ்வப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய அரசைப் பொறுத்த வரையில், இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டுவிடக்கூடாதென்று தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறோம். நம்முடைய நீர் மின் நிலையங்களில் மின்சார உற்பத்தியைக் கொஞ்சம் கவனமாகத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. ஜூன் மாதம் வரை பருவ மழை பெய்யும் நிலைமைகள் இல்லை. இப்போது இருக்கின்ற நீரை நாம் மின்சார உற்பத்திக்காக அதிகம் பயன்படுத்திக்கொள்வோமானால், ஜூன் மாதத்திற்குள் அது வறண்டு போய், இன்னும் நிலைமைகள் மோசமாகி விடுமென்று சொல்லப்படுகிறது. எனெனில் அங்கேயும் 5 மில்லியன் யூனிட் அளவுக்கு நாம் உற்பத்தி செய்தாக வேண்டும். பேசின் பிரிட்ஜ், எண்ணூரிலே 4 மில்லியன் யூனிட்; ஆக 9 மில்லியன் யூனிட்டுகள் ஆகின்றன. நெய்வேலியில் 6 அல்லது 7 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்தால் தான் நாம் நிலைமைகளைச் சமாளிக்க முடியும். அரசைப் பொறுத்தவரையில், இதைப் பற்றித் தீவிரமாக கவனித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போன்று, இந்த மின் வாரியத்திலே இருக்கும் நிலைமைகளை நல்ல முறையில் கவனித்து, அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லவும், மின் வாரியத்திற்கு ஆலோசனை சொல்லவும் ஓர் ஆலோசகரை நியமித்திருக்கிறோம். அவர்களும் அந்தப் பதவியை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே அரசாங்கம் அவ்வப்போது தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்போதிருக்கும் நிலைமைகளில் இந்த மாற்றத்தினைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

டீசலைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொன்னார்கள். ஜெனரேட்டர்களுக்கு டீசல் கொடுப்பதில் முன்னிடம் அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். கோவையில் உள்ள டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரீஸைச் சார்ந்தவர்கள், போதுமான அளவுக்கு டீசல் கிடைக்கவில்லை என்றும் விலையும் அதிகமாக இருக்கிறதென்றும் நம்முடைய அரசாங்கத்திறகுத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசு இது பற்றி மத்திய அரசிடம் சொல்லியிருக்கிறது. அவர்கள், விவசாயத்திற்குத்தான் முன்னிடம் கொடுக்கப்படுமென்றும், இதுமாதிரி ஜெனரேட்டர் பர்ப்பஸ்க்கு முன்னிடம் கொடுக்க முடியாதென்றும் கூறுகிறார்கள். நாட்டில் இருக்கும் நிலைமைகளை அனுசரித்து, தொழிற்சாலைகளுக்கும் டீசல் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தினுடைய முன்றுவது "கிராப்" க்கு மின்சார வெட்டு இல்லாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயும் பம்ப்செட் மூலம் விவசாயம் செய்கிறார்கள். பொதுவாக விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்து, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஜி. சுவாமிநாதன் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விவாதமாக இருந்தால் இதில் பேசலாம்.

திரு ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் தான் கேட்க விரும்புகிறேன். அமைச்சரவர்கள் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்து, நெய்வேலி உட்பட, எல்லா விவரங்களையும் எடுத்துச் சொன்னுர்கள். ஆனுல், கேரளா, கர்நாடகா போன்ற மற்ற மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கு என்ன வழி முறைகளைக் கையாண்டிருக்கிறுர்களென்பதைத் தெரிவித்தால் நலமாக இருக்கும். நெய்வேலி சரியாக இயங்கவில்லையென்று சொன்னுர்கள். அதுபோல் நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய எண்ணுர், பேசின் பிரிட்ஜ் நிலையங்கள் கூட சரியாக இயங்கவில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களென்று எண்ணுகிறேன். தொழிற்சாலைகளில் இருக்கக் கூடியவர்கள், "கேப்டிவ் பவர் பிளான்ட்" என்று ஆலைகளில் மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருக்கிறுர்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கப்படுமாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : "கேப்டிவ் ஜெனரேட்டர்கள்" பற்றி பத்திரிகையில் பார்த்தேன். மத்திய அரசு கொள்கையாக அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னுர்கள். "கேப்டிவ் ஜெனரேட்டர்கள்" வைத்துக் கொள்ள அவர்கள் அனுமதி கொடுக்க வில்லை என்று சொல்லுகிறுர்கள். வெளி நாட்டிலிருந்து அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதாகச் சொல்லுகிறுர்கள். கேப்டிவ் ஜெனரேட்டர்கள் பற்றி இந்த அளவுக்குத்தான் எனக்குத் தெரியுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பேசின் பிரிட்ஜ், எண்ணுர் நிலையங்களில் முன்னேற்றம் இருக்கிறது. பேசின் பிரிட்ஜைப் பொறுத்தவரையில், இயந்திரங்கள் பல ஆண்டுகளாக இருந்தாலும் கூட, அங்கே ஒரே ஸ்டாண்டர்ட் ஆக ஜெனரேஷன் நடைபெறுவதாகச் சொல்லுகிறுர்கள். பேசின் பிரிட்ஜ், எண்ணுர் நிலையங்களில் எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி—கெபாசிடி அளவுக்கு வரவில்லை—கடந்த காலத்தில் கிடைத்த அளவுக்கு, இப்போதும் கிடைக்கிறது. இப்போதிருக்கும் பிரச்சினையெல்லாம் நெய்வேலியைப் பற்றியதுதான். அங்கே சில டெக்னிகல் டிபெக்ட்ஸ் இருப்பதாகச் சொல்லுகிறுர்கள். நெய்வேலியில் மின்சார உற்பத்தி குறைந்த பட்சம் 6 மில்லியன் யூனிட்டுக்கு வர வேண்டும். இப்போது 4 மில்லியன் யூனிட்டிலிருந்து 5 மில்லியன் யூனிட்டுக்கு வந்திருக்கிறது. அங்கேயிருந்து 6 மில்லியன் யூனிட் கிடைக்கும்வரை இந்த மின்சாரப் பற்ருக்குறையை சந்திக்கும் நிலையில்தான் நாம் இருக்கிறேமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என் இசைவை மறுக்கிறேன்.



(பிற்பகல் 5-00)

## (2) சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் குடி நீர் கஷ்டம் குறித்து

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, பல நூற்றுண்டுகளாகக் காணுத பெரிய வறட்சி நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதுவும்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலிலே ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் படிக்க வேண்டும். அப்புறம் பேசலாம்.

THIRU G. SWAMINATHAN : Sir, as per rule 43 of the Council Rules, I have given notice to move a motion for the adjournment of the business of the Council to discuss a definite matter of urgent public importance, namely, the extraodinary difficulty experienced by the residents of Madras City especially in extension areas for drinkingwater and the consequent distress caused to them. Since many thousands of people have been affected, I request that the Hon. Chairman may permit me to move the motion under Rule 43 of the Council Rules.

தற்போது தமிழகத்தில் வரலாறு காணுத வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. அதுவும் சென்னையைப் பொறுத்தவரையில், கடந்த பல நாட்களாக "இரண்டு நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கப்படும்" என்று சொல்லப்பட்டு, சில இடங்களுக்கு அந்த இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது. பல இடங்களில், அதுவும் புறநகர் பகுதிகளாக இருக்கக்கூடிய இடங்களில் சரிவரத் தண்ணீர் கிடைக்காத ஒரு நிலைமையும், அதனுல் அங்குள்ள மக்கள் பெரும் துயரடையக்கூடிய ஒரு நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் எல்லோரும் நன்கு அறிவோம். மேலும், மே மாதம் ஒன்ரும் தேதியிலிருந்து இந்த நிலைமையும் மாறி, புழலேரியில் கிட்டத்தட்ட ஒரு அடி தண்ணீர்தான் இருக்கக்கூடிய காரணத்தினுல் இனிமேல் மூன்று நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் கொடுக்கப்படும் என்றும், அதற்கு மேலும் இதே நிலைமை நீடிக்குமானுல் சென்னையை விட்டு வெளியேறிச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு ஒருமுறை போர்க் காலத்திலேதான் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது. அப்போது சென்னைக்கு வந்திருக்கக்கூடிய மக்கள் எல்லாம் வெளியூருக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனுல் இப்போது இருக்கக்கூடிய நிலைமைக்கும், அப்போது இருந்த நிலைமைக்கும் என்ன வித்தியாசம் என்று சொன்னுல்

அப்போது வெளியூருக்குச் சென்றாலும் அவர்கள் வசதியாக வாழக் கூடிய நிலைமை இருந்தது. ஆனால், தற்போது தஞ்சாவூருக்கு வந்தாலும் இவ்வளவு பேருக்கும் அங்கே தண்ணீர் கிடைக்குமா என்ற ஒரு அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நேற்றைய தினம் பப்ளிக் அண்டர்ட்டேக்கிங்ஸ் கமிட்டி எடுத்துக்காட்டியிருப்பது போல, வீராணம் திட்டம் 1974-லே முடிந்துவிடும் என்று சொன்னார் கள். ஆனால் இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் இன்னும் இரண்டாண்டு, மூன்றாண்டு ஆனாலும் கூட இந்தத் திட்டம் முடிவடைந்து அதன் தண்ணீர் சென்னைக்கு வருமா, வராதா என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அந்தத் திட்டம் மிகவும் மெது வான முறையில்தான் போய்க்கொண்டிருக்கிறது. எப்போதும் இந்த மாதிரி ஒரு தண்ணீர்ப் பஞ்சம் வந்தால், உடனே அதற்கான ஏற்பாடுகளை விரிவாக நாம் செய்வதும், அந்தப் பஞ்சம் மறைந்து விட்டால் உடனே அதைப்பற்றி மறந்துவிடுவதும் வாடிக்கையாக இருக்கின்றதே தவிர, தொடர்ந்து ஒரு திட்டம் போட்டு அந்தத் திட்டம் சென்னை மாநகருக்கு நிறைவு தருவதாக இல்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வீராணம் திட்டமே நிறைவேறி சென்னைக்கு வந்தாலும் கூட, கிட்டத்தட்ட பாதி அளவு தண்ணீர் தான் சென்னைக்குக் கொடுக்கலாம் என்றும், பாக்கி மற்ற இடங்களிலிருந்துதான் தண்ணீர் எடுக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. இப்போது இந்த பாலரர் பேசின்-லே இருந்து, முக்கியமாக தண்ணீர் மிக விரைவாக வரக்கூடிய வழிமுறைகளை அரசு கையாள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொன்று, ஆந்திராவிலே இருக்கக்கூடிய கிருஷ்ணா வாட்டர், சோமசிலா ப்ராஜெக்ட் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் தண்ணீர் கொண்டு வரக்கூடிய வசதிகளை அரசு கவனித்து, அதுபற்றிய நடவடிக்கைகளையும் ஏதோ எடுத்துக்கொண்டிருந்தது. ஆனால் கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து அந்த நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்பதைக் கண்டு நான் வருந்துகின்றேன். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே பேசும்போது, நெய்வேலியிலே நிறைய தண்ணீர் கிடைக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இதுபற்றி ஆராய்ந்து, அதுபற்றிய விரிவான விளக்கங்கள் அதிகாரிகளிடமிருந்து கேட்கப்படும் என்று சொன்னார்கள். அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கின்றேன் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடியவர்கள் என்ற காரணத்தினாலே சொல்கிறேன், அவர்கள் அதைக் கேட்டிருக்கக்கூடும். அதனுடைய நிலைமை என்ன ஆயிற்று என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோ தரன் அவர்கள் சொன்னதுபோல, நெய்வேலியிலுள்ள தண்ணீர் சென்னைக்கு வந்தால் ஓரளவுக்கு இந்தத் தண்ணீர்ப் பஞ்சம் குறையக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்ய முடியும். அதை அரசு கவனத்தில் வைத்திருக்கும் என்று நினைக்கிறேன். இப்போதுள்ள





நிலைமை இப்படியே இருக்குமானால் மக்களுடைய நிலைமை கஷ்ட மாகப் போய்விடும், நம்முடைய எம். எல். ஏ. ஹாஸ்டலிலே கூட இன்றையதினம் சொன்னார்கள், நேற்றையதினம் நம்முடைய சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்தபிறகு இன்றைய காலையிலேயிருந்து எம். எல். ஏ. ஹாஸ்டலுக்கு தண்ணீர்ப் பஞ்சம் வந்து விட்டது என்று. திரு. தங்கப்பாண்டியன் அவர்களும், மற்றும் இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களும் ஆமோதிக்கின்றார்கள். ஏனென்றால் நான் அங்கு இல்லை. அதுமட்டுமல்ல, இங்கே இருக்கக்கூடிய இண்டஸ்ட்ரீஸ், பெரிய தொழிற்சாலைகள் இவை களெல்லாம் பெருமளவில் பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலைமையும் இருக்கிறது. ரயில்வேக்கும் தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாமல் இனி ரயில் ஓடுமா என்று சந்தேகப்படக்கூடிய அளவிலே இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை உடனடியாக எடுக்கவேண்டும், என்ன நவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைப் பற்றிப் பேசுவதற்காக இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, சென்னை நகருக்குக் குடிநீர் புழலேரியிலிருந்து வழங்கப்படுகிறது. புழலேரியிலிருந்து நீர்த்தேக்கத்தை அதிகப்படுத்தி சோழவரம், பூண்டி ஆகிய ஏரிகளிலிருந்தும், நீர் கொண்டு வரப்படுகிறது. வடகிழக்குப் பருவக்காற்று மழையால் இந்த ஏரிகள் நீர் பெறுகின்றன. 1975ஆம் ஆண்டு வட கிழக்குப் பருவக்காற்று மழை குறைந்ததால், 1974ஆம் ஆண்டு ஜனவரி திங்களிலே இந்த ஏரிகளின் நீர்த்தேக்கம் அதிருப்தியான அளவுக்குக் குறைந்தது. 1—2—1974-லிருந்து அடுத்து மழைக் காலம், அதாவது 1974 அக்டோபர் வரையில் நாள் ஒன்றுக்கு 25 மில்லியன் காலன்களுக்கு மேல் வழங்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. புழலேரியின் நீர்த்தேக்க அளவைக் கூடுதலாக்கி நாள் ஒன்றுக்கு சென்னை மாநகரின் தேவையான 35 மில்லியன் காலன் நீரை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தாமரைப்பாக்கம், பஞ்சபட்டி ஆகிய இடங்களில் உள்ள ஆழ் கிணறுகளிலிருந்து, 1974 பிப்ரவரி திங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு 12 மில்லியன் காலன் நீரை புழலேரிக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப் பட்டன. நிலைமையை அனுசரித்து 1974 மார்ச் மாதம் முதல், நாள் ஒன்றுக்கு 35 மில்லியன் காலன் நீர் வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகராட்சிக்கு 1974 ஏப்ரலில் கடன் மானியமாக அரசால் அளிக்கப் பட்ட ரூ. 32.25 லட்சத்திலிருந்து 1,800 புதிய குழாய்க் கிணறுகள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டன. 157 பழைய குழாய்க் கிணறுகள் பழுது பார்க்கப்பட்டன. ஆங்காங்கே 144 நீர்த் தொட்டிகளை வைத்து லாரிகள் மூலம் நீரை எடுத்துச்சென்று அவைகள் நிரப்பப் படுகின்றன. 12 லாரிகள் புதிதாக வாங்கப்பட்டுள்ளன. மேலும் பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் 15 லட்சம் ரூபாய் மானியத்திலிருந்து தாமரைப்

பாக்கம், பஞ்சட்டி கிணறுகளிலிருந்து இறைத்து அளிக்கப்படும் நீரை, சேதமாக்காமல் புழலேரிக்குக் கொண்டு வருவதற்கு சோழவரம், புழலேரி ஆகிய இரு ஏரிகளிலும், சிறுகால்வாய்கள் வெட்டும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. நீர் இருப்பு நிலையை 1974 அக்டோபரில் மறு ஆய்வு செய்ததைத் தொடர்ந்து 4 அடி குறுக்களவு உள்ள 156 திறந்த கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. துரதிருஷ்டவசமாக 1974-ல் எதிர்பார்த்த வகையில் வடகிழக்குப் பருவக்காற்று மழை இல்லாமல் போயிற்று. கடந்த 100 ஆண்டுகளில் 1974-ஆம் ஆண்டில் தான் மிகவும் குறைவான மழை பெய்துள்ளது. அதனால் 1974-ல் இந்த ஏரிகளின் நீர்த்தேக்கம் 1973-ல் இருந்ததைவிட மிக மிகக் குறைவானதாகும். 1974 டிசம்பரில் மீண்டும் பரிசீலனை செய்ததைத் தொடர்ந்து கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கையால் இயங்கும் 500 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 4,500 கிணறுகள் அமைப்பதற்கு தேவையான சாமான்கள் வாங்கப்பட்டு அமைக்கும் வேலை நடைபெற்று வருகின்றது. 5 முதல் 6 அடி குறுக்களவு உள்ள மூடிய கிணறுகள் 230 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 170 கிணறுகளில் வேலைகள் நடந்து வருகின்றன. மேலும் 411 தொட்டிகள் வாங்கி நகரின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டு அவைகளில் லாரிகள் மூலம் தண்ணீர் நிரப்பி வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதற்குத் தேவையான பம்புகள் பொருத்தப்பட்ட 24 புதிய லாரிகள் வாங்கப்பட்டுள்ளன. இன்னும் 140 தொட்டிகள் மற்ற இடங்களில் வைக்கப்படும். கீழ்ப்பாக்கத்திலுள்ள குடிநீர் அளவு நிலையத்தில் ஒவ்வொன்றுக்கும் 1 லட்சம் காலன் நீர் பெறக்கூடிய 4 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன மீஞ்சூர் பகுதிகளில் உள்ள கிணறுகளிலிருந்து நீரை புழலேரிக்குக் கொண்டுவர, மீஞ்சூர், பஞ்சட்டி ஆகிய இடங்களில் உள்ள கிணறுகளை குழாய் மூலம் இணைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தாமரைப்பாக்கம், பஞ்சட்டி கிணறுகளிலிருந்து வரும் நீரை வறட்டுக் கால்வாய்களில் விட சிறு கால்வாய்கள் வெட்டும் வேலையும், சோழவரம், புழலேரி ஆகிய ஏரிகளில் ஏற்கனவே வெட்டப்பட்டு வருகின்ற கால்வாய்களின் உட்புறங்களை சிமெண்ட் கொண்டு பூசும் வேலையும் நடைபெற்றுவருகின்றன. இவைகளின்றி, பொய்கை நல்லூர் அருகே பாலாற்றில் 20 குழாய்க் கிணறுகள் அமைத்து அவைகளிலிருந்து நீர் இரும்புக் குழாய்கள் மூலம் திருக்கழுக்குன்றத்திலுள்ள ஒரு நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்ற அரசு 112 லட்சம் அளித்துள்ளது. மேற்கூறிய நீர்த்தேக்கத்திலிருந்து நீர், வீராணம் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் குழாய் மூலம் சென்னைக்குக் கொண்டு வரப்படும். இவ்வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன. 6 குழாய்க் கிணறுகள் முடிந்துவிட்டன. மேலும், கீழ்க்கண்ட சில திட்டங்கள் பரிசீலனையிலும், சாத்தியக்கூறு ஆய்விலும் இருக்கின்றன.

பல்லாவரம்-ஆலந்தூர் ஆகிய நகராட்சிப் பகுதிகளுக்கு, பாலாற்றின் குடி நீர் வழங்கும் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பாலாற்றிலிருந்து கொண்டு





வரப்படும் நீரின் ஒரு பகுதியை, சென்னை நகராட்சிக்கு வழங்கி, சென்னை மாநகருக்கு வழங்குதல், இரண்டாவது திருவான்மியூர் அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் துணைக் குழாய்கள் அமைத்து இதற்கான பூர்வாங்க ஆய்வு வேலைகளை நீர்-வாய்க்கால் வாரியம் மேற்கொண்டுள்ளது. ஆக, நகரின் குடிநீர் விநியோக நிலை தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு எந்தெந்த நடவடிக்கை தேவையோ அந்த நடவடிக்கைகள் எல்லாம் உடனுக்குடன் எடுக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தஞ்சை மாவட்டத்திலேயும் குடிநீருக்குப் பஞ்சம் இருக்கிறது. அப்படி தஞ்சையிலேயும் இந்தப் பஞ்சம் இருக்கும்போது, சென்னையிலேயும் அந்தக் கஷ்டத்திற்கான வாய்ப்பு இருக்கிறது. புழலேரியில் ஒரு அடி தண்ணீர் இருக்கிறது. வழக்கமாக 18 அடி தண்ணீர் அதிலே இருக்க வேண்டும். ஆகவே, பருவமழை பெய்தாலொழிய எப்படி சமாளிக்க முடியும் என்ற கஷ்டம் ஒருபக்கம் இருக்கும்போதும், இந்தக் குழாய்களின் மூலம் கொண்டுவரப்படுகின்ற தண்ணீரை வைத்து ஓரளவுக்குச் சமாளித்துக் கொண்டு வருகின்றோம். பருவமழை இருந்தால் ஓரளவுக்கு நம்மால் சமாளிக்க முடியும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் வேறு சில பிரச்சினைகளை எழுப்பினார்கள். இப்போது சென்னை மாநகரத்திற்குத் தண்ணீர் வழங்குவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சென்னையை விட்டு மக்கள் வெளியேறுகிற ஒரு சங்கடமே போர்க் காலத்தைப்போல ஏற்பட்டு விடுமோ என்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அப்படி போர்க்காலம் இல்லாத காலத்திலே 1952-ஆம் ஆண்டு இங்கே குடி நீர் இல்லாமல் சென்னையை விட்டு மக்கள் வெளியேறக் கூடிய சூழ்நிலை உருவாயிற்று. அதுபோன்ற ஒரு பயங்கரமான சூழ்நிலை 1969-ஆம் ஆண்டு வறட்சியின் போது சென்னையிலே ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதைத் தவிர்க்கும் பொருட்டு உடனடியாக மாநகராட்சியையே கூட எதிர்பார்க்காமல் அவர்களுக்குப் பின்னர் அறிவித்து முன்னரே அரசு செய்த ஏற்பாட்டின்படி ஏறத்தாழ 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துளைக் கிணறுகள் சென்னை மாநகரம் முழுவதும் அமைக்கப்பட்டு தண்ணீர் பஞ்சத்தை அப்போது போக்குவதற்கு அரசின் சார்பில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

(பிற்பகல் 5-10)

இப்போதும் அந்த நடவடிக்கை உறுதியாக எடுக்கப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது பற்றிய விவரங்களை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

வீராணம் திட்டம் தாமதமாவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி குழுவினுடைய அறிக்கை வந்தது என்று சொன்னார்கள். தாமதம் ஆனதற்கான காரணங்

களையும் அந்தக் குழுவினர் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மின்சாரப் பற்றாக்குறை அடிக்கடி ஏற்படுவதன் காரணமாகவும், இரும்பு போன்ற பொருள்கள் நம்முடைய தேவைக்கு ஏற்ப நாம் கேட்கின்ற நேரத்திலே கிடைக்காத காரணத்தினாலேயும் அந்தத் திட்ட வேலைகள் தாமதமாகி யிருக்கின்றன. ஆகவேதான் இடைக்காலத் திட்டமாக நான் வரவு செலவுத் திட்டத்திலே கூட அறிவித்ததைப் போல, பாலாற்றிலேயிருந்து சென்னைக்கு நீரை வீராணம் திட்டத்திலே சென்னை நகருக்கு வருகின்ற குழாய்களின் மூலம் கொண்டு வருகின்ற நோக்கம் நிறைவேற்றப்பட்டு விரைவிலே இந்தத் திட்டம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் நெய்வேலியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டார்கள். நானும் அதிகாரிகளிடத்திலே கலந்து பேசுவதாகச் சொன்னேன். அப்படிக் கலந்து பேசுகின்றபோது, அங்கேயிருந்து கொண்டு வரும் தண்ணீர் அளவுக்கும் அதற்காக ஆகின்ற செலவையும் பார்த்தால், மிக்க ஏற்றத் தாழ்வு இருப்பதாகச் சொல்லப்படுகின்றது என்றார்கள். ஆயினும் எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை, இப்போது தண்ணீர் கிடைத்தால் போதும் என்ற நிலையில் இருக்கிறோம். ஆந்திராவிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்காக இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளலாம், இந்த முயற்சியை மேற்கொள்ளவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். ஆந்திர முதலமைச்சர் அவர்களிடம் இதைப் பற்றிப் பலமுறை பேசப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற சங்கடம் சோம சீலம் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால், அந்தத் திட்டத்தினால் பாதிக்கப்படக்கூடியக் ஆயக்கட்டுக்காரர்கள் அதைத் தடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட பெரிய சங்கடங்கள் இந்த அரசுக்கு இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்களிடத்திலே பேசும் போதும், இந்தக் காரணம் என்னிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. இப்போதும் அதே காரணம் இருந்து வருகிறது. ஆயினும் நம்முடைய மாநிலத்திற்கு ஆந்திர மாநிலத்தினுடைய தண்ணீர் வருமானால், இந்தக் குடிதண்ணீர் பிரச்சினையை, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், நாம் போக்கிவிட முடியும். அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்று நம்முடைய தலைமைச் செயலாளரை ஆந்திர மாநிலத் தலைமைச் செயலாளர் அவர்களோடு தொடர்பு கொள்ளச் சொல்லி மீண்டும் இந்தப் பேச்சு வார்த்தையைத் தொடங்கச் சொல்லி யிருக்கிறேன். ஆக, இந்தக் குடிநீர் நிபந்தனையின் காரணமாக ஏற்பட்டுள் டுள்ள நெருக்கடிகளை அரசு உணர்ந்து அதைத் தவிர்ப்பதற்கான உடனடி முன்னேற்பாடுகளில் அரசு ஈடுபட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர், மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் எனது இசைவை மறுக்கிறேன்.



## 4. அறிவிப்புகள்.

### (1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1975), தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975) பேரவையால் நிறைவேற்றப்பட்டு இவை அரசியல் அமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவுகள் என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையில் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம் மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கின்றேன் :—

(1) 1975-ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1975)

(2) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1975).

(3) 1975-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1975).

## 5. கவன ஈர்ப்பு.

### வறட்சி நிவாரணப் பணி நிலை, மைய அரசிடமிருந்து பெறும் உதவித் தொகையின் அளவு, தன்மை குறித்து

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

“இம்மாநிலத்தில் நடைபெறும் வறட்சி நிவாரணப் பணியின் தற்போதைய நிலை, மத்திய அரசிடமிருந்து இதுவரை பெற்றுள்ள உதவித் தொகையின் அளவு, மேற்கொண்டு வழங்குவதாக உறுதி கூறப்பட்டுள்ள உதவித் தொகையின் அளவு, மைய அரசு வழங்கும் அந்த உதவித் தொகை மானியமாகக் கருதப்படுமா அல்லது ஐந்தாண்டுத் திட்ட நிதியுதவி வகையில் கணக்கு வைத்துக் கொள்ளப்படுமா, அவ்வாறு ஐந்தாண்டுத் திட்டக் கணக்கில் சேர்த்துக் கொள்வதென்பது நடப்பு ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலா அல்லது அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலா என்பது குறித்து”.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 1974–75 ஆம் நிதியாண்டில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கென்று திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக ரூ. 10 கோடி ஒதுக்கியிருக்கிறோம். அவற்றில் 31—3—75 முடிய முடிக்கப்பட்ட வறட்சி நிவாரண வேலைகளின் மதிப்பு ரூ.10 கோடி; செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ.8.70 கோடி. நடப்பு நிதியாண்டில் (1975–76) வறட்சி நிவாரணப் பணிக்காக முதற் கட்டமாக ரூ. 6.30 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு உள்ளது. இவற்றில் 12—4—1975 வரை ரூ. 44.26 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 12—4—1975 வரை முடிக்கப்பட்ட வறட்சிப் பணிகளின் மொத்த மதிப்பு ரூ. 1.25 கோடி. வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற நிதியாண்டு இறுதியிலும் நடப்பு நிதியாண்டில் இதுவரையிலும் பதினாறு கோடி ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணத்திற்காக திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளோம். இதற்கு மேலும் தமிழ் நாடு குடி நீர் வாரியத்தின் மூலம் ரூபாய் இரண்டு கோடியும், சென்னை, மற்றும் முக்கிய நகரங்களுக்கும் ரூபாய் ஒரு கோடிக்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1974–75 ஆம் நிதியாண்டில் வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு சிறப்பு நிதி உதவியாகக் கொடுத்துள்ளது ரூபாய் 7½ கோடி. இந்த ஆண்டு அதாவது 1975–76 ஆம் நிதி ஆண்டு, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நிதியுதவி தருவதற்கு மத்திய அரசிடமிருந்து எந்தவிதத் தகவலும் இதுவரையிலும் இல்லை. 1974–75–ல் கொடுக்கப்பட்ட ரூபாய் 7½ கோடியும் திட்டத்திற்குத் தரும் நிதியுதவியின் அடிப்படையில் தான் (பிளான் அஸிஸ்டென்ஸ்) தரப்படுவது—அதாவது கடன் 70 சதவிகிதம், மானியம் 30 சதவிகிதம். ஆனால் இந்த நிதியுதவி 1975–76 ஆம் நிதியாண்டான இந்த ஆண்டு திருப்பிச் செலுத்தப்படத் தேவை இல்லை. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இனிவரும் நிதி ஆண்டுகளில் தான் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். நாம் ஏற்கெனவே மத்திய அரசை 1975–76 ஆம் நிதியாண்டுக்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு என்று திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்பு நிதியுதவியாக ரூபாய் 20 கோடி ஒதுக்கித் தரும்படி கேட்டிருந்தோம். இதை ஐந்தாவது திட்டக் காலத்தில் கழித்துக் கொள்ளக் கூடாது என்பது நம்முடைய கோரிக்கை. இதற்கு நாம் கூறும் காரணங்கள்—எதிர்பாராத விதமாக பருவ மழை, பொய்த்துவிட்ட காரணத்தால் ஏற்பட்ட வறட்சிக்காக தரப்படும் நிதியுதவியை ஆண்டுத் திட்டங்களில் கழிப்பதன் மூலம் நம்முடைய நிதி ஆதாரங்கள் திட்ட அளவுக்குக் குறைவதோடு பணிகளும் குறைந்து விடுகின்றன. திட்டங்களில் வறட்சி நிதியைக் கழித்துக் கொள்வது என்பது ஒரு கொள்கையானாலும் ஐந்தாவது திட்டம் என்பது பெயரளவுக்குத் தான் இருக்கிறதே ஒழிய உண்மையிலேயே நடப்பது ஆண்டுத் திட்டம்தான். எனவேதான் இதை நான் " திட்டம் வரையறுக்கப்படாத திட்டக் காலம் " என்று கூறுகிறேன். அதாவது " பிளான் பீரியட் வித்தவுட் பிளான் " என்று கூறுகிறேன். ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் 1974–75 முதல் 1978–79 வரை 5 ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டிருந்தாலும் இந்தத் திட்டத்திற்கு இன்னும் முழு வடிவம் கொடுக்கப்படவில்லை.



திட்டத்திற்கு முழு வடிவம் கொடுக்கப்பட்டால்தான் மத்திய நிதி உதவியின் மொத்த அளவையும் நம்முடைய நிதி ஆதாரத்தையும் சேர்த்து திட்ட காலத்தின் ஆண்டுத் திட்டங்களின் அளவை நாம் கணக்கிட முடியும். எனவேதான் இப்போது இருப்பதும் வெறும் ஆண்டுத் திட்டமேயன்றி ஐந்தாண்டுத் திட்டம் அல்ல என்பது நம்முடைய கருத்து. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு நடப்பு ஆண்டுகளில் அதாவது 1974—75, 1975–76-க்கு நமது ஆண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு ஆண்டுதோறும் தந்துள்ள நிதியுதவி ரூ. 41.15 கோடி. இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டாகிய 1973–74-ல் நமக்குத் தரப்பட்ட நிதி உதவியின் அளவுதான்.

(பிற்பகல் 5–20)

எனவே, இந்தத் திட்ட உதவியில் எந்தவிதமான வளர்ச்சியும் ஈடேயாது. ஆகவேதான் வறட்சி நிவாரணத்திற்காக திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்பு நிதி உதவியாகத் தருகின்ற மத்திய நிதி உதவியை இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கழித்துக்கொண்டால், ஆண்டுத் திட்டங்களின் அளவு குறைவதோடு வளர்ச்சிப்பணிகளும் தடைப்படும் என்று நாம் இப்போது கூறுகிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை திட்டத்திற்காக மத்திய அரசு தரும் நிதி உதவியும் (பிளான் அசிஸ்டென்ஸ்) மிகக் குறைவானதாகும். வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில், ஆறுவது நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று அமுல் நடத்துவதாக மத்திய அரசு வாதிடுகிறது. நம்முடைய கோரிக்கை எல்லாம், வறட்சிக்காக தரப்படும் நிதியைத் திட்டக் காலத்தில் தவணை முறையிலே கழித்துக்கொள்வது என்பதை ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டாலும் கூட, ஐந்தாண்டுத் திட்டமே செயல் படாதபோது ஆண்டுத் திட்டங்கள் என்ற பெயரால் மத்திய உதவியும் மிகக் குறைவாக அளிக்கப்படுகிறபோது, வறட்சிக்கென தரப்படும் சிறப்பு நிதியைத் திட்டத்தில் கழித்துக்கொள்வது என்பது நடைமுறை சாத்தியமாகாது என்பதாகும். ஆகவேதான் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வறட்சி நிதியைக் குறைத்துக்கொள்ளக்கூடாது என்றும், ஆறுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இருந்து குறைத்துக்கொள்ளலாம் என்றும், நான் ஏற்கெனவே சட்ட மன்றப் பேரவையில் நமது அரசின் கோரிக்கையாக அறிவித்திருக்கிறேன். அண்மையில் தமிழகத்திற்கு வந்து, வறட்சிப் பணிகளைப் பார்வையிட்ட மத்திய நிதி அமைச்சர் அவர்கள் வறட்சிப் பணிகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்று கூறியிருப்பதை யொட்டி, வறட்சி நிதியை ஆறுவது திட்டத்தில் கழித்துக்கொள்ள வேண்டும் என்ற நமது கோரிக்கையையும், தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் விவாதிக்கலாம் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். அந்த அடிப்படையில் ஆறுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், அதற்குப் பின்பும் படிப்படியாகக் கழித்துக்கொள்ள வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தி மேலும் நமக்குத் தேவையான வறட்சி நிதிக்காக மத்திய அரசுக்கு நமது அரசின் சார்பில் எழுதப்பட்டிருக்கிறது.

*<u>திரு. கே. ராஜாராம்</u> : தலைவரவர்களே, நான் சொல்வதை தயவு செய்து கவனிக்க வேண்டுகிறேன். இன்று கடைசி நாள். இது ஜீவ மரண விஷயமாக இருக்கிறது. இரண்டொரு நிமிஷம் நான் பேச விரும்புகின்றேன். தமிழக மக்கள் அனைவரும் அரசு என்ன செய்யப்போகிறது என்பதைத்தான் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொல்லும் போது 10 கோடி ரூபாய் மார்ச் 31 வரை செலவாகியிருக்கிறது என்று சொன்னார்கள். திடீரென்று நடந்துகொண்டிருந்த வேலைகள் அத்தனையும் நின்று விட்டன. முக்கியமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்துகொண்டிருந்த வேலைகளையெல்லாம் நிறுத்தி விட்டார்கள். பணம் புது வருஷத்தில், வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிய பிற்பாடு கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அதைச் சீக்கிரமாகத் துவக்கி நடத்தும்படியாக கலெக்டர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு..................

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, 10 கோடி ரூபாய்க்குப் பிறகு நம்முடைய அரசின் சார்பில் 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் மீண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஒதுக்கப்பட்டாகிவிட்டது.

<u>திரு. கே. ராஜாராம்</u> : தலைவரவர்களே, இப்பொழுது ஏப்ரல் மாதத்திலிருந்து உடனடி செலவுக்காக 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். வேலை தலைமைச் செயலகத்திலேயிருந்து துரிதமாக நல்ல முறையில் நடந்தாலும், கிராம அளவில் மக்கள் கையில் இன்னும் போய் எட்டவில்லை. நின்ற வேலைகள் பழையபடியும் தொடங்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்</u> : தலைவரவர்களே, வேலை நின்று விடவில்லை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது. 10 கோடி ரூபாய்க்கு மேல், திட்டத்திற்கு மேலே அதிகமாக எடுத்து விட்ட காரணத்தினாலே, அப்பொழுது அந்த 10 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யக் கூடாது என்று, அந்தத் தொகை நிறுத்தப்பட்டிருந்ததே தவிர, வேலை நின்று விடவில்லை. இப்பொழுது மீண்டும் 6 கோடி ரூபாய் கொடுத்து விட்ட காரணத்தினாலே, தொடர்ந்து அந்தப் பட்டுவாடா நடைபெற்று வருகிறது.

<u>திரு. கே. ராஜாராம்</u> : தலைவரவர்களே, இந்த வறட்சி நிவாரண வேலைகளிலே மிகப் பெரிய வேலை இராஜசிங்கமங்கலம் ஏரி வேலை என்றுதான் நான் எண்ணுகிறேன். திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் என்னிடம் சொன்ன கருத்தைத்தான் நான் எடுத்துச் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை. அதை பின்னால் திரு. தங்கப்பாண்டியன் அவர்களும் ஊர்ஜிதம் செய்வார்கள் என்று எண்ணுகின்றேன். அது ஒரு பக்கம் இருக்க..............

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, வறட்சி நிவாரண வேலைகளிலேயே இராஜசிங்கமங்கலம் ஏரி வேலையைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிரமாதமாக சொன்னார்கள்.



அவருக்குத் தெரியவில்லை. அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். அது வறட்சி நிவாரண வேலைகளிலே எடுத்துக் கொள்ளப் படவில்லை. சிறப்பு வேலைத் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் அங்கு சென்றபோது அறிவித்தேன். அது நடைபெறாததற்குக் காரணம் நம்முடைய முன்னாள் குடியரசுத் தலைவர் மறைந்து விட்டது. அங்குள்ள நம்முடைய ஆளுங் கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதைப் போலவே காங்கிரஸ் கட்சியினுடைய சட்ட மன்ற பிரதிநிதிகள் அத்தனை பேரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அங்கு ஒரு பாலமும் திறக்கப்பட வேண்டுமென்ற ஒரு திட்டமும் அறிவிக்கப்பட்டது. அதனுடைய அடிக்கல் நாட்டு விழா வருகிற 23–ஆம் தேதி என்று இருந்தது. ஆனால், இந்தியா முழுவதும் துக்க நாளாக டாக்டர் இராதாகிருஷ்ணனுடைய மறைவையொட்டி கொண்டாடப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்ட காரணத்தினால் நாமும் தொடர்ந்து துக்க நாளாகக் கருதி 23–ஆம் தேதி வரையில் எல்லா விழாக்களையும் நிறுத்தி விட்டோம். ஆனால், வேறு இடங்களிலே வேறு விதமாக விழாக்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. பத்திரிகைகளில் நாம் பார்க்கிறோம். ஆனால் நாம் மாத்திரம் துக்க நாளை ஒழுங்காகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இராஜசிங்கமங்கலத்திலே அந்த விழா நடைபெறவில்லை.

<u>திரு. கே. ராஜாராம்</u> : தலைவரவர்களே, ஒரு நூற்றாண்டாக நாம் காணாத பெரும் வறட்சி இப்போது ஏற்பட்டிருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு மாநில அரசு என்ற வித்தியாசம் இல்லாமல் பாடுபட வேண்டும். மக்களைப் பொறுத்த வரையில், அரசு செய்யவில்லை என்றுதான் நினைக்கிறார்களே தவிர, வேறொன்றுமில்லை. ஆகவே, முதலமைச்சரவர்கள் இன்று சென்னைக்கு வந்த பிரதம மந்திரியுடன் இதைப்பற்றி ஏதேனும் பேசினார்களா? என்.டி.சி. அதாவது நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலுக்குப் போவதாகச் சொல்லுகிறார்கள். நேஷனல் டெவலப்மெண்ட கவுன்சில் கூட்டம் எப்போது நடக்கவிருக்கிறது? அதில் போய் இங்கே சொன்ன வாதங்களை எல்லாம் சொல்ல வேண்டும்—நல்ல வாதங்களாக இருக்கின்றன. இதை அவரே நேரில் சென்று சொல்லுவார்களானால், நிதியமைச்சர் அவர்கள் சொல்லுகிற மாதிரி இன்றி 6–வது திட்டத்திற்கு ஒத்திப் போட நேரிடும். அவர் சொல்கின்ற மாதிரி ஐந்தாவது திட்டத்திலே கழிக்க வேண்டுமென்ற அவசியமில்லாமல் போய்விடும். நம்முடைய நிதி நிலைமை மோசமாக இருப்பதனால் அதை அடுத்த திட்டக் காலத்தில் வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலை சீக்கிரம் கூட்டும்படியாக முதலமைச்சர் எழுதுவாரா என்று நான் அறிய விரும்புகிறேன். அல்லது இதற்காகவேனும் அவர் சென்று இதை வற்புறுத்தி ஒரு முடிவுக்கு கொண்டு வந்து போதுமான நிதியைப் பெற்று வறட்சி நிவாரண வேலைகளையெல்லாம் இப்பொழுது நடைபெறும் வேகத்தைக் காட்டிலும் இன்னும் துரிதமாகச் செய்ய முன்வருவார்களா? என்றுமே இல்லாத அளவுக்கு கோடை மழை கூடப் பெய்யவில்லை. இப்பொழுது சித்திரை மாதம் 10–ஆம் தேதியாகப் போகிறது. இன்னும் மழை பெய்யாமல் மோசமாக இருப்பதனால், நம்முடைய "காபினெட்" மற்ற வேலைகளையெல்லாம் கூட முக்கியமாகக் கருதாமல் இந்த வறட்சி நிவாரணப்

பணிகளில் அதிக முக்கிய கவனம் செலுத்த வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் எல்லோரையும் வேலை வாங்கலாம். அங்கு இருக்கக் கூடிய சட்ட மன்ற உறுப்பினர்களை எவ்வளவு தூரம் உபயோகிக்க முடியுமோ அவ்வளவு தூரம் உபயோகித்துக் கொண்டு இந்த வறட்சி நிவாரணத்துக்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வறட்சி நிவாரணத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பார்கள், இதில் ஒன்றும் அரசியலுக்கு இடம் கிடையாது என்பதை நான் மீண்டும் வலியுறுத்தி இதற்கு வேண்டிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை அரசு என்னென்ன முயற்சி எடுத்திருக்கிறது, இனி அரசு என்னென்ன செய்ய உத்தேசித்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளுக்கு நான் முதலிலேயே அநேகமாக எல்லா பதில்களையும் கூறி விட்டதாகவே எண்ணுகிறேன். இந்த அடிப்படையிலேதான் நாம் மத்திய அரசோடு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையிலேதான் நம்மிடமிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கழித்துக் கொண்டால் நமக்குப் பல இடர்ப்பாடுகள் வரும் என்பதை நான் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அது மாத்திரமல்ல; ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் இருக்கிறதே தவிர திட்டம் இல்லை. ஆண்டுத் திட்டங்கள்தான் போட்டுக் கொண்டிருக்கிறோம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் என்றால், 1,100 கோடி ரூபாய் அளவுக்கு நம்முடைய தமிழ் நாட்டுக்கு மட்டும் திட்டம் போடப்பட்டது. அந்த வகையிலே பார்த்தால், மத்திய அரசின் சார்பாக 500 கோடி ரூபாயிலிருந்து 700 கோடி ரூபாய் வரையில் வந்திருக்க வேண்டும். இப்பொழுது ஆண்டுக்காண்டு 40 கோடி ரூபாய், 41 கோடி ரூபாய் என்ற அளவில்தான் "சென்ட்ரல் அசிஸ்டன்ஸ்" கொடுக்கிறார்கள். இதிலே போய் குறைத்துக் கொண்டால் சங்கடமாக இருக்கும் என்பதால்தான், "நீங்கள் குறைத்துக் கொள்வது என்று முடிவெடுத்துக் கொண்டீர்களேயானால், அதைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டாலும் கூட, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கழித்துக் கொள்ள தொடங்காதீர்கள், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கழித்துக் கொள்ளுங்கள்" என்கின்ற வகையிலே அரசின் சார்பில் மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. என்.டி.சி. கூட்டம் பற்றி நான் அவர்களுக்கு அறிவித்தேனா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டம் கூட்டப்படவில்லை என்பது நம்முடைய நிதி நிலை பற்றிப் பேசிய நேரத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது கூட்டப்பட வேண்டுமென்ற கருத்தை பிரதமருக்கு திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். விரைவிலே கூட்டம் கூட்டப்படும் என்றும் கருதுகிறேன். ஆனால், இந்தக் கூட்டம் கூட்டித்தான் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இல்லாமல் இப்போதே அவர்கள் ஆறாவது திட்டக் காலத்திலேயிருந்துதான் அது கழித்துக்கொள்ளப்படும் என்று கூறிவிடுவார்களேயானால் மிக நலமாக இருக்கும். அமைச்சர்கள் எல்லாம் இந்தப் பணியை



மிக கவனமாகச் செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அரசாங்கமே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், ஒரு ராணுவ நடவடிக்கை போல், இந்த வறட்சியை வெல்லுவதற்கு ஏற்ற எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை கடந்த இரண்டு மாத காலமாக நம்முடைய சட்டப்பேரவை-மேலவை நிகழ்ச்சிகளில் அடிக்கடி விவரங்களோடு எடுத்துக் கூறியிருக்கின்றோம். எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒத்துழைப்பதற்கு அடையாளமாக இன்றைக்குக் கூட வறட்சி நிவாரண நிதிக்காக 500 ரூபாய் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். வேறு கொடுத்தவர்கள் எல்லாம் இந்த அவையிலே இருக்கின்றார்கள். தனித்தனியாக அவர்களை எல்லாம் சொல்ல முடியாவிட்டாலும் அவரை நான் குறிப்பிட்டுச் சொல்லுதற்குக் காரணம், முதலிலே கொடுப்பதில்லை என்ற ஒரு அறிக்கை வந்தது, அது தவறான அறிக்கை என்று சொல்லி, இன்றைக்கு அவரே கொடுத்திருக்கிறார். இந்த அவையிலும் அந்த அவையிலும் உள்ள பல்வேறு உறுப்பினர்களின் கோரிக்கைகளை அந்த அவையிலே நம்முடைய முன்னவர் நாவலர் அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறார். ரெயில் பாஸ், பஸ்ஸுக்கு பாஸ், அல்லது டெலிபோனுக்கு படி இவ்வளவும் தந்திருக்கிறார். அந்த நேரத்தில், இவ்வளவும் தருகிறோம், கேட்டதையெல்லாம் தருகிறோம், நாங்கள் வறட்சி நிவாரண உதவி கேட்கிறோம், தர மறுக்கிறீர்களே என்று கேட்டேன். இனிமேலாவது பெருமனது வைத்து கட்சி சார்பற்ற முறையில் எல்லா உறுப்பினர்களும் — இன்னும் ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலபேர் தரவில்லை என்று கருதுகிறேன் — தர வேண்டுமென்று கோருகிறேன். பொதுவாக பத்திரிகையில் எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.சி.க்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களில் யார் யார் பணம் கொடுத்தார்கள் என்ற ஒரு பட்டியல் போடப் போவதாக இருக்கிறது. யார் யார் கொடுக்கவில்லை என்பதாகப் பட்டியல் போடவில்லை. யார் யார் கொடுத்தார்கள் என்ற பட்டியல் போடுவதாக இருக்கிறது. அந்தப் பட்டியல் வருவதற்கு முன்பு எல்லோரும் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

(2) 'பி' தொகுதி பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்கள், ஏவலர்கள் ஆகியோரது பணி முறைப்படுத்தப்படாமலிருப்பதும் அதனால் சம்பளமும் அகவிலைப்படியும் நிர்ணயம் செய்யப்படாமலிருப்பதும் குறித்து.

THIRU K. S. GANAPATHI : Hon. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the refusal of the Chief Educational Officers to regularise the temporary services of non-teaching staff working in Government 'B' Wing Schools in spite of the Proceedings of the Director

of School Eduction Rc. No. 221096/X1/71 dated 11th September 1974 and the consequent hardship caused to hundreds of non-teaching and menial staff working in Government 'B' Wing schools, without their services being regularised and their pay and D.A. not being fixed from time to time according to the revised scales of pay and D. A.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1—4—1970க்குப் பின் "பி" பிரிவு பள்ளிகளில் ஏற்படும் நிரந்தரமான காலி இடங்களுக்கு தகுதிவாய்ந்த "பி" பிரிவு ஊழியர்களை பதவி உயர்வு அளித்து நிரப்பப்படாமல், இருப்பவற்றிற்கு தமிழக தேர்வாணைக் குழுவைக் கலந்து அல்லது அரசுப்பணி விதிமுறைகளுக்கேற்ப காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று அரசாணை எண் 761 கல்வி நாள் 16—5—1970-ன் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் முன்னாள் கழக விதி முறைகளுக்கேற்ப (District Board Statutory Rules) இப்பள்ளிகளில் பணியாளர்களைத் தொடர்ந்து நியமனம் செய்யப்பட்டதால் அவர்களின் பணியை வரன்முறைப்படுத்த இயலவில்லை. அவர்களுக்கு அரசு பணி விதிகளின் சார்பாக நடைமுறையில் உள்ள எந்தெந்த விதிகளைத் தளர்த்த வேண்டுமோ அந்தந்த விதிகளைத் தளர்த்தி அவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த அரசாணை எண் 765 கல்வி நாள் 16—5—1974-ன் மூலம் வகை செய்யப்பட்டது. இந்த ஆணைகள் "பி" பிரிவு ஆசிரியர்களுக்கு மட்டும் பொருந்தும். அதனால் பள்ளிக் கல்வி இயக்குநர் தன்னுடைய அலுவலக நடவடிக்கை எண். 221096-எக்ஸ்1-71 நாள் 11—9—1974-ன் மூலம் முதன்மைக் கல்வி அலுவலர்களால் 1—4—70 அன்றோ அல்லது அதற்குப் பின்போ தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் கீழ் வராத பணிகளான ஆவண எழுத்தர், கடைநிலை ஊழியர்கள் முதலியவர்களை கல்வி மற்ற தகுதிகளும் அரசுப் பணி விதிகளின்படி அவர்கள் பெற்றிருந்தால் அவர்களின் பணியினை வரன் முறைப்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநரின் இந்த ஆணையின் சார்பாக எல்லா முதன்மைக் கல்வி அலுவலர்களும் நடவடிக்கை எடுத்து ஆசிரியரல்லாத ஊழியர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி வருகின்றனர். இந்த அலுவலர்களில் அரசுப்பணி விதிகளின்படி முழுத் தகுதி பெறாதவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த அவர்களின் சார்பாக விதிகளைத் தளர்த்தி அவர்களின் பணியினையும் வரன்முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு விதி முறைகளைத் தளர்த்தி பணியினை வரன்முறைப்படுத்த வேண்டியவர்களைப் பற்றிய பணி விவரங்கள் [Service particulars] பள்ளிக் கல்வி இயக்குநரால் சேகரிக்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு வரன்முறைப்படுத்தப்படவில்லை என்று அலுவலர்கள் எவரும் புகார் செய்யவில்லை என்றும், பள்ளிக் கல்வி இயக்குநர் கூறியுள்ளார். எல்லா முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து விவரங்கள் வந்தவுடன் அவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநருடைய செயற்குறிப்பானது 11—9—74-ல் இடப்பட்டுள்ளது. ஏறத்தாழ 7 மாதங்கள் ஆகியும், மாவட்டங்களில் உள்ள முதன்மைக் கல்வி அதிகாரிகள் அது பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியது போன்று, தகுதி படைத்தவர்களுக்குக்கூட , அவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த எந்தவிதமான நடவடிக்கையும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் எடுத்துக்கொள்ளாததால், பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத மற்ற பணியாளர்கள் வேறு யாரிடமும் புகார் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். எனவே தகுதி படைத்தவர்கள் அனைவரின் பணியினை வரன்முறைப்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தப் பிரச்சினைகூட இங்கே எழுப்பப்பட்டு, முதன்மைக் கல்வி அலுவலர்கள் இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, இயக்குநர் மூலமாக வற்புறுத்தப்பட்டார்கள். அவசியமான இடத்தில் விதிகளைத் தளர்த்தி வரன்முறைப்படுத்தலாமென்று தெரிவித்துள்ளோம். விரைவில் முழு விவரங்களையும் பள்ளிக் கல்வி இயக்குநர் சேகரிக்க வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறார். முதன்மைக் கல்வி அலுவலர்கள் அது பற்றிய நடவடிக்கைகளை எடுப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். அது பற்றிய விவரங்கள் வந்த பிறகு, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். கணபதி : ஒரு குறிப்பிட்ட காலத்தைக்கூறி, அதற்குள் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஆணைகளை அரசு பிறப்பிக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட காலவரையறை சொல்ல இயலுமாவென்று தெரியவில்லை. ஏற்கெனவே சென்ற ஆண்டு ஆணையிடப்பட்டுள்ளதாலும், அரசின் கொள்கையாக உள்ளதாலும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் கல்வி இயக்குநர் மூலமாக வற்புறுத்தப் பட்டு, விரைவில் முடிவெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(3) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிய தமிழாசிரியர்களை முதன்மைக் கல்வி அலுவலர் 1975 பிப்ரவரியில் பணி நீக்கம் செய்துள்ளது குறித்து.

Thiru G. SWAMINATHAN : Sir; I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the sudden dismissal of several Tamil Pandits who have been working in the 'B' Wing High Schools in Coimbatore

district by the Chief Educational Officer of the District during February 1975 stating that they did not have requisite qualification for being even Grade II Tamil Pandits. Many of these Tamil Pandits have already worked for several years and have also been promoted as First Grade Tamil Pandits. The dismissal was done suddenly even without notice and asking for personal clarification from those persons who have been affected.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கோவை முதன்மைக் கல்வி அலுவலர், அம் மாவட்ட அரசு கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து மூன்று தமிழாசிரியர்களை, தேவையான தமிழாசிரியர் பயிற்சித் தகுதி பெற்றிருக்கவில்லை என்ற காரணத்திற்காக வேலை நீக்கம் செய்திருக்கிறார் என்பதை லால்குடி தமிழாசிரியர் கழகப் பொதுச் செயலாளர் பள்ளிக் கல்வி இயக்குநரது கவனத்திற்குக் கொண்டு வந்தார். அம்மூவரில் ஒரு தமிழாசிரியரிடமிருந்து மேல் முறையீடும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு வந்துள்ளது.

1—1—74 முதல் இரண்டாம் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப்பட மாட்டார்களென அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல் நிலை நியமனம் செய்யப்பட மாட்டார்களென அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல் நிலைத் தமிழாசிரியராகப் பணிபுரிய கீழ்க்கண்ட தகுதிகள்பெற்றிருக்க வேண்டும். புலவர் அல்லது வித்துவான் தகுதி ; குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதி ; தமிழாசிரியர் பயிற்சி அல்லது இடை ஆசிரியர் பயிற்சி. அவ்வாறு குறைந்த அளவு பொதுக் கல்வித்தகுதியும் தமிழாசிரியர் அல்லது இடைநிலை ஆசிரியர் பயிற்சியோ பெறாமல் புலவர் அல்லது வித்துவான் தகுதிமட்டுமே பெற்று இரண்டாம் நிலைத் தமிழாசிரியராக 1—1—74 அல்லது அதற்குப் பின்பும் 15 ஆண்டுக் காலம் பணி நிறைவு எய்தியிருந்தால், அவர்களை முதல்நிலைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு செய்யலாமென்று அரசாணை நிலை எண். 1750 கல்வி நாள் 9—10—74-ல் பத்தி 3-ல் பிறப்பித்துள்ள ஆணையினை கோவை முதன்மைக் கல்வி அலுவலரது கவனத்திற்கு ஈர்த்து, வேலை நீக்கம் அடைந்துள்ள தமிழ் ஆசிரியர்களை அத்தகுதி பெறும்வரையில்—15 ஆண்டுக் காலம் பணி நிறைவு எய்தும்வரை — இரண்டாம் நிலைத் தமிழாசிரியராகத் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்க வேண்டுமென்றும், முதன்மைக் கல்வி அலுவலரை, பள்ளிக் கல்வி இயக்குநர் பணித்துள்ளார். இதனால், அத் தமிழாசிரியர்களது இடர்ப்பாடு நீங்கிவிடும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தத் தமிழாசிரியர்கள் பல ஆண்டுகளாகப் பணி புரிந்தவர்கள். சிலர் 12, 14 ஆண்டுகள் பணி புரிந்திருக்கிறார்கள். முதல்நிலைத் தமிழாசிரியராக 2 அல்லது 3 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்கள். தமிழாசிரியர் பயிற்சி என்பது 5 மாதப் பயிற்சியாகும். எனவே அந்தப் பயிற்சிக்கு அவர்களை அனுப்பி மீண்டும் தமிழாசிரியர்களாகப் பணி புரிய அனுமதிக்க வேண்டும்.



இவ்வளவு காலம் அவர்கள் பணிபுரிந்துள்ளதால், அவர்களை மீண்டும பணியில் அமர்த்த அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். பொதுக் கல்வித் தகுதியும், பயிற்சியும் பெறாதவர்கள் 15 ஆண்டுக் காலம் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாகப் பணியாற்றினால், அவர்களை முதல் நிலைத் தமிழாசிரியர்களாக ஏற்றுக்கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறோம். மறுபடியும் அவர்களை இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாகச் சேர்த்து, 15 ஆண்டுப் பணிக்காலம் ஆன பிறகு முதல் நிலைத் தமிழாசிரியர்களாக ஏற்றுக் கொள்ளலாமென்று பள்ளிக் கல்வி இயக்குநர் முதன்மைக் கல்வி அலுவலருக்குப் பணித்துள்ளார். இதனால் அவர்களுடைய கஷ்டம் நீங்கிவிடும்.

(பிற்பகல் 5–40)

4· திண்டிவனம் நகராட்சியில் கேஷியர் நடேசன் தன் அறைப் பெட்டியில் பூட்டி வைத்திருந்த பணம் காணாமல் போனது குறித்து

திரு ஆ. தங்கவேல் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திறகுக் கொண்டு வருகிறேன்.

"7—4—1975 திண்டிவனம் நகராட்சியில் பணிபுரியும் கேஷியர் நடேசன் என்பவர் பேங்கிலிருந்து ரூ. 35,254.85 பை. ரொக்கத்தை எடுத்து வந்து நகராட்சியில் தன் அறையிலுள்ள பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு பகல் $1\frac{1}{2}$ மணிக்கு சாப்பிடச் சென்றவர் மாலை 3–45 மணிக்கு திரும்பி வந்து பார்த்தபோது ரூ. 11;416 காணப்படவில்லை என்ற செய்தியைக் குறித்து".

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே 7–4–1975 அன்று திண்டிவனம் நகராட்சி ஆணையாளர், கடலூரில் நடைபெற்ற வேலூர் மண்டல கணக்கு மற்றும் கருவூலத் துணை இயக்குநர் கூட்டத்திற்குச் செல்வதற்காக ஆணையரின் பொறுப்பை நகராட்சிப் பொறியாளரிடம் ஒப்படைத்து விட்டு, நகராட்சி மேலாளரிடம் 31–3–1975 வரை வசூலான வரி முதலான தொகை ரூ. 27,267·16ஐ கருவூலத்தில் கட்டவும் மாதச் சம்பள பட்டுவாடாவுக்காக ரூ. 35,254·83-ஐ ஸ்டேட் பாங்கியிலிருந்து பெறுவதற்கு காசோலையில் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டு தக்க உத்தரவுகள் கூறிவிட்டுச் சென்றார். அன்று இரவு 10 மணிக்குத் திரும்பி வந்ததும் முனிசிபல் பொறியாளர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு ஷராப் திரு. நடேசன் கொடுத்த புகாரின் பேரில் பணப் பெட்டியின் பூட்டு

உடைக்கப்பட்டு ரூ. 10.781·40 காணவில்லை என்றும் உண்மை நிலையைப் புலன் விசாரிக்குமாறும் கேட்டுக் கொண்டு கடிதம் அனுப்பி இருப்பதாக அறிந்தார். அதன் பிறகு ஆணையாளர் 31–3–1975 வரையில் வசூலானவற்றில் ரூ. 27,267·16 ஐ. 7–4–1975-ல் ஸ்டேட் பாங்கிலும், நகரக் கூட்டுறவு வங்கியிலும் கட்டியதைத் தெரிந்து கொண்டார்.

ரூ. 10,781·40 காணுமல் போனதாகக் கூறப்பட்டதால் கீழ்க்கண்டவர்களை ஆணையர் தற்காலிக வேலை நீக்கம் செய்தார்.

திருவாளர்கள் :
1) என். சட்டயப்பன், மேலாளர்
2) கே. நடேசன், ஷராப்
3) டி. சாரங்கபாணி
4) ஏ. கே. சுப்பிரமணியம்
5) எம். நடராஜன்.

திண்டிவனம் சப் இன்ஸ்பெக்டர் குற்ற எண். 486!75/ல் வழக்கு ஒன்றை இ. பி. கோ. 380 பிரிவின்கீழ் பதிவு செய்து மேலே கூறிய நபர்களை புலன் விசாரணை செய்வதற்கு போலீஸ் காவலில் வைத்தார்; மறுநாள் 8–4–1975 அன்று போலீஸ் டிபுடி சூப்பிரென்டெண்ட், டிபுடி இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், சப் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் ஆகியோர்கள் விரல் ரேகை நிபுணருடன் முனிசிபல் ஆபீசுக்கு புலன் விசாரணை செய்ய வந்தார்கள். புலன் விசாரணையின்போது, காணுமல் போன பணம், கையிருப்பில் உள்ளப் பணம் ஆகியவை எண்ணிப் பார்க்கப்பட்டன. அப்போது பணப் பெட்டியில் ரூ. 35,254.83 இருப்பில் இருக்க வேண்டியதற்கு பதிலாக பணப் பெட்டியில் ரூ. 15,483.66-ம் கைப்பையில் ரூ. 8,987.00-ம் ஆக மொத்தம் ரூ. 24,470.66 தான் காணப்பட்டது. எனவே உண்மையில் ரூ. 11,416 குறைந்திருந்தது. ஆனால் ஷராப் நடேசன் ரூ. 10,781·40 தான் குறைகிறது என்று புகாரில் சொல்லியிருந்தார். அலுவலகப் பணியாளர்களிடம் விசாரணைசெய்ததில் ஷராப் ஸ்டேட் பாங்கிக்குச் சென்று காசோலைகளை மாற்றி பணத்தைப் பெற்றுக்கொண்டு வந்து, பணப் பெட்டியில் வைத்துவிட்டு பிற்பகல் 1–30 மணிக்கு மதிய சாப்பாட்டுக்குச் சென்று 3–40 மணிக்குத் திரும்பி வந்தார் என்றும்; புகாரில் கொடுத்தபடி பணம் காணுமல் போவதற்குச் சந்தர்ப்பம் எதுவும் இல்லை என்றும், இப்படி பட்டப்பகலில் எல்லோரும் வேலை செய்துகொண்டிருக்கையில் நகராட்சி அலுவலகத்தில் நுழைந்து எவரும் பணத்தை திருடத் துணியமாட்டார்கள் என்றும் தெரிய வந்தது. காணுமல் போய்விட்டது என்று ஷராப் குறிப்பிட்டுச் சொன்ன தொகையும் உண்மையில் குறையும் தொகையும் வித்தியாசமாக இருக்கிறது. மற்றும் ஏனைய அலுவலக ஊழியர்களின் வாக்குமூலம் ஷராப்பின் வாக்குமூலத்தை ஒத்திருக்கவில்லை என்பதாலும், மேற்படி பணம் ரூ. 11,416 ஷராப்பின் கூற்றின்படி நகராட்சிப் பணப் பெட்டியிலிருந்து காணுமல் போவதற்கு வாய்ப்பே இல்லை என்று தெரிகிறது.



8–4–1975 அன்று விசாரணை முடிந்த பின்னர், நடேசன் தன் சகோதரர் மூலம் காணுமல்போன தொகை முழுவதையும், ஒரு கடிதத்தையும் அனுப்பிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு ரசீது கொடுத்துவிட்டு தம்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார். காணுமல்போன பணம் ரூ. 11,416 முழுமையையும் ஷராப் கட்டிவிட்டபடியால் ஆசிரியர்கள் தோட்டிகள் ஆகியோருக்கு 8–4–1975 அன்று சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டது. ஷராப் நடேசன் தற்காலிகக் கையாடல் செய்ததற்கு, போலீஸ் டிபுடி இன்ஸ்பெக்டரால் இ. பி. கோ. 380-ஐ மாற்றி இ. பி. கோ. 409 பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு விழுப்புரம் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார். அங்கே அவர் நிபந்தனையுடன் ஜாமீனில் விடப்பட்டுள்ளார். வழக்கு விசாரணையில் உள்ளது.

குற்ற வழக்கைத் தவிர, மானேஜர் உட்பட ஐவர் மீது டிபார்ட்மெண்டல் ஒழுங்கு நடவடிக்கையும் ஆணையரால் எடுக்கப்பட்டு வருகிறது. வங்கியிலிருந்து பெற்று வந்த பணம் 500 ரூபாய்க்கு அதிகம் ஆனபடியால் நடப்பு விதிகளின்படி ஷராப்புக்கு துணையாக இரு அலுவலக நபர்களை அனுப்பத் தவறியதற்காக மேலாளர் மீதும், உத்தரவிட்டிருந்தும் ஷராப்புடன் கருவூலத்திற்குச் செல்லாமல் தவறியதற்கு இரண்டு கடைநிலை ஊழியர்கள்மீதும், முனிசிபல் கருவூலத்தைக் காக்கத் தவறியதற்கு மற்றொரு கடைநிலை ஊழியர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதுபற்றி உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு முடிவான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

<u>திரு ஆ. தங்கவேல் :</u> இது முதலில் திருட்டுப் போனதாக அறிவிக்கப்பட்டது. பிறகு தற்காலிகமாக கையாடல் செய்துவிட்டதாக அந்த கேஷியர் திரு நடேசன் அவர்களே ஆணையாளர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கையாடல் என்பது திடீரென்று செய்யப்பட்டதல்ல. தொடர்ந்து இரண்டாண்டுகளாக இந்த கேஷியர் மற்ற சிப்பந்திகளோடு சேர்ந்துதான் செய்திருக்கிறார் என்பது பத்திரிகைகளிலே வந்திருக்கின்ற செய்தி. கேஷியர் திரு நடேசனுடைய தம்பி ஆணையர் அவர்களுக்கு ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்து என்னுடைய அண்ணன் கையாடல் செய்துவிட்ட......

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> அது விசாரணையில் இருக்கின்ற விஷயமாதலால், விரிவாக அது பற்றி இங்கே விவாதிக்க வேண்டாம். அமைச்சர் அவர்கள் சொன்ன தன் பேரில் விளக்கம் வேண்டுமானால் கேட்கலாம். சொற்பொழிவு தேவையில்லை.

<u>திரு ஆ. தங்கவேல் :</u> சேர்ந்துதான் இவ்வாறு கையாடல் செய்திருக்கிறார்கள். அந்த......

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> மேற்கொண்டு விளக்கமாக வேண்டாம் என்று சொன்னபின் திரும்பவும் அதையே சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம் ?

திரு ஆ. தங்கவேல் : இதோ முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முடிக்கிறதல்ல பிரச்சினை. விஷயம் விசாரணையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சென்னதன் பேரில் கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திரு ஆ. தங்கவேல் : ஆணையர் அவர்களும் இதிலே ஈடுபட்டிருப்பதாக அங்கே நடக்கின்ற விசாரணையிலிருந்து தெரிவதால்; அந்த ஆணையர் அவர்களை வைத்துக் கொண்டு விசாரணை நடத்தினால் உண்மை தெரியாது. அவர்களை சஸ்பெண்ட் செய்தோ அல்லது வேறு ஊருக்கு மாற்றியோ, சென்னையிலிருந்து ஒரு பெரிய புலன் விசாரணை அதிகாரியை அனுப்பி விசாரித்தால் உண்மை தெரியும். ஆகவே, இந்த அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே, விசாரணை முடிந்த பின்புதான் யார் யார் குற்றவாளிகள் என்று தெரிந்து அந்த அடிப்படையில் தான் யார் யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்ல முடியும். ஆகவே, அதற்கு முன்னதாகவே அவரை மாற்றுவது இவரை மாற்றுவது என்பது முடியாத காரியம்.

## 6. அரசின் தீர்மானங்கள்.

### (1) சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவைப் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:—

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. வே. தங்கப்பாண்டியன்
3. திரு. எஸ். எஸ். தென்னரசு
4. திரு. கே. ராஜாராம்
5. திரு. என். சுந்தரேசத் தேவர்".



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவைப் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்,

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. வே. தங்கப்பாண்டியன்
3. திரு. எஸ். எஸ். தென்னரசு
4. திரு. கே. ராஜாராம்
5. திரு. என். சுந்தரேசத் தேவர்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (2) சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. இரா. சாம்பசிவம்
3. திரு. ஆ. தங்கவேல்
4. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்
5. திரு. எம். எம். பக்கர்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.—

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. இரா. சாம்பசிவம்
3. திரு. ஆ. தங்கவேல்
4. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்
5. திரு. எம். எம். பக்கர்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) சட்டமன்றப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது:

1. திரு. எம். சங்கரலிங்கம்
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்
3. செல்வி சி. தமிழரசி
4. திரு. ஆ. பாலசுப்பிரமணியம்
5. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது:

1. திரு. எம். சங்கரலிங்கம்
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்
3. செல்வி சி. தமிழரசி
4. திரு. அ. பாலசுப்பிரமணியம்,
5. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. புலவர் ஒ. அறிவுடை நம்பி
2. திரு. எம். இராமநாதன்
3. திரு. சி. ரஸ்ஸல் ராஜ்
4. திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்
5. திரு. கே. எஸ். கணபதி".



Thiru A. R. DAMODARAN: Sir, I would like to make a submission. In the election of Members to these Committees proper representation should be given to the 16 or 17 Independents who are in this House and at least from the next year, by rotation. We find that in all these Committees, 3 D.M.K. Members and one or two Congress Members have been accommodated and very few Independents have been appointed. It is not that we are asking for any personal representation; but at least, some semblance of representation should be given to the other parties. This is only my submission and it may be considered at a later date.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஆண்டுக்காண்டு இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அதுபற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் எதிர்க் கட்சி உறுப்பினர்களைப் போடுகிறபோது, காங்கிரஸ் மட்டுமல்ல எதிர்க்கட்சி. எதிர்க் கட்சிகள் நிறைய இருக்கின்றன. காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு 6 பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டு தான் மற்ற எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சியிலே மொத்தம் கிட்டத்தட்ட 18, 20 பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நியாயமான அடிப்படையிலே கிட்டவில்லை என்பது எங்களுடைய கருத்தாகும். ஆண்டுக்காண்டு பார்த்துக்கொண்டு வருகிறோம். உதாரணமாக, எங்களுடைய கட்சி உறுப்பினர்களுக்குக் கிடைக்கவில்லை. எதிர்க் கட்சிக்கு என்று ஒரு கோட்டா நிர்ணயம் செய்து அந்த ஸ்தானங்களை அவர்களுக்கு ஒதுக்க வேண்டுமே தவிர நானோ, திரு. தாமோதரன் அவர்களோ, கேட்கவில்லை. இருக்கின்ற எண்ணிக்கைக்குத் தகுந்தபடி எதிர்க் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே இந்த விவரங்கள் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. நம்முடைய கொறடா அவர்கள் மற்றவர்களோடு தான் கலந்து பேசிதான் இந்த முடிவு எடுத்ததாக நான் உணர்கிறேன். ஆனாலும் இப்போது கூட ஒன்றும் தவறிவிடவில்லை என்று கருதுகிறேன். புலவர் ஓ. அறிவுடை நம்பி அவர்கள் பெயருக்குப் பதிலாக அவர்கள் சொல்கின்ற ஒரு பெயரை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. அப்துல் வகாப் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சொல்லுங்கள். நீங்கள் ஒரு பெயரைச் சொல்லுங்கள்.

திரு. கே.எஸ். அப்துல் வகாப் : என் பெயரை இந்தக் கமிட்டியிலே சேர்ப்பதாகச் சொல்லியிருந்தார்கள். சொன்னபடி காணவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முஸ்லீம் லீக் சார்பாக வேறு ஒரு குழுவில் திரு. பக்கர் அவர்களுடைய பெயர் இருக்கிறது. இப்போது இருக்கின்ற பிரச்சினைக்குத்தான் நான் இங்கே இந்த விளக்கம் அளித்தேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: குழுவிலே இல்லாத கட்சிக்காகத் தான் இப்போது கேட்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் ஒரு பொதுவான கருத்தைச் சொன்னேனே தவிர, இதிலே இன்னார் இருக்க வேண்டும் என்ற அபிப்ராயமே கிடையாது. நான் சொன்னேன் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே திரு. சித்ரா நாராயணசாமி அவர்களைப் போடலாம் என்று. அதுதான் என்னுடைய கருத்து. அதுவும் திரு. சித்ராவை நான் கேட்கவில்லை. அவர்கள் இருக்கின்றார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. பொதுவாகச் சொல்கின்றபோது அடுத்த ஆண்டுக்காவது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களைப் போடலாம் அல்லது திரு. சித்ரா நாராயணசாமி அவர்களைப் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே போடலாம் என்று சொல்கின்றேன். எதிலாவது பெயர் போடலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொது நிறுவனங்கள் குழு என்கின்ற குழுவும் மிக முக்கியமான ஒரு குழு தான். திரு. தாமோதரன் அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களும் சொன்ன உணர்வுகளை ஏற்றுக்கொண்டு........

திரு. ஏ. ஆர். தாமோதரன்: என்னுடைய கட்சியிலே திரு. கணபதி அவர்களுக்குக் கொடுத்தாகிவிட்டது. திரு. சித்ரா நாராயணசாமி அவர்களுக்கு இந்தக் கமிட்டியிலே கொடுக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, புலவர் அறிவுடை நம்பி அவர்களுடைய பெயருக்குப் பதிலாக திரு. சித்ரா நாராயணசாமி அவர்களுடைய பெயரை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1975–76 ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:—

1. திரு. சித்ரா நாராயணசாமி
2. திரு. எம். இராமநாதன்
3. திரு. சி. ரஸ்ஸல் ராஜ்
4. திரு. எஸ். ராமகிருஷ்ணத்தேவர்
5. திரு. கே. எஸ். கணபதி"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





## (5) அலுவல் வரிசையில் மாறுதல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 4-வது இனமான 1975-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 4வது இனமான 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 7. அரசின் சட்ட முன்வடிவுகள்

### (I) 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1975).

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1975 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (@) (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

மதுரை மாநகராட்சியின் நிர்வாகத்தைக் கவனிக்க 1-11-1974லிருந்து ஒரு தனி அதிகாரியை அரசு நியமித்துள்ளது, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. இந்தத் தனி அதிகாரி தான் பதவியேற்ற ஆறு தினங்களுக்குள் மாநகராட்சி தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யப் பணிக்கப்பட்டு இருந்தார். தனி அதிகாரியின் பதவிக்காலம் 30-4-1975 உடன் முடிவு பெறுகிறது.

1-1-1975ல் இருந்து மேற்கொண்டு மறு ஆணை பிறப்பிக்கப்படும் வரை உள்ளாட்சி நிறுவனங்களின் தொகுதி, எல்லை முதலியவைகளில் எந்த வித மாற்றத்தையும் செய்யலாகாது என்ற தடை ஆணையை அரசு

@377 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விதித்துள்ளதால் மதுரை மாநகரை 65 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கும் வேலையை முடிக்க இயலவில்லை. எனவே அரசு, மதுரை மாநகராட்சியின் தேர்தல் ஏற்பாடுகளைச் செய்வதற்கான கால அளவை 30-4-75ல் இருந்து மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டிக்க முடிவு செய்துள்ளது. இதைச் செயல்படுத்த 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இச்சட்ட முன்வடிவை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 20/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவரவர்களே, மதுரை மாநகராட்சித் தேர்தல் சென்ற ஆண்டு நடந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்த்த ஒன்று. இதுவரை நடக்கவில்லை என்றாலும், இப்போதுகூட நடத்திவிடுவதில் எந்தவிதமான ஒரு கஷ்டமும் இருப்பதாக என் போன்றவர்களுக்குத் தெரியவில்லை. மதுரையில் மக்கள் படும் கஷ்டத்தைப் பார்க்கும்போது, அவசியம் பொது ஜனப் பிரதிநிதிகள் அங்கே இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமாகத் தெரிகிறது. நான் மதுரைக்கு அடிக்கடி செல்பவனாக இருக்கின்றேன். மக்களுடைய குறைகளை கமிஷனர் அல்லது ஸ்பெஷல் ஆபீஸர் அவர்களிடத்திலேதான் சொல்ல வேண்டியிருக்கின்றது.

முன்பு இருந்த மாதிரி உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்கள் இப்போது இல்லை. ஒரு மாநில அரசைக் கலைத்தால், எப்படி அந்த மாநிலத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அட்வைசரி கவுன்சில் மாதிரி மத்திய அரசுக்கு இருக்கின்றார்களோ அது மாதிரி சட்டசபை உறுப்பினர்களாவது அவர்களுக்கு ஆலோசனை சொல்லக் கூடிய நிலையில் அங்கே இருந்தாலும்கூட பரவாயில்லை. சட்டசபை உறுப்பினர்கள், மதுரை சுற்றுப்புறங்களில் இருப்பவர்கள் அல்லது மதுரை கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் இப்படி 5 அல்லது 6 பேர்களைக் கொண்ட ஒரு அட்வைசரி கவுன்சிலைப் போட்டாலும் பரவாயில்லை. அதுவும் கடந்த ஒரு வருடகாலமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாமலேயே செயல்பட்டு வருகின்றது. மேலும் இன்னொரு வருடத்திற்குத் தேர்தலை ஒத்திவைக்கலாம் என்று சொல்லும்போது அரசாங்கம் அதைப்பற்றி நன்கு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். தாறுமாறாக வீட்டு வரிகளை ஏற்றிவிடுகின்றபோது, ஏழை ஜனங்கள் முறையிடுவதற்கு முடியவில்லை என்று குறை சொல்கின்றார்கள். மதுரையில் தண்ணீர் கஷ்டம் சென்னையில் இருப்பது போன்றுதான் இருக்கின்றது. அந்தக் கஷ்டத்தைப்பற்றிக்கூடச் சொல்வதற்கு அங்கே உத்தியோகப் பற்றற்றவர்கள்



யாரும் கிடையாது. மாநில அரசைக் கலைத்தால், அந்த மாநிலத்தைச் சேர்ந்த பார்லிமெண்டு உறுப்பினர்கள் எப்படி அட்வைசரி கவுன்சில் உறுப்பினர்கள் என்ற நிலைமையில் மத்திய அரசில் செயல்படுகின்றார்களோ அந்த மாதிரி சட்டசபை அதாவது பேரவை, மேலவை உறுப்பினர்களாவது ஒரு கவுன்சில் போல் இருந்து ஸ்பெஷல் ஆபீஸரைச் சந்தித்து நல்ல யோசனைகளைச் சொல்லக்கூடிய அளவிலாவது போட்டால் பரவாயில்லை. இல்லையென்றால், உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் சென்னையிலிருந்து இரண்டு மாதத்திற்கு ஒரு முறை உறுப்பினர்களைக் கூப்பிட்டு விசாரித்தாலும் பரவாயில்லை. வருடக்கணக்கில் தேர்தல் இல்லாமல் இதை நடத்திக் கொண்டிருப்பது எப்படி என்பதையும், மக்கள் அங்கு எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்போது ஒரு வருடத்திற்குப் பிறகு தேர்தல் வரும் என்று சொல்கிறார்கள். அடுத்த எப்ரல் 1976-ல் தேர்தல் நடக்கும் என்று சொல்லப்படுகிறது. அதுவும் பிப்ரவரி, மார்ச், எப்ரல் மாதங்களில் தேர்தல் நடக்க முடியாது. ஏனெனில் சட்டசபை, பார்லிமெண்ட் தேர்தல்கள் நடக்க வேண்டிய நேரம் என்றுதான் சொல்கின்றார்கள். நடக்குமோ நடக்காதோ அதுவும் தெரியாது. நடக்க வேண்டிய நேரம் அது. சட்டசபைத் தேர்தலின் போது கார்ப்பரேஷன் தேர்தலை நடத்துவது இயலாத காரியம். எப்ரல் மாதத்திலும் இது நடக்காது. ஆகவே, நான் சொல்வது உத்தியோகப் பற்றற்றவர்கள் உறுப்பினர்களாக உள்ள ஒரு குழு, மதுரை ஆலோசனைக் குழு என்று, 5 அல்லது 6 பேர்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும். மதுரை அல்லது மதுரைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய சட்டசபை உறுப்பினர்கள், எம். எல். ஏ-க்கள், எம். எல். சி-க்கள் அடங்கியதாக அந்தக் குழு அமைக்கப்பட வேண்டும். இதைப் பற்றி அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இதற்கு என்று ஒரு சட்டம் போட வேண்டும் என்ற அவசியம்கூட இல்லை. இந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்பதுகூட அவசியம் இல்லை. இதிலே அரசாங்கம் வேறு ஒன்றும் செய்யவேண்டியதில்லை. அரசாங்கமே ஒரு சிறு உத்தரவின் மூலம் ஒரு மதுரை ஆலோசனைக் கவுன்சிலை நியமித்து, அதன் மூலம் மக்களுடைய கஷ்டங்களைத் தெரிந்து, அவ்வப்போது போக்குவதற்கு தகுந்த ஏற்பாட்டைச் செய்தால் நல்லது.

தேர்தல்கூட இன்னும் 4 அல்லது 5 மாதத்தில் நடத்திவிட்டால், மிகவும் நன்றாக இருக்கும். அதுவும் முடியவில்லை என்று பலவிதமான காரணங்களை முதலமைச்சர் அவர்கள் அடுத்த அவையில் சொல்லியிருக்கின்றார்கள். ஏனென்றால் மத்திய அரசு எலக்ஷன் கமிஷன் உத்தரவிட்டுவிட்டார்கள், எந்தவிதமான திருத்தமும் வோட்டர்கள் ஜாபிதாவில் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டுவிட்டனர் என்று சொன்னார்கள். இப்போது புதிதாக வோட்டர் லிஸ்ட் தயார் பண்ண முடியாத நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். இப்படி அடுத்த அவையில் தெரிவித்திருக்கின்றார்கள் என்பதை பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி இருக்குமானால் நான் சொல்லும் இந்தச் சிறு கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, ஒரு அட்வைசரி கவுன்சில் போட்டு, அந்த அட்வைசரி கவுன்சில்

கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில் யோசனை சொல்ல வேண்டும். நிர்வாகம் நன்கு இயங்கும். ஒரு அரசு ஆணை மூலம் இதை நிறைவேற்றலாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

[பிற்பகல் 6-00]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: துணைத் தலைவரவர்களே, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், நான் அதற்கான விளக்கங்களைச் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கின்றேன். ஆகவே இதிலுள்ள கஷ்டங்கள் எல்லாம் முன்னமே அவர்களுக்குத் தெரியும். முதலில் நகராட்சியாக இருந்த பொழுது 45 வார்டுகள் இருந்தன. அதற்குப் பிறகு மாநகராட்சியான பிறகு, அதை 65 வார்டுகளாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை நம்முடைய மேயர் அவர்கள் குழுவிலே ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தார்கள். அதை 65 வார்டுகள் ஆக்குவதற்காக நடவடிக்கைகள் எல்லாம் எடுத்து அதற்கான ஆய்வுகள் எல்லாம் நடந்து வந்தன. திடீரென்று இந்த ஜனவரி மாதத்திலே நம்முடைய மத்திய தேர்தல் கமிஷனிலிருந்து வந்த உத்தரவு ஸ்தல ஸ்தாபனங்களில் எல்லாம் எந்த வித மாறுதலும் செய்யக் கூடாது, எந்த வித தெரு மாற்றமும் செய்யக்கூடாது, வாக்காளர் மாற்றமும் செய்யக் கூடாது, பஞ்சாயத்துக்கள் மாற்றமும் செய்யக் கூடாது, பஞ்சாயத்துக்களைப் பிரிப்பது அல்லது வார்டுகளை அதிகமாக்குவது போன்ற எந்த வித மாற்றங்களையும் செய்யக் கூடாது 'Until further orders' என்று உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள். அதன் காரணமாக நாம் உடனடியாக 65 வார்டுகள் வைத்துக் கொள்வதா, இல்லை 45 வார்டுகள் வைத்துக் கொள்வதா என்ற பிரச்சினை, சிக்கல் ஏற்பட்ட காரணத்தினாலே, அதை மேற்கொண்டு தனி அதிகாரியினுடைய நிர்வாகத்திலே வைப்பது என்கிற முடிவை சர்க்கார் எடுத்திருக்கிறது. ஆகவே முன்னாடியாகச் செய்ய வேண்டுமா, இல்லை பின்னாடியாக நாளை நீட்டித்துக் கொண்டு போக வேண்டுமா என்பதைப் பற்றி பின்பு யோசிக்கலாம். அதைக் கூட நான் அந்த மன்றத்திலே பேசும் போது சில பேர் சொன்னார்கள். மறுபடியும் 3 மாத காலத்திற்குள் தேர்தல் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதையாகிலும் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். இன்னும் பின்னே செல்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்தது போல், முன்னதாகவே தேர்தல் வைக்க வேண்டுமானால், சட்டமன்றத்திலே ஒரு திருத்த முடிவை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற நிலையையும் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

தனி அதிகாரி இருப்பதனால் சிரமங்கள் அதிகமாக இருப்பதாக நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். நானும் அங்கே போய் பல முறை நேரில் பார்த்திருக்கிறேன். சென்னையிலும் தனி அதிகாரியின்கீழ் மாநகராட்சி செயல்படுகின்ற முறையை நான் பார்த்திருக்கின்றேன். அவர்கள் சொல்வது மாதிரி அவ்வளவு பெரிய கஷ்டம் ஒன்றுமில்லை. குடிநீர்ப் பிரச்சினையைக் சமாளிப்பதற்காக எங்கெங்கு வேலை நடக்கிறதோ அங்கெல்லாம் தனி அதிகாரியையும்



பொறியியல் அதிகாரிகளையும் அழைத்துச் சென்று பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை எல்லாம் கவனித்து வந்திருக்கிறேன். இவ்வாறு துரிதமாக நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் வரி விதிப்பு முறை பற்றியும் இங்கே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நகராட்சி, மாநகராட்சியானதால் அதற்கான வரி விதிப்பு அதிகமாகி இருக்கிறது. இதிலே 13 கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 10 பஞ்சாயத்துக்களை இதிலே இணைத்திருக்கிறார்கள். மதுரை நகராட்சி மாநகராட்சி ஆவதற்கு முன்பாக 3 சட்டமன்றத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 13 கிராமங்களை அதிலே சேர்த்ததிலிருந்து இன்னும் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளும் இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எவற்றை எதிலே இணைத்துவிட்டார்கள் என்று நாம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவைகளுக்கான வார்டுகளைப் பிரித்து இந்தத் தேர்தலை நடத்துவது என்றாலும் அதுவும் கஷ்டமாக இருக்கிறது. இத்தனை பரிசீலனை செய்ததற்குப் பிறகுதான் இதை ஓராண்டு காலத்துக்கு ஒத்தி வைத்திருக்கிறோம். தேர்தலை நடத்தக் கூடாது என்ற நிலையிலே இல்லை. இப்பொழுது அங்கு நியமிக்கப்பட்டிருக்கிற தனி அதிகாரி வேகமாகப் பணிகளைச் செய்கிறார். அவர்கள் வேலைகளை எல்லாம் குறைபாடுகள் ஒன்றுமில்லாமல் செய்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி அங்கு போய் வருகிறவர்கள். அவர்கள் அங்கு போய் ஏதாவது குறைபாடுகளை அவர்களிடம் தெரிவித்து அவர்கள் அதைச் செய்ய முன் வரவில்லையென்று சொன்னால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால், உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கலாம் என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு குழு இருந்தபோது கூட அங்கே "பாலிடிக்ஸ்" இருந்தது. இப்பொழுது தனி அதிகாரி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக துரிதமாக தன்னுடைய பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறார்கள். குழு ஒன்று போட வேண்டுமென்று சொன்னால், அதற்கான விதி முறைகள் எல்லாம் 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திலே இருக்கிறது. அந்த விதி முறைகளை எல்லாம் பார்த்து அப்படிப் போட முடியுமானால், அது பற்றி யோசிக்கலாம் என்று கூறி நான் அமைகின்றேன்.

திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவர் அவர்களே, பார்லிமெண்டிலேகூட சட்டம் கிடையாது. ஒரு மாநிலத்து அரசாங்கத்தைக் கலைத்துவிட்டால் அந்த மாநிலம் சம்பந்தப்பட்ட பார்லிமெண்ட் அங்கத்தினர்களை எல்லாம் கலந்து கொண்டு அதன் பிறகுதான் எல்லா விஷயங்களிலும் முடிவு செய்கிறார்கள். தமிழகத்து சட்ட சபையிலும் மேலவையிலும் மதுரையைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எம். எல். ஏ. க்கள், எம். எல். சிக்கள் ஏழெட்டு பேர் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு அட்வைசரி கமிட்டி ஒன்றை "நான்-அபிசியல்" ஆகக் கூட அரசு வைத்துக் கொள்ளலாம். அரசிடம் குறைகளைச் சொல்வதைவிட அந்த அட்வைசரி கமிட்டியிடம் சொல்வது மாதிரி ஒரு முறை இருக்கலாம். சட்ட அமைச்சர் அவர்களை எல்லாம் கலந்தாலோசித்து முடிவு செய்யலாம். அமைச்சரிடம் இக்குறையைக் கூற வேண்டுமென்று விரும்பினேன். அதற்கு அவர்கள் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: துணைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று சொல்லவில்லை. எந்த நியாயமான கோரிக்கையாக இருந்தாலும் நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக் கொள்ளும். சில மாநிலங்களிலே இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களே இல்லாமல் நிர்வாகம் நடக்கிறது, கவர்னர் ஆட்சியில் நிர்வாகம் நடந்துகொண்டு வருகிறது. அப்படி எல்லாம் நடத்த வேண்டுமென்ற ஆசையில்லை. ஆகவே இப்பொழுது நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், நாங்கள் குழு போடுவதற்குத் தாமதமானாலோ அல்லது போடவில்லையென்றாலோ, அவர்கள் அதற்காகப் பார்க்க வேண்டாம்; ஆங்காங்கு பொறுப்புடையவர்கள் எந்தெந்தக் காரியங்கள் ஆற்ற வேண்டுமோ அதை அங்குள்ள தனி அதிகாரிகளுக்குச் சொல்லலாம். அவர்கள் அதைச் செய்து கொடுக்கவில்லை என்றால், நாங்கள் செய்து கொடுக்கலாம். இன்னும் யார் யார் என்னென்ன நல்ல யோசனை சொன்னாலும், அதையெல்லாம் பரிசீலிக்கலாமென்று சொல்லி இதை நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. எஸ். டி. ஆதித்தன் தலைமை)

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 20/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்டமுன் வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 20/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 20/1975) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(2) 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/1975).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாற்றுத் தலைவரவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவு a (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்"
என்று முன் மொழிகிறேன்.

தமிழ் நாடு 1930 ஆம் ஆண்டு சூதாட்டச் சட்டத்தின் விதித் துறைகள் செயல்படுவதில் குறிப்பாக, பருத்தி விலைகள் மீதான சூதாட்டம் இவைப் போன்ற ஏனைய சூதாட்டங்களையொட்டி அச்சத்தில் காணப்படும் குறைப்பாட்டை நீக்கும் நோக்கத்துடனும், மேற்படி சட்டத்தின் விதித் துறைகளை கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்காக அவற்றில் தகுந்ததிருத்தங்களைக் கூறும் நோக்கத்துடனும், தமிழ் நாடு 1930 ஆம் ஆண்டு சூதாட்டச் சட்டத்தின் தற்போதைய விதித் துறைகளை ஆய்வு செய்ய, அரசு, 1960-ல் குழு ஒன்றை அமைத்தது. பருத்தி விலைகள் முதலியவை மீதான சூதாட்டங்களில் உள்ள தீமைகளை ஒடுக்க, 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தின் விதித் துறைகளும் தமிழ் நாடு 1930 ஆம் ஆண்டு சூதாட்டங்கள் சட்டத்தின் விதித் துறைகளும் போதுமான அளவு கண்டிப்பாக இல்லை என்று, இக்குழு தெரிவித்தது. மேலும், இக்குழு மேற்படி சட்டங்களுக்கு சில திருத்தங்களையும் கருத்தறிவித்தது. குழுவின் கருத்துரைகளை அரசு பரிசீலனை செய்தது. 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் துறைச் சட்டத்தின் சில பிரிவுகளை ஏற்றவாறு திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் செயல்படுவதன் மூலம் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, இச்சட்டத்தின் ஏனைய சில விதித் துறைகளைத் திருத்துவதற்கும் இந்த வாய்ப்பு பயன் படுத்தப்பட்டுள்ளது. 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை செயலுக்கு வந்ததன் காரணமாக, இச்சட்டத்தில் மேலும் சில மாற்றங்களைச் செய்யவும் இந்த வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தில், 34-ஏ, 49-பி ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் கேளிக்கை இடம் எதிலும் நுழைவதற்கான அனுமதிச் சீட்டுகளை அனுமதியின்றி விற்கக்கூடிய நபர்களுக்கு அபராதம் விதிக்க 34-ஏ புதிய பிரிவு வகை செய்கிறது. இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்ய தலைமைக் காவலரின் தரத்திற்கு மேலுள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு இப்பிரிவு அதிகாரமளிக்கிறது. பருத்தி விலைகள் முதலியவை மீதான சூதாட்டத்தினால் ஏற்படக்கூடிய தீமைகளை ஒடுக்கும் நோக்கத்துடன்,49-பிபுதிய பிரிவைச்செயலுக்குக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. பொது இடம் ஒன்றில் அவை கூட்டம், அல்லது ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்பவர்கள் மின்சார விளக்குகளைத் தவிர போதுமான அளவு பெட்ரோமாக்ஸ் விளக்குகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை அவசிய

a377–382 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாக்கும் நோக்கத்துடன் மேற்படி சட்டத்தின் 71-வது பிரிவில் (**) என்னும் புதிய பகுதி ஒன்றைச் சேர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற் சொன்ன தீர்மானத்தை ஏற்கவேண்டுமென இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : முன்மொழியப் பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 17/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

(பிற்பகல் 6-10)

திரு. ஜி. சுவாமிநாதன் : மாற்றுத் தலைவரவர்களே, சென்னை மா
நகரக் காவல் துறைச் திருத்தச் சட்ட முன் வடிவில், பருத்தி சூதாட்டம்
பற்றி மட்டுமல்லாமல், பல்வேறு முக்கியமான திருத்தங்கள் இடம் பெற்
றுள்ளன. அதைத்தான் சட்ட அமைச்சரவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.
அதிலே முக்கியமாக என்னுடைய கவனத்தைக் கவர்ந்தது 75-வது
பிரிவாகும். பொதுக் கூட்டங்களில் குழப்பம், ரகளை ஏற்படும்போது,
ஒழுங்கு செய்வது பற்றி இச்சட்ட முன் வடிவில் திருத்தம் கொண்டுவரப்
பட்டுள்ளது. தமிழ் நாட்டில் இப்போது பொதுவாக பல இடங்களில்,
பொதுக் கூட்டங்களில் குழப்பம், ரகளை நடைபெறுகிறது. தஞ்சையிலே
நடந்திருக்கிறது; சென்னையிலே நடந்திருக்கிறது. மேலும் தேர்தல்
நெருங்க நெருங்க பொதுக் கூட்டங்களில் ரகளைகளும், குழப்பங்களும்
அதிகமாக ஏற்பட இடமிருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரை
யில், சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன்.
கடந்த 18 ஆம் தேதியன்று கோகலே ஹாலில் ஓட். எம். ஐ. ஏ. சார்பில்
ஒரு பொதுக் கூட்டம் நடத்தினார்கள். முன்னாள் மத்திய அமைச்சர்
திரு. தாரியா அவர்களும், திரு. கிருஷ்ணகாந்த், எம்.பி. அவர்களும்
அந்தப் பொதுக் கூட்டத்தில் பேசினார்கள். அவர்கள் பேசும்போது, நம்
முடைய நாட்டில் இருக்கக்கூடிய நிலைமை எதிர்க் கட்சிக்காரர்களுக்கு
அச்சத்தைத் தருவதாக இருக்கிறதென்றும், திரு. ஜெயப் பிரகாஷ்
நாராயண் அவர்களும் திருமதி இந்திரா காந்தி அவர்களும் நம்முடைய
நாட்டினுடைய எதிர்காலம் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டு
மென்றும் சொன்னார்கள். அச்சமயத்தில் புதுக் காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்தவர்கள் செருப்பை எடுத்து வீசியும், கல்லை எறிந்தும்
அடித்திருக்கிறார்கள். அப்படி கல்லை எடுத்து அடித்த
வர்களை கூட்டத்தில் உள்ளவர்களே பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.
அவர்கள்மீது வழக்குப் போடப்படுமென்று சொல்லப்பட்டது. ஆனால்
பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்க்கிறபோது, அவர்களெல்லாம்
ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களென்றும், திட்டவட்டமான



வழக்கு எதும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொல்லப் பட்டிருந்தது. கூட்டத்தில் ரகளை செய்தது வாஸ்தவம்; செருப்பு வீசியது வாஸ்தவம்; கல் எறிந்தது வாஸ்தவம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்கைப் பதிவு செய்யாமல் "பெயில்"-ல் விட முடியாது.

திரு. ஜி. சுவாமிநாதன் : 5 நபர்களை மக்கள் பிடித்துக் கொடுத்தார்களென்று சொல்லப்படுகிறது. திட்டவட்டமான வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லையென்று பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். பதிவு செய்யாமல் எப்படி கைது செய்தார்கள்; எப்படி ஜாமீனில் விட்டார்கள் என்பது தெரியவில்லை. இப்போதிருக்கிற சட்டப்படி, சாதாரணமாக ரகளை, குழப்பம் செய்வார்களானால், அவர்களுக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனையும், 50 ரூபாய் அபராதமும் விதிக்கலாம். அதை மாற்றி, ஆயிரம் ரூபாய் அபராதமும் 6 மாதம்வரை சிறைத் தண்டனையும் அளிக்கலாமென்று போட்டிருக்கிறோம். கல்கத்தாவில், திரு. ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்களின் காரைச் சூழ்ந்துகொண்டு — பொது இடத்தில் — ரகளை செய்தார்கள் என்பதைப் பற்றி பத்திரிகையில் பார்த்தோம். அடுத்த மாதம் முதல் வாரத்தில் அவர் சென்னைக்கு வருவதாக இருக்கிறது. பதட்டமான நிலைமை எல்லோரிடத்திலும் இருக்கிறது. திரு. தாரியா, திரு. கிருஷ்ண காந்த் ஆகியோர் பேசிய கூட்டத்தில் நடந்த ரகளை போன்று, திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் வரும்போது நடைபெறுமோவென்ற பயம் மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தச் சட்டத்தை நல்ல முறையில் பயன் படுத்தி, பொதுக் கூட்டங்களில் ரகளை செய்பவர்கள் யாராக இருந்தாலும் போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்தப் புதிய திருத்த மசோதாவில் சில முக்கியமான மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. "Any Police Officer may arrest without warrant any person committing in his view any offence punishable under this Act". என்ற ஒரு ஷரத்தும், 34 (a)-ல் இரண்டாவது உட்பிரிவில் "any Police Officer—not below the rank of a Head Constable" என்றும் இருக்கிறது. அரசியலிலே, ஆளுங்கட்சி எதிர்க்கட்சியாவதும், எதிர்க்கட்சி ஆளுங் கட்சியாவதும் சர்வ சாதாரணம். ஒரு ஹெட்-கான்ஸ்டபிள்கூட வாரண்ட் அல்லாமல், யாரையும் எந்த நேரத்திலும் கைது செய்யலாமென்று அதிகாரம் கொடுப்பது ரொம்பவும் ஆபத்தானது. அவர்கள் செய்கிற குற்றம், எந்தக் கட்சி அரசாங்கம் நடத்தினாலும், அந்த அரசாங்கத் தின் தலையில்தான் விழும். இப்படிப்பட்ட ஸ்வீப்பிங் பவர்சை ஹெட் கான்ஸ்டபிள்களுக்குக் கொடுப்பது நல்லதாவென்று யோசிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [1975 ஏப்ரல் 21

நாமெல்லாம் அரசியல் கட்சிகள் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறோம். ஒரே நாளில் 8 இடங்கள் அல்லது 10 இடங்களில் கூட்டம் போடுகிறோம். முன்பெல்லாம் மைக் லைசென்ஸ் வாங்க இரண்டு ரூபாய் தான் கட்டணமாக இருந்தது. அந்தக் கட்டணத்தை இப்போது 20 ரூபாயாக்குவது, பெரிய அரசியல் கட்சிகளினுடைய நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதாகும். இது என்னுடைய கட்சிக்கு மட்டுமல்ல; ஆளுங் கட்சிக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஒரு நாளைக்கு 10 இடங்களில் கூட்டங்களை நடத்துகிறோம். போலீசுக்குக் கட்டணமாக 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றால், எப்படி கூட்டம் நடத்த முடியும்? முன்பு ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் இருந்தது. அதை 20 ரூபாய் என்று மாற்றுவது நியாயமல்ல. ஆளுங் கட்சிக்குண்டான கஷ்டத்தை நாங்களும் அனுபவித்துக்கொள்கிறோம். இது மிக ஆபத்தான விஷயம். இதுமாதிரியான விஷயம் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறது. 10 நாட்களுக்கு முன்பு மது அருந்துவதற்கான பெர்மிட்டுக்கு 500 ரூபாய் கட்டணமென்று சொன்னார்கள். அது, நீதிமன்றத்திற்குப் போய், தள்ளுபடி செய்யும் அளவுக்கு வந்து, இப்போது 100 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். "லைசென்ஸ் பீ" என்பது அதற்கான செலவைச் சரிக்கட்டுவதாக இருக்க வேண்டும். "லைசென்ஸ் பீ" மனு வாங்க அதை எழுத, லைசென்ஸ் கொடுக்க என்ன செலவாகுமோ அதைத்தான் வாங்க வேண்டும். 20 ரூபாய் வாங்குவது பொருத்தமல்ல. நாளைக்கு இது கோர்ட்டுக்குப் போனால் எப்படியாகுமென்று தெரியவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். எல்லா அரசியல் கட்சிகளுக்கும் நடைமுறையில் கஷ்டம் ஏற்படத்தான் செய்யும். 20 ரூபாய் என்பதை கோர்ட்டில் அனுமதிப்பார்களா என்று பார்க்கவேண்டும்.

கடைசி ஷரத்தில், **for every licence or permit granted under this Act, the Commissioner may levy such fee not exceeding Rs. 20** என்று போடப்பட்டிருக்கிறது. ஆகையால் 20 ரூபாய் வரைக்கும் போடலாம். ஆனால் அப்படிப் போடுவதை 2, 3 ரூபாயோடு நிறுத்திக்கொள்ளலாமென்று நாம் சொல்லலாம். அவசியமானால் 20 ரூபாய் வாங்கிக்கொள்ளலாமென்று போடத் தேவையில்லை. அப்படிப் போட அவசியமில்லை. அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் கடுமையான உத்தரவு ஒன்றை அனுப்பி விட வேண்டும். போலீஸ் கமிஷனர் 2 அல்லது 3 ரூபாய்க்கு மேல் வாங்கக்கூடாதென்று உத்தரவு அனுப்பவேண்டும். ஏற்கெனவே இதைப் பேரவையில் நிறைவேற்றி விட்டார்கள். திருத்தம் கொடுத்தால் "சரி, கவனிக்கலாம்" என்று சொல்லலாம். அதற்கு ஒரு வழி சொல்கிறேன். நடைமுறை உத்தரவு மூலம், இந்தக் கட்டணத்தை "ரெஸ்டிரிக்ட்" பண்ணலாம். இல்லையென்றால் அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டங்கள் நடத்துவது கஷ்டம். முன்பு, நாங்களெல்லாம் ஒரு ரூபாய் செலவில் "பப்ளிக் மீட்டிங்" நடத்தியிருக்கிறோம். அப்போது மைக் கிடையாது. சோடா பாட்டில் $\frac{1}{2}$ அணா; பெட்ரமாக்ஸ் லைட் 6 அணா; மாலை $2\frac{1}{2}$ அணா. 1926–27லிருந்து 1930, 1935 வரை ஒரு ரூபாய் வைத்து பொதுக்கூட்டம் நடத்தி, கட்சியைக் காத்தவர்கள். அந்த



1975 ஏப்ரல் 21] [திரு. கே. இராஜாராம்]

மாதிரியெல்லாம் செய்தோம். அப்போது ஒரு ரூபாய் வசூலிப்பதே மிகவும் சிரமம். அந்தக் காலம் மிகவும் கஷ்டமான காலம். இங்கே திரு. ராஜமாணிக்கம் இருக்கிறார்; அவருக்கு நன்றாகத் தெரியும். இப்போது சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் பொதுக்கூட்டம் நடத்த வேண்டுமென்றால், குறைந்தது 600 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை வேண்டும். இப்படி பொதுக்கூட்டங்கள் நடத்தும்போது, போலீஸ் லைசென்சுக்கு 20 ரூபாய் கட்டணம் என்று சொல்வது நல்லதல்ல. எனவே கண்டிப்பான உத்தரவை அனுப்பி விடுங்கள். அதற்கான ஒரு வாக்குறுதியை அமைச்சரவர்கள் அளிக்க வேண்டுமென்று தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6–20)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்திலே ஏதோ பொதுக்கூட்டத்திற்கு 20 ரூபாய் வரைக்கும் போடலாம் என்று போடவில்லை. இந்தச் சட்டத்தின்படி பல்வேறு அனுமதிகள், லைசென்ஸ்கள் கொடுக்கின்றோம். அதிலே ஒவ்வொரு அனுமதிக்கு இவ்வளவு என்றில்லாமல், குறிப்பிட்ட ஒன்றுக்கு இவ்வளவு என்று இல்லாமல், "மொத்தமாக 20 ரூபாய் வரையிலும்" என்று வைத்திருக்கிறோம். ஆக, நிச்சயம் பொதுக்கூட்டத்திற்கு உயர்த்தப்படமாட்டாது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவிலே "வாரண்ட் இல்லாமல் கைது செய்யலாம்" என்று இருப்பதுபற்றிச் சொன்னார்கள். அது ரொம்பப் புதுமையில்லை. எப்போதுமே சில குற்றங்களுக்கு, அவைகள் "காக்னைசிபில் அஃபென்ஸ்" ஆக இருக்குமானால், கோர்ட்டுக்குச் சென்று வாரண்ட் வாங்காமல் அரஸ்ட் செய்யலாம் என்று இருப்பது உண்மை. இந்தக் குற்றத்தைப் பொறுத்த அளவிற்கு, சில தவறான செயல்கள் நடக்கும். அதாவது, என்டர்டெய்ன்மெண்ட் என்ற பெயரிலே சில தவறான செயல்கள் நடக்கும் படங்களுக்குச் செல்வதற்கு டிக்கட் விற்பதைப் பற்றிய குற்றம். ஆகவே, போலீஸார் கோர்ட்டுக்குச் சென்று வாரண்ட் வாங்காமல் கைது செய்ய உரிமையுண்டு என்பது சரியானது என்றுதான் நினைக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சில அரசியல் பிரச்சினைகளைப் பற்றி இங்கே விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு அந்தக் கருத்துக்களைச் சொன்னார்கள் என்று நினைக்கின்றேன். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில், பொதுவாக அரசியல் கட்சிகள் மிகவும் கண்ணியத்தோடு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நடக்கின்ற ஒரு மனப்பான்மை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. மற்ற மாநிலங்களைப்போல இங்கே அதிக அளவுக்குச் சச்சரவுகள் இருப்பதாகச் சொல்ல முடியாது. புதிதாகச் சில கட்சிகள் தோன்றும்போது, அந்தப் பரபரப்பு சில சமயங்களிலே இருப்பது உண்மை. அப்படி இருப்பது நீண்டநாட்கள் தொடராது என்றுதான் நினைக்கின்றேன். மிகக் குறுகிய காலத்துக்கு

[திரு. செ. மாதவன்] [1975 ஏப்ரல் 21

அது இருந்து பின்பு மாறிவிடும் என்று கருதுகிறேன். அவர்கள் சொன்னது போல, முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர், ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் இங்கே பேசும்போது நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது வருந்தத்தக்க நிகழ்ச்சி. அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி தமிழ் நாட்டிலே நடைபெற்றிருப்பது நமக்கெல்லாம் ஒரு கெட்ட பெயரை உருவாக்கும் என்றுதான் நானும் நினைக்கின்றேன். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், காவல்துறை அதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாது முன்கூட்டியே எச்சரிக்கையாக நடந்துகொள்ள அத்தனை முயற்சிகளும் எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியைத் தருகின்றேன். இது போன்ற நிகழ்ச்சிகளில் என்ன சங்கடம் என்றால், பேசுவோரும் ஒரு கட்சிக்காரர், இதுபோன்ற செயலிலே ஈடுபடுவோரும் ஒரு கட்சிக்காரர். ஆகவே, காவல்துறை முன்கூட்டியே அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். ஆக, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், அரசியல் கட்சிகள் பண்போடு, மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை வளர்க்கின்ற வாய்ப்பு இருக்கும் என்றுதான் கருதுகிறேன். அவர்கள் அண்மையில் இங்கே வர இருக்கின்ற திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முன்னோடியாக இதுபோன்ற கருத்துக்களை அவர்கள் தெரிவிக்கின்றார்களே என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது. கல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சியைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கு தகராறு செய்தவர்களை அங்குள்ள ஒரு அமைச்சரே தலைமையேற்று நடத்தியதாகவும் செய்திகள் எல்லாம் வருகின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சியைக் கூறி, திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் வரப்போகிறார் என்ற ஒரு செய்தியையும் இணைத்து அவர்கள் பேசியது எங்களுக்குத் தர்ம சங்கடத்தை அளிக்கின்றது. தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் மீது எனக்கு முழு நம்பிக்கையுண்டு. அவர்கள் எந்த அளவுக்கு உணர்ச்சி வயப்பட்டாலும் நாட்டின் முக்கியமான தலைவரை, குறிப்பாக காந்திஜியோடு வாழ்ந்து தியாகம் செய்த ஒரு பெரிய தலைவரை மதிக்கின்ற பண்பு தமிழ்நாடு அரசியல் கட்சிகளிடத்திலே இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நிச்சயமாக அவர்கள் வரும்போது எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் மிகுந்த கண்ணியத்தோடு இருப்பார்கள் என்றும், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் வரும்போது தமிழ்நாட்டு மக்கள் தயங்காது, உணர்ச்சியோடு, உற்சாகத்தோடு வரவேற்பு தருவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காது இருக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட எதுவும் நடக்காது என்ற உறுதியை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவ்வாறு எந்தவித அசம்பாவிதமும் நடக்காதவாறு தமிழகக் காவல் துறை எல்லா நடவடிக்கைகளையும் மிகக் கவனத்தோடு எடுக்கும் என்றும் நான் உறுதி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளைத் தவிர வேறு பிரச்சினைகள் இந்த மசோதாவைப் பற்றிக் கூற முடியாது. சட்டம், ஒழுங்கு இவைகளைப் பாதுகாப்பதற்கு எந்த அளவுக்கு அதிகாரம் தேவையோ, அந்த அளவுக்குத்தான் அதிகாரம் எடுத்திருக்கிறோம் என்று கூறி இதை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.



1975 ஏப்ரல் 21]

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவாகள் தமிழகத்திற்கு வருகின்ற நேரத்தில் கோவையிலும், சென்னையிலும் கலவரம் செய்வதற்கு ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் திட்டமிட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. வங்காளத்தைப் போலவே, இங்கும் நடக்காமலிருக்க முன்னெச்சரிக்கையாக தகுந்த பாதுகாப்புகள் செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட தகவல் இருக்குமானால், காவல் துறை தகுந்த முறையில் கண்காணிக்கும். அவர்களுடைய கருத்து பிடிக்காதவர்கள் தமிழகத்தில் இருந்தாலும், அவர்கள் கண்ணியத்தோடு கடமையுணர்ச்சியை உணர்ந்து அசம்பாவிதம் எதிலும் ஈடுபடாது, ஜனநாயகத்தில் எல்லோருக்கும் பேச்சுரிமை உண்டு என்ற நம்பிக்கையோடு நடந்து கொள்வார்கள்: அதிலும் குறிப்பாக அந்தக்கட்சி நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1975) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1975).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவுடு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 12/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

இந்தத் திருத்த சட்ட வரைவு மூலச் சட்டமான தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தை விரிவாக்கவும், இன்னும் உணவகங்களிலே பணிபுரியும் ஊழியர்களுக்கு பல நல்ல சலுகைகள் கிடைக்கவும் வழி வகை காணுகிறது. மூலச் சட்டத்தின்படி சிற்றுண்டிச் சாலைகள், தங்க வசதியுடன் கூடிய ஹோட்டல்கள்தான் சட்ட வரையறைக்குள் வருகின்றன. தற்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற திருத்தத்தின்படி எந்த உணவகங்களும், ஹோட்டலும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களினால் நடத்தப்படுகிற அல்லது அச்சங்கங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட அத்தனை உணவகங்களும் மூலச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுவரை கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வரும் பல உணவகங்கள் மூலச் சட்டத்தின்கீழ் தற்போது வர இருக்கின்றன.

இன்னும் உணவு விடுதிகளை பதிவு செய்ய இருக்கும் விதிமுறைகள் திருத்தி அமைக்கப்பட்டு உணவகங்கள் பதிவு செய்யாமல் நடத்தப்படுவது குற்றம் என தெளிவாக திருத்தச் சட்டம் வகை செய்கிறது. இன்னும் தொழிலாளர்களின் வேலை நேரங்கள், அவர்களுக்குச் சீருடை வழங்குதல், அவர்களுக்கு விடுமுறை வழங்குதல், உணவகங்களிலே பணியாளர்களின் வேலை நேரங்களைக் குறிக்கும் அறிவிப்புகளை விளம்பரம் செய்தல் ஆகியவற்றிற்கான விதிமுறைகள் செய்தல் பற்றியும் திருத்த மசோதா வழிவகை காணுகிறது. இன்னும் அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின் (International Labour Organisation) பரிந்துரையின்படி உணவகங்களிலே பணிபுரிவோரின் குறைந்த வயது வரம்பை 14 லிலிருந்து 16 ஆண்டுகளாக உயர்த்தவும் இந்தச் சட்ட வரைவு வகை

@ 382–391 ஆம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.





செய்கிறது. ஆகவே, உணவகங்களிலே பணி புரியும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை இந்த மேலவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

* THIRU A. R. DAMODARAN : Sir, in offering my remarks on this Bill that has been brought before this House, I wish to make it clear that I generally support all the amendments that have been brought forth in so far as they relate to the improving of conditions for employees iin such catering establishments. Certain welfare measures which must be adopted for employees in catering establishments have been included in this Bill and more particularly those relating to the wages payable to the staff as well as the dresses that may be given to the staff and I wish to state that in so far as these provisions are concerned, we are in full agreement with the Government.

However, there are some changes that have been made in the main Act on which I should like to make certain comments because I have also given notice of certain amendments which I hope the House will be pleased to consider and the most important of them is this. As the Hon. Minister mentioned when he introduced his Bill, it is his intention to bring within the purview of this Act all catering establishments irrespective of their size. On this ,Sir, I believe that small restaurants or small hotels employing less than ten employees should not be brought within the provisions of this Act because it will mean a tremendous burden on the establishment. It is not only a burden on the establishment, Sir, but I think it is unnecessary to bring under this Act ordinary hotels where they sell 'Iddlis' and 'Dosais' and where I believe three or four employees are taken in the establishment. If we have registration and inspection in respect of such hotels, it will result in the cost going up in such catering establishments and we may find that some of these establishments which now give eatables at very cheap rates may not be able to do so if they have to follow all the provisions of this Act. The other major change which has been brought forth in this Bill is the rather arbitrary powers that have been granted to the Inspector in the grant of the Registration Certificate to a catering establishment. The original Act was very simple and I would like the Hon. Minister to explain why

he considered it necessary to make such drastic changes as to impose a number of conditions, which, in my opinion, are certainly not necessary, in the new Bill that has been brought forth. For example, it has been stated in the Act, that the Inspector shall, in deciding, whether to grant or refuse a Registration Certificate, have regard to the following matters, namely, the suitability of the place or premises which is proposed to be used as a catering establiashment. Sir, I do not think the Inspector need go into the suitability of the place or premises because this is a thing which the Public Health authorities are already doing. Under the District Municipalities Act and the Panchayats Act, either the Municipal Health Officers or the District Health Officers already decide whether a place is suitable for conducting a catering establishment or hotel and I do not see any reason why additional power should have been granted to the Inspector to meddle in this affair because while we bring forth all these Acts withvery good intentions, what we are really doing is strengthening of a bureaucracy which is not yet fit to carry out all these duties and we may only encourage unnecessary corruption, in getting Registration Certificates for starting catering establishments.

A second thing that has been stated is highly objectionable. Here it is stated that the previous experience of the employer shall be one of the considerations before a Registration Certificate is granted. Now, running a hotel, I am sure, is not a hereditary right of any person. I see no reason why if I wish to start a hotel today, although I have no previous experience at all, I should be prevented from doing so. This gives a power to the Inspector to go into the previous experience of the employer. Why was this considered necessary in this Act ?

(பிற்பகல் 6-30)

The third point is about the financial resources of the employer including the financial capacity to meet the demands arising out of the provisions of the law for the time being in force relating to the welfare of labour. May I ask the Hon. the Minister for Labour who is in-charge of so many industrial establishments and who is also administering the Shops and Establishments Act whether they go into the financial resources of every employer who starts an industry or a retail business before a Registration Certificate is granted ? For example, in my own business, if we take the petroleum trade, if I start a petrol pump and I apply to the Commercial Taxes authorities for a Registration Certificate, I do not think the Commercial Taxes authority has any right to go into my financial capacity to run the business. As in the case of educational institutions, where certain endowments are required because the managements may not pay the salaries to the teachers if the Hon. Minister feels that I start a business and I may not



pay my employees their wages, then what he should demand is adequate security which should be clearly defined in the Act. To give an Inspector arbitrary powers of going into my financial horoscope is not a very desirable condition which should be put in the Act.

The fourth condition is whether the application is made *bona fide* on behalf of the employer himself or benami on behalf of another person. Here, I think the Inspector is trying to usurp the provisions of the Income-Tax Act which will go into all these considerations. After all in starting a catering establishment, if 'A' puts up the money and 'B' sets up the catering establishment in his name, for certain income-tax purposes I do not seriously see why the Hon· the Minister for Labour of this Government should be concerned whether it is a *bona fide* transaction or a benami transaction. What is the harm ? All that we want is a catering establishment which will give us eatables. What does it matter whether A, B, C, or D is the owner of the establishment ? There must be some reason for this drastic amendment to have been brought forth and I would like the Hon. Minister to explain.

The fifth condition is the welfare of labour in the locality and the interest of the public generally. Sir, what is the meaning in giving an Inspector such powers to decide about the welfare of labour in the locality ? Does it mean that if I start a hotel in a particular place where there is another hotel next door, it will affect the welfare of the employees of that hotel or does it mean that the interests of the public will be affected ? Why does the Hon. Minister want to take up the responsibility of deciding where hotels should be started ? All that he should be concerned about is that the employees in the catering establishments, after they put in their six months of service, should be entitled to the benefits of the Provident Fund Act, the Gratuity Act, etc. Further if an employee is discharged, he should not be dishonourably discharged and he should be paid the wages that are due to him. In so far as these welfare measures are concerned, I am fully in support of all the measures that the Hon. Minister has brought forth.

Therefore, I would strongly plead that we should revert to the old system where the Inspector had merely the power to record the application, and once permission has been given by the Public Health Authorities there should have been no reason for him to refuse registration on any other ground. I realise that because the Bill has already been passed in the Lower House, there might be difficulty in accepting the amendments that we have proposed, but since the rule-making powers of Government are enormous in such cases, I am sure that if the Hon. Minister pauses to think on these matters, he may find it totally unnecessary to prescribe all these prohibitive clauses and that he may relax them so that small catering establishments are not unduly harasede·

[Thiru A.R. Damodaran] [1975 ஏப்ரல் 21

The other provision states that any existing catering establishment or a new catering establishment should apply, within thirty days from the commencement of work, for a Registration Certificate. Well, Sir, this is very good, every catering establishment should do that. But why does the Hon. Minister not apply the same condition to his Inspector to grant the Registration Certificate ? Unfortunately, we find that the Inspector has a time-limit of three months in which he may grant or refuse. Sir, our officials sometimes delay these things unnecessarily and it promotes a lot of corruption. We areall businessmen and we know what it means to get a Registration Certificate or a licence and to what extent we have to go to speed up matters. I think that, if you are prescribing a lime-limit of thirty days for the applicant for registration, in all fairness, you should also see that the Inspector who is the issuing authority, either gives a certificate within thirty days or refuses the certificate within thirty days. I hope that this will also be considered.

The last point relates to a minor definition about the extra wages payable to the workers when they work on a holiday. Sir, we have had some experience of this. When we have paid twice the normal wages to labourers, some Labour Officers have stated that the wages should be in addition to the normal day's wage. In other words, in addition to one days' normal wage, they insist on payment of an additional two days' wages to labourers and, therefore, in the Act, this should be clearly defined. I think the intention is that one day's extra wage should be paid if the labourer works on a holiday. The reason for my giving notice of an amendment is only to get a clarification on the floor of the House from the Hon. Minister, as this would help the officers to interpret the law correctly. I have no other comments to make excepting to repeat once again that while I whole-heartedly welcome the measures that have been brought forth to see that the employees are protected from exploitation by unscrupulous owners of catering establishments, at the same time, we must see to it that small catering establishments are excluded and that arbitrary powers are not given to the Inspectors to refuse registration certificates to any catering establishment. Thank you, Sir.

(பிற்பகல் 6–40)

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம் :</u> துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இந்தச் சட்டத்திலுள்ள நோக்கத்தில் குறைந்த பட்ச ஊழியர்களுடைய எண்ணிக்கையை 10லிருந்து பத்துக்கு அடுத்த வரம்பைப் போட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்குக் காரணம் சிறுசிறு நிறுவனங்களிலே இருக்கக் கூடிய ஊழியர்களுக்குக் கூட தக்க பாதுகாப்பு தர வேண்டும் என்கிற அடிப்படை நோக்கம்தான்



1975 ஏப்ரல் 21] [திரு. க. இராசாராம்]

இதுவரையில் அப்படிப்பட்ட சிறு சிறு நிறுவனங்களை அதிகாரிகள் போய்
வற்புறுத்தியதாகவோ, தொல்லை தந்ததாகவோ தகவல் இல்லை. அப்
படிப்பட்ட சிக்கல்கள் ஏதாவது இருக்குமானால், இதற்குரிய விதிவிலக்கு
அளிப்பதற்கு இந்தச் சட்டத்திலே செக்ஷன் 3 வழிவகை செய்திருக்கிறது
என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இது ஏற்கெனவே 1958-ஆம் ஆண்டிலேயிருந்து இருக்கிற சட்டம்தான்.
அதிலே இருக்கிற சிரமங்களை எல்லாம் போக்குவதற்காகத்தான் இந்தச்
சட்டத் திருத்தங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"நோ அப்ஜெக்ஷன் சொ்டிபிகேட், ரெஜிஸ்ட்ரேஷன் சொ்டிபிகேட்"
பற்றி எல்லாம் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது
சுகாதாரத் துறையை மட்டும் பொறுத்ததல்ல. உணவகங்களுடைய நிலை
யையும் பொறுத்தது. நிதி நிலைபற்றி உங்களுக்கு என்ன குறை
என்று கேட்டிருக்கிறார்கள். நியாயமான கேள்வியாகத்தான் எனக்குப்
படுகிறது. நிதி நிலையைப் பொறுத்த வரையில், உணவகங்கள் ஓரளவுக்கு
நல்ல முறையில் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தப்
பிரிவு வந்திருக்கிறதே தவிர, வேறு எதற்காகவும் அல்ல. தனிப்பட்ட
முறையிலே தனியார் நடத்துகிற நிர்வாகங்களுக்குச் சிரமங்களைத் தர
வேண்டுமென்ற அடிப்படையிலே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட
வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூலியைப் பொறுத்த வரையில், "வேஜஸ்" என்ப
தற்கு இந்தச் சட்டத்திலே ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"(13-A) 'wages' means the basic wages, dearness allowance, the
cash equivalent of the meals and tiffin supplied to the employees free
of charge and the value of any other amenity or of service or of any
concessional supply of foodgrains or other articles which can be com-
puted in terms of money, but does not include a bonus."

என்கிற ஒரு விளக்கத்தை அதிலே நாங்கள் அளித்திருக்கிறோம். ஆகவே
அந்த விளக்கத்தின் அடிப்படையிலே கூலியை தொழிலாளர்கள் பெறு
வதற்கு, இரட்டிப்பு கூலி தந்தால் போதும் என்ற அளவிலே "twice
the wages" என்று நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம் என்பதை நான்
இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்று மாத காலத்தை ஒரு மாத காலமாக ஆக்க வேண்டுமென்று
ஒரு திருத்தம் தந்திருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய நிர்வாக இயந்
திரத்தைப் பற்றி திரு. தாமோதரன் அவர்கள் நன்றாக அறிந்தவர்கள்
என்று நம்புகின்றேன். மூன்று மாத காலத்திலே ஒரு காரியம் நடப்பது
என்பது கடினமான காரியம். அதை ஒரு மாத காலம் ஆக்குவது,
ரெனிவலுக்குத்தான். ஓட்டலை மூடிவிட்டு விண்ணப்பங்கள் போட வேண்டு
மென்ற சூழ்நிலை ஒன்றும் இல்லை. அந்த வகையிலே மூன்று மாதத்தை
ஒரு மாத காலம் என்று சொல்லுவதை விட "ரீசனபிள் பீரியட்" என்று
இருக்க வேண்டுமென்று நான் அதிகாரிகளிடத்தில் கலந்து பேசியபோது

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 21

3 மாத காலம் என்று வைத்திருப்பதே அவர்களுக்கெல்லாம் நன்மை பயக்கக் கூடிய ஒன்று என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையில் இந்தத் திருத்தத்தை அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மூன்று திருத்தங்களைத் தந்திருக்கிறார்கள். மூன்று திருத்தங்களையும் திரும்பப் பெற்று இந்த மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: துணைத் தலைவரவர்களே, "கிளாரிபிகேஷன்". கேட்டரிங் நிறுவனம் ஆரம்பிப்பதற்காக லைசென்ஸ் வாங்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. அந்த முறை இருக்கிற காரணத்தினால், சில நேரங்களிலே "அப்ளை" செய்து அது வருவதற்கு காலதாமதமானால், இடையிலேயே அந்த ஓட்டலை நடத்திக்கொள்ளலாமா, அப்படி நடத்துவதற்கு சட்டத்திலே இடமிருக்கிறதா, "அப்ளை" பண்ணின உடனே இம்மீடியட்டாக லைசென்ஸை எதிர்பார்த்து ஓட்டலை நடத்தலாமா என் து போன்ற சந்தேகங்கள் எனக்கு இருக்கிற காரணத்தினால், மேலே நான் சொன்னதற்கெல்லாம் சட்டத்திலே இடமிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்பிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: துணைத் தலைவரவர்களே, கேட்டரிங் லைசென்சுக்காக விண்ணப்பம் வந்து சேர்ந்த பிறகு, உரிய காலத்திற்குள்ளாக அதைப் பரிசீலித்து அதற்கான லைசென்ஸை வழங்குவதில் இலாகா வேகமாகப் பணியாற்றும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் விண்ணப்பித்த உடனே எல்லாக் காரியத்தையும் சாதித்து விடலாம் என்று ஆரம்பித்து விட்டால், இந்த வகையிலே நாடு தாங்காது. (சிரிப்பு) விண்ணப்பித்ததற்கு பிறகு முறைப்படி தான் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன் வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2-ம், 3-ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 4.

THIRU A. R. DAMODARAN: Sir, I beg to move the following amendment:—

'In clause 4, *add* the following proviso to the proposed new section 3-A:—

**"Provided that this shall not apply to catering establishments employing less than 10 persons on permanent basis."**



1975 ஏப்ரல் 21]

THIRU G. SWAMINATHAN: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the Hon. Minister's explanation, I want to say that I am fully in agreement with the statement that even in respect of catering establishments employing less than 10 persons, the employees of such catering establishments should be protected. But it is not necessary to bring those establishments within the purview of the Catering Establishments Act to give the employees such a protection, because we can always bring such restaurants and hotels under the Shops and Establishments Act or any other Act in force; in my opinion it is not necessary that these should be forced to get registration certificates under the present Act to see that justice is done to employees. That is the reason why I state that because we have a number of small canteens, tea shops, etc, even one-tenth of these establishments could not be registered even within a period of five years. I am prepared to throw a challenge and say that 90 per cent of these establishments will not be registered knowing the way in which our administration runs. I, therefore, wish to lessen his own burden and to see that he is able to cover 100 per cent of all those establishments where there are more than ten workers. It is not as if we want the employees in these small catering establishments not to get the full benefits of law in regard to payment of wages as prescribed. I do not think registration is necessary to ensure that these workers get these benefits. There is the Shops and Establishments Act. Why should not that Act be made enforceable in the case of these establishments ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஏற்கனவே 1958ஆம் ஆண்டிலே இயற்றப்பட்ட கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்டிலேயே இதெல்லாம் இருக்கிறது. ஆகவே இதில் புதிதாக ஒன்றுமில்லை. 10 பேருக்கு மேலே என்று போட்டுவிட்டால், பல பேர் 9 பேர் வரையிலே தான் கணக்கிலே வைப்பார்கள். அந்தச் சங்கடம் வந்துவிடும். இதுவரை அதனால் எந்தவிதத் தொல்லையும் சின்ன கடைக்கோ அல்லது மற்ற கடைக்கோ வந்ததாக எந்தவிதத் தகவலும் அரசுக்கு இல்லை. ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தினால் ஏதோ ஒரு பெரிய மாறுதல் வந்துவிடப் போவதில்லை. அல்லது ஏற்கனவே இருக்கிற சட்டம் இந்தச் சட்டத்தினால் கடைப்பிடிக்கப்படாமல் போய்விடும் என்ற குறைபாடும் இல்லை. (சிரிப்பு). ஓரளவிற்கு இதை நிறைவேற்றுவதற்கு ஒத்துக்கொள்ள வேண்டும்.

Thiru A. R. DAMODARAN: Sir, since the Hon. Minister says, that this amendment will also be as inactive as the original Act of 1958, I withdraw my amendment.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அப்படித் தவறுதலாக முழுமையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏற்கனவே 1958-லே இருந்து இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் இனிமேல்தான் ரிஜிஸ்ட்டிரேஷனுக்குப் போக வேண்டுமென்பது போலும் அதற்கு 5 ஆண்டு காலமாகும் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. இந்தச் சட்டம் 1958-லே இருந்து ஏற்கனவே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 6-50)

பிரிவு 5.

Thiru A. R. DAMODARAN : Sir, I move the following amendment:

"In clause 5, for sub-section (2) of section 4, the following shall be substituted :

'(2) The Inspector shall grant a registration certificate if a 'No Objection Certificate' is received from the concerned Public Health authorities.'

THIRU K. S. GANAPATHI : Sir, I second it.

THIRU A. R. DAMODARAN : I hope, Sir, the Hon. Minister will be able to appreciate that giving such arbitrary powers to the Inspectors while granting registration might lead to a lot of malpractices and I really do not think that the Inspector who is expected to give a registration certificate for starting a catering establishment should go into the question whether I am competent to run a hotel, whether I have enough money to run the hotel, and whether the people in the locality want a hotel. All these things will bring in extraneous considerations apart from the catering establishment itself and I really do not see the point why these considerations have been brought in. The Hon. Minister, while preparing this Bill, must have had some facts on which he should have been able to judge and decide that this provision has become necessary. Running a hotel is not a hereditary business. In fact, nothing is hereditary under our Constitution. We have ourselves stated that the Village Munsifs should not continue to have their sons as Village



Munsifs. Does it mean that only the son of a hotel owner should run a hotel? The finance required to run a small iddli shop will be only Rs. 2,000 or Rs. 1,500;- If the Government prescribe a security and ask for the deposit of Rs. 1,000, which will be required for the payment of wages and other benefits to half a dozen employees in such establishments, it is understandable. I do not think we would like the Inspector to decide whether I am able to run a catering establishment or not. I hope that the Hon. Minister will explain why this drastic provision has been made and what is the necessity to go into the question of *bona fide* or benami transactions. These are things that the Labour Department are not concerned with. The Labour Minister is concerned with the measures for the welfare of staff. whether it is *bona fide* or benami transaction, what does it matter if the wages are paid to the labourers which is the only concern of the department of labour ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, பரம்பரை பரம்பரையாகத்தான் ஓட்டல் தொழிலை நடத்த வேண்டுமென்று இந்தச் சட்டத்தில், எந்த இடத்திலும் வரையறுத்துக் கூறப்படவில்லை. ஆனால், "பிரீவியஸ் எக்ஸ்பீரியன்ஸ்" என்பது பரம்பரையை மட்டும் குறிப்பிடுவதாகாது. சமையல்காரனாக இருக்கிறவன்கூட ஓட்டல் முதலாளியாகலாம். "முன் அனுபவம்" என்பது அவருடைய பழக்க வழக்கங்களைப் பொருத்தது. தவிர இன்னொருவருடைய மகன்தான் ஓட்டல் நடத்த வேண்டுமென்று இல்லை. பரம்பரை அனுபவம் என்பதற்கும் முன் அனுபவம் என்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது.

திரு க. அறிவழகன் : ஓட்டலில் சாப்பிட்டுப் பழக்கப்படுத்திக்கொள்வதை முன் அனுபவமாக எடுத்துக்கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : ஓட்டலிலே சாப்பிடுகிறவர்களெல்லாம் ஓட்டல் நடத்த ஆரம்பித்தால், ஆபத்து வந்துவிடப்போகிறதே என்ற எண்ணத்தில்தான் இந்தச் சட்டமே வந்திருக்கிறது. இதிலே "பினாமி டிரான்சாக்ஷன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்குக் காரணம் இருக்கிறது. இது தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டம். ஓட்டலை நடத்துகின்ற பலர் திடீர், திடீரென்று விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். இப்போது அதிகமாக இல்லை. முன்பு, எங்கள் ஊரில் ஓட்டல் நடத்துகிறவர்கள் விடியற்காலை கொச்சின் எக்ஸ்பிரசில் ஏறிப் போய் விடுவார்கள். அப்படிப் பட்டவர்களிடமிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இப்படிப்பட்ட பிரிவுகளெல்லாம் முன்னெச்சரிக்கையாகப் போடப்பட்டி போடப்பட்டிருக்கின்றன. இவைகள் நல்ல நோக்கத்தோடு போடப்பட்டிருக் ருக்கின்றன ; தொழிலாளர்களின் பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருக் கின்றன. இதற்கும் தொழிலாளர் நல இலாகாவிற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டால், எல்லா விஷயங்களிலும் தெரிந்தோ, தெரியாமலோ தொழிலாளர் நல இலாகாவிற்கு சம்பந்தம் இருந்துதான் தீரவேண்டி இருக்கிறது. அந்த வகையிலே இந்தத் திருத்தத்தை வாபஸ் பெறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I am not convinced with the argument of the Hon. Minister. I realise his difficulty. He has already got the Bill passed in the other House. I request that my amendment may stand.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 5, for sub-section (2) of section 4, the following shall be substituted :—

'(2) The Inspector shall grant a registration certificate if a 'No objection certificate' is received from the concerned Public Health authorities'."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following amendment :

"In clause 5, in sub-section (8) of section 4, for the words 'three months' substitute the words '*one month.*'".

The amendment was duly seconded.

THIRU A. R. DAMODARAN: As I have already pointed out, the person who makes an application for starting a catering establishment must do so within one month; but the Inspector has the right to give the registration certificate within a period of three months. Sir, this Government are very anxious that the bureaucracy and the executive should act very expeditiously. We have the Manuneedhi Scheme and in all that, we have seen to it that the Revenue officials try to dispose of the papers as quickly as possible. Surely with all these conditions that the Inspector will have to go into, —— like my financial horoscope, my previous experience —— it might take three months and that is probably the reason for providing three months. Since I consider that these conditions are totally unnecessary and since the expeditious disposal of applications for permits and licences has become such a thorny issue, even a national issue, and various parties have protested against the delay, I would suggest that if this is acceptable, the time-limit may be reduced so that the registration certificate may be granted within a period of one month.

மாண்புமிகு திரு க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். 3 மாத காலத்தை ஒரு மாத காலமாக்குவதில் பல சிரமங்கள் இருப்பதாகக் கூறினேன்.



ஆகவேதான் 3 மாதமென்று வைக்கப்பட்டிருக்கிறது. இதனால் எந்தவித
மான சிரமமும் ஏற்பட்டுவிடாதென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

"A registration certificate shall be valid for a year and shall be rene-
wable yearly on payment of such fees as may be prescribed and the
foregoing provisions of this section shall apply to the renewal of a
registration certificate as they apply to the grant thereof"
என்று செக்ஷன் 4 (4) லே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன்படி 3
மாத காலத்தை ஒரு மாத காலமாகக் குறைப்பது ரொம்பவும் கடினமான
காரியமென்று கூறுகிறார்கள். மேலும், 3 மாதங்கள் என்பதே ஒரு
குறைந்த கால அளவுதான். அரசாங்கம் எல்லா வகைகளிலேயும் வேக
மாக வேலை செய்வதுபோல், இச் சட்டத்திலே அப்படி இருந்தாலும்,
நடைமுறையிலே சிக்கல்கள் இல்லாத வகையில் செய்வதற்கான ஏதுக்களை
ஆராயுமென்று தெரிவித்து, இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெறும்படி
கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, only one small point, before
I withdraw this amendment. I would like to bring to the notice of the
Hon. Minister that this time-limit pertains not only to renewal of
licence but also to the grant of new registration certificate, since section 4
(8) says, "If orders on an application for the grant or renewal of a regis-
tration certificate are not communicated to the employer within three
months........". The time-limit applies also to the grant
of the registration certificate, besides renewal. In view of the Hon.
Minister's assurance that he will see that these certificates are granted
expeditiously, I do not want to press my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 5, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 6 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 9.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following amendment :—

"In clause 9(3), for the proposed sub-section (4)(*b*)(*i*), the following shall be substituted—

'(i) the normal day's wage plus one day's extra wage, or"

THIRU K.S. GANAPATHI: I second it.

THIRU A. R. DAMODARAN : Sir, I would like the words "the normal day's wage plus one day's extra wage" be substituted for the words "twice the wages for such a day".

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஏற்கனவே நான் எடுத்துச் சொன்னேன். "வேஜஸ்" என்பதற்கான விளக்கமே இந்தச் சட்ட வரைவிலேதான் திருத்தத்தின் மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பிரிவு 2, 13 A உட்பிரிவின்படி " 'wages' means the basic wages, dearness allowance, the cash equivalent of the meals and tiffin supplied to the employees free of charge and the value of any other amenity or of service or of any concessional supply of foodgrains or other articles which can be computed in terms of money, but does not include a bonus".

"இந்த விளக்கத்தின் அடிப்படையிலேதான் 2 அளவான கூலி தரப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. "twice the wages for such day" என்று குறிப்பிட்டிருக்கிறோம். அதற்கான விளக்கம். இதிலேயே கிடைத்திருக்குமென நம்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the only definite assurance which I want from the Hon. Minister is that this means the normal day's wage plus one day's wage. Sir, I am not disputing the concept of wage. One day's wage to which the employee would be entitled plus one day's extra wage to which he will be entitled if he works on the holiday—if this is what it means, I am prepared to withdraw the amendment.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களுடைய கருத்துதான் சரியானது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

Thiru A. R. DAMODARAN : Sir, I withdraw the amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது. பிரிவு 9, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 10 முதல் 17 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 7-00.)

(4) 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1975)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்",

என்று முன்மொழிகின்றேன்.

இம்மாநிலத்தில் எழுதப்படும் பத்திரங்களின் மீது 1962-ஆம் ஆண்டு தமிழ் நாடு முத்திரைத்தாள் (அதிகரிக்கப்பட்ட தீர்வை) சட்டத்தால் (தமிழ் நாடு சட்டம் 8/1962) திருத்தியமைக்கப்பட்ட 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் விவர அட்டவணை 1-ல் நிர்ணயிக்கப் பட்டுள்ளவாறு முத்திரைத்தாள் தீர்வை வசூலிக்கப்படுகிறது. 1899-ஆம் ஆண்டு முத்திரைத்தாள் சட்டத்தின் 3-என பிரிவில் குறிக்கப்பட்டுள்ளதும், பதிவு செய்யப்பட்டதுமான பத்திரங்களின் மீது முத்திரைத்தாள் தீர்வையில் 2½ சதவிகிதம் கூடுதல் மேல்வரி விதிக்கப்படுகிறது. மேலும் சில பத்திரங்களின் நேர்வில் "சொத்து மாற்று தீர்வை" ஒன்று உள்ளாட்சி மன்ற சட்டங்களின்கீழ் விதிக்கப்பட்டு அத்தீர்வை உள்ளாட்சி மன்றங்களுக்கே கொடுக்கப்படுகிறது.

@ 391-417 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முத்திரைத்தாள் தீர்வையைக் கணக்கிடும் முறையில் வசதி செய்து சீரமைக்கும் நோக்கத்துடன் $2\frac{1}{2}$ சதவீதம் கூடுதல் மேல்வரியை 1899-ஆம் ஆண்டு முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் அடிப்படை முத்திரைத்தாள் தீர்வையுடன் சேர்த்து விடுவது என்றும், சிறிதளவு சரிக்கட்டுதல்கள் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், "கப்பல் பிணை பத்திரங்கள்", "உடைமை உரிமை மாற்றுப் பத்திரங்களின்" மீது விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை மற்றும் இவ்விரண்டு பத்திரங்களுக்குச் சமமாக வசூலிக்கப்படும் ஏனைய பத்திரங்களின் மீது விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வையை சிறிது அதிகப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி சம்பந்தப்பட்ட பத்திரங்களுக்கு முத்திரைத்தாள் சட்டத்தின் விவர அட்டவணை 1-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள முத்திரைத்தாள் தீர்வைக்கும் பதிலாக மாற்றியமைக்கப்பட்ட புது விகிதங்களைப் போடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி புது விகிதங்கள் போட தற்போது உத்தேசித்திருப்பதால், 1962-ஆம் ஆண்டு தமிழ் நாடு முத்திரைத்தாள் (அதிகரிக்கப்பட்ட தீர்வை) சட்டத்தின் 2 ஆம் பிரிவையும், 1899-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 3-ஏஏ பிரிவையும் நீக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சில பத்திரங்களின் நேர்வில் உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்களின்படி தற்பொழுது விதிக்கப்படும், "சொத்து மாற்று தீர்வை" தொடர்ந்து விதிக்கப்பட்டு முன்பு போல தீர்வை, உள்ளாட்சி மன்றங்களுக்கே கொடுக்கப்படும். மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச்சட்ட வரைவு விழைகிறது.

இச்சட்ட வரைவினை ஏற்று நிறைவேற்றித்தருமாறு இம் மேலவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் நிகழ்ச்சிகள் முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது,

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975).

THE HON. THIRU O. P. RAMAN: Mr. Deputy Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Chit Funds (Amendment) Bill@, 1975 (L.A. Bill No. 19 of 1975), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

According to sub-section (1) of section 12 of the Tamil Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961), for the proper conduct of the Chit every foreman shall, before applying for the certificate of commencement, execute an indenture of mortgage and trust in favour of the Registrar as trustee charging by way of security, property sufficient for the realisation of the chit amount, or deposit in any approved bank an amount of cash not less than half of the Chit amount, or invest in Government securities the face value or market value of which is not less than half of the chit amount and transfer the amount so deposited or the Government securities in favour of the Registrar to be held in trust by him as security.

At present, the cash deposit is made in the name of the foreman and then transferred in favour of the Registrar. Both the Courts and Banks have held that fixed deposit receipts are not transferable, thereby rendering the security itself ineffective. The quantum of security under the

@ 417–419 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[THIRU O. P. Raman] [1975 ஏப்ரல் 21

existing provisions of the Act is based on one chit amount. It does not vary according to the number of instalments or duration of a chit. The element of risk is greater in long-term chits and it warrants greater security. In order to remove all these difficulties and to provide adequate safe-guard to the subscribers and to guard against defaults, it is proposed to amend section 12 of the Tamil Nadu Chit Funds Act, 1961 so as to provide for the deposit with the Government, of cash security instead of the various forms of securities now provided for. The quantum of security will be based on the number of instalments of each chit, ranging from one chit amount for chits of not more than 20 instalments to four times the chit amount for chits of more than 60 instalments. Interest will be paid on the amount of cash security deposited by the foreman at the rates to be specified in the rules. While making the rules, it will be ensured that the rates are in conformity with the commercial bank rates. Consequential amendments to certain other sections of the Act have also been proposed.

The Act as proposed to be amended will apply only to chits commenced after the date of commencement of the proposed Amendment Act.

Sir, I commend the motion for the acceptance of the House.

## சிலை திருட்டு

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1—4—1974 ஆம் நாள் முதல் 31—1—1975 ஆம் நாள் வரை, எத்தனை இடங்களில் சிலை திருட்டுகள் நடைபெற்றுள்ளதாக புகார்கள் வந்துள்ளன ?

(இ) அவை தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன?

(உ) மீட்கப்பட்ட சிலைகள் எத்தனை ? அவைகளின் மதிப்பீடு என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) தமிழ்நாட்டில் 1—4—1974 முதல் 31—1—1975 வரை 34 இடங்களில் சிலை திருட்டுகள் நடைபெற்றுள்ளன.

(இ) எல்லா களவுகளும் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டு சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(உ) சுமார் ரூபாய் 2,82,400 மதிக்கக்கூடிய 43 சிலைகள் மீட்கப்பட் டுள்ளன.



**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தமிழ் நாட்டில் இன்றும் சரி எந்த நாளிலும் சரி சிலை திருட்டுப்போகிற பிரச்சினைதான் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இப்பொழுது சிலை திருட்டு பெருகுகிறதிலிருந்து சின்னச் சின்ன கோயில்களில் உள்ள சிலைகள் எல்லாம் காணாமல் போகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அறநிலையத் துறை இதிலே விசேஷ கவனம் செலுத்தி கடுமையான நடவடிக்கைக்கு சிலை திருடுபவர்கள் உட்படுத்தப்பட்டால், சிலைத் திருட்டைக் குறைக்கலாமென்ற உணர்வு தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறது. இது பற்றி சட்ட திட்டங்கள் கொண்டு வந்து சிலைத் திருடர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுப்பதற்கேற்ற வகையில் புதிய சட்டங்களை உருவாக்க அரசு முன்வருமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இப்பொழுது இருக்கின்ற சட்டப் படியே குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், கடுமையான தண்டனை வழங்க முடியும். ஆனால் திருட்டுப் போனதற்குப் பிறகு தண்டனை வழங்குவது என்பதை ஆலோசிப்பதைவிட திருட்டுப் போகாமலே தடுப்பதுதான் நம்முடைய நோக்கமாக இருக்கவேண்டுமென்ற அடிப்படையிலே 4, 5 வழி முறைகளையெல்லாம் காவல்துறை அதிகாரிகளோடு கலந்தாலோசனை செய்து தற்போது செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். அந்தந்தக் கோயிலினுடைய பாதுகாப்பு எப்படி அமைந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து தேவையான பாதுகாப்பு வசதிகளை நாம் செய்கிறோம். அதைப்போல சில பெரிய கோயில் களில் இரவு நேர காவலாளிகள் நியமிக்க வேண்டியிருந்தால், காவலாளிகளை நியமிக்கிறோம். மேலும் வசதியில்லாத கோயில்கள் அல்லது பாதுகாப்பு இல்லாத கோயில்களில் விலை உயர்ந்த சிலைகள் இருக்குமானால், பக்கத்திலே இருக்கின்ற பாதுகாப்புள்ள கோயில்களுக்கு அந்த உள்ளூர் கிராமத்து மக்களுடைய அனு மதியைப் பெற்று அந்தச் சிலைகளை எடுத்துச் சென்று அங்கே பாதுகாப்பாக வைக்கின்றோம். இப்படி பல்வேறு முறைகளில் பாதுகாப்பு செய்கின்ற காரணத்தால், சிலைகள் திருட்டுப் போவதை நாம் தடுக்கின்றோம். திருட்டு எதிர் பாராமல் போய்விட்டாலும்கூட, உடனடியாகக் கண்டு பிடிப்பதற்கு அந்தச் சிலைகளுடைய புகைப் படங்களை எடுத்து அறநிலையத் துறையினுடைய ஆணையர், துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் மற்றும் காவல் துறை இப்படி மூன்று இடங்களிலும் அந்தப் படங்களுடைய நகலை வைத்து திருடு போன சிலைகளைக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக இருக்கின்ற வகையிலேயும், தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்தையும் அரசு கவனத்தில்கொண்டு பரிசீலனை செய்யலாம்.

[1975 மே 2

THIRU D. SANTOSHAM : Mr. Deputy Chairman, Sir, some time ago, I think a special wing of the C.I.D. was set up for investigation into these idol thefts. I would like to know whether it is still functioning and if so, what its record of achievement is.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கொஞ்ச நாட்களுக்கு முன்பு காவல் துறையிலேயே இந்தச் சிலை திருட்டுக்காக தனிப் பிரிவு அமைக்கப்பட்டு அந்தத் தனிப் பிரிவு தற்போது ஒரு டெப்டி சூப்பரின்டென்ட் தலைமையிலே பணியாற்றி வருகிறது. அது எந்த அளவுக்குப் பணியாற்றியிருக்கிறது என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, in April 1974, there was a discovery of nearly 50 lakhs of rupees worth of idols and foreign currency from a house in Chittaranjan Road which was the subject-matter of an adjournment motion in this House. May I know the stage at which that matter is now?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** துணைத் தலைவரவர்களே, அது பற்றிய தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

THIRU G. VASANTHA PAI : If I may mention the name of the person, it was Mr. Ramachandra Raju and the house was in Chittaranjan Road, Teynampet. We were all shown the idols in the office of the Commissioner of Police and we went in a special bus moving from the Secretariat to that office. I would like to know the stage at which the particular case is at present.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற சம்பவம் உண்மையாக இருக்கலாம். ஆனால் அது பற்றிய தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான பதிலைத் தருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அது உள்துறை பிரச்சினையே யொழிய அறநிலையத் துறை பிரச்சினையில் எப்படி வரும்?

THIRU G. VASANTHA PAI : No, Sir.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மீட்கப்பட்ட சிலைகள் காவல் நிலையங்களில் வைக்கப்பட்டு உடனடியாக மீண்டும் அந்தக் குறிப்பிட்ட கோயிலுக்குக் கொடுக்கப்படுகின்றனவா? காவல் நிலையத்திலிருக்கிறபொழுதே அந்த மீட்கப் பட்ட சிலைகள் மீண்டும் திருட்டுப் போகிறதாக பிரச்சினை இருக்கிறது. ஆகவே



1975 மே 2]

காவல் நிலையத்திலே இந்தச் சிலைகள் பாதுகாப்பாக, பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்பதையும் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** திருட்டுப்போன சிலைகள் மீட்கப் பட்டால், காவல் நிலையத்திலே பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட வழக்குகள் நடந்து முடிந்த பிறகுதான், உரியவர்களிடத்தில் அந்தச் சிலைகள் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. காவல் துறையையே நம்பாமல் நாம் பேசுவதாக இருந்தால், எதையுமே செய்ய முடியாது.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருக்கோயில்களுக்குள்ளே இருக்கிற திருமேனிகளை மாற்றி வைப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. அதனால் சிற்பங்கள் வடிப்பவர்களுடைய பட்டியலை எடுத்து, அந்தத் தொழில் செய்பவர்களுக்கு உரிமம் கொடுத்து, இதைத் தேடிப் பிடிப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றி அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு அடிகளார் அவர்கள் சொல்லிய நல்ல யோசனையையும் கருத்திலே கொண்டு ஏற்ற காலத்திலே செயல்படலாம்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** திருட்டுப்போன சிலைகளை போலீஸ் ஸ்டேஷனிலே கொண்டு போய் வைக்கிறார்கள். அப்படி வைக்கப்படுகின்ற அந்த அருமையான சிலைக்கு காலா காலத்தில் செய்கின்ற பூஜையை அங்கேயே வைத்துச் செய்வதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கோயிலில் இருந்தால் கடவுள். வெளியில் இருந்தால் சிலை.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[1975 மே 2

## 2. அரசின் தீர்மானம்

### 1975 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (38-வது திருத்த) சட்ட முன்வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்துதல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே,

"சிக்கிம்மை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்குவதற்கென, '1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாருவது திருத்தச்) சட்டம்' என்று மாற்றப்பட்ட குறுந்தலைப்பினைக் கொண்ட 1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் வாயிலாக, நாடாளு மன்றத்து ஈரவைகளும் நிறைவேற்றியுள்ள, அரசமைப்புச் சட்டத்தின் 'பிரிவு 368, பகுதி (2) வது வரம்புரையின் எல்லையளவிற்குள் வரும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை இம்மேலவை ஏற்று உறுதி செய்கிறது"
என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

சிக்கிம் பகுதி ஒரு தனி நாடாகவே இதுவரையிலும் இருந்து வந்தது. அந்த நாட்டை இந்தியாவின் மாநிலங்களிலே ஒரு மாநிலமாகக் கருதுகிற அளவுக்கு அந்தஸ்து கொடுத்து அதனை ஏற்றுக்கொள்கிற தீர்மானம் தான் அரசமைப்புச் சட்டத்திற்கு திருத்தச் சட்டமாக கொண்டு வரப்பட்டு நாடாளு மன்றத்தினுடைய இரண்டு அவைகளினுலும் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டம் மாநிலங்கள் அவைகளிலே பாதி அவைகளிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு குடியரசுத் தலைவருடைய அங்கீகாரத்தைப் பெற வேண்டும். ஆக இப்பொழுது 21 மாநிலங்கள் இந்தியா வில் இருக்கின்றன. 21 மாநிலங்களில் குறைந்த அளவு 11 மாநிலங்களாவது இந்த நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளும் நிறைவேற்றிய இந்தச் சட்டத்தை 'ரேட்டிபிக்கேஷன்' என்ற முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சட்டம் இங்கே இசைவுக்காகவும் வரவில்லை, நம்முடைய அனுமதிக்காக வும் வரவில்லை, குறைந்த அளவு 11 மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையில் வந்திருக்கிறது. ஒரு நாட்டினுடைய பகுதி இந்தியாவில் வந்து இணைவதன் காரணமாக இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களும் இதற்கு ஏற்பு அளித்திருக்கிறது என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானுல் இப்பொழுது சீனு எதிர்க்கிற சூழ்நிலையிலேயும் இந்த எதிர்ப்புக்கு ஆதாரமில்லையென்று நாம் வாதாடுகிற நிலையிலேயும் ஒரு அழுத்தமான வலிவு ஏற்படும். ஐக்கிய நாடுகள் அவையிலே பேசுவதற்கும் இந்தியாவுக்கு ஒரு நல்ல தெம்பு கிடைக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். 11 மாநிலங்கள் ஆதரித்தாலே போதும் என்றாலும் கூட, இந்தியாவில் இருக்கிற 21 மாநிலங் களும் இதற்கு ஆதரவு தந்தன என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானுல், நன்ருக





இருக்கும் என்று கருதியதன் காரணமாகத் தான் நாம் அவசர அவசரமாக ஒரு நாளேனும் இருந்தாலும் இந்த மேலவையைக் கூட்டி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இந்தத் தீர்மானம் ஏற்புக் காக இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. சிக்கிம் நாடு தனி நாடாகத்தான் இருந்து வந்தது. நேப்பால் மாதிரி, பூட்டான் மாதிரி சிக்கிம் நாடு அந்த நாடுகளுக்குப் பக்கத்தில் ஒரு தனி நாடாகத்தான் இயங்கி வந்தது, தனி நாடாக இருந்து வந்தாலும், இந்திய அரசோடு 30 ஆண்டு காலத்திற்கு மேலாக நல்ல உறவு அடிப்படையிலேயும், இரண்டு நாடுகளும் நட்புறவுகளின் அடிப்படையிலேயும் தான் இயங்கி வந்தன. சிக்கிம் நாடு இந்தியாவினுடைய பொருளாதார வசதிகளைப் பெற்று பயன்படுத்தி வந்தது. ஆனுல் சிக்கிம் நாட்டில் 1973-வது ஆண்டு 8-வது மாதம் அங்கு இருக்கிற அதனுடைய மன்னர் 'சோக்யால்' அவர்களுக்கும் அங்கு இருக்கிற அவைக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அதன்படி ஆட்சி நடைபெற்று வந்தது. ஆனுல் அந்த நாட்டு மன்னர் 'சோக்யால்' நாட்டு மக்களை மதிக்காத நிலையிலும், மக்களாட்சிக்கு மதிப்புத்தராத வகையிலும் 1973-வது ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையை மீறுகிற வகையிலும் அவருடைய நடவடிக்கைகள் எல்லாம் இருந்ததன் காரண மாக, சிக்கிமில் மன்னராட்சியை ஒழித்து விட்டு சிக்கிம் நாட்டை இந்தியா வோடு இணைப்பது என்று சிக்கிம் நாட்டு அவையிலே தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, அது நாடாளு மன்றத்தினுடைய ஏற்புக்காக அனுப்பி வைக்கப் பட்டது. சென்ற ஆண்டு நாடாளுமன்றத்திலே அரசமைப்புச் சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டு வந்த நிலையிலேயும் சிக்கிம் நாடு இந்தியாவோடு இணையாது, ஆனுல் சிக்கிம் நாட்டினுடைய பிரதிநிதி நாடாளுமன்றத்திலே

(பிற்பகல் 4-20)

வந்திருக்கலாமென்ற ஒரு உறவு நிலை ஏற்பட்டது. அதைவிட அழுத்தம் திருத் தமான, தெளிவான ஒரு சூழ்நிலை இப்போது இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் ஏற்பட்டிருக்கின்றது. இதன் முன்னர் அவர்கள் அந்த மக்களவையில் மன்னர் ஆட்சியை ஒழித்துவிட ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினுர்கள். சோக்கியால் மன்னர் அமைப்பு முறை இதனுல் ரத்து செய்யப்படுவதோடு சிக்கிம் மாநிலமும் இனி இந்தியாவுடன் இணைந்ததோர் மாநிலமாக அமைந்து, மக்களாட்சி முறையில் முழுப்பொறுப்பேற்றுச் செயல் படும் என்ற தீர்மானம் இந்த ஆண்டு எப்ரல் திங்கள் 10 ஆம் நாள் சிக்கிம் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. பிறகு எப்ரல் 14 ஆம் நாள் அன்று— பொதுமக்களுடைய கருத்துக்களையும் அறிந்து இந்திய பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்ற முறையின் அடிப்படையில்—பொதுமக்கள் வாக் கெடுப்பு நடைபெற்றது. அங்குள்ள மொத்த வோட்டர்களின் எண்ணிக்கை

97 ஆயிரம். அதிலே இதை ஆதரித்து வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 59,637. எதிர்த்து வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 1,496. ஆக, பெரும்பான்மையான வாக்குகளின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட இந்தத் திருத்தம் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, பாராளுமன்றத்தின் இரு அவைகளும் இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இதன் மூலம் சிக்கிம் இந்தியாவினுடைய ஒரு மாநிலமாக ஆகிறது; 'ஸ்டேட்' என்ற அளவிலேயும் அடங்குகிறது. இந்திய அரசின்கீழ் உள்ள பகுதிகள், யூனியன் டெரிட்டரீஸ் போன்ற பகுதிகள் எல்லாம் சிலபல உரிமைகளைப்பெற்று விளங்குகின்றன. ஆக, இவைகள் என்னென்ன உரிமைகள் பெற்று விளங்குகின்றனவோ அந்த அளவுக்கு உரிமைகளைப் பெற்று சிக்கிம் நாடு 22-வது நாடாக இணைகிறது. அப்படி இணைவதற்கு வழிவகை செய்ய, அந்த நாட்டின் சார்பாக மக்களவைக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கவும், மாநிலங்களவைக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கவும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. இதை ஏகமனதாக ஏற்று நிறைவேற்றித் தரும்படியாக இந்த மேலவையை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

"சிக்கிம்மை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்குவதற்கென, '1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாறுவது திருத்தச்) சட்டம்' என்று மாற்றப்பட்ட குறுந்தலைப்பினைக் கொண்ட 1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவின் வாயிலாக, நாடாளுமன்றத்து ஈரவைகளும் நிறைவேற்றியுள்ள, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 368, பகுதி (2)-வது வரம்புரையின் எல்லையளவிற்குள் வரும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை இம்மேலவை ஏற்று உறுதி செய்கிறது."

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சிக்கிம் நாடு, இந்திய தேசத்தின் 22-வது மாநிலமாகச் சேர்க்கப்படுகின்றது பற்றி பாராளுமன்றத்தின் இரு அவைகளும் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்று இந்த அவையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் மனமார வரவேற்கின்றேன். சிக்கிம் மாநிலம் என்பது நம்முடைய பாண்டிச்சேரியைக் காட்டிலும் சிறியதாக இருந்தாலும் கூட, அது இருக்கிற இடத்தைப் பொறுத்து, பூகோள அமைப்பினைப் பொறுத்து, அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. ஏற்கெனவே முழு இறையாண்மை பெற்ற ஒரு நாடு என்ற அந்தஸ்தில் இல்லாவிட்டாலும், தனி நாடு என்று பலராலும் கருதப்பட்டுவந்த ஒரு பகுதி அது.





அந்த நாட்டினுடைய பாதுகாப்பினை இந்திய அரசும், அதற்கு முன்னால் 'இம்பீரியல் இந்தியா' என்று அழைக்கப்பட்ட காலத்தில் வெள்ளை ஆட்சியும் கூட அதனை ஏற்றிருந்தன. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது காஷ்மீரத்து மக்கள் அப்போது எப்படி இந்தியாவோடு சேருவதா அல்லது அந்தப் பக்கத்திலே இருக்கின்ற பாகிஸ்தானோடு சேருவதா என்று நிலைதடுமாறி கடைசியில் இந்தியாவோடு சேரவேண்டுமென்று முடிவெடுத்தார்களோ—அதைப்போல இந்த சிக்கிம் மக்களும் முடிவு செய்வதற்கு கொஞ்சம் காலதாமதம் செய்தார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். சிக்கிமிலே இருக்கக்கூடிய மக்கள் அங்குள்ள மன்னருடைய கருத்துக்களுக்கு, விருப்பங்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து, அந்த மன்னர் ஆட்சிக்கு விரோதமாக மாறி, இந்தியப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களோடு சேர்ந்து தங்களுடைய பகுதியையும், தங்களுடைய வாழ்க்கையையும் முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக இந்த ஒரு முடிவினை மேற்கொண்டிருக்கின்றார்கள். அப்படி இந்தியாவில் வந்து சேருகின்ற அந்த மக்களை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இந்தியாவிலிருந்து ஏற்கெனவே ஒரு பகுதி பிரிக்கப்பட்டிருந்தது, அதாவது, கிழக்கிலே கிழக்கு வங்காளம் என்பது பிரிக்கப்பட்டு கிழக்கு பாகிஸ்தான் என்று இருந்தது. கிழக்குப் பாகிஸ்தான் கீழேயும், மேலே நம்முடைய தேசத்தைச் சேர்ந்த ஒரு சிறு பகுதி, அதாவது, ஒரு போக்குவரத்திற்கு மட்டுமே பயன்படும் அளவுக்கு உள்ள குறைந்த மைல்கள் அகலமுடைய ஒரு பகுதியும், அதற்கப்பாலே சிக்கிம் என்ற பகுதியும், அதற்குக் கீழே பூட்டானும், மேல்புறத்திலே நேப்பாளமும் அமைந்திருந்தன. ஆக, இவ்வாறு மேல் பகுதியாக இருக்கக்கூடிய இடத்திலே இது அமைந்திருந்தது. நம்முடைய பகுதியிலே யுத்தம் ஏற்பட்டபோது, 1959-லிருந்து 1964 வரையில் சீனதேசம் நமக்குத் தெரியாமல் சில நேரத்திலும், நமக்குத் தெரிந்து சில சமயத்திலும் நம்முடைய பகுதியை ஆக்கிரமிப்புச் செய்தபோது, இந்தப் பகுதி எத்தன்மை வாய்ந்தது, இந்தப் பகுதியில் நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பவை உணரப்பட்டன. அவ்வாறு, கிழக்கு வங்காளத்திலே கிளர்ச்சி ஏற்பட்டு பங்களா தேஷ் விடுதலை கிளர்ச்சி நடந்தபோது, இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சங்கடங்கள் தெளிவாக விளங்கின. எனவே, அந்திய நாட்டுக்காரர்களுடைய நிலைமைகள் இப்படியுள்ள ஒரு சூழ்நிலையில், சீன ஊடுருவல்கள், உளவு வேலைகள் அதிகமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், சீன தேசமும், பாகிஸ்தான் நாடும் நமக்கு எதிராக பல விஷயங்களையும், நம் நாட்டுக்கு விரோதமாக பல காரியங்களையும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், சிக்கிம் தேசம் நம்மோடு சேருவது என்பது ராணுவ ரீதியாகக் கூட மிகவும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை நம்முடைய பிரதமர் அவர்கள் தங்களுடைய

ராஜதந்திரத்தைப் பயன்படுத்தி வெற்றிகரமாக முடித்துள்ளார்கள். திபெத்தை சீனு எடுத்துக்கொண்டபோது ஏற்பட்ட கிளர்ச்சிகள் போலல்லாது, ரொம்ப அமைதியான முறையில் மக்களுடைய விருப்பத்தை உருவாக்கி அதன் வழியாக நம்முடைய தேசத்தோடு அந்தப் பகுதியை, ராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பகுதியை, ஒரு 'ஸ்டிரேடஜிக் இம்பார்ட்டன்ஸ்' உள்ள இந்தப் பகுதியை இணைத்ததற்காக பிரதமர் அவர்களையும் நான் இந்த சந்தர்ப்பத்திலே மனமாரப் பாராட்டுகிறேன். இது அவர்களுடைய ராஜதந்திர வெற்றிக்கு ஒரு உதாரணமாகும்.

அடுத்தபடியாக, இந்த சிக்கிம் நாடு பின்தங்கிய பகுதியாக இருப்பதால், பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நாம் மற்ற பின்தங்கிய பகுதிகளான, அருணச்சல பிரதேசம், மேகாலயா ஆகியவற்றுக்கு, அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ப, ஆங்காங்கே இருக்கக்கூடிய இயற்கை வளங்களுக்கேற்ப, வரம்புகளுக்கு ஏற்ப அங்கு வாழ்க்கை முறையை அமைப்பதற்கு எப்படி உதவுகிறோமோ அது போன்று இந்த நாட்டுக்கும் உதவி வழங்கி இந்த நாடு நம்போடு சேர்ந்ததன் பயனை அடையச்செய்யவேண்டும் என்ற என்னுடைய நல்லெண்ணத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் திருத்தத்தை நான் ஆதரித்து அமைகிறேன்.

(பிற்பகல் 4-30)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சிக்கிம் தேசத்தை இந்தியாவின் 22-வது மாநிலமாக, அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 38-வது திருத்தத்தின் மூலம் இணைப்பதை அங்கீகரிப்பதற்கான தீர்மானத்தை நமது கல்வியமைச்சரவர்கள் முன்மொழிந்தார்கள். அதை முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் பேசும்போது சிக்கிம் தேசத்தைப் பாண்டிச்சேரிக்கு ஒப்பிட்டுப் பேசினார்கள். உதாரணத்திற்கு நம்முடைய சட்டப் பேரவைத் தொகுதி ஒன்றினை எடுத்துக்கொண்டால்கூட ஒரு லட்சம் வோட்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் சிக்கிம் தேசத்தில் ஒரு லட்சம் வோட்டர்கள்கூட இல்லை. எனவே அவ்வளவு சிறியதொரு தேசம் தனி நாடாக இருப்பதென்பது இயலாத காரியம். இதை நாம் நன்ருக அறிந்துள்ளோம். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பல சமஸ்தானங்கள் இருந்தன. அந்த சமஸ்தானங்கள் ஆங்கிலேயர்களுக்கு உட்பட்டிருந்தாலும், நாடு சுதந்திரம் அடைந்தவுடன், அந்த நூற்றுக் கணக்கான சமஸ்தானங்கள் இந்திய நாட்டுடன் இணைந்துவிட்டன. அப்படிப்பட்ட சமஸ்தானமாக இருந்து, பின்னுல் சுயேச்சை என்று அறிவிக்கப்பட்ட சமஸ்தானம்தான் சிக்கிம். அது



இதுவரையில் சேராமல் இருந்தது. தனியாக அது இருக்க முடியாது. ஒன்று இந்தியாவுடன் சேர வேண்டும் அல்லது சீனுவுடன் சேர வேண்டும். அதன் அமைப்பு அப்படிப்பட்டது. அங்கே மன்னர் சோக்யால் அவர்கள் அரசராக இருந்து ஆட்சி நடத்தி வந்தார்கள். அவரது ஆட்சி கொடுங்கோன்மையுள்ளதாக இருந்ததன் காரணமாக, மக்கள் அந்த ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்யக்கூடிய நிலைமை உருவாகியது. 1973 ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு, அதன்படி மக்களை கொடுங்கோன்மைக்கு உள்ளாக்காமல் ஆட்சி நடத்த மன்னர் ஒப்புக் கொண்டார். ஆனுல் அந்த ஒப்பந்தத்தையும் மீறி அவர் செயல்பட்டதன் காரணமாக, அந்த தேசத்தை இந்தியாவுடன் இணைத்துவிட வேண்டுமென்று அந்த நாட்டு பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டார்கள். அதைத் தொடர்ந்து பொது மக்களுடைய வாக்கெடுப்பு எடுக்கப்பட்டது. சுமார் 60,000 மக்கள் சாதகமாகவும், 1,000 பேர்கள் பாதகமாகவும் வாக்களித்து, அந்த தேசத்தை இந்தியாவுடன் இணைத்துவிட வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிருர்கள். நம்முடைய பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 38-வது திருத்தச் சட்ட முன்வடிவின் வாயிலாக அது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தியாவில் இருக்கும் மாநிலங்களில் பாதிக்கு மேல் இதை அங்கீகரிக்க வேண்டியுள்ளதால், நம்முடைய அவையிலும் விவாதத்திற்கு இது வந்திருக்கிறது. அதை முழு மனதுடன் என் கட்சியின் சார்பில் ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I rise to welcome the Thirty-eighth amendment to our Constitution when Sikkim will become the twenty-second State of the Indian Union. When the history of the twentieth century is written, it will be recorded with pride that many of the Nations and States which were dominated either by the colonial powers or by monarchs have achieved their freedom by the free expression of will of the people and it is in pursuance of the expression of such free will of the people of Sikkim that we are today granting it the status of becoming the twenty-second State of the Indian Union.

Sikkim and Bhutan had some special status. Sir, and they were always considered, when the British were in India, to be Protectorates of India and, therefore, they could never claim independent status as Nations; there has always been a special relationship. But, unfortunately, recent events in Sikkim had led to the Chogyal assuming certain powers which he did not possess and an unfortunate confrontation resulted between the

[Thiru A. R. Damodaran] [1975 மே 2

people of Sikkim and their ruler. However, Sir, we are happy that this small State, however small it may be, consisting of approximately 2 lakhs or 2½ lakhs of people—there are about 93,000 voters—which is very strategically situated has expressed of its own free will its desire to become a part of India. This indeed must give us a great deal of happiness in this country.

My hon. Friend Thiru Arumugaswami referred to the fact that soon after the British left India, when many of the princely States had to decide whether they should join India or Pakistan, Kashmir decided to join India. But, at that time. Sir, the circumsances were such that we had to accede to the request of Kashmir. Today, 27 years later, we are acceding not to the wishes Kashmir. Todya, 27 years later, we are acceding not to the wishes of a monarch but to the wishes of the people of Sikkim and this shows how mature our democracy has grown and how much it is trusted by those who know India well. On this occasion, Sir, may I express the hope that even though we are admitting Sikkim as the twenty-second State of the Indian Union, there has come a time for our national leadership to think afresh of the problems that have been created and of the need for a closer integration of the country and of the need for promoting a feeling of kinship and unity amongst the different States of our country ? We have political differences, but nonetheless, all of us are proud that we are citizens of this country and I hope that the people of Sikkim who have joined the Indian Union will also share the feelings of fraternity and brotherhood that all the citizens of India are entitled to.

There is one more thing which I would like to mention and this is of special significance considering the fact that the accession of Sikkim to the Indian Union has strangely enough, brought about certain predictable reactions amongst one or two political parties in our State. The Communist Party (Marxist) has adopted a very ambivalent attitude and, in fact, the people must realise who are these political parties who have a real sense of nationalism and patriotism. It is indeed a tragic irony that one of the biggest parties in our own country should have expressed certain mental reservations and should have adopted a very doubtful stance which unfortunately is closely similar to the one adopted by the People's Republic of China. India, today, Sir,



1975 மே 2] [Thiru A. R. Damodaran]

being a non-aligned nation has a number of enemies. It has also a number of unfriendly neighbours and, therefore, the time has come for our national leadership — and as Thiru Arumugaswami mentioned, I hope the ruling party at the Centre will realise that the time has come for us—to mend our international fences and to see that we promote greater friendship amongst the countries that surround us because, unfortunately, our position has not been fully understood by our neighbours mostly. Even such countries as Burma, Ceylon and those who should be very friendly to India have adopted certain strange attitudes. I hope we will realise that in spite of our being a big nation, with the world's second largest population, we still would have to convince a number of countries abroad of our stance on international affairs. I hope, Sir, as I have mentioned in the past, that in all these matters, in the framing of our foreign policy, we will realise that the interests of the people of India should always come first and it is in this context that I hope our foreign policy will also be re-formulated so that we might have larger number of friends in the United Nations where this topic will undoubtedly come up for discussion.

With these words and welcoming once again the Thirty-eighth amendment which we wholeheartedly support, I extend on this occasion a very warm welcome to the people and citizens who will be joining India as its citizenry.

Thank you.

(பிற்பகல் 4.40)

திரு. ஆர். சக்தி மோகன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, சிக்கிம் சமஸ்தானம் பற்றிய 36-வது திருத்தச் சட்டத்தை என்னுடைய கட்சியின் சார்பிலே நான் மனப்பூர்வமாக ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சிக்கிம் மிகச் சிறிய சமஸ்தானம் என்பது நமக்கெல்லாம் தெரியும். கிட்டத்தட்ட 3,000 சதுர மைல்களுக்கு உட்பட்ட பிரதேசம் அது. ஆனால், அதன் மக்கள் தொகை அங்கே கிட்டத்தட்ட 2 லட்சம்தான். அந்தக் காலத்திலே அமைப்பால் அதற்கொரு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட 644 —சுதந்திரம் வாங்கியபோது சமஸ்தானங்கள் இணைக்கப்பட்டபோது, இதுவும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அன்றைக்கு இந்திய யூனியனோடு இணைவதற்கு இரண்டு சமஸ்தானங்கள்தான் எதிர்ப்பைத் தெரிவித்தன. அவற்றில் ஒன்று

திருவாங்கூர்; மற்றொன்று ஐதராபாத். ஆனால் சர்தார் வல்லபாய் படேல் அவர்களுடைய தீர்மானத்தின் அடிப்படையில் அவர்களும் இணைந்தார்கள். எஞ்சி இருந்தது சிக்கிம்தான். அது இணைவது பற்றியோ அல்லது அந்த சமஸ்தான மக்கள் இணைவதற்கு மறுத்தார்கள் என்பது பற்றியோ யாருக்கும் தெரியாத நிலைமையில் அன்று அது இருந்தது. இன்றைக்கு இமயமலைச் சாரலில், சீன ஆட்சிக்குட்பட்ட திபெத்திற்கு தலைவாசலாக அது உள்ளதால், எதிர்காலத்தில் ராணுவ ரீதியில் நம்மீது பாய ஏற்றதாக இருக்குமென்பதால், நம்முடைய பிரதமரவர்கள் ராஜ தந்திர ரீதியில் சிக்கிம்-ஐ இந்திய நாட்டின் 22-வது மாநிலமாக இணைத்திருக்கிறார்கள். நம்முடைய பிரதமரவர்கள் பதவி ஏற்ற பிறகு கிடைத்துள்ள வெற்றிகள் இரண்டாகும். முதல் வெற்றி, பங்களா தேஷ்-ஐ உருவாக்கியது; இரண்டாவது வெற்றி சிக்கிம் சமஸ்தானத்தை இந்தியாவுடன் 22-வது மாநிலமாக இணைத்தது. அடுத்தாற்போல் இரண்டு மாநிலங்கள் இருக்கின்றன. ஒன்று பூடான். அதையும் இணைக்க வேண்டும். அடுத்தாற்போல் நம்மிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டிருக்கின்ற காஷ்மீரத்தின் ஒரு பகுதி. ஆசாத் காஷ்மீரத்தையும் இணைத்தாகவேண்டும். நம் பிரதமருடைய ராஜதந்திரம், சமயோசிதமாக நடந்துகொள்கின்ற தன்மை இவைகளால் அடுத்தாற்போல் இந்த இரண்டு மாநிலங்களும்கூட 23-வது 24-வது மாநிலங்களாக இந்திய அரசுடன் இணைந்துவிடும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. வெங்கா:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையின் முன்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக உளமார வரவேற்கின்றேன்.

இந்த இருபதாவது நூற்றாண்டின் இறுதிக் காலத்திலே சின்னஞ்சிறு நாடுகள் தனித்து இயங்குவது என்பது முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு ஒப்ப சிக்கிம் நாடு தானாகவே முன் வந்து இந்திய நாட்டோடு இணைய முன் வந்திருப்பது மெத்த மகிழ்ச்சிக்குரிய செயலாகும். இந்திய நாட்டினுடைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கீழ் இயங்கும் நம் இந்திய அரசு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்களும், திரு. தாமோதரன் அவர்களும் எடுத்துக் காட்டியதைப் போன்று, மக்கள் விருப்பத்தைத் தான் அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றதே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை. ஏற்கெனவே இந்திய நாடு சுதந்திரம் அடைந்த நேரத்திலே இந்தச் சின்னஞ்சிறு நாட்டினை இந்திய நாட்டோடு, தன்னுடைய ராணுவ வலிமையால் சேர்த்திருக்க முடியாதா என்ற பிரச்சினை எழுந்த



நேரத்திலே, நிச்சயமாகச் சேர்த்திருக்கலாம். இந்திய நாட்டு மக்கள் சுதந்திரத்திலே ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, மக்களின் கருத்திலே மிக்க நம்பிக்கையுள்ள நாடாக இருக்கின்ற காரணத்தினாலே, ராணுவ நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்ததனாலே, இன்றைய தினம் மக்களே விரும்பி, "'இந்திய நாடு, பிற மண்ணின் மீது ஆசைப்படாத ஒரு ஜனநாயக அமைப்பு உடைய நாடு, இந்திய நாட்டினுடைய தலைமையில், பாகுபாடு அற்ற, சரிசமமாக அனைத்து மாநிலங்களையும் பாவிக்கக்கூடிய ஒரு நாடு' என்ற நம்பிக்கையின் காரணமாகச் சேர்கிறார்கள். சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு கடந்த 27 ஆண்டுகால ஆட்சிக் காலத்திலேயே நாம் நிரூபித்திருக்கின்ற காரணத்தால்தான், மன்னர் ஆட்சியை வெறுத்து, அம்மக்கள் வேறு நாட்டோடு சேராமல், இந்திய நாட்டோடு சேரவேண்டும் என்று முடிவு எடுத்திருக்கின்றார்கள். இந்த இருபதாவது நூற்றாண்டிலே, தன்னுடைய சொந்த நலன்களுக்காக, பிறநாட்டினுடைய உள்நாட்டு அரசியலிலேகூடத் தலையிடுவேன் என்று மிக்க வல்லமை பொருந்திய நாடுகளேகூட வெளிப்படையாகவே கோஷித்துக்கொண்டிருக்கின்றன. எந்த நேரம் வந்தாலும் ஜனநாயகக் கொள்கைதான் முக்கியம் என்பதை மறவாத இந்தியத் தலைமையானது, இந்திய அரசானது மக்கள் கருத்தை அறிந்து பிறகு செய்கிறது. இன்றையதினம் நம்முடைய இந்திய தேசத்தின் 22-வது மாநிலமாக சிக்கிம் நாட்டைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்திய அரசினுடைய இரு பாராளுமன்ற சபைகளும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன. அதற்கு நம்முடைய ஒப்புதலையும் அளிக்கும் வகையிலேதான் இந்தத் தீர்மானத்தை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கின்றார்கள். அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நானும் மனமார ஆதரித்து விடைபெறுகிறேன்.

* **திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சிக்கிம் ஒரு தனி நாடாக இருந்தாலும், நமது பாதுகாப்புக்கு உட்பட்டு இருந்துவந்த நாடு. இப்போதும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் போல், சிக்கிமும் ஒரு மாநிலமாக ஆவதற்குக் காரணம் நாம் அல்ல. சோக்யால் அவர்கள்தான் காரணமே ஒழிய வேறு யாரும் அல்ல. அவர் மக்களின் விருப்பத்திற்கு இணங்கி நடந்துகொண்டிருப்பாரானால், இந்த நிலைமை ஏற்பட்டே இருக்காது. மக்களை உதாசினம் செய்து அவர் இஷ்டம்போல் யதேச்சாதிகாரி போல செயல்பட ஆரம்பித்தார். பன்முறை இந்திய அரசின் முக்கியமான அமைச்சர்களிடமும், பிரதமரிடமும் பேச்சு வார்த்தை நடத்திவிட்ட பின்பும், அங்கே சென்று தனக்கு ஏதோ மக்களுக்கு அப்பாற்பட்ட ஒரு அதிகாரம் இருப்பது

போல சோக்யால் நடந்துகொண்டதால்தான் அவரை மக்களே இந்த நிலைமையில் கொண்டு வந்து வைத்து விட்டார்கள். பூகோள ரீதியில் அவர்கள் வட துருவத்தில் இருக்கின்றார்கள். நாம் தென் துருவத்தில், இந்தியாவின் தெற்குக் கோடியான கன்னியாகுமரியை உள்ளடக்கிய ஒரு மாநிலமாக நமது தமிழ் நாடு இருக்கின்றது. இமயத்தின் வடகோடியில் இருக்கக்கூடிய ஒரு மாநிலமாக இப்போது சிக்கிம் ஆகிவிட்டது. ஆகவே, மற்ற மாநிலங்கள் எப்படியாயினும் தென் கோடியில் உள்ள நாம் அவர்களை வரவேற்பது மிகவும் அர்த்தபுஷ்டியுள்ள ஒரு விஷயம். ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டு.

சோக்யால் கடைசியாகக் கூட மக்கள் விருப்பத்திற்கு இணங்கியிருப்பாரானால், அங்கே பொதுஜன வாக்கெடுப்பு எடுக்கவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. ஒரு மோசமான யதேச்சாதிகாரிபோல அவர் நடந்துகொண்டதால்தான், மக்களின் பொது ஜன வாக்கெடுப்பு எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு, இப்போது பெரும்பான்மை மக்கள் இந்தியாவுடன் இரண்டற கலந்துவிட வேண்டுமென்று முடிவு செய்திருப்பதால், நாம் புறக்கணிப்பதற்கில்லை. ஏனென்றால் அதன் பாதுகாப்புக்கு மட்டும் அல்ல, அதன் வளர்ச்சிக்கும் நாம் பொறுப்பாளியாக வெகு காலமாக இருந்து வந்திருக்கின்றோம். நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பே கூட அன்றே நம் நாட்டை ஆண்டுகொண்டு இருந்த பிரிட்டிஷாரால், நம் இந்தியாவிலிருந்து சிக்கிம் நாட்டின் வளர்ச்சிக்கு என்று, உதவி செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே, இப்போது மக்களின் மனத்தைத் திருப்தி செய்வதற்காக, நம்மிலே ஒரு மாநிலமாக இந்த மாநிலத்தையும் நாம் சேர்த்துக் கொள்வது ஜனநாயக ரீதியில் எல்லோருக்கும் சம்மதமான ஒரு விஷயமாகும். அவர்களை இந்தியாவின் சார்பாக மட்டுமின்றி, இந்தியாவின் தெற்குக் கோடியில் உள்ள நம் மாநிலத்தின் சார்பாகவும் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். வட கோடியிலுள்ள அந்த மாநில மக்களையும், மாநிலத்தையும் நம்மில் ஒரு மாநிலமாக நம் உற்றார் உறவினராக, நம்மோடு எல்லா விஷயங்களிலும் சகோதரர்களாகச் சேர்த்துக் கொண்டு வாழ்ந்திட வேண்டும். பொதுவாக அவர்கள் இப்போது பாரத மக்களாக ஆகிவிட்டார்கள். அவர்களை இந்த மாநில மக்களின் சார்பாகவும், இந்த தேச மக்களின் சார்பாகவும் வரவேற்பதில் நானும் பங்குகொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நான் கொண்டுவந்த தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளின் சார்பாக, அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர் பெருமக்கள் இங்கு



ஆதரித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தினுடைய இன்றியமையாத தன்மையையும், இதனால் ஏற்படுகின்ற விளைவுகளையும் அறிந்து எல்லோரும் ஆதரித்துப் பேசியிருக்கின்றார்கள். இந்தியாவிலேயே முதன் முதலில் உத்திரப் பிரதேசத்தில், சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருப்பதன் காரணமாக, ஆதரித்துப் பேசி தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். இரண்டாவதாக நம்முடைய மாநிலத்தில்தான் நாம் நிறைவேற்றுகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** விசேஷமான முறையில் எதிர்க்கட்சி ஆதரவோடு அவையைக் கூட்டியிருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** விசேஷமாக தனியாக இதற்காகக் கூட்டம் கூட்டி சட்ட மன்றப் பேரவை நிறைவேற்றியிருக்கிறது. சட்ட மன்றப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை மேலவையும் நிறைவேற்றி, இதிலே நல்லதொரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இதை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:—

"சிக்கிம்மை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்குவதற்கென, '1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாறுவது திருத்தச்) சட்டம்' என்று மாற்றப்பட்ட குறுந்தலைப்பினைக் கொண்ட 1975 ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் வாயிலாக, நாடாளுமன்றத்து ஈரவைகளும் நிறைவேற்றியுள்ள, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 368, பகுதி (2) வது வரம்புரையின் எல்லையளவிற்குள் வரும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை இந்மேலவை ஏற்று உறுதி செய்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது.

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 4 50)

[1975 மே 2

3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

191. Notification issued with G.O. Ms. No. 22, Labour and Employment, dated the 11th January 1975 in regard to constitution of the Tamil Nadu Labour Welfare Board. [*Laid on the table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972)* ]

192. Notification issued with G.O. Ms. No. 202, Rural Development and Local Administration, dated the 10th February 1975 in regard to an amendment to the Conduct of Election of Municipal Councillors Rules, 1962. [ *Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).* ]

193. Notification issued with G.O. Ms. No. 260, Prohibition and Excise, dated the 16th December 1974 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [*Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)* ].

*B. Reports; Notifications and Other papers.*

* 169. The Constitution (Thirty-eighth Amendment) Bill, 1975 as introduced in the Lok Sabha.

* 170. The Constitution (Thirty-eighth Amendment) Bill, 1975 as passed by both Houses of Parliament.

* 171. Extract of paragraphs 1 to 4 of his letter No. RS. 1/23/75-B, dated 28th April 1975 of the Secretary-General, Rajya Sabha.

172. Return of Assets of Thiru T. V. Muthukrishnan, Member of the Tamil Nadu Legislative Council as on 31st March 1974 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969.

* Circulated to all MLC's on 29th April 1975.

# Index to Tamil Nadu Legislative Council Debates

FIFTIETH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

(11th, 17th to 19th and 21st April and 2nd May 1975.)

VOLUME CXXXIII (Numbers 1—6).

*Pages*

## A

ABDUL WAHAB, Thiru K. S.—

Felicitations to Chairman on his 70th Birthday ... 23—24

Public Undertakings Committee, nomination of Council Members to associate with ... ... 335

Resolution *re* Constitution (Thirty-eighth Amendment) Bill, 1975, ratification of ... ... 434—435

ADITYAN, Thiru S. T.—

Bills—

Chit Funds (Amendment) Bill, 1975 ... ... 369, 370

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 ... ... 244

Privilege issue *re* Societies Registration Bill, 1975, certain provisions being contrary to decision of Joint Select Committee ... ... 92

Recognised Private Schools (Regulation) Rules, 1974, amendments to ... ... ... 108, 110, 112

Pages

A—*cont.*

ADJOURNMENT MOTION *re*—

Closure of temple and orphanage in Nachiarkoil and temples under Vetri Velayudha Swami Devasthanam and in Manjakollai and Nagapattinam due to paddy levy ... ... ... 83—88

Drinking water, difficulty experienced by residents of Madras City in getting ... ... 313—318

Electricity, stoppage of work in factories due to 100 per cent power cut and consequent hardship to factory-workers ... ... ... 306—312

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—

Amendment to Agriculture Department Notification II-1 No. 1326 of 1972, notification laid on the table ... ... ... ... ... 166

Amendments to notification relating to inclusion of paddy, notification laid on the table ... 44

Declaration of notified market area for Thondamuthur market and inclusion of arecanut in addition to cotton, groundnut, tobacco and turmeric, notification laid on the table ... 375

Declaration of notified market area for Tirukalukundram market in respect of groundnut, paddy and gingelly, notification laid on the table ... 375

Declaration of notified market area for Tiruvadanai market in respect of groundnut, chillies, paddy and cashewnut, notification laid on the table ... ... ... ... ... 375

Establishment of market at Budalur for purchase and sale of paddy, groundnut, greengram, blackgram and redgram, notification laid on the table ... ... ... ... ... 56

Establishment of regulated markets at Bhavani, Kangayam and Mulanur for purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric, maize, sugarcane, jaggery and arecanut, notification laid on the table ... ... ... ... ... 375



Pages

A—*cont.*

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—*cont.*

Inclusion of paddy and gingelly in respect of Uthiramerur and Madhurantakam markets, notification laid on the table ... ... 374

Inclusion of tamarind and cane jaggery in all forms in addition to groundnut and gingelly in respect of market at Hosur, notification laid on the table ... ... ... ... ... ... 271

Regulation of trade over purchase and sale of corriander in South Arcot district, notification laid on the table ... ... ... ... ... 272

AIDED HIGH SCHOOLS—

*See* Schools.

ANBAZHAGAN, The Hon. Thiru K.—

Felicitations to Chairman on his 70th Birthday. 27

Statement under rule 82 of the Council Rules *re* 'Free Eye Camps', collection of public donations for—(correction of answer to supplementary question) ... ... ... ... ... 306

Tiruchirappalli Government Headquarters Hospital, statement *re* closure of Operation Theatre consequent on death of patient due to Tetanus. 38—40

ANNAMALAI, The Hon. Thiru C. V. M.—

Bill—Prevention of Begging (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 236—238, 240—242

"Mowri", statement *re* attack on Thiruvalargal J. Anthonyswami, S. Das Niwas and others by Mechanised Boat No. J. 821 called—from Sri Lanka in midsea in Pamban area within Indian Territorial Waters and seizure of Nylon Fishing Nets and fishing equipments ... ... ... 41—43

APPROPRIATION (No. 2) BILL, 1975—

*See* Bills.

Pages

A—*cont.*


ARIVAZHAGAN, Thiru K.—

Bills—

Catering Establishments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 359

Societies Registration Bill, 1975 ... ... 159

AROORAN SUGAR FACTORY LIMITED, THIRU-VARUR—

Question *re* payment of arrears to ryots for sugarcane supplied during 1972-73 ... ... 75—77

ARUMUGASWAMI, Thiru M.—

Felicitations to Chairman on his 70th Birthday. 24—25

Recognised Private Schools (Regulation) Rules, 1974, amendments to ... ... ... 101

Resolution *re* Constitution (Thirty-eighth Amendment) Bill, 1975, ratification of ... ... ... 432—434


B


BALASUBRAMANIAM, Thiru Ku. Ma.—

Felicitations to Chairman on his 70th Birthday. 27—28

BANANA AND FRUIT DEVELOPMENT CORPORATION LIMITED—

Government's Review and Annual Report and Statement of Accounts of—for year ended 31st March 1971, laid on the table ... ... 46

BILLS—

Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1975—

Considered and passed ... ... ... ... 159—161

Message from the Assembly *re* ... ... ... 93

Appropriation (No. 2) Bill, 1975—

Considered and returned ... ... ... 43—44

Message from the Assembly *re* ... ... 18

Message from the Governor *re* ... ... 18




Pages

B—*cont.*


BILLS—*cont.*

Catering Establishments (Amendment) Bill, 1975—

Considered and passed ... ... ... ... 350—363

Message from the Assembly *re* ... ... ... 319

Chit Funds (Amendment) Bill, 1975—

Considered and returned to Assembly ... ... 365—373

Message from the Assembly *re* ... ... ... 319

Constitution (Thirty-eighth Amendment) Bill, 1975—

As introduced in Lok Sabha, laid on the table. 442

As passed by both Houses of Parliament, laid on the table ... ... ... ... ... 442

Extract of Paragraphs 1 to 4 of letter No. R.S. 1/23/75-B, dated 28th April 1975 of Secretary-General, Rajya Sabha, laid on the table. 442

Resolution *re* ... ... ... ... ... 430—441

Electricity Duty (Amendment) Bill, 1975—

Considered and returned to Assembly ... ... 252—258

Message from the Assembly *re* ... ... ... 224

Gaming (Amendment) Bill, 1975—

Considered and passed ... ... ... ... 148—151

Message from the Assembly *re* ... ... ... 93

General Sales Tax (Amendment) Bill, 1975—

Considered and returned to Assembly ... ... 258—271

Message from the Assembly *re* ... ... ... 224

Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill. 1975—

Considered and passed ... ... ... 161—163

Message from the Assembly *re* ... ... 93

Pages

B—cont.

BILLS—cont.

Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975—
Considered and returned to Assembly ... ... 231—236
Message from the Assembly *re* ... ... ... 93
Message from the Governor *re* ... ... ... 93

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1975—
Considered and returned to Assembly ... ... 363—365
Message from the Assembly *re* ... ... ... 319

Land Encroachment (Amendment) Bill, 1975—
Considered and passed ... ... ... ... 163—165
Message from the Assembly *re* ... ... ... 93

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975—
Considered and passed ... ... ... 243—247
Message from the Assembly *re* ... ... 225
Message from the Governor *re* ... ... ... 224

Madras City Police (Amendment) Bill, 1975—
Considered and passed ... ... ... ... 343—350
Message from Assembly *re* ... ... ... 319

Madras City Tenants Protection (Amendment) Bill, 1975—
Considered and passed ... ... ... ... 251—252
Message from Assembly *re* ... ... ... 225

Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1975—
Considered and passed ... ... ... ... 337—342
Message from Assembly *re* ... ... ... 319

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975—
Considered and passed ... ... ... ... 247—250
Message from Assembly *re* ... ... ... 225
Message from the Governor *re* ... ... ... 224



Pages

B—cont.

BILLS—cont.

Prevention of Begging (Amendment) Bill, 1975—
Considered and passed ... ... ... ... 236—242
Message from the Assembly *re* ... ... ... 93
Message from the Governor *re* ... ... ... 93

Societies Registration Bill, 1975—
Considered and passed ... ... ... ... 151—159
Message from the Assembly *re* ... ... 93
Privilege issue *re* certain provisions being contrary to decisions of Joint Select Committee. 88—92

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—
Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1975 ... ... ... 166
Appropriation (No. 2) Bill, 1975 ... ... 57
Catering Establishments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 376
Chit Funds (Amendment) Bill, 1975 ... ... 376
City Tenants Protection (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 272
Electricity Duty (Amendment) Bill, 1975 ... 272
Gaming (Amendment) Bill, 1975 ... ... 57
General Sales Tax (Amendment) Bill, 1975 ... 272
Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1975 ... ... ... ... ... ... 166
Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 57
Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 376
Land Encroachment (Amendment) Bill, 1975 ... 166
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 ... ... 272
Madras City Police (Amendment) Bill, 1975 ... 376

Pages

B—*cont.*

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—*cont.*

Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1975 ... ... ... ... 376

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 ... ... 272

Prevention of Begging (Amendment) Bill, 1975. 58

Societies Registration Bill, 1975 ... ... 57

BUSINESS OF THE HOUSE—

Announcement *re* business transacted during Fiftieth Session ... ... ... ... ... 373—374

Change in the order of ... ... ... ... 337

Transaction of Government Business on a Private Members' day (19th April 1975) ... ... 230

C

CATERING ESTABLISHMENTS (AMENDMENT) BILL, 1975—

*See* Bills.

CHAIRMAN, Mr.—

Announcement *re*—

Message from the Assembly *re*—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 18

Message from the Governor *re*—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 18

Committees—

House Committee, election of members to. 37—38

Privileges Committee, election of members to ... ... ... ... ... ... 36—37

Felicitations to—on his 70th Birthday ... 19—36

Reply to felicitations on his 70th Birthday ... 19 35—36



Pages

C—*cont.*

CHIT FUNDS (AMENDMENT) BILL, 1975—

*See* Bills.

COLLEGES—

Question *re* pro forma of agreement between management and teachers of Aided ... ... 291—296

COMMITTEE ON DELEGATED LEGISLATION—

*See* Committees.

COMMITTEES—

Assurances Committee—

Presentation of 25th report ... ... ... 230

Twenty-fifth Report, laid on the table ... ... 272

Committee on Delegated Legislation, nomination of Council Members to serve on ... ... 334

Estimates Committee—

Nomination of Council Members to serve on ... 333

Report of—on action taken by Government on recommendations in report on Employment and Training, 1974-75, laid on the table ... 47

Report of—on action taken by Government on recommendations in report on Labour including Factories, 1974-75, laid on the table ... 47

Report on Public Libraries, laid on the table ... 376

House Committee, election of members to ... 37—38

Privileges Committee, election of members to ... 36—37

Public Accounts Committee—

Fourteenth Report on Report on Accounts of Government of Tamil Nadu for 1971-72, laid on the table ... ... ... ... ... 376

Nomination of Council Members to serve on 332—333

Thirteenth Report on Report on Excesses over Voted Grants and Charged Appropriation for 1970-71, laid on the table ... ... ... 376

C—*cont.*

Pages

COMMITTEES—*cont.*

Public Undertakings Committee—

Fourth Report on Tamil Nadu Water Supply and Drainage Board, laid on the table ... 376

Nomination of Council Members to serve on ... 334—336

Third Report of—(1974-75) on Audit Reports on Accounts of State Electricity Board for 1969-70 and 1970-71, laid on the table ... 47

COMPTROLLER AND AUDITOR-GENERAL OF INDIA—

Report of—for 1972-73 (Commercial), laid on the table ... ... ... ... ... 375

CONDOLENCE RESOLUTION *re*—

Death of Radhakrishnan, Dr. Sarvepalli, former President of India ... ... ... ... 54—55

CONDUCT OF ELECTION OF MUNICIPAL COUNCILLORS RULES, 1962—

Amendment to—, notification laid on the table. 442

CONSTITUTION (THIRTY-EIGHTH) AMENDMENT BILL, 1975—

Resolution *re* ... ... ... ... ... 430—441

CO-OPERATIVE APEX SOCIETIES (MANAGEMENT AND CONDUCT OF ELECTION) RULES, 1974—

Amendments to—, notification laid on the table. 272

CO-OPERATIVE LAND DEVELOPMENT BANKS (MISCELLANEOUS PROVISIONS) RULES, 1970—

Amendment to—, notification laid on the table. 46

COURTS—

Question *re* Subordinate Judge's Court at Namakkal, Salem district, opening of ... ... ... 304—305



Pages

D

DAMODARAN, Thiru A. R.—

Bills—

Catering Establishments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 351—354, 356—357, 358—359, 360, 361, 362

General Sales Tax (Amendment) Bill, 1975 ... 260—265, 269

Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 232—234

Public Undertakings Committee, nomination of Council Members to serve on ... ... ... 335, 336

Resolution *re*—

Constitution (Thirty-eighth Amendment) Bill, 1975, ratification of ... ... ... ... 435—437

DEPUTY CHAIRMAN—

Adjournment motion *re*—

Closure of temple and orphanage in Nachiarkoil and temples under Vetri Velayudha Swami Devasthanam and in Manjakollai and Nagapattinam due to paddy levy ... ... 83, 86, 88

Drinking water, difficulty experienced by residents of Madras City in getting ... ... 313, 318

Electricity, stoppage of work in factories due to 100 per cent power cut and consequent hardship to factory workers ...... ... 306, 312

Announcement *re*—

Business transacted during Fiftieth Session ... 373—374

Message from the Assembly *re*—

Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1975 ... ... ... 93

Catering Establishments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... 319

Chit Funds (Amendment) Bill, 1975 ... ... ... 319

Pages

D—cont.

DEPUTY CHAIRMAN—cont.

Announcement re—cont.

Message from the Assembly re—cont.

City Police (Amendment) Bill, 1975 ... ... 319
Electricity Duty (Amendment) Bill, 1975 ... 224
Gaming (Amendment) Bill, 1975 ... ... 93
General Sales Tax (Amendment) Bill, 1975... 224
Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1975 ... ... ... ... ... 93
Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... 93
Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 319
Land Encroachment (Amendment) Bill, 1975. 93
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 ... ... 225
Madras City Tenants Protection (Amendment) Bill, 1975 ... ... ... ... 225
Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1975 ... ... ... 319
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 ... ... 225
Prevention of Begging (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 93
Societies Registration Bill, 1975 ... ... 93

Message from the Governor re—

Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 93
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 ... ... 224
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 ... ... 224
Prevention of Begging (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 93



Pages

D—cont.

DEPUTY CHAIRMAN—cont.

Condolence Resolution re death of Radhakrishnan, Dr. Sarvepalli, former President of India ... 53, 55—56

Non-recording of remarks on an adjournment motion not allowed ... ... ... ... 306
Privilege issue re Societies Registration Bill, 1975, certain provisions being contrary to decision of Joint Select Committee ... ... ... 92
Public Undertakings Committee, nomination of Council Members to serve on ... ... ... 335, 336
Recognised Private Schools (Regulation) Rules, 1974, amendments to ... ... ... ... 98, 100—101, 104—105, 107—109, 112, 119, 124

Resolution re Constitution (Thirty-eighth Amendment) Bill, 1975, ratification of ... ... ... 432, 441

DHARMALINGAM, The Hon. Thiru A. P.—

Bills—

Agricultural Lands Record of Tenancy Rights Amendment Bill, 1975 ... ... ... ... 159—161
Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1975 ... ... ... ... ... ... 161—163
Land Encroachment (Amendment) Bill, 1975 ... 163—165
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 ... ... 243, 245, 247

